Arimaa Nokku

அரிமா நோக்கு

18 : 2 ஜூலை 2024

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE, HISTORY, PHILOSOPHY AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

ISSN 2320-4842

அரிமா நோக்கு

18 : 2 ஜூலை 2024

ஆசிரியர்

ஈரோடு தமிழன்பன்

இணையாசிரியர்

வ. ஜெயதேவன்

ஆசிரியர் குழு

நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதா லட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்

அறிவுரைக் குழு

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

அச்சீட்டாளர்

பொருளடக்கம் CONTENTS

சரசுவதி சம்மான் விருது 2023	வ. ஜெயதேவன்	03
நாட்டுப்புறப் புழங்குபொருட்களில் உலக்கைப் பண்பாடு	ஆ. இன்பவள்ளி	05
மு. மேத்தாவின் கவிதைகளில் இலக்கிய உத்திகள்	க. நித்யா	08
கவியரசு நா. காமராசனின் காட்டுக் குறத்தி...	ரா. ஜெயஸ்ரீ	11
ரமணிசந்திரனின் புதினங்களில் சமுதாயச் சித்திரிப்பு	ஜெ. நித்தியகல்யாணி	14
Effect of Nutritional Status on Growth Pattern...	Joys Glory & S. Indradevi	17
கலிங்கப்போரும் வேலும்	ச.மோகனப்பிரியா	21
திருக்குறள்-கலைஞரின் உரைத்திறன்	பொ. செந்தில்குமார்	24
சமூகவியல் நோக்கில் இயேசு காவியம்	சா. சாம் கிதியோன்	30
மம்மட்டியான் ...பின்புல வரலாறு	தி. பெரியசாமி	34
மாத்தளை சோமுவின் திருக்குறள் உரைத்திறன்	சு. ஜெயசீலா	38
யுனெஸ்கோ கூரியர்...தமிழியல் பங்களிப்பு	ப. ராஜசேகர்	43
தெ .பொ. மீனாட்சி சுந்தரனார்	சி. முத்துமாலை	45
தொல்காப்பியம், அகநானூற்றில் தெய்வங்கள்	ந. மாலதி	48
ராஜம் கிருஷ்ணனின் மாறி மாறிப் பின்னும் புதினத்தில் பெண்ணியச் சிந்தனைகள்	ரா. மீனா	52
நற்றிணை ...வாழ்நெறி விழுமியங்கள்	ப. நீலாவதி	55
உளவியல் குறித்த விழிப்புணர்வு	பா. மேகலா	59
தமிழ் இலக்கியங்களில் வடமொழிச்சொற்கள்	ச. ஆனந்தி	63
கானகன் புதினம்...பண்பாட்டுப் பதிவுகள்	தீபிகா. ஆ.	66
சிலப்பதிகாரத்தில் பண்பாட்டு மரபுகள்	க. முருகவேல்	71
ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில்...	ரா. சத்யா செல்வி	74
Contesting the Hegemonic Narratives...	Faisal P	77
ஆ. பழநியின் களம் கண்ட கவிதைகளில்...	ரா. ரம்யா	81
குமரகுருபரரின் சாத்திர சிந்தனைகள்	வா. பாக்யலெஷ்மி	84
‘காயம்’நாவலில் புலப்படும் பாத்திரப் பண்புகள்	ப. கௌரி	86
தெய்வச்சிலையாரின் உரைத்திறன்	சீ. மகேசுவரி	91
திரிகடுகம் காட்டும் பெண்மை	கோ. கமலா	94
பல்லவர்காலச் செப்பேடுகளில் தானங்கள்	த. கண்ணகி	97
விளிம்புநிலை மாந்தர்களின் பழமொழியும் சொலவடையும்	ச. தென்றல் ஜான்சி	99
இளம்பூரணரின் தொல்காப்பிய எழுத்ததிகார இலக்கண மேற்கோள்கள்	சு. சொர்ணரேகா	103
‘மனம் சுடும் தோட்டங்களில்’ பெண்ணியச் சிந்தனைகள்	இரா. கலாவதி	106
பழமொழி நானூறு..இல்லறக் கூறுகள்	இரா. ஹேமலதா	108
ஞானநெறிக்கு வழிகாட்டும் திருப்புகழ்	நா. மாமலைவாசன்	112
அகநானூற்றில் குறிஞ்சி நில வழிபாட்டு மரபுகள்	சு. கிருஷ்ண நந்தினி	115
சித்தர்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்	ஜே. கௌரி ஆனந்த்	119

ISSN 2320-4842

தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

எல்லாம் வல்ல ஊடகம்

உணவு, உடை, உறையுள் என்னும் மூன்றோடு இன்று இணைநிலைக்கு மேலான நிலையில் இடம்பெற்றிருப்பது ஊடகம். ஊடகம் பார்ப்பது, அதில் பங்கேற்பது, அதுபற்றிப் பேசுவது எல்லாமே தவிர்க்க முடியாத வாழ்வுப்போக்காக உருப்பெற்றுவிட்டன. சமுதாய வரலாற்றின் படிநிலைப் பட்டியலில் மத குருமார், பிரபுக்கள், பொதுமக்கள் என்றிருந்த வரிசை, பெயர் மாற்றங்களோடு முகம்காட்டியபோது அச்சு அல்லது அச்சு ஊடகம் அறிவியல் தொழில்நுட்ப ஆக்கக் கூறாக இடம்பெற்று வலுமிக்கதாக வடிவம் எடுத்தது. அமெரிக்காவில்தான் அச்சு ஊடகம் நாட்டின் நான்காவது தூண் என்று முதலில் முன்மொழியப்பட்டது. முன்னேறிய, முன்னேறாத எல்லா நாடுகளும் ஆமென் குரல் கொடுத்தன. பொதுமக்கள் இடத்தைப் பாராளுமன்றம் கைப்பற்றியது. மதகுருக்கள் இடத்தில் நாடாளும் அமைச்சரவை வந்துசேர்ந்தது. அதிகாரத் தலைமையும் அடிபணிகிற இடத்தில் இன்றும் மதகுருமார் கூட்டம்தான்.

தகவல் தொழில்நுட்பப் புரட்சிப் பூபாளம் உலகெங்கும் எதிரொலித்தது. ஆனாலும் இன்று உலகில் பலகோடி மக்கள் தேவையும் தேடலுமாக உள்ளவை வயிற்றுக்குச் சோறு, வருமானத்துக்கு வேலை, வாழ்வதற்கு வீடு என்பவையே. போதிய அளவு தகவல். தொழில்நுட்பம் கிடைக்காத வறுமை அன்று. தகவல் தொழிற் புரட்சி (the information revolution) புதிய தகவல் முனையங்களையும் தகவல் வங்கிகளையும் (data terminals and banks) உருவாக்க முடியும். என்றாலும் என்ன தவறு நேர்ந்தது என்பதைப் புரிந்துகொள்கிற விருப்பத்தையும், சரியானது எதைச் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தையும் அதனிடம் எதிர்பார்க்க முடியாது என்கிறார் தாவீது லையான்ஸ்.

அடித்தட்டு மக்களின் கல்வி ஊடகமாக இல்லாமல் நடுத்தட்டு மக்களின் பொழுதுபோக்கு ஊடகமாக, அல்லது அரசாங்கத்தின் ஊழிய ஊடகமாக, அல்லது பெருந்தொழில் நிறுவனங்களின் வருவாய் மற்றும் விளம்பர ஊடகமாக, தகவல்தொழிற்புரட்சி நடைமுறைக்கு வந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. தகவல் தொழில்நுட்பத்தால் ஏழை நாடுகள் பண்பாட்டு நவகாலனியத்தின் அடிமைகள் ஆயின.

இந்தியாவைப் பொறுத்தவரை, அயலகச் சரக்குகளுக்குச் சந்தை திறப்பது ஒரு பக்கத்தில் என்றால் அதற்கு எதிரான பேச்சு மறுபக்கத்தில். தகவல் தொழில்நுட்பம் உலகக் கிராமம் (global village) குறித்த மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. தகவல் தொழில்நுட்பம் வளர்ந்த நாடுகள் இந்த உலகக் கிராமத்தில் இருக்கிற இடமும் தகவல் தொழில்நுட்பம் இல்லாத நாடுகள் இருக்கும் இடமும் வேறு வேறானவை. நம் நாட்டில் உலக முதல் வரிசைப் பணக்காரர்கள் சிலர் இருப்பதால் நம் நாடே பணக்கார நாடாகிவிட்டது ஏன்று மார்தட்டிக்கொளவது பேதைமை பெற்றெடுத்த பேதைமை என்போம். நம் நாட்டில் ஊடகம் இல்லா ஊரில் கடவுளும் குடியிருக்கமாட்டார் என்று சொல்லும் அளவுக்கு மக்களை ஈர்த்து ஆட்டிப்படைப்பதாக உள்ளது ஊடக வர்க்கம்.

கட்டண விவரம்

வாழ்நாள் உறுப்பினர்	ரூ. 4000/- US $ 175
புரவலர்	ரூ. 6000/- US $ 250
பெரும்புரவலர்	ரூ. 10,000/- US $ 500
மீப்பெரும் புரவலர்	ரூ. 20,000 US $ 1000
நிறுவனம்சார் உறுப்பினர் (Institutional Membership)	
	ரூ. 15,000/- US $ 700

விளம்பரக் கட்டணம்

பின்னட்டை (பல வண்ணங்கள்)	ரூ. 15,000/-
உள்ளட்டை (பல வண்ணங்கள்)	ரூ. 10,000/-
முழுப்பக்கம் (கருமை & வெண்மை)	ரூ. 3, 000/-
அரைப்பக்கம் (கருமை & வெண்மை)	ரூ. 1, 500/-

கட்டணம் செலுத்த:

NEFT/ DD in favour of **ARIMAA NOKKU** payable at Chennai

HDFC Bank (IFSC Code: HDFC0000795}, Perungudi Branch, Chennai 600 096
Current Account No. 50200006240790

அரிமா நோக்கு, அன்பகம், # 1, 15ஆவது குறுக்குத்தெரு, குறிஞ்சி நகர், பெருங்குடி, சென்னை 600 096
ARIMAA NOKKU, Anbaham, # 1, 15th Cross Street, Kurinji Nagar, Perungudi, Chennai 600 096

மின்னஞ்சல்: nokku2007@gmail.com

செல்: 91-9444932320

ISSN 2320-4842

சரசுவதி சம்மான் விருது 2023

பிரபா வர்மா

இந்தியாவில் வழங்கப்படும் பெருவிருதுகளுள் சரசுவதி சம்மான் தனிச் சிறப்புடையது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் அட்டவணை VIIIஇல் பட்டியலிடப்பட்டுள்ள 22 மொழிகளுள் ஏதேனும் ஒன்றில் கடந்த பத்தாண்டில் மிகச் சிறந்த கவிதை அல்லது உரைநடை நூல் எழுதிய ஒருவரைத் தேர்ந்தெடுத்து இவ் விருது அளிக்கப்படுகிறது. 15 இலட்சம் ரூபாய், பாராட்டிதழ் ஆகியவற்றோடு இவ்விருது 1971முதல் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பிலானியில் பிறந்து தொழிலதிபராகவும் கல்வியாளராகவும் கொடைவள்ளலாகவும் திகழ்ந்த கிருஷ்ண குமார் பிர்லா (12.10.1918—30.08.2008) நிறுவிய கே.கே. பிர்லா அற நிறுவனம் (K. K. Birla Foundation) வாயிலாக வழங்கப்பெறும் விருதுகள் பலவற்றுள் தலையாயது கலைமகள் பெயரில் அமைந்த சரசுவதி சம்மான் விருது. இலக்கியம் (குறிப்பாக இந்தி இலக்கியம்), கலை, கல்வி, சமூகப் பணி ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் இவ்வற நிறுவனம் 1971இல் நிறுவப்பட்டது.

அஸ்ஸாம், கொண்கணி, சமஸ்கிருதம், சிந்தி, தெலுங்கு, டோக்ரி ஆகிய மொழிகள் தலா ஒரு முறையும், உருது, கன்னடம், குஜராத்தி, வங்கம் ஆகிய மொழிகள் தலா இரு முறையும், தமிழ், இந்தி, ஒரியா, பஞ்சாபி, மராத்தி ஆகிய மொழிகள் தலா மும்முறையும், மலையாளம் நான்கு முறையும் இவ்விருது பெற்றுள்ளன.

இராமானுஜர் நாடகப் படைப்புக்காக 1999இல் இந்திரா பார்த்தசாரதிக்கும், இராமகாதை யும் இராமாயணங்களும் என்னும் ஆய்வு நூலுக்காக 2011இல் அ.அ. மணவாளனுக்கும், சூரிய வம்சம் எனும் படைப்புக்காக 2022இல் சிவசங்கரிக்கும் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான சரசுவதி சம்மான் விருதுக்கு மலையாள எழுத்தாளர் பிரபா வர்மா தெரிவு செய்யப்பட்டுள்ளார். ரௌத்ர சாத்விகம் என்னும் முரணழகுடைய தலைப்பிலான கவிதைப் புதினத்திற்காக இவருக்கு இவ்விருது கிடைத்துள்ளது. இந்தப் படைப்பு கலைக்கும் அதிகாரத்திற்கும் இடையேயான நிலையான மோதலை விவரிக்கிறது; பழைய சோவியத் ஒன்றியப் பின்னணியில் அதிலிருந்த வன்முறை/அகிம்சை, கவிதை/அதிகாரம், சூழல்/வளர்ச்சி போன்றஇரும எதிர்நிலைகளைப் பேசுகிறது. பிர்லா அறக்கட்டளையின் கூற்றுப்படி இந்நூல் அதிகாரத்திற்கும் அரசியலுக்கும், தனிமனிதனுக்கும் அரசுக்கும், கலைக்கும் அதிகாரத்திற்கும் இடையிலான மோதலை ஒரு தனித்துவமான முறையில் ஆராய்கிறது; காலமும் வெளியும் கடந்து, தர்ம, அதர்மங்களுக்கிடையேயான இக்கட்டான நிலையை ஆக்கப் பூர்வமான தத்துவ வழியில் அலசுகிறது. சுருங்கக் கூறின், இது, அதன் ஆழமான கவிதை விவரிப்பு வாயிலாக, ஒழுக்கம், அறநெறிமுறைகள், மனித இயல்பு, நல்ல, தீய சக்திகளுக்கு இடையி லான இடையறாப் போராட்டத்தின் சிக்கலான கருப்பொருள்களை ஆராய்கிறது எனலாம்.

சரசுவதி சம்மான் விருது பெறும் நான்காவது மலையாள எழுத்தாளரான பிரபா வர்மா (30.05.1959—) முதுசட்டவியல் பட்டம் பெற்றவர்; கவிஞர், திரைப்படப் பாடலாசிரியர், பத் திரிகையாளர், தொலைக் காட்சித் தொகுப்பாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர். கவிதைத் தொகுதிகள் 10, உரைநடை நூல்கள் 3, புதினங்கள் 3, சமகால சமூக—அரசியல் சூழல், இலக்கியம் பற்றிய 6 நூல்கள், விமர்சனக் கட்டுரைத் தொகுதிகள் 6, ஊடகம் பற்றிய ஆய்வு, பயண நூல் 1, ஆங்கிலத்தில் புதினம் 1 ஆகியவற்றை அவர் வெளியிட்டுள்ளார்.

அபுதாபி சக்தி விருது, கேரள சாகித்திய அகாதெமி விருது, கேந்திரிய சாகித்திய அகாதெமி விருது, பத்மபிரபா இலக்கிய விருது உள்ளிட்ட 40 விருதுகள் கவிதைக்காகவும், 5 விருதுகள் ஊடகப் பணிகளுக்காகவும், 10 விருதுகள் திரைப்படப் பணிகளுக்காகவும் பெற்ற சிறப்புக் குரியவர் அவர். கேரள முதலமைச்சரின் ஊடகச் செயலாளராக இப்போது அவர் உள்ளார்.

வ. ஜெயதேவன் **பூந்துணர்**

120ஆம் பக்கத் தொடர்ச்சி

காண முடிகிறது. செவ்வியல் காலத்தில் அற இலக்கியம் இந்நிலையை மிகக் கடு மையாகச் சாடுகின்றன. சிலப்பதிகாரக் காலத்தில் தளிச் சேரி எனும் பெண்டிர்க்கான தனித் தெருக்கள் இருந் துள.[12] கோயில்களில் உள்ள தேவதாசி இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதற்கும் சான் றுண்டு. தம்மை ஒப்பனை செய்துகொண்டு ஆடவரை மயக்கிப் பொருள் பறிப்பது இவர்களின் தொழிலாகும் திருக்குறள், பொருட்பெண்டிர் என இவர்களைக் குறிக் கிறது. சித்தர் இலக்கியத்திலும் அவ்வாறே சுட்டப்பட் டுள்ளது. ***மை அடர்ந்த கண்ணினார் மயக்கிடும் மயக்கிலே/ஐயிறந்து கொண்டு நீங்கள் அல்லல் உற்று இருப்பீர்கள் (சிவ.62)*** என்றும், ***கருக் குழியில் ஆசை யாய்க் காதலுற்று நிற்கிறீர் (சிவ.77)*** என்றும், பாம்பாட் டிச் சித்தர் 10 பாடல்கள் பாடியுள்ளார். (பாம்பாட்டிச் சித்தர் பாடல் 50-59). ***பெண்ணாசையைக் கொண்டு பேணித்திரிந்தக்கால் விண்ணாசை வைக்க விதியில்லை (இடை.58)*** என இடைக்காட்டுச் சித்தரும், ***மைவிழி யாரைச் சேராதே (கடு.24), எழில் பெண் ணாசைக் கொண்டு பெருக்க மாளாதே (கடு.9)*** எனக் கடுவெளிச் சித்தரும், ***மாய்கைத் தேவடியாள் தனம் பண்ணாதே (கொங்.93)*** என்பன மூலம் இச் செயல் சமூகத்தில் நெடுங்காலம் இருந்துள்ளதால் அது குறித்த சொல் பிற இடங்களில் மரபுத்தொடராகவும் வழங்கப்பட்டுள்ளது. பெண்களின்நிலை சமூகத்தில் சற்று குறைத்தே மதிப் பிடப்பட்டுள்ளது. ***பெண்டாட்டிக்கு உற்றதைச் சொல்லாதே (கொங்.88), பெண்டாட்டி மந்தை மட்டும் வருவாள். பெற்ற பிள்ளை மசானக் கரையின் மட்டும் (கொங்.82)*** என்னும் தொடர்கள் அக்காலந்தொட்டே ஆணுக்கும் பெண்ணுக்கும்இடையேயான சமூக மதிப்பு வேறுபாட் டைச் சுட்டுகின்றன. பெண்களின் தாய்மைநிலை உயர் வாகப் போற்றப்பட்டுள்ளது. இறைவனுடன் தாயை ஒப் பிட்டு, ***அன்னையைப் போல் எவ்வுயிரும் அன்புடன் காத்து வரும்/முன்னவனைக் கண்டு முத்தியடை (இடை. 76)*** எனக் காட்டப்படுகிறது. இறந்த தம் அன்னைக்கு கனக்கிரியை செய்யும்போது பட்டினத்தார் பாடிய பாடல்கள் அனைத்தும் துறந்த துறவியின் உள்ளத் திலும் தாயன்பு என்பது உயர்ந்து நிற்கும் என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

முடிவுரை

தமிழகத்தில் சைவ, வைணவங்களுக்கிடையே உண் டான முரண்பட்ட நிலையில் தோன்றித் தனித்த இடம் பெற்றுள்ளது சித்தர் தத்துவம். சைவ, வைணவங்கள் இலக்கியம் கொண்டிருப்பதுபோலச் சித்தர் தத்துவச் சிந்தனைகளுக்கும் இலக்கியங்கள் உண்டு. தமிழ்நாட் டுச் சித்தர் சிலர் தம் காலத்திய சமூகக் கட்டமைப் பினை மாற்ற வல்ல கருத்துக்களைப் பதிவுசெய்துள் ளனர். சித்தர் பாடல்களில் பெரும்பான்மை தத்துவப் பொருள் அமைந்திருந்தாலும் தமிழ்ச் சமூக இயல்பு கள் ஆங்காங்கே பதிவாகியுள்ளன. இறைவனின் அருள் வேண்டும் முறை, அறிவால் ஆண்டவனை அடையும் வழி, ஆண், பெண் வாழ்வியல் முறைகள் பேசப்பட்டுள்ளன. பெண்கள் குறித்த மதிப்பீடு குறை வாக இருந்தாலும் சித்தர் பாடல்கள் தாய்மையைப் போற்றியுள்ளமையையும் இக்கட்டுரைவழிக் காண முடி கின்றது.

துணைநூற் பட்டியல்

அருணாசலம், மு. *தமிழ் இலக்கிய வரலாறு (14, 15, 16ஆம் நூற்றாண்டு)*. சென்னை: தி பார்க்கர், 2005.

அறவாணன், க.ப. *அற இலக்கியக் களஞ்சியம்*. சென்னை: தமிழ்க்கோட்டம்.

கணபதி, டி.என். *தமிழ்ச் சித்தர் மரபு*. சென்னை: ரவி பப்ளிகேஷன்ஸ், 2004.

கைலாசபதி, கலாநிதி க. *ஒப்பியல் இலக்கியம்*. சென்னை: பாரி நிலையம், 1969.

பக்தவத்சல பாரதி. *தமிழர் மானிடவியல்*. சிதம்பரம்: மெய்யப்பன் தமிழாய்வகம், 2002.

மாடசாமி, ச. *பாம்பாட்டிச்சித்தர்*. மதுரை: அருவி பதிப்பகம், 2004.

மெய்யப்பன், ச. *சித்தர் பாடல்கள்*. சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2006.

மோகன், ஆர்.சி. (ப.ஆ.). *போகர் ஏழாயிரம்*. சென்னை: தாமரை நூலகம்.

Tamil Lexicon, Madras: University of Madras, 1982.

509 சகோ. ஆ. விண்ணரசி
510 சகோ. எம். ரோஸி
511 த. தமிழரசி
512 துளசிதாஸ் ராஜேஷ்
513 எம். உமர் அலி
514 வை. இரமேஷ்
515 ச. முத்துமாரி
516 ர. திவ்யபாரதி
517 சு. தமிழ்ச்செல்வன்
518 க. சிங்காரவேலு
519 த. கவிதா
520 இரா. ஹேமலதா
521 மோ. விஜய்
522 ஷமீலா பேகம்
523 கி. தமிழரசி
524 கு. செந்தமிழ்செல்வி
525 ரா. ஆனந்தி
526 கி. காமாட்சி
527 செ. கௌதமி
528 சு. செந்தில்குமார்
529 எம். உமாமகேஸ்வரி
530 சே. வனிதா
531 ஜெ. டெய்சி தங்கம்மாள்
532 சி. கிருஷ்ணமூர்த்தி

ISSN 2320-4842

நாட்டுப்புறப் புழங்குபொருட்களில் உலக்கைப் பண்பாடு

முனைவர் ஆ. இன்பவள்ளி
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பளையம், திருச்செங்கோடு

முன்னுரை

நவீனமயமாக்கலின் விளைவால் நாள்தோறும் தொழில் பெருகிப் புழங்குபொருள் வகையிலும் பயன்பாட்டிலும் புதுமை உருவாகிவருகிறது. வாழ்க்கை முன்னேற்றம் கருதி நாம் அதனை ஏற்றுக்கொள்கின்றோம். எனினும் நாட்டுப்புறப் பண்பாட்டை உணர்த்தும் புழங்குபொருள்கள் நம் வாழ்க்கை முறைகளுள் தக்க இடம்பெறாமல் இல்லை. இத்தகு சூழலில் நாட்டுப்புற வாழ்வும் அவர்களால் உற்பத்தி செய்யப்பெறும் புழங்குபொருட்களும் அடிப்படை மரபில் எவ்வாறு உலக்கை நிலைத்து நிற்கிறது என்று இக்கட்டுரை ஆராய்கின்றது.

பண்பாடு

பண்பாடு என்னும் கருத்தாக்கம் மக்களின் அறிவு சார்ந்த நிலையில் ஏற்படும் எண்ணற்ற கருத்து வடிவங்களின் முழுமை ஆகும். சமூக உறுப்பினன் என்ற நிலையில் மனிதன் பயன்படுத்தும் பொருட்கள் அவை பற்றிய கருத்தாக்கங்கள் இவற்றின் கூட்டுச் சேர்க்கை பண்பாடாகும். இது புவியியல் பரப்பு, நாடு, மொழி, இனம் போன்றவற்றிற்கேற்ப வழங்கும் இயல்பினது. பண்பாடு எனும் சொல் பண்படுத்துதல் என்ற சொல்லிலிருந்து உருவானது எனலாம். ஏனெனில் பண்பாடு என்ற சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இது பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது. ***பண்பாடு என்னும் கருத்தாக்கம் மக்களின் அறிவு சார்ந்த நிலையில் ஏற்படும் எண்ணற்ற கருத்து வடிவங்களின் முழுமை*** என்று குறிப்பிடுகிறார்.

பண்பாட்டினை மானிடவியலார் 1. பொருள்சார் பண்பாடு, 2. பொருள்சாராப் பண்பாடு என இருவகைப்படுத்து கின்றனர். மக்கள் தமது தேவைகளுக்காகச் செய்துகொள்ளும் அனைத்து வகைப் பொருட்களும் பொருள் சார் பண்பாட்டினுள்ளும், பொருள்சாராப் பண்பாட்டில் பொருள் வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளும் இடம்பெறுகின்றன. புழங்குபொருட்கள் அனைத்தும் பொருள்சார் பண்பாட்டினை அடையாளப்படுத்துவன.

புழங்குபொருள்

மனித சமூகம் தான் வாழும் இடங்களுக்கேற்பவும் பயன்படுத்தும் புழங்குபொருள்களுக்கேற்பவும் பண்பாடுகளை வகுத்துக்கொண்டு வாழ்ந்துவந்துள்ளது. தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் புழங்கு என்பதற்குக் கதிரை வேற்பிள்ளையின் தமிழ் மொழியகராதி (2005) *வழங்குதல்* என்றும், தமிழ்ப் பேரகராதி (1982) *கையாளுதல், புழங்குதல்* என்றும் விளக்கம் தருகின்றன. எனவே புழங்குபொருள் என்பது மக்கள் அன்றாடம் தம் தேவைக் காகப் பயன்படுத்தி வந்த, வருகின்ற பொருட்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம். மானுடச் சமூகங்கள் தாம் வாழும் சுற்றுச் சூழலுக்கும் காலத்திற்குமேற்ப வாழ்ந்தாக வேண்டும். இப் படிமுறையில் தத்தம் சொந்த நோக்கத் திற்கேற்ப ***இயற்கை வளங்களைப் பண்பாட்டுப் படைப்புக்களாகவும் கலைப்படைப்புக்களாகவும் மாற்றிக்கொள்வதையே புழங்குபொருள்சார் பண்பாடு என்கிறோம்.*** மக்கள் தம் தேவைக்கேற்பத் தொன்றுதொட்டே செய்துவருகிற கைவி னைப்பொருட்கள் யாவும் புழங்குபொருள் பண்பாட்டை அடையாளப்படுத்துகின்றன. இயற்கை வளங்களைப் பண்பாட்டுப் படைப்புகளாகவும், கலைப்படைப்புகளாகவும் மாற்றிக்கொள்வதையே புழங்குபொருள்சார் பண் பாடு என்றும் மானுடக்குழு ஒன்றின் தொழில் நுட்பத்திறனும் புழங்குபொருள் சார்ந்த கலைத்தொழில் வேலைப் பாடமைந்த பொருட்களும் புழங்குபொருள்பண்பாட்டில் அடங்குகின்றன என்றும் குறிப்பிடுகின்றார். ரெஜித் குமார் புழங்குபொருட்களை 1. உணவு சார்ந்த புழங்குபொருட்கள், 2. வீட்டு உபயோகப் புழங்கு பொருட்கள், 3. தொழில்கள் புழங்குபொருட்கள் என மூவகைப் பிரிவுகளாகப் பகுக்கிறார்.

நாட்டுப்புற வாழ்வியலில் கலைகள், சடங்குகள், பாடல்கள், கதைகள் ஆகியவற்றைப் பல்வேறு நாட்டுப்புறவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆய்வு செய்யும் போக்கு இன்று வளர்ந்துவருகிறது. இவ் ஆய்வுகள் நாட் டுப்புறவியலுக்கும் நாட்டுப்புற வழக்காறுகளுக்கும் புதிய அர்த்தங்களையும் உள்ளடக்கங்களையும் ஆழமான சிந்தனைகளையும் வழங்கிவருகின்றன. நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை, வழிபாடு மற்றும் சடங்குகளில் பயன் படுத்தப்பெறும் பொருள்சார் பண்பாட்டுப் புழங்குபொருள்களில் உலக்கை எவ்வாறு நாட்டுப்புற வாழ்விய லான சடங்குகள், பாடல்கள், கதைகள் ஆகியவற்றில் இரண்டறக் கலந்துள்ளது. என்பதை விளக்குவதே இத்தகு

ஆய்வுகளுக்கு முன்மாதிரியாக அமைய வாய்ப்புள்ளது.

உலக்கை

உலக்கை தமிழர்களின் பண்பாட்டில் மிக முக்கிய இடம் பெற்றுளது. ***உலக்கை என்னும் சொல்லிற்குத் தானியங்களை உரலில் இட்டு இடிக்க அல்லது குத்தப் பயன்படும், முனையில் இரும்புப் பூண் பொருத்தப்பட்ட உருண்டை வடிவ, நீண்ட மரச் சாதனம் என்று பொருள் கூறப்பட்டுள்ளது.*** பழங்காலத்தில் ஆண்கள் வேட்டையாடச் சென்ற நிலையில் பெண்கள் இருப்பிடத்திலேயே விதைகளைக் கொண்டு உற்பத்தி செய்யப் பழகினர். உற்பத்திப் பொருள்களை உணவுப் பண்டமாக மாற்றப் பாறைகளின் சிறிய குழிகளை உரலாகவும் உருண்டையான நீண்ட மரக்கட்டைகளை உலக்கையாகவும் பயன்படுத்தினர். பிற்காலத்தில் கட்டையின் இரு முனைப் பகுதியிலும் இரும்பு, வெண்கலப் பூண்களைப் பூட்டினர். (பூண்-வளையம்). ஒரு முனையில் சமமான, மற்றொரு முனையில் சிறிது குழிந்த பூணும் பூட்டப்பட்டன. இதனால் முனைகள் சிதையாமலும் விரிசலடையாமலும் நீண்ட காலம் பயன்பட்டன.

தானியங்களை உரலில் இட்டு இடிக்கவும் குற்றவும் பயன்படுத்தப்படும் உலக்கைகள் தேக்கு, மருதமரம், புளியமரம், கடம்பமரம் போன்ற உறுதியான மரத் துண்டுகளால் செய்யப்பட்டவையாகவும் 4 முதல் 5 அடி நீளமுடையவையாகவும் காணப்படுகின்றன. மஞ்சள், மிளகாய் வற்றல் போன்றவற்றை இடிக்கச் ***கழுந்துலக்கை*** பயன்படுத்தப்பட்டுள்ளது. இது 3 முதல் 4 அடி வரை நீளமும் பூண் பூட்டப்படாத நிலையிலும் உள்ளதாகக் கூறப்படுகின்றது. தானியங்களை உரலில் இட்டு இடிக்கவும் குற்றவும் மட்டும் பயன்படுத்தாமல் வாழ்க்கை மற்றும் வழிபாட்டுச் சடங்குச் சூழல்களிலும் முக்கியத்துவம் கொடுத்து உலக்கையைப் பயன்படுத்திவருகின்றனர்.

உலக்கைப் பாடல்

உலக்கையால் தானியங்களைக் குற்றும்போது தலைவனைப் பெண்கள் புகழ்ந்து பாடுவதைச் சிலப்பதிகார வாழ்த்துக்காதை கூறுகிறது. இது ***வள்ளைப்பாட்டு*** எனக் குறிக்கப்படுகிறது. வள்ளை = உலக்கை. எனவே ***உரற்பாட்டு, உலக்கைப்பாட்டு, அவலிடி, அம்மானை வள்ளை*** என்ற பெயர்களாலும் இப்பாடல் வழங்கப்படுகின்றது. வள்ளைக் கூத்து குறித்துக் கூறும் நா. வானமாமலை புறநானூற்றுப் பாடலின் அடிப்படையில் பின்வரும் கருத்தை முன்வைக்கின்றனர்.

வலங்கு செந்நெல் கதிர் வேய்ந்த
வாய் கரும்பின் கொடிக் கூரை
சாறு கொண்ட களம் போல
வேறு வேறு பொலிவு தோன்ற
குற்றானா உலக்கையால்
கலிச்சுமை வியாலங்கண்

இப்பாடலில் தமிழர் திருநாளான பொங்கல் திருநாளில் நாட்டுப்புற மக்கள் நெற்கதிர் வரிந்த கூரை வீடுகளின் வாசலில் கரும்பைத் தோரணமாகக் கட்டியுள்ளனர். தானியம் குவியலாகக் கிடக்கிறது. பெண்கள் உலக்கையைக் கழுவி அணி செய்து வைத்துள்ளனர். அது நெல் குற்ற அல்ல. வள்ளக் கூத்தோடு களத்தின் நடுவே கிடத்துவதற்காக வைத்துள்ளனர். இவ்விழாவில் வள்ளைக்கூத்து, நெல் குற்றுவதுபோல ஆடும் கூத்து ஆடப்படுகின்றது. ***உழவுத் தொழிலின் ஆரம்பகாலத்தில் மகளிர் அத்தொழிலில் ஈடுபட்டிருந்ததன் எச்சமாகவும் மகளிரின் பங்கை வலியுறுத்துவதாகவும் இக்கூத்து காணப்படுகின்றது என்கிறார்.*** உலக்கையால் தானியம் குற்றும்போது வள்ளைப் பாடல் பாடப்பட்டதனை,

பா அடி உரல பகுவாய் வள்ளை
ஏதில் மாக்கள் நுவறலும் நுவல்ப...
மெய் இயல் குறுமகள் பாடினாள் குறினே என்ற குறுந்தொகை மருதத்திணைப் பாடல் புலப்படுத்துகிறது. இதில் தலைவி பரந்த அடியையுடை உரலினது வட்டவடிவ வாயினிடத்தே உலக்கையால் தானியம் குற்றும்போது வள்ளைப் பாட்டைப் பாடியது கூறப்பட்டுள்ளது. தாலாட்டுப் பாடும் பொழுது,

பள்ளிதனைக் கூட்டி
பதமாக அவல் இடித்து
இடைச்சிதனைக் கூட்டி
இலைபோல
அவல் இடித்து என்றும், சிறுவர் பாடல்களில்,
மழை வருது மழை வருது
நெல்லை குத்துங்கோ
மூனுபடி அரிசிப் போட்டு முறுக்கு சுடுங்கோ
ஏறு ஓட்டுற மாமனுக்கு எண்ணி வையுங்கோ
சும்மா இருக்குற மாமனுக்குச்
சூடு வையுங்கோ என்றும்,
பச்ச நெல்லு கிச்ச
நெல்லு குத்தத்தான் வேனும்
பணியாரம் கிணியாரம்
சுடத்தான் வேணும் என்றும், காதல் பாடலில்,
வீதியிலே கல் உரலாம்
வீசி வீசிக் குத்துராளாம் என்றும், தாய் இறந்தபோது மகள் பாடும் ஒப்பாரிப் பாடலில்,
தங்க அரிசி குத்தி
தனிப்பாலம் சுத்தி வந்தேன் என்றும் உலக்கையைப் பற்றிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இதன் வாயிலாக நெல் குற்றுதல், அரிசி இடித்தல் போன்றவை மக்களின் வழக்காறுகளில் பாடல்களாக இடம்பெற்றுள்ளன என்பதை அறியலாம்.

உலக்கையின் கதை

உலக்கை பற்றிய வாய்மொழிக் கதைகளும் மக்கள் வழக்கில் உள்ளன. ஒரு புழங்குபொருள் பண்பாட்டு அடையாளத்தை ஏற்றுவிட்டால் அது அழிவில்லாத பொருளாக மாறிவிடும்.உலக்கை ஓர் ஆயுதப் பொருளாக மாறும் வாய்மொழிக்கதையும் உண்டு. ***ஒரு ஊருல ஒரு புருசன் பொண்டாட்டி இருந்தாங்க. புருசன்***

தெனமு மதியத்துல ஏதாவது ஒரு சாமியார வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வந்து பொண்டாட்டிகிட்ட சாப்பாடு போடச் சொல்லுவான். அப்படி சோறு போடுறது அவளுக்குப் பிடிக்கல. அதனால யோசனை பண்ணி ஒரு நாளு சாமியாருக்கு முன்னால எலயப்போட்டுட்டு கடுச் சுக்க ஏதாச்சும் கடையில் வாங்கிட்டு வான்னு புருசங் கிட்ட சொன்னாள் புருசங் கடைக்கிப் போன சமயத்துல சாமியாரு முன்னால உலக்கையத் தூக்கிப் போட்டா(ள்) சாமியாரு திடுக்கினு பாத்தப்ப, கையெடுத்துக் கும்பிட்டு "சாமி சாப் பிடுறதுக்கு முன்னாடி எம்புருசன் உங்கள உலக்கையால் மூனு அடி அடிப்பாரு. அதுக்கும் பின்னால் நீங்க திருப் தியாசாப்பிடலாம்,"அப்படின்னு சொன்னா. அவ சொன் னதைக் கேட்ட சாமியாரு சாப்பாடே வேணாம்னு எந் திருச்சு வெளியில ஓடிட்டாரு. கடைக்கிப் போயிட்டு வீட்டுக்குள்ளார வந்த புருசன் சாமியார் எங்கன்னு கேட் டப்ப, பொண்டாட்டி சொன்னா "சாமியாரு இந்த உலக் கய" கேட்டாரு, உங்கள கேட்டுட்டுத்தாந் தருவேன்னு நாஞ் சொன்னே, அதுக்குக் கோவிச்சுக்கிட்டு சாப்புடாம எந்திரிச்சு போயிட்டாரு" அப்படீன்னா உடனயே உலக் கயக் கையில் எடுத்துக் கிட்டு சாமியாருட்ட குடுக்குற துக்கு ஓடினா(ன்) நம்மள உலக்கய தூக்கிக்கிட்டு ஓடிவர் ரான்னு நெனச்சுக்கிட்டு சாமியாரு ஓடியே போயிட்டா ராம் கடைசி வரைக்கும் சிக்கவேஇல்லையாம். இக்கதை வாயிலாக உலக்கை ஆயுதமாக உருவகப்படுத்தப்பட் டுள்ளதைஅறியலாம்.

பழமொழிகள், விடுகதைகள் வாயிலாகவும் உலக்கை தன்இடத்தைத்தக்கவைக்கிறது. ***அவல நெனச்சு உரல இடிக்காத*** எனும் பழமொழியிலும், ***அக்காள் சப்பாணி தங்கை நாத்தனப் பெண் இந்த இருவரும் இல்லா விட்டால் குடித்தனப் பெண் சிணுங்குவாள் (விடை,உரல் உலக்கை)*** எனும் விடுகதையிலும் உலக்கை குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.

உலக்கைச் சடங்குகள்

இனக்குழு அடிப்படையில் மக்கள் தமது வாழ்க்கை வட்டச் சடங்குகளான பெயர் சூட்டும் சடங்கு, பூப்புச் சடங்கு, திருமணச்சடங்கு,பொங்கல், மாவிளக்கு மாவு இடித்தல்,பேய் ஓட்டுதல், ஈமச்சடங்கு, சத்தியம் செய் தல் போன்றவற்றில் உலக்கையைப் பயன்படுத்திவரு கின்றனர். இச்சடங்குகள்மூலம் இவ்வின மக்களது உலக்கைச் செயல்பாட்டையும் நம்பிக்கைகளையும் அறிய முடிகின்றது.

பெயர் சுட்டுச் சடங்கு

பச்சை நெல்லை உரலில் இட்டு உலக்கையால் குத்தி அரிசியாக்கிப் பொங்கல் வைத்த பின்பே குழந்தைக் குப் பெயர் வைக்கின்றனர். இச்சடங்கிற்கு அரிசி குத் திப்பெயர் வைத்தல் என்கின்றனர். இச்சடங்கு குழந்தை பிறந்து முப்பது நாள் கழித்துக் குலதெய்வக் கோவிலில் நடத்தப்படுகிறது. இச்சடங்கில் உலக்கையால் குத்தப் பட்ட அரிசியே பயன்படுத்தப்படுகிறது.

பூப்புச் சடங்கு

பெண்ணிற்குப் பூப்படைந்த நாளன்று தாய் மற்றும் அண்டை வீட்டுப் பெண்கள் கூடி நீராட்டுகின்றனர். பின்னர் வீட்டு வாசலில் உலக்கையைக் கிடத்தித் தாண்டச் செய்து வீட்டிற்குள் அனு மதிக்கின்றனர். உலக்கையை வாசலில் கிடத்தித் தாண் டுவதால் காத்துக் கருப்பு வீட்டின் உள்ளே வராது என்று நம்புகின்றனர். மற்றும் பூப்பெய்தும் பெண்கள் பெரும்பான்மையான வீடுகளில் உலக்கை இருக்கும். காலம் மாறமாற மற்ற மரத்தால் ஆன உலக்கை அந்த இடத்தைப் பிடித்தது, உலக்கை வைக்கக் கார ணம் எந்த ஒரு கெட்ட சக்தியும் (எதிர்மறை சக்தி) பெண்ணைத் தாக்காதவாறு இருக்க மரத்தால் ஆன உலக்கையை வைத்தனர். சிலர் இரத்தவாடையால் வரும் விலங்குகளை வரவிடாமல் தடுக்கவும், வந் தால் விரட்டவும்தான் உலக்கையை வைப்பார்கள் என்றும் கூறுகின்றனர்.

பூப்படைந்த பெண்ணிற்காக அவளுக்குரிமையுடைய தாய்மாமன் அல்லது அவரது மகன்களால் குடிசை கட்டப்படுகிறது. குடிசை கட்டப் பச்சை கம்மந் தட்டை, சோளத்தட்டை, பச்சை தென்னங்கீற்றுகள் பயன்படுத்தப்படுகின்றன.குடிசைக்குள் பண்ணரிவாள், இரும்பு, பெருக்குமாறு, உரல், உலக்கை ஆகியவற் றைப் போட்டு வைக்கின்றனர். இதனால் காத்துக் கருப்பு அப்பெண்ணை நெருங்காது என்று நம்புகின் றனர். பூப்படைந்த பெண் தலையில் தாய்மாமன் மனைவி தண்ணீர் ஊற்றி நீராட்டுகிறார். பின்னர் ஏழு எருக்கிலை, ஏழுகாசு, உலக்கை ஆகியவற்றைத் தாண்டச் செய்த பின்னரே வீட்டிற்குள் அனுமதிக் கின்றனர். இதனால் தீட்டு என்ற நிலையும், ஊரார் கண்பட்டதால் ஏற்படவிருந்த நோயும் கழிந்து போவ தாக நம்புகின்றனர். கண்ணேறு கழித்தலை அடிப் படையாகக் கொண்ட இச்சடங்கு 11 அல்லது 16 ஆம் நாள் நடத்தப்படுகின்றது.

திருமணத்தில் உலக்கை

தானியங்களைக் குற்றி உணவு சமைக்கப்பயன்படும் உலக்கை, திருமணத்தின்போது தாய்வீட்டுச் சீதன மாகப் பெண்களுக்குக் கொடுத்தனுப்பப்படுகிறது

மாவிளக்குப்பூசை

உரலில் இட்டு இடித்த பச்சரிசி மாவை சல்லடை யால் சலித்துக் காய்ச்சிய வெல்லப்பாகுடன் கலந்து அம்மியில் தட்டி உருண்டை பிடிக்கின்றனர். அதில் குழி செய்து எண்ணெய் ஊற்றித் திரியிட்டு விளக் கேற்றுகின்றனர். ஒரே உரலில் பெண்கள் இருவர் இரு உலக்கையைக் கொண்டு இந்த மாவைக் குற்று கின்றனர். இதனை மாவிளக்கு மாவு குற்றுதல் என்கின்றனர்

பேய் ஓட்டுதலில் உலக்கையின் பங்கு

பேய் பிடித்த பெண்ணை உலக்கை துடைப்பம் போன்ற வற்றால் கடுமையாக அடித்துத் துன்புறுத்துவதாக சு. சண்முகசுந்தரம் குறிப்பிடுகின்றார்.

தொடர்ச்சி: பக். 10

மு. மேத்தாவின் கவிதைகளில் இலக்கிய உத்திகள்

க. நித்யா
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பளையம், திருச்செங்கோடு 637205

நெறியாளர்: முனைவர் ந. கமலஹாசன்
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும்
அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம் 637205
(இணைவு: பெரியார் பல்கலைக்கழகம்

முன்னுரை

படைப்பாளர்கள் தமது எண்ணப் பிரதிப்பலிப்புகளை எழுத்துருவாக்கம் செய்யும்போது சில அடிப்படையான செய்திகளை மனதில் கொள்வர். அப்படைப்புகளில் நடைமுறை உண்மை வாழ்வியல் வரலாற்றுச் செய்திகள் உள்ளிட்டவற்றைக் கற்பனை, வருணனையின் அழகோடுச் சேர்த்துக் கவிதை படைப்பர். இவை கவிஞர்களின் தனித்திறனிற்கும் எழுத்தாளுமைக்கும் பரந்துபட்ட சிந்தனைக்கும் சான்றாகும். அவ்வகையில் மு. மேத்தா வின் இலக்கியச் சிந்தனைகள் இவண் ஆராயப்பட்டுள்ளன.

உவமை

கவிஞன் தனது படைப்புகளில் இரு பொருள்களின் தன்மையை ஒப்பிட்டுப் பேசப் பயன்படுத்துவதை உவமை என்பர். நல்ல இலக்கிய ஆற்றல் பெற்றவர்கள் கையாளும் உவமைகள் சிறப்பிற்குரியன. உவமையை அணி களின் தாய் என்றும் கூறுவர். கவிஞர் மு.மேத்தா கருத்திற்கேற்ற வகையில் பல உவமைகளைக் கையாண் டுள்ளார். ***கவிஞன் தான் ஐம்புலன்களால் நுகர்ந்தவற்றையும் உணர்ந்தவற்றையும் அப்படியே மக்கள் உள்ளத்தில் பதிய வைப்பதற்குத் துணைச் செய்யும் கருவிகளில் உவமையே தலைசிறந்தது*** என ஆ.வே இராமசாமி விளக்கு கிறார். தாம் உணர்ந்தவற்றைப் பிறருக்கு உணர்த்துவதில் உவமை சிறப்பிடம் பெறுகின்றது.

நம் பாரதம் பழம் பெரும் பண்பாடுகளைக் கொண்ட நாடு. உலக அரங்கில் நமக்கென்று தனியிடம் உண்டு ஆனால் சிலர் கலாச்சாரம் என்ற பெயரில் மக்களில் சிலர் அரைகுறை ஆடைகளுடன் வலம் வருகின்ற னர். இது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டிய அவசியத்தை மு.மேத்தா,

அறைகுறையாகத் தான்
உடுத்துக்கிறார்கள்
தேசம் போகிற
போக்கைப் பார்த்தால்
பிறந்தநாள் உடையே
எங்கள் தேசிய உடையாகிவிடும்போல்
தெரிகிறது என்ற அடிகளில் பதிவுசெய்கிறார். இனிவரும் எதிர்காலத்தில் பிறந்த மேனியில் திரிவதுதான் நாகரிகம் என்று எண்ணுவார்கள் அதுவே தேசிய உடையாக மாறும் என உவமிக்கிறார்.

மனித வாழ்வில் குழந்தைப் பருவம் கிடைத்தற்கரியதாகும். கள்ளங்கபடமற்ற மனதோடு மகிழ்ச்சியை வெளிப் படுத்தும் பருவம் திரும்பக் கிடைக்காத ஒன்றாகும். வயதானவர்களும் குழந்தைகள்மீது அதிக பாசமும் அக்கறையும் கொண்டிருப்பார்கள். எப்பொழுதும் அவர்கள் மகிழ்ச்சியோடு இருப்பதற்கும் சிந்திப்பதற்கும் பல விதமான கதைகள் சொல்வதை வழக்கமாகக் கொள்வர். இந்நிகழ்வினை,
கிழப்பழக்கங்கள் கட்டுகிற
கினிராணிக் கதையோட்டம்
குருவிகள் போல் சுற்றிவரும்
குழந்தைகளின் கொண்டாட்டம் எனும் தொடர்கள் விளக்குகின்றன. பெரியவர்கள் கூறுகின்ற கதைகளைக் கேட்டு மகிழ்ச்சியை எய்துவதற்குச் சிறுகுழந்தைகள் குருவிகள்போல அவர்களைச் சுற்றிச்சுற்றி ஆரவாரம் செய்வர் என்னும் விளக்கம் போற்றத்தக்கது. மகிழ்ச்சியும் அன்பும் குழந்தைகளின் இலக்கணம் என்பதை உணரலாம்.
நாணயத்தின் இரு பக்கங்களாய் இன்பமும் துன்பமும் நிறைந்தது வாழ்வு. இவற்றில் ஏதாவதொன்று மிகும் போது அழுகை வந்து கண்களை மறைக்கும். மனித வாழ்வில்ஏற்படும்இதுபோன்ற மாற்றங்களை எதார்த்தத்தோடு மு.மேத்தா கையாள்கிறார்.

சாயங்காலத்துக்
காற்றை போல்

ISSN 2320-4842

உரிமையோடு
உள்ளே நுழையும்
சலனம் என்ற அடிகள் இயற்கையின் படைப்பான காற்றை வேலியிட்டுத் தடுத்தல் என்பது இயலாத ஒன்றாகும். அதுபோலச் சலனமும் வாழ்வில் தடை யின்றி மனிதர்களுக்கு அன்றாடம் ஏற்படுகிறது. எனும் சிந்தனையை உவமையால் தெளிவாகின்றன. துன்ப மில்லா மனிதர்கள் உலகில் இல்லை என்பதை இதனால் உணரலாம்.

உருவகம்

உவமையின் வளர்நிலையே உருவகமாகும். எழுத்தா ளர்கள் வெளிப்படுத்த எண்ணிய கருத்தைச் சுவை யோடும் நயத்தோடும் எடுத்தாளும்போது உருவகங் கள் தோன்றுகின்றன எனலாம்.

இரும்புமுகம் செறிந்த எந்தொழில் மருப்பில்
நீள்மொழி மறவர் எறிவளர் உயர்த்த
வாள்மீன் ஆக வயந்து கழப்பு அமைந்த
விசைப்பு வல்வில் வீங்குநாண் உகைத்த
கனைத்துளி பொழிந்த கனஅகன் கிடைக்கை என்ற பரணரின்பாடலடிகள் கடலோட்டிய வேல் சேரமான் போரிடும் போர்க்களத்தில் வீரரின் வாள் மின்ன லாகவும் மழைத்துளி வில்லிலிருந்து புறப்படும் அம் பாகவும் உருவகங்கள் செய்யப்பட்டுள்ளதை அறிய லாம். கவிஞர் மு.மேத்தாவும் கவிதைகளுக்கு ஏற்ற உருவகங்களைப் படைத்துள்ளார்.

தேசப்படத்திலுள்ள
கோடுகள்
விடுதலைக்குப் போராடிய
வீரத்தியாகிகளின்
எலும்புக் கூடுகள் என்னும் அடிகளில் இந்திய நாடு ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் பல தலைவர்கள் விலைமதிப்பிலா இன்னுயிர் அளித்து சுதந்திரக்காற்றை மக்கள் சுவாசிக்க வாங்கிக் கொடுத் துள்ளனர். அவர்களின் விலா எலும்பு ஒவ்வொன் றும் இந்தியப் படத்தின் கோடுகளாக உருவகம் செய் யப்பட்டுள்ளதை உணர்த்துகின்றன. தியாகிகளின் தன் னலமற்ற தியாகத்தால்தான் இந்தியா தலை நிமிர்ந்து வாழ்கிறது எனும் சிந்தனை வெளிப்படுவதை அறிய லாம்.

முத்தமிழில் ஒன்றாகிய நாடகம் காண்போருக்கு இன்பம் தரும் சிறப்பினது. அதில் நடிப்பவர்கள் ஒப்பனை யோடு மெய்ப்பாடுகளையும் வெளிப்படுத்திக் காட் சிக்கு உயிரோட்டத்தைக் கொடுப்பர். அதுபோன்று நாட்டியமக்கள் நடந்து வரும் அழகு ஆற்றின் போக் கிற்கேற்ப வளைந்து நெளிந்து செல்லும் நீருக்கு உருவகம் செய்யும் பாங்கு போற்றுதலுக்குரியதாகும். இதனை,

நாட்டியக் காரியின்
நளின வளைவுகளாய்
நதி
நடந்து கொண்டிருக்கும் என்ற தொடர்களின்வழி அறிய முடிகின்றது. நாட்டியத்தின்போது நாட்டிய மடந்தை களின் மெய்ப்பாடுகள் நதியின் போக்கிற்கு ஏற்ப அமைத்துள்ள கற்பனை சிந்திப்பதற்குரியதாகும்.

இயற்கையின் சக்திகளைக்கூடத் தமக்கு சாதகமாக்கிக் கொள்ளும் ஆற்றல் கவிஞர்களுக்கு உண்டு. புயல், பூகம்பம், மனித சமுதாயத்திற்குப் பேரிழப்புகளை ஏற்படுத்தும் வல்லமை கொண்டவை. அவற்றை விசிறி யாகவும், ஊஞ்சல் விளையாட்டாகவும் உருவகங்கள் செய்து ஆசிரியர் விளக்குகின்றார்.

புயல் என் விசிறி
பூமியை
நடுநடுங்க வைக்கும்
பூகம்பம் எனக்கு
ஊஞ்சல் விளையாட்டு எனும் அடிகள் மேற்கண்ட விளக்கத்திற்குச் சான்று பகர்கின்றன. கவிஞர்களின் ஆளுமைத்திறன் எதனையும் வெல்லும் என்பதை யும் இயற்கையையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் கவிஞர் களுக்கும் கவிதைகளுக்கும் உண்டு என்பதையும் அறியலாம்.

தொன்மம்

புதுக்கவிதையில் உவமை, உருவகம் போன்று தொன் மமும் ஓர் உத்தியாக ஆசிரியர்களால் கையாளப் படுகின்றது. புராணங்கள், வரலாற்றுச் செய்திகளைக் கவிஞர்கள் தொன்மத்தின் வழியே விளக்கும்போது இதன் முக்கியத்துவம் வெளிப்படுத்துவதைக் காண முடிகின்றது.

தொன்மங்கள் பொய்மைகளின் புகழிடங்கள் அல்ல, உண்மைகளின் இருப்பிடம், கருத்துக்களின் வாழ்விடம், எண்ணங்களின் வரலாற்றுப் பெட்டகம், நினைவுகளின் சுழிமுனை என்று மேலைநாட்டு அறிஞர் கம்பெல் என்பவரின் கூற்றும் இதனை மெய்ப்பிக்கின்றது. மு.மேத்தாவும் தனது சிந்தனையால் உருவான தொன்மக் கூறுகளை கவிதைகளின் வடிவில் பல இடங்களில் பதியவைத்துள்ளார்.

இந்திரனின்காம இச்சைக்குப் பலியாகி கௌதம முனி வரால் அகலிகை கல்லாகச் சபிக்கப்படுகின்றாள். இராமனின் பாதங்கள் தீண்டும்வரை பல ஆண்டுகள் காட்டில் கேட்பாரற்றுக் கிடக்கின்றாள். இதனைத் தமது கவிதை அடிகளின்வழி விளக்கிக்காட்டுகிறார். இதற்கு,

இடறி விழுந்த
அந்தக் கல்லுக்குள்
தன்னை
இறுக்கிக் கொண்டவள்
ஓர் இளையள்! அந்த
ழகியின் பெயர்தான்
அகலிகை! எனும் தொடர்கள் ஆதாரங்களாகும். கல்லுக்குள் ஈரம்போலக் கல்லாகவே வாழ்ந்து வாடி யுள்ள நிலையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். மேலும்,

சரித்திர மாளிகையில்
அகிம்சைப் பேரோளியில்
பகத்சிங்குகள்
மறைக்கப்பட்டதால் தான்
சுதந்திர மாளிகையை
எலிகள் சுரண்டுகின்றன? என்ற அடிகளின்வழித் தொன்மத்தை வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். மாவீரன் பகத்சிங் விடுதலைப் போராளி காந்தியின் அகிம்சை வழியில் ஈர்க்கப்பட்டாலும் போராட்டத்தால் மட்டுமே வெற்றியைப் பெறமுடியும் என்ற உறுதி கொண்டவர். லாலாலஜபதிராய் இறப்புக்குக் காரணமான வெள்ளையன் சாண்ட்ரஸை சுட்டுக் கொன்றவன். அவன் வழியில்ஆட்சி செய்ய வேண்டியவர்கள் நாட்டில் ஊழல் செய்யும் நிலையை எடுத்துரைக்கின்றார். இன்னுயிர் தந்து பெற்ற சுதந்திரம் வீண்போகும் அவலத்தைக் காண முடிகின்றது.

முடிவுரை

முன்னணி படைப்பாளர்களில் ஒருவராகத் திகழும் மு.மேத்தா தனது பொருண்மைகளுக்கு மெருகூட்ட உவமை, உருவகம், தொன்மம் போன்ற இலக்கிய உத்திகளைக் கையாளுகின்றார். கவிஞர்களால் பயன்படுத்தப்படும் உவமை, உருவகங்களால் சாதாரண நடையில் அமையும் வாக்கியங்களைக்கூட அழகுபடுத்தலாம் என்பதற்கு ஆசிரியரின் படைப்புகளும் உதாரணம். ஒரே கவிதையில் ஒன்றிற்கு மேற்பட்ட உவமை, உருவகங்களைப் பயன்படுத்துவதால் படைப்பாளர் உலகம் பரந்துபட்ட அறிவாற்றலோடு இலக்கிய வளமும் மொழி வளர்ச்சியும் ஏற்படும் என்பதை இங்குக் காணமுடிகின்றது.

பார்வை நூல்கள்

1.ஆ.வே இராமசாமி, சிந்தாமணி நயம்,1989.
2. மு.மேத்தா, கண்ணீர் பூக்கள், 2009.
3. மு. மு.மேத்தா, வெளிச்சம் வெளியே இல்லை, 2006.
4. இரா. இளங்குமரன், புறநானூறு உரை, 2003.
5. கதிர். மகாதேவன், தொன்மம் 1984.

7ஆம் பக்கத் தொடர்ச்சி

பேயோட்டுதல் என்ற பெயரில் நோயுற்றவர்களுக்கு முரட்டு வைத்தியமாக இச்செயல் செய்யப்படுவதாகவும் கூறுகிறார். பேய் பிடித்த பெண்ணிடமிருந்து பேயை விரட்டப் பூசாரி அல்லது பேயோட்டுபவர் ஈடுபடுகிறார். அமர்ந்த நிலையில் தலைவிரி கோலமாக ஆடச்செய்து அப்பெண் கேட்கும் பொருளைக் கொடுத்து ஓடிவிடும்படி கூறுகிறார். ஒத்துக் கொண்ட பின்பு தலையில் கல்லை வைத்து ஓடச் செய்கிறார். ஆலமரம், புளியமரம், நாவல்மரம் போன்ற மரத்தடியில் கல் சுமந்தபடி நிற்கும் பெண்ணிடமிருந்து கல்லைக் கீழே போடச்செய்கின்றனர். மரத்தில் ஆணி அடித்துப் பேய் பிடித்த பெண்ணின் உச்சந்தலை முடியை ஆணியில் சுற்றியபின் முடியைக் கத்தரித்து மரத்தில் பொருத்துகின்றனர். பின்னர் அப்பெண்ணை வீட்டிற்கு அழைத்து வந்து வாச லில் உலக்கையைப் போட்டுத் தாண்டச்செய்து உள்ளே விடுகின்றனர்

ஈமச்சடங்கில் உலக்கை

நாட்டுப்புற மக்கள் இறந்தவர்களைச் சுடுகாட்டிற்குக் கொண்டு சென்று புதைக்கின்றனர் அல்லது எரியூட்டுகின்றனர். சுடுகாடுவரை செல்லும் ஆண்களைப் பின்தொடர்ந்து வரும் தீய ஆவிகள் வீட்டிற்குள் வராமல் இருக்க வீட்டு வாசலில் உலக்கையைத் தாண்டச்செய்து பின்பு உள்ளே அனுமதிக்கின்றனர். இதனால் வீட்டின் உள்ளே தீய ஆவிகள் வரமுடியாமல் திரும்பிச் சென்று விடுவதாக நம்புகின்றனர்.

சத்தியத்தில் உலக்கை

நாட்டுப்புற மக்களிடம் சத்தியம் செய்யும் வழக்கம் காணப்படுகின்றது. உண்மை எனக் கூறச் சத்தியம் செய்கின்றனர். கைமீது கைவைத்தும், பெற்ற பிள்ளைகள்மீதும், கற்பூரத்தை அடித்தும், குழந்தையைத் தாண்டியும், துண்டைத் தாண்டியும், சத்தியம் செய்யும் வழக்கம் காணப்படுகின்றது. இம்மக்களிடம் உலக்கையைத் தாண்டிச் சத்தியம் செய்யும் முறையும் காணப்படுகின்றது. உலக்கையைத் தாண்டிப் பொய்ச் சத்தியம் செய்தால் தீமை ஏற்படுமென நம்புகின்றனர்.

முடிவுரை

நாட்டுப்புற மக்களின் பண்பாடுகளை அறிவதற்கு அவர்கள் பயன்படுத்தும் புழங்குபொருட்கள் பற்றிய தரவுகள் தேவை. மாறிவரும் சூழலுக்கேற்ப மக்களது பழக்கவழக்கங்களும் புழங்குபொருட்களும் மாற்றங்களைப் பெற்றுவருகின்றன. புதிய புழங்குபொருட்களை ஏற்றுக்கொண்டாலும் பழைய புழங்குபொருட்களே பண்பாட்டைப் பறைசாற்றும் எச்சங்களாக உள. புழங்குபொருள்களைப் பாதுகாத்துவரும் இக்காலத்தில் உலக்கை அனைவர் வீடுகளிலும் தவிர்க்க முடியாத இடம்பெற்று விளங்குவதோடு நாட்டுப்புற, நகர்ப்புற மக்களிடையே சடங்குகள் வாயிலாக இன்றுவரை பயன்பாட்டில் இருந்துவருவது குறிக்கத் தக்கது.

பார்வை நூல்கள்

1. சீ. பக்தவத்சல பாரதி பண்பாட்டு மானுடவியல் -1980
2. சீ. பக்தவத்சல பாரதி பண்பாட்டு மானுடவியல் 1980
3. Tamil Lexicon - தமிழ்ப் பேரகராதி - லெக்சிகன் - 1982- University of Madras.
4. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி.2005.
5. லூர்து, நாட்டார் வழக்காற்றியல்.
6. ரெஜித்குமார்.புழங்கு பொருள் பண்பாடு .
7. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, 2000.
8. மு.சண்முகம்பிள்ளை. குறுந்தொகைமூலமும் உரையும் 1994.
9. தட்சணமூர்த்தி, தமிழர் வரலாறும் பண்பாடும், 2001.
10. சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல்,1999.

ISSN 2320-4842

கவியரசு நா. காமராசனின் காட்டுக் குறத்தி கவிதைத் தொகுப்பில் காதல் சிந்தனைகள்

ரா. ஜெயஸ்ரீ
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம் 637 205

நெறியாளர்: முனைவர் ந. கமலஹாசன்
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம் 637205
(இணைவு: பெரியார் பல்கலைக்கழகம்

முன்னுரை

சங்க காலத்தில் அகமும் புறமும் இரு கண்களாகக் கருதப்பட்டன. புறத்தே வீரமும் அகத்தே காதலும் இருக்கும். காதலும் வீரமும் ஒன்றுடன் ஒன்று உறவு கொள்ளும் நிலை சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. காதல் கலவாத எந்தவொரு பொருளையும் பிரித்தறிய முடியாது. இந்த உலகில் காதலைப் பாடாத கவிஞர்களோ இலக்கியங்களோ இல்லை எனலாம். காதல் ஓர் அழகான கவிதை. மனித வாழ்க்கையில் காதலென்பது உயிர் வழியாக உள்ளத்தில் பிறக்கும் ஓர் உன்னதமான உணர்வாகும்.

கவிஞனும் கவிதையும் காலத்தின் கண்ணாடிகள்; ஒரு காலத்தில் நிலவிய கருத்தாக்கங்களைப் புரிந்துகொள்ள வும் முன்னைய மரபை அந்தச் சமுதாயம் எவ்வாறு போற்றுகிறது, மாற்றிக்கொண்டது என்பதை அறியவும் இலக்கிய ஆய்வு துணைபுரியும். அந்த வகையில் காதல் பற்றிய கருத்துக்கள்வழி நா. காமராசன் கவிதைத் திறத்தை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காதல் சிந்தனைகள்

சமுதாய நிகழ்வுகளைச் சமயத்திற்கேற்பக் கவிதைகளாக்கும் ஒரு சிறந்த கவியரசு நா.காமராசன் என்றாலும் அவர் காதல் கவிதைகள் எழுதுவதிலும் வல்லவராக விளங்குகின்றார். காதல் பற்றிப் புதுக்கவிதைகள் பல படைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் கவியரசு தமது கவிதைகளில் மென்மை, காதல் உள்ளங்களின் ஏக்கம், காதல் தோல்வியால் அவ்வுள்ளங்கள் படுந்துன்பங்கள் போன்றவற்றை அழகாகவும் அதே சமயம் சுருக்கமாகவும் சிறந்த முறையில எழுதிச் சிறப்பான கவிதைகளை வடித்திருக்கிறார். காதல் உள்ளங்கள் எப்பொழுதும் சாதாரண மனிதனிலிருந்தும் மாறுபட்டிருப்பது இயற்கை. அவ்வுள்ளங்களின் நிலையை நா.காமராசன் பல கோணங்களில் தனது கவிதைகளால் விவரித்துள்ளார்.

காதலில் கண்கள்

காதல் பற்றிப் பேசும் எந்தக் கவிஞரும் கண்களைப் பற்றிப் பேசாமல் இருக்க மாட்டார். கண்வழிப் புகுந்து உள்ளத்தை உரசி உயிரில் சுரக்கும் காதலுக்கு முக்கியக் காரணம் கண்களே ஆகும்.

எழுத்து இல்லாவிட்டால்
மொழி
சூன்யமாகும்
காதல் இல்லாவிட்டால்
இதயம்
சூன்யமாகும்

மொழிக்கு அழகு எழுத்து. மனித இதயத்திற்கு அழகு காதல் என்று பா.விஜய் காதலின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றார். இதனால் காதல் அன்பின் ஆழத்தை அறியலாம்.

திருவள்ளுவர் தலைவி பற்றிச் சொல்லும்போது தலைவன் தலைவியின் பார்வை தலைவனுக்கு நோய் தருவ தாகவும் அதே கண்களால் பார்க்கிற மற்றொரு பார்வை அந்நோயைப் போக்குவதாகவும் சுவைபடக் கூறி யுள்ளார். இச்சிந்தனையை அடியொற்றியே கவிஞரும் கவிதையைப் படைத்துள்ளார்.

பழைய கள்ளென
பவள மல்லிகை
பானை வழியவே
ஊற்றுவாள்-அவள்
இழந்த காதலின்
சிறகை... தோள்களில்
சேலையாக்கியே தேற்றுவாள்..!

சந்தனக் கட்டிலில்
கவுளி வெற்றிலை
சாறு ஊற்றியே
கொஞ்சுவாள்-அந்த
ஜாதி லிங்கமும்
ஏலம் கிராம்புமே
போதையேற்றவே மிஞ்சுவாள்...!

வானமும், பூமியும்
தொடுகின்ற காதலால்-அவள்
விடியாத காதல் வானிலே
தொடுவானம் ஆகிறாள்...

நீலவானமும்,
நிலவும் மேகமும்
காதல் பேசிடும் வேளையில்-அவள்
கண்கள் ரெண்டுமே
வான மீன்களின்
கருவறையில் சென்று தூங்குமே-அங்கு
காமனின் தாய்வீடு பெண் கேட்குமே.. என்னும் கவிவரிகள் எடுத்தியம்பப்படுகின்றன. வானத்தையும் பூமியையும் இணைக்கும் சக்தி இயற்கைக்கு உண்டு அதுபோல ஆணையும் பெண்ணையும் காதல் எனும் சக்தி ஆட்சி செய்கிறது எனும் சிந்தனையை உணரலாம். காமத்தைவிடக் கண்களில் பேசும் நிலையே உண்மையான காதல் என்பது உணர்த்தப்படுகிறது.

இன்பக் கடல்

காதல், வாழ்விற்கும் பெருந்துணையாக அமைந்து மனிதஇனத்தை மகிழ்வித்து இன்பக் கடலினுள் இழுத்துச் செல்லும் ஓர் ஈர்ப்பு விசை எனலாம் இக்கருத்தினை இரா.பி. சேதுப்பிள்ளை, ***காதல் என்பது காதுக்கினிய சொல் கருத்துக்கினிய பொருள் காதல் உண்டாயின் இவ்வுலகில் எல்லாம் உண்டு. காதல் இல்லையேல் ஒன்றுமில்லை***[3] என விளக்கியுள்ளார். காட்டுக்குறத்தி எனும் கவிதைத் தொகுப்பில்

உன்னையே ரதியென்று
நான் நினைக்கிறேனடி...!
உருகி.. உருகி..
ஒரு முத்தம் கொடுத்து...
உதடுகள் இனிக்க...
அணைக்கின்றேனடி...!

தென்னை மரத்தோப்பில்
வந்து உன்னைத் தேடி..
தேன் நிலவில் பாடி... நான்
திரிகிறேனடி...!
பிரிகிற நேரம், வருகிறபோது...
திரும்பித் திரும்பி
உன் முகம் பார்த்துத்
தேம்பித் தேம்பி
அழுகிறேனடி...
மூங்கில் மரம் தலையசைக்க
முழுநிலவு பால்பொழி...
மோகனக் கனவிலே வருகிறாயடி-அது
மோகினி உன் அழகில் எரிகிறேனடி! எனும் கவித்தொடர்கள் விளக்கம் தருகின்றன. காதலர்கள் பிரியும் சூழல் வரும் பொழுது வருந்தும் நிலையை கவிஞர் அழகுற வர்ணித்துள்ளார்.

காதல் துயரம்

காதலினால் மானுடர்க்கு கவிதை உண்டாகும்
கானமுண்டாட் சிற்பமுதற் கலைகளுண்டாம் என்னும் பாரதியின் வரிகள் மனித உயிர்களுக்குக் காதல் உணர்வு ஒன்றே வாழ்வு என்பதை உணர்த்துகிறது. காதலி நினைவால் துக்கத்தை ஏற்படுத்தி அவனது சுயகட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்து கதியற்று இருக்கும்போது அவனது உள்ளுணர்வு துக்கத்தை ஏற்படுத்தும். அவனது மூளை குழம்பிக் காதலுக்கும் சினத்துக்குமிடையே தவித்தவளாய்ப் பதற்றத்துடன் சொல்வதை,

ஆத்துப்பக்கம், அக்கரையில்
அன்னக்கிளி போகிறதே!
தோப்புக்குள்ளே-ராத்திரியில்
சின்னக்குயில் கூப்பிடுதே..!

காமனின் அம்புபட்டுத்
துடிக்கிறேனடி-உன்
காலடி ஓசை கேட்கத்
தவிக்கிறேனடி...

'உன்னையே ரதியென்று
நான் நினைக்கிறேனடி... என்று நா.காமராசன் எடுத்தியம்புகிறார். காதலிதான் தனது வாழ்வு எனக் காதலன் நினைத்து வாழ்வதைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

காதலெனும் போதை இன்றி
வாழ்வில் இன்பம் ஏது என்னும் தொடர்கள் காதலில் தோன்றும் நட்பு ஒன்றே வாழ்விற்கு அர்த்தமளிக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

மனதில் மறைந்திருக்கும் காதல்

தலைவி தன் காதலை உள்ளத்திலேயே வைத்திருப்பதையும் தலைவன்மேல் கொண்ட தன் காதல் எல்லாவற்றையும் விடப் பெரியது என்று கூறுவதையும்,

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சி பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கு நாடனொடு நட்பே என்ற பாடல் மூலம் அறியலாம். இதன் மூலம் தலைவி தலைவன் மேல் கொண்ட காதல் எத்தகைய உறுதி வாய்ந்தது என்பதனை நன்கு அறியலாம். இவ்வாறே, தலைவனும் தலைவியின்மேல் கொண்ட காதல் உறுதியானது என்பதையும் அறியலாம்.

தலைவி நிலையில் அடுத்து ஒரு மாற்றம், மெதுவாகப் புன்னகைப் பூக்களை உதிர்க்கத் தொடங்குகிறாள். அது தலைவனின் காதலுக்கு உரமாக அமைகிறது. கடைசியாகத் தன்னை முழுவதும் அவளிடமே அடகு வைத்துவிடுகின்றான். இதனை,

களத்து மேட்டின்பின்புறத்தில்-அந்தக்
'காற்றுக் குறும்பு' மாமரத்தில்
கைகளில் பொன்வண்டு கொண்டுவந்து ஒரு
காட்டுக் குறத்தி பாடுகிறாள்..!

தேவதைக் கனவுகள் வார்த்தைகளாய்
பூமியைச் சுற்றிடும் நேரம் இது-இவள்
நீல விழிகளின் பேச்சுக்குரல்-என்
நெஞ்சத் துடிப்பினில் கேட்கிறது!

மல்லிகை மேலொரு ஆயிரம் பூ-உடல்
மத்தியில் சித்திரச் சிறுமலைப்பூ-அட
இத்தனை பூக்களில் ஓர் மண்டபமா?-இவள்
பக்தனைப் பித்தனாய் மாற்றுகிறாள்...!

கோபக் குறும்புகள் கொடி பிடிக்க-காற்றில்
கூந்தல் மலர் விழுந்து துடிதுடிக்க
தீக்கனல் உயர்த்திய கண்களில்-காம
தேசத்தின் வானத்தை எரித்து விட்டாள்..!

சர்க்கரை வள்ளிக் கிழங்கெடுப்பாள்-காட்டுச்
சந்தன மரத்தில் சாய்ந்திருப்பாய்
தித்திக்கும் சிறுசிறு கனிதருவாள்-இந்த
'வானதி' மானுடர் வீதியில் வலம் வருவாள்..!

என்ற அடிகள் சான்று காட்டுகின்றன. ஆண்மகனின் காதல் வெளிப்படும் ஆனால் பெண்ணின் காதல் வெற்றி பெறும் என்பதை இதன்வழி அறியலாம்.

காதல் நினைவுகள்

தனக்காக அழுத பெண்ணையும் தன்னை அழவைத்த பெண்ணையும் ஆண்கள் ஒருபோதும் மறப்பதில்லை. ஒருவர் தன் வாழ்க்கையில் மறக்க முடியாத நிமிடங்கள் வாழ்ந்த நினைவுகள் ஒன்றே போதும் என்று உயிர் நீங்கும் வரை காதலியின் நினைவு வந்தால் என்னைத் தேடாதே உன் இதயத்தைத் தொட்டுப்பார் நான் துடிப்பேன். உன் நினைவுகளோடு. ஏமாற்றுவோருக்குமறதி அதிகம். நேசித்தோருக்கு நினைவு அதிகம். மிக அழகானது சிலரின் நினைவுகள். உன் நினைவுகளாய் என்னிடம் எதுவுமே இல்லை. இறந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு நொடியையும் என்றும் உயிர்ப்புடன் வைத்திருப்பது நீங்கா உன் நினைவுகள் மட்டுமே என்று புலம்பும் காதலர்கள் மண்ணில் பலராவர். இதனை,

ஆற்று மணலை எண்ணி-அங்கு
காதல் ஊற்றுகள் பெருகுமே.
அர்த்த ராத்திரிகள்
விடியலின் காலடிகள்
அடியில் விழுந்துதான் உருகுமே...!

ஆகாய கங்கை
பெருகுமே!-அங்கு
பூபாள ராகம் சிதறுமே..!
விடியாத வானம்
காதலின் கட்டுத் தறியில் என்றும்
முடியாத வேதம்
கன்னியின் கட்டில் அறையில்..
முளைக்கின்ற வைர
நட்சத்திரம்
மோகினியின் கண்ணிமையில்
கரையுமே..அந்த
நீலவானத்தில்
காலதேவனின்
பூமுகத்தை வரையுமே!

சாம பேத
தான தண்டமே
காமராஜனின் ஆயுதம்-அங்கு
பீமராஜனும்! தர்மராஜனும்
காலதேவனும்
கசக்கி எறிந்த காகிதம்! என்ற வரிகளால் அறியமுடிகிறது. சாதி-மதம், இறப்பின் நியதி அனைத்தையும் மீறி காதல் என்ற உணர்வு மட்டும் உலகை ஆட்சி செய்கிறது என்பதை அறியலாம்.

காதலால் சுவாசி காதலால் உணவுண்
காதலால் ரசவாதம் கொள்க!
காதல் காதல் என்றே கத்தி
கடைசி மூச்சையும் வெல்க! என்ற அடிகள இயற்கையையும் மரணத்தையும் வெல்லும் ஆற்றல் காதலுக்கு மட்டுமே உண்டு என்பதை அறியமுடிகிறது.

முடிவுரை

தலைவன் தலைவி இருவரும் காதல் வயப்பட்டாலும் ஊரார் பேச்சுக்கு அஞ்சியே வாழ்ந்துள்ளனர். காதலில் தோய்ந்து, காதலில் தோற்று, ஆற்றாத்துயர் அடையும் உள்ளங்களின் துன்பம் கவிதைவழி உணர்த்தப்பட்டுள்ளது. காதலின் நுட்பமான நெருடல்களையும், வேதனைகளையும் நா.காமராசன் தன் கவிதை வாயிலாகக் காட்சிப்படுத்தியுள்ளார். காதல் ஒரு மனிதனை எந்தளவிற்குச் சிந்திக்கத்தூண்டுகிறது உலகைப் புரியவைக்கிறது என்பதையும் உணர்த்துவது குறிப்பிடத் தக்கதாகும்.

பார்வை நூல்கள்

1. நா.காமராசன்,காட்டுக் குறத்தி
2. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள்
3. ரா.பி. சேதுப்பிள்ளை, தமிழ் இன்பம
4. சந்திரசேகரன், குறுந்தொகை
5. பா. விஜய், காற்சிலம்பு ஓசையிலே (பாகம் 2)
6. பாரதியார், பாரதியார் கவிதைகள், பாரதி அறுபத்தாறு
7. கண்ணதாசன், கண்ணதாசன் திரைஇசைப் பாடல்கள்
8. பா.விஜய், பெண்கள் பண்டிகை

RISK by Anaïs Nin

And then the day came,
when the risk
to remain tight
in a bud
was more painful
than the risk
it took
to blossom.

THE SUMMER DAY
by Mary Oliver

Tell me, what else should I have done?
Doesn't everything die at last, and too soon?
Tell me, what is it you plan to do
with your one wild and precious life?

ISSN 2320-4842

ரமணிசந்திரனின் புதினங்களில் சமுதாயச் சித்திரிப்பு

ஜெ. நித்தியகல்யாணி
உதவிப் பேராசிரியர், பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வுத் துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) எளையாம்பளையம், திருச்செங்கோடு

முன்னுரை

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் எழுகின்ற இலக்கியங்கள் அந்தந்தக் காலக்கட்டத்தில் வாழும் மக்களின் வாழ்வியல் பண்பாட்டையும் சமூகநிலைகளையும் பாடுபொருளாகக் கொண்டே அமைகின்றன. சமூகம் பற்றி அகராதி தரும் விளக்கங்கள், அறிஞர்களின் மதிப்பீடுகள் ஆகியவற்றையும் பண்டைக் காலத்தில் காதல் சார்ந்த சமூகமாக இருந்ததால். சமுதாயத்தில் உறவுகளும் சிக்கல்களும் தலைதூக்கி நின்றதையும் அவற்றைச் சந்திக்கும் மாந்தர்களின் மனவுணர்களையும் ரமணிசந்திரன் தனது *உரியவளே இவள் திருமகளே, இவள் ஒரு புதுக்கவிதை, அவள் ராஜா மகள்* ஆகிய நாவல்கள்வழிச் சமூகத்திற்கு உணர்த்தும் சிந்தனைகள் இங்கு ஆராயப்படுகின்றன.

சமுதாயம் - ஒரு பார்வை

சமுதாயம் என்ற சொல் குடும்ப வாழ்க்கை, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், வாழ்வியல் பிரச்சனைகள், நடைமுறைச் சிக்கல்கள், அரசியல், கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியது. விலங்குகளைப் போன்று நாடோடியாக வாழ்ந்துகொண்டிருந்த மனிதன் ஓரிடத்தில் தங்கிக் கூட்டமாக வாழத் தொடங்கிய அன்றே சமுதாயத் தோற்றம் தொடங்கியது எனலாம். சமுதாயம் என்பதற்கு ந. பிச்சமுத்து விளக்கம் தருகையில், ***சமூகம், சமுதாயம், குமுகாயம் போன்ற சொற்கள் ஒரே பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. மக்கள் குழுக்களைக் குறிக்க கம்யூனிட்டி, சொசைட்டி என்ற இரு ஆங்கிலச் சொற்கள் இருக்கின்றன. கம்யூனிட்டி என்பது ஒரு குலத்தைச் சார்ந்த மக்கள் குழுவையும், சொசைட்டி என்பது பல்வேறு குலத்தைச் சார்ந்த மக்கள் குழுக்களையும் உள்ளடக்கிய ஒரு நாட்டில் வாழும் மக்கள் அனைவரையும் குறிப்பதாக அமைகிறது*** என்கிறார்.

சமுதாயம் என்ற சொல் பலநிலைகளில் ஆளப்பட்டு வருகின்றன என்பதை, ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றிக் கூட்டாக வாழும் மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படும். சமுதாயம் என்ற சொல்லும் சமூகம் என்ற சொல்லும் பல பொருள்களில் பயன்படுகின்றன. சமுதாயமும் சமூகமும் வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் கொண்டிருக்கின்ற சிறிய நிலப்பகுதியிலுள்ள குழுவைக் குறிப்பதாகக் கூறுவர். கூடிவாழும் அமைப்பே சமுதாயம் ஆகும். இவ்வமைப்பில் அனைத்து விதமான உணர்வுகளும் இருப்பது இயல்பே. இவ்வுணர்வு ஒவ்வொன்றும் படைப்பாளியின் களமாக அமைகின்றது. சமூகத்தை அடியொற்றிய படைப்புகளே காலம் கடந்தும் நிற்கின்றன. எனவே, சமுதாயம்தான் படைப்பையும் படைப்பாளரையும் உருவாக்குகிறது என்பதில் ஐயமில்லை. சமுதாயம் கால ஓட்டத்தின் கட்டத்தையும் மானிட வாழ்க்கையின் ஒரு படிநிலையையும் உருவாக்கிய ஒரு வரலாற்றுக் கூறாகும் என்பதும் சிந்திக்கத் தக்கது.

சமுதாயமும் எழுத்தாளனும்

இக்காலத்தில் செல்வாக்குப் பெற்று வரும் இலக்கியக் கொள்கை சமூகச் சார்புடையதாகும். எனவே, ஒரு படைப்பாளன் சமூகச் சுற்று வட்டத்திலிருந்து வெளியேறிவிட இயலாது. அவன் தன்னைச் சமுதாயத்தின் இயக்கங்களிலிருந்து விலக்கிக் கொண்டால் அவன் மென்மையைப் புறக்கணித்தவன் ஆவான்[6] எனும் கைலாசபதி கருத்திலிருந்து சமுதாயத்திற்கும் எழுத்தாளனுக்கும் உள்ள பிணைப்பு நன்கு தெளிவாகிறது.

சமுதாயத்தில் காணப்பெறும் பல்வேறு நிகழ்வுகள் புதினத்தில் நடைபெறும் சம்பவங்களின் பின்புலத்தின் அடிப்படையில் அமைந்துள்ளன. பாத்திரங்களின் செயலுக்கும் நிகழ்வுக்கும் ஏற்பச் சூழல் பொருந்திவருவதை அவற்றின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. *உரியவளே இவள் திருமகளே* எனும் நாவலில் வரும். வினோதினியைத் தன் வீட்டு மருமகளாக ஏற்படுத்திக் கொள்ள பாரிஜாதத்திற்கு ஏற்பட்ட சூழ்நிலையையும், அவற்றின் பின்புலத்தையும், இயல்பாக அமைந்த அந்த நிகழ்வையும் விளக்கும் வண்ணமாக இந்நாவல் இடம்பெற்றுள்ளது என்பதை,

இந்த நிலையில்தான் பெரிய அளவிலான பழப்பண்ணை ஒன்றை வாங்கிக் கொண்டு, வினோதினியுடைய பெற்றோர் அங்கே வந்து குடியேறினார்கள். அவர்களுடைய ஒரே மகளாகப் படிப்பை முடித்துக்கொண்டு வந்த வினோதினியைப் பார்க்கும்வரைதான் பாரிஜாதம் யார் யார் என்று தேடி அலைந்தது எல்லாம்.

அவள் பணக்காரி, தந்தையின் பெரிய சொத்துக்கு ஒரே வாரிசு. பார்வைக்கும் அழகுதான் என்று தெரிந்ததும், இவள்தான் மருமகள் என்று முடிவே செய்து விட்டாள்.

அவள் மகனை நேராகப் பார்த்துவிட்டு யாரால் அவனை மறுக்க முடியும்? வெளிப்படையாக, ஊரறியப் பேசிமுடிக்காவிட்டாலும் ஓரளவு இதுதான் ஜோடி என்பதுபோல ஜாடைமாடையான பேச்சு வளர்ந்தது.

ஆனால் நேரடியாக மறுக்க இடம் கொடுக்கக் கூடாது என்பதற்காகவே பாரிஜாதம் மகனிடம் நேரடியாக இது பற்றிக் கேட்கவும் இல்லை. சுற்றி வளைத்துக் கொண்டிருந்தாள். எறும்பூரக் கல் தேய்கிற மாதிரி எண்ணி. இதில் பாரிஜாதம் நிதானமாகத்தான் காய் நகர்த்திக் கொண்டிருந்தாள்

பணத்திற்காகவும் சொத்திற்காகவும் ஆசைப்பட்டு. அடுத்தவீட்டுப்பெண் பிள்ளையான வினோதினியை மருமகளாக மனதில் எண்ணியவாறு அசைபோடும் பாரிஜாதத்தின் நயவஞ்சகத்தை நன்கு நவில்கின்றது இந்நாவல்.

இவள் ஒரு புதுக்கவிதை என்னும் நாவலில் வரும் மாதங்கிக்குத் திருமணம் முடிந்து கணவன் வீட்டில் இருந்துகொண்டிருக்கிறாள். அப்போது அவளுடைய கணவனான யுகேந்திரன். அவளை அடித்துத் துன்புறுத்திய சூழ்நிலை. அவளை அடித்து வீழ்த்தினானே, இந்த ஹாலிலேயே ஒரு சோபாவில் சுருண்டு கிடந்தாள். இரண்டுமே கேவலமாக அருவருப்பில் மாதங்கியின் உடல் கூசிச் சிலிர்த்தது. இந்த வீட்டில் அவள் எப்படியெப்படியோ வாழப் போவதாக எண்ணி வெகு சிறப்பாகத் திருமணத்தை நடத்திய பெற்றோரின் நினைவு வந்தது.

சுற்றிலும் தீ எரிவது போன்ற உணர்வில் அங்கே நிற்கக்கூட அவளால் முடியவில்லை. தட்டுத் தடுமாறியபடிப் பின்புறக் கதவைத் திறந்துகொண்டு வெளியே போனாள். வீட்டின் பின்னே ஒரு தோட்டமும், காற்றாட உட்கார்ந்திருக்க இரு சிமெண்ட பெஞ்சுகளும் உண்டு. கால்கள் தடுமாற அங்கே அமர்ந்தவளுக்கு விம்மி வெடித்துக்கொண்டு கண்ணீர் பெருகியது. கல்யாணமாகி, யுகங்களாகத் தோன்றிய இந்த மூன்று மாதங்களாக நடந்த அனைத்தும், ஒவ்வொரு வினாடியுமே கண்ணீரை இன்னும் பெருக்கினவே அன்றி நிறுத்த, குறைக்க வலிமையற்றுப் போயின.

ஆற்றுவாரோ தேற்றுவாரோ இல்லாமல் எத்தனை மணி நேரம் அழுதாளோ? அல்லது எத்தனையோ மணிநேரமாக அவளுக்குத்தான் தோன்றியதோ? என்று விவரிக்கப்பட்டது

மாதங்கியின்கணவன் ஏற்கெனவே அபீ என்ற பெண்ணைக் காதலித்துவந்தான். அவளைத் திருமணம் செய்துகொள்ளமுடியாமல், பெற்றோர்களின் பிடிவாதத்திற்கு இணங்கி இவளை வாழ்க்கையைப் பலவாறாக நாசமாக்கியது மட்டுமல்லாமல். அவளுடைய நயவஞ்சனின் தன்மையை நவில்கின்றது இந்நாவல்.

இவள் ஒரு புதுக்கவிதை என்னும் நாவலில் வரும் மாதங்கி தனக்கு ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையை எண்ணி, வருத்தப்படுவதை வலியுறுத்தும் வண்ணமாக அமைந்துள்ளது இந்நாவல்,

எனக்கு என்ன வேண்டும்? எனக்கே தெரியவில்லையே! ஒரு சாதாரண பெண் உரிமையோடு அனுபவிக்கக் கூடிய எதுவும் எனக்குக் கிடைத்ததில்லை. ஆனால் அவைகளைக் கேட்டுப் பெறுவதைப்போலப் பெரிய அவமானம் எதுவுமே கிடையாது என்று எனக்குத் தோன்றுகிறது. அந்த அளவு நான் தரம் இறங்கி விடவும் இல்லை. மற்றபடி.. நானும் சம்பாதிக்கிறேன். எனக்குத் தேவைப்பட்டதை நானே வாங்கிக் கொள்ள முடியும். வேறே என்ன என்று கசந்த குரலில் சொல்லிக்கொண்டே திடுமென ஒன்று தோன்றியது. இப்போது கூட இது முடியுமா முடியாதா என்று எனக்குத் தெரியாது. ஆனால் எனக்குத் தாலியைக் கட்டிய இவர் முகத்தை வாழ்நாள் முழுவதும் பாராமல் இருக்க முடியுமானால்... நான் விரும்பும் எதுவானாலும் சொல்லச் சொன்னீர்களே எனக்குப் பிடித்தது...நான் விரும்பும் ஒன்றே ஒன்று இதுதான் முடிந்தால் செய்யுங்கள். இல்லாவிட்டாலும் பரவாயில்லை விட்டுவிடுங்கள். இப்படியே நான் இருந்து கொள்ளுவேன். ஒன்றும்பிரமாதமில்லை என்று முடித்தாள். எல்லோருமே அவளையே ஊன்றி கவனித்தபடி அவளது வார்த்தைகளுக்காகக் காத்திருப்பது தெரிந்தது.

முதல் இரவு இனிமையை இழுந்து தவிக்கும், மாதங்கியின் மனவுணர்வுகளையும் சூழ்நிலை அமைப்பையும் சுட்டிக் காட்டுகிறது.

அவள் ராஜா மகள் என்ற நாவலில் இடம்பெறும் கந்தபூபதி தனது அண்ணன் மகளான உதயரேகாவிடம், தன் குடும்ப சூழலமைப்பைக் குறிப்பிடும் போது இவ்வாறாகக் கூறுகிறாள்:

அண்ணன் வீட்டைத் துறந்து போனதில் இருந்தே முழுச் சொத்தையும் என்னதாக எண்ணிப் பழகிவிட்டேன் என்பது காரணமாக இருக்கலாம். பொருத்தமற்ற ஒருத்தியை மணந்து திருப்தியற்று வாழும் வாழ்க்கைக்கு இது ஈடு என்றுகூட எனக்கு நானே ஒரு சமாதானம் கண்டுபிடித்து ஆறுதல் அடைந்திருக்கிறேன். இப்போது அண்ணன் குழந்தை என்று ஒருத்தியைக் கொண்டு வந்து என் சொத்தைப் பிரிப்பதா என்று ஆத்திரம் கொண்டான்.

ஆனால் கெட்டவனாக வாழ்ந்தும் எனக்குப் பழக்கமில்லை, உதயா ஓர் குழந்தைக்குச் செய்த பாவம் இந்த என் மகளைப் பாதித்து விடுமோ என்றே வல்லிக்கு அதிகச் செல்லம் கொடுக்கிறேன் என்று எனக்குத் தோன்றுகிறது. அதற்கு ஏற்றாற்போல,

அடுத்து ஆண் மகவு இறந்து பிறந்தது. எனக்கான தண்டனையோ, பாவம் மனைவிடயும் அனுபவிக்கி றாளோ என்று உள்ளூர ரொம்ப உறுத்தல் எனக்கு அப்பாவுக்கும் பேரன் போனது பெரும் வேதனை தானே? குற்றம் புரிந்த என்னோடு அவர்களும் அனுபவித்திருக்கிறார்கள். என் பாரம் இரண்டு மடங் காயிற்று. ஆனால் இதை யாரிடம் சொல்ல முடியும்? துணிந்து அங்கே போய்த் தேடிப் பார்க்கலாமோ என்று ஒருதரம் யோசித்தேன். ஆனால் என் தவிப்பைவெளிப்படுத்தாமல் எப்படி முடியும்? அதை விடவும், நான் என்ன எண்ணி உன்னை அப்படி இறக்கி விட்டேனோ அது நடந்தே விட்டது என்று உறுதிப்பட்டுவிட்டால்? அதையும் என்னால் தாங்க முடியாதே என்று முயற்சிக்கமால் விட்டு விட்டேன்.

இனி... பெரும் பாதகனான இந்தச் சித்தப்பனை என்ன செய்வது என்று நீதான் தீர்மானிக்க வேண் டும் உதயா!.. என்று முடித்தார். சுந்தரராஜபூபதி

சுந்தரராஜபூபதியின் அண்ணன் குடும்பம். ஒரு தீவிபத்தில் எரிந்துவிட அவற்றில் உயிர் பிழைத்துத் தப்பித்த ஒரே உயிர் உதயரேகா மட்டும்தான். அவள் சிறு வயதாக இருக்கும்போது அவளுக்கு ஐஸ்கிரிம் வாங்கிக் கொடுத்து. அவளை அப்படியே நடுரோட் டில் சுந்தரராஜபூபதி விட்டுவிட, அவளை மனிவாச கம் என்பவர் எடுத்து வளர்க்கிறார். பல ஆண்டுகள் கழித்துபிறகு, அந்த உண்மை தெரியவர சுந்தரராஜ பூபதி உண்மையை உதயரேகாவிடம் உரைக்கிறார். அதற்காக அவர் அண்ணன் மகளான உதயாவிடம் மன்னிப்பு கேட்பதையும் உணரமுடிகின்றது.

பொருளாதார நிலை

உரியவளே இவள் திருமகளே எனும் நாவலில் தன் கணவன் இறந்த பிறகு, பாரிஜாதம் தான் செய்த ஆடம்பரச் செலவையும் அதற்குப் பிறகு அவள் பொருளாதாரத்தில் மிகவும் நலிவடைந்த நிலையை யும் நன்கு விவரிக்கின்றது இந்நாவல்.

அவளுக்கு நிறைய ஆசைகள், ஒரு காலத்தில் சோசியல் சர்வீஸ் செய்வதாக மேல் மட்டத்தில் பட்டாம்பூச்சியாகச் சுற்றுவதே அவளுக்கு வாழ்க்கை யாக இருந்தது. எப்போதாவது எஸ்டேட்டுக்கு வருவ தும், பண்ணையைப் பார்த்துக்கொண்டிருந்த ஒன்று விட்ட கொழுந்தனார் இந்திரேசன் குடும்பத்தாரின் குளிப்பாட்டலில் மயங்கிச் செலவு போக மிச்சம் என்று அவர் கொடுத்ததைக் கேள்வியின்றி வாங்கிக் கொண்டு வந்து விருப்பம்போலச் செலவு செய்வது மாக இருந்ததோடு சரி.

கணவர் வைத்துவிட்டுப் போயிருந்த வைப்பு நிதி சேமிப்புகள் அவ்வப்போது கால முழுமை அடைந்து அவளது கைக்குப் பணமாக வரவர, நன்றாக வேட்டுவிட்டுக் கொண்டிருந்தாள்.

அந்த நிதி கரைவதுபற்றி அவள் பெரிதாக கவலைப் படவில்லை. எல்லாம் எஸ்டேட்டில் இருந்த வந்த பணம்தானே? ஏதோ சில ஆண்டுகளாகப் பூச்சி வெட்டு, மழை சரியில்லை, அல்லது அதிக மழை கொட்டி அழுகிப் போயிற்று என்று சில பல கார ணங்களால் பண்ணை வருமானம் குறைந்து போயி ருக்கிறது. சீக்கிரமே இதெல்லாம் சீராகி, முன் போலப் பண்ணை பணம் காய்ச்சி மரமாகி விடும்.

இது பாரிஜாதத்தின் நம்பிக்கை. பெற்றவளின் பேச் சையேற்று, எந்தக் கவலையும் இல்லாத மனோரம்ய னும் சந்தோஷமாகப் படித்துக்கொண்டிருந்தான். ஓர ளவு உல்லாச வாழ்க்கையே!

இந்தச் சமயத்தில்தான் விதி வேறு விதமாகச் செயல் படத் தொடங்கியது. வருமானத்தில் மட்டுமாகக் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கிக் கொண்டிருந்தது ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்னும் கூற்றிற்கு ஏற்பப் பாரிஜாதம் என்ற பெண் கணவனால் உழைத்து உருவாக்கப்பட்ட பொருளா தாரத்தை நிலைகுலையச் செய்து, பையனான மனோ ரம்யனையும் பலிகடாவாக்கி இருக்கும் ஒரு பெண் ணின் ஆடம்பரப் போக்கினைத் தோலுரித்துக் காட்டு கின்றது.

தொகுப்புரை

சமுதாயம் என்பது கூட்டாக வாழும் ஓர் அமைப்பு முறையாகும். பலதரப்பட்ட மக்களின் வாழ்வியல் முறைகள், பண்பாட்டு மரபுகள், நிகழ்கால வாழ்க்கை முறைகள் ஆகியன நாவலில் தெளிவுற விளக்கப் பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சமுதாயத்தில் மாந்தர்களும் நிகழ்வும் எவ்வாறு பல தரப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள் என் பதும், அதற்கு ஒவ்வொரு சூழலமைப்பும் ஒரு கார ணமாக அமைவதையும், அவற்றிலிருந்து விடுபட நினைக்கும் பாத்திரங்களின் மனவுணர்வுகளும் நாவ லின்வழி அதற்கான தீர்வுகளும் கண்டறியப்பட்டுள்ள நிலை ஆராயத்தக்கதாகும்.

அடிக்குறிப்புகள்

1. ந.பிச்சமுத்து, மு.வ.புதினங்களில் சமுதாய மறுமலர்ச்சியின் தாக்கம். ப.12
2. ந.பாலுச்சாமி, வாழ்வியல் களஞ்சியம் தொகுதி, 8.
3. கனகசுந்தரம். வெ, ஜெகசிற்பியனின் சமூகப் புதினங்கள்,
4. தாயம்மாள் அறவாணன், தமிழ்ச் சமூகவியல், ப.3
5. க.கைலாசபதி. இலக்கியத் திறனாய்வியல், ப. 79
6. ரமணிசந்திரன், உரியவளே இவள் திருமகளே, ப. 81
7. ரமணிசந்திரன், இவள் ஒரு புதுக்கவிதை, ப. 71
8. ரமணிந்திரன், அவள் ராஜா மகள், ப. 194

All that we are is the result of what we have thought.

- Buddha

ISSN 2320-4842

Effect of Nutritional Status on Growth Pattern of Children (0.1 TO 14 Years) in Mayiladuthurai District

Joys Glory
Ph.D. Scholar, Department of Economics, Annamalai University
Dr. S. Indradevi
Assistant Professor, Department of Economics, Annamalai University
Deputed to D.G.Govt. Arts College for Women, Mayiladuthurai

Abstract

Health related and nutrition related investments are very important forms of human assets for low income countries, including those in economically developing countries. The population health is measured by mortality, morbidity and growth is more dependent on the overall socio-economic standard and its distribution than on the health services. Children do not get a balanced nutritional intake so that it inhibits growth and development and lowers the body's immunity. Finally, children are easily and quickly infected with diseases and invite various nutritional problems. Parents find it difficult to access education, employment and food availability, thus affecting family conditions, including children's health. Development of young child is influenced by biological endowment and health of child, nutritional status of child, relationships with primary caregivers, family, and support systems in the community. This study was aimed to assess childhood development in relation to their nutritional status. The study area, nutritional status of the children majority occupied (75.2%) is in normal, whereas underweight is 19.6 per cent and over weight is 5.2 per cent. There are many endogenous problems associated with the intake of food as it depends on socio-economic characteristics of the household. The estimated results could vary if we would have considered adequate representation from all communities in our sample. Moreover, it is a cross-sectional study, to best our knowledge; hardly any large-scale study has been carried out on nutritional status of these children. Nutrition education messages encouraging high consumption of dairy products are needed to counteract this pattern of low calcium intake. Protective strategies to prevent stunting and promote healthy eating are recommended

Introduction

Health related and nutrition related investments are very important forms of human assets for low income countries, including those in economically developing countries. Among the developing countries in the world, India is one of the major countries where malnutrition among under-five children is unfavourable to their outcome of health. The nutritional status of children is causing great concern among social scientists and planners nowadays because child is the principal victim of interaction of nutritional, social, economical and also health related factors that lead to malnutrition. The population health is measured by mortality, morbidity and growth is more dependent on the overall socio-economic standard and its distribution than on the health services. Maternal and child health services are part of the country's social policy and should act as a support for families.

Statement of the Problem

Malnutrition in children affects their ability to grow and the risk of morbidity and mortality is increased in their adult life. Malnourished children are more likely to become malnourished adults and they face increased risks of morbidity and mortality. Global nutrition problems have an impact on the layers of society who are in small groups, including households. Children do not get a balanced nutritional intake so that it inhibits growth and development and lowers the body's immunity. Finally, children are easily and quickly infected with diseases and invite various nutritional problems. Parents find it difficult to access education, employment and food availability, thus affecting family conditions, including children's health. Keeping pace with other developing countries across the world regarding socio-economic and nutritional shift, India has also undergone remarkable improvement for the last ten years but under-nutrition had always remained as a notable public health problem.

Issues of the Study

Malnutrition impedes the social and cognitive development of a child. These irreversible damages result in lower productivity. Just as with serious malnutrition, growth delays also hinder a child's intellectual development. Early years of life are period of maximal growth and development of human brain. Development of young child is influenced by biological endowment and health of child, nutritional status of child, relationships with primary caregivers, family, and support systems in the community. This study was aimed to assess childhood development in relation to their nutritional status. Stunting is a problem of chronic malnutrition caused by insufficient nutrition in a long time due to the provision of food that is not in accordance with nutritional needs. So that, stunting causes development of the motor system which is one important aspect because motor development is the beginning of the

intelligence and emotional behavior's children. The purpose of this study was to determine the stunting relationship with the development of emotional behavioral problems in children aged 36-72 months in the Community Health Center. In this context the researcher has undertaken the topic of research "Development and Nutritional Status of Children in Mayiladuthurai District, Tamilnadu".

Importance of the Study

Enhanced economic development leads to improved health and nutritional status, but more important is enhanced nutrition leads to improved economy. Nutritional level of any individual is determined by a large number of variables related directly or indirectly such as, occupational status, food sufficiency, their food consumption pattern, their purchasing power, circulation of funds, food distribution within houses, knowledge regarding healthy nutrition, level of education, accessibility of government health programs and knowledge, etc. There is also proof that nutrition and socio-economic development have positive correlation. A healthy diet throughout life promotes healthy pregnancy outcomes, supports normal growth, development and ageing, helps to maintain a healthy body weight, and reduces the risk of chronic disease leading to overall health and well-being. Developmental assessment is the process designed to understand the competencies of the child, care giving and environment which is likely to help a children in making full use of developmental potential. Systematic developmental assessment provides fairly accurate developmental states of a child. It is developmental delay occurs when the child has the delayed achievement of one or more of his milestones i.e. child does not attain the specific development milestone at the expected time.

Objectives of the Study

To study the nutritional status indicators of the sample population.

To study the causes of malnutrition of the sample population.

Hypothesis of the Study

There is a significant relationship between nutritional status of children and household

Review of Literature

Amartya Sen's proposal to measure societal development not just based on economic growth, but based on other dimensions, such as education and life expectancy (Sen, 1999; Sen, 2005). The well-known positive association between health and income in adulthood has antecedents in childhood (Dreze *et al*., 2002), not only is children's health positively related to household income, but the relationship between household income and children's health becomes more pronounced as children's age.

According to Kanjilal *et al*., (2010), his study stated that the nutritional status of children in India: socio-economic status of the home as a determinant of the situation. The prevalence of the stunting on children is associated with child sex, age, improper breast-feeding practices andcomplimentary feeding practices. Mengistu, *et al*., (2013), a community based cross sectional study findings show the frequency of the stunted, underweight and wasted children were 47.6 per cent, 30.9 per cent and 16.7 per cent respectively. The occurrence of the malnutrition associated with the child age, family income, and child feeding practices family planning and untreated drinking water.

Emmanuel, *et al*., (2016), a descriptive study was conducted in the Borgou Department of Niger to identify malnutrition and related factors in children under the age of five. The child's age, gender, and mother's education are factors associated with the child's malnutrition. Handayani (2017) said that poor parenting has a three times greater chance of experiencing low nutritional status. Families play a very important role in fulfilling children's nutrition, because that is where children first get attention on nutritious food intake. The behavior of parents in providing food intake is one form of parenting. How the mother prepares and arranges food will affect the nutritional status of the child. If the mother provides nutritious food, the child's nutritional status will be good, and vice versa. Income is one of the individual accesses to the availability of food. Generally, the quantity of an individual's income is adjusted to the type of work, while job acquisition is influenced by the level of education. This is inseparable from the socioeconomic status of the individual, where education, employment and income are the keys to a good socioeconomic status (Rosdiana en dkk 2020). If the socioeconomic status is low, which is the effect of a low level of education and the potential to get an inadequate job so that it has an impact on low income, it will make it difficult to meet good nutrition.

Berr et *al*., (2021), study the results show that stunting, exhaustion, and underweight were 1%, 4.7%, and 12.0%. The prevalence of malnutrition in childrenwas associated with poor diet, family food insecurity, unplanned pregnancies, caregiver age, and employment. Hui Xiao et al., (2022), concluded that households' health the current information system for poverty alleviation and development, consider elements such as medical care, education, income, and living conditions, summarize the experience and failures of the period of eradicating poverty, and establish reasonable income baseline and vulnerability line monitoring standards in light of the current situation.

Methodology

Primary data collected from children's (0.1 to 14 years), which were collected from a 15 per cent of child population sample of 286 child respondents **(Male child – 149, Female child – 137)** in Mayiladuthurai district comprising 6 villages from each of the selected two taluks namely Kuttalam and Mayiladuthurai during 2022 - 2023.

Operational Definition

Nutritional Status: Nutritional status of child was measured in terms of weight for age (WAZ), height for age (HAZ), and weight for height (WHZ) as per WHO reference.

Body Mass Index

BMI is an anthropometric indicator based on weight- to -height ratio. It is used to classify malnutrition in non-pregnant/non-postpartum adults. BMI is not an accurate indicator of nutritional status in pregnant women or adults with edema. Use MUAC for these groups.

Calculate BMI by dividing a person's weight in kg by the square of the person's height in meters. You will have to convert measurements in cm to m (100 cm = 1 m).

Weight

$Height^2$ (m) BMI can also be found using look-up tables or a BMI wheel.

Sources: WHO. 1999. Management of Severe Malnutrition

BMI	Nutritional status
Below 18.5	Underweight
18.5 - 24.9	Normal weight
25.0 – 29.9	Overweight

Results and Discussion

Table – 1: Villages-wise Classification of the Sample Respondents

Sino	Name of the Village	Frequency	Percentage
1	Malagalangam	23	8.0
2	Gangdharapuram	30	10.5
3	Thirunelkondachery	36	12.6
4	Setur	39	13.6
5	Mayiladuthurai	53	18.5
6	Thiruinthalur	105	36.7
	Total	**286**	**100**

Source: Computed from Primary data

The Table – 1 shows that the study area of the research of 286 sample children from six villages in Mayiladuthurai district. On the basis of the census 2011, apply the 15 percentage of the child population and also selected villages. Among six village children's highest in Thiruinthalur (36.7%) compare to other selected villages.

Table – 2: Age-wise Classification of the Sample Respondents

S.No	Age of the Children	Frequency	Percentage
1	Below 5 years	87	30.4
2	5 to 9 years	103	36.0
3	9 to 14 years	96	33.6
	Total	**286**	**100**

Source: Computed from Primary data

Table – 2 seen that age of the sample children in the study area, total 286 sample children, among them maximum of the children belongs to 5 to 9 years (36.0%) followed by 33.6 percentage between 9 to 14 years and rest of them are below 5 years (30.4%).

Table – 3: Nutritional Status-wise Classification of the Sample Respondents

S. No	Nutritional Status of the Children	Frequency	Percentage
1	Under weight	56	19.6
2	Normal weight	215	75.2
3	Over weight	15	5.2
	Total	**286**	**100**

Source: Computed from Primary data

The table points of view nutritional status of the sample children in the study area, the children nutritional status calculated used the body mass index then classified under weight – below 18.5m normal weight 18.5 to 24.9 and 25.0 to 29.9. However, normal weight is occupied majority of the children (75.2%) whereas underweight is 19.6 per cent and over weight is 5.2 per cent. The nutritional status depends upon social-economics of children households.

Table – 4: Parental Education-wise Classification of the Sample Respondents

Father's Education	Frequency	Percentage	Mother's Education	Frequency	Percentage
Primary (1-5 years)	37	12.9	Primary (1-5 years)	34	11.9
Higher secondary (6 - 12 years)	208	73.7	Higher secondary (6 - 12 years)	218	76.2
Higher Edn (> 12 yrs)	41	14.3	Higher Education (> 12 years)	34	11.9
Total	**286**	**100**	**Total**	**286**	**100**

Source: Computed from Primary data

Table - 4 found that the parental education of the sample children in study area, maximum father's completed their level of education is higher secondary level (73.7%) and mother's completed their level of education is 76.2 percent because of maximum of the parent's are living in rural areas.

Table – 5: Parental Occupation-wise Classification of the Sample Respondents

Father's Education	Frequency	Percentage	Mother's Education	Frequency	Percentage
Agriculture	104	36.4	Agriculture	113	39.5
Business	96	33.6	Business	91	31.8
Service	86	30.1	Service	82	28.7
Total	**286**	**100**	**Total**	**286**	**100**

Source: Computed from Primary data

This table shows that father's of the sample children are working in agriculture, which is maximum (36.4%) than business (33.6%) and service (30.1%). Here agriculture includes the fields of production of crops, flowers, vegetables etc.., business includes the owner of the shops, and service includes the any services of the people's. On the other hand the mother's are occupied highest in agriculture labours (39.5%), followed y 31.8 per cent is business and 28.7 per cent are service.

Conclusion

In our study after controlling other demographic and socio-economic characteristics, there is no significant relation between area of residence and nutritional status of children was found. This happened after integration of the variables related to dietary practices. It is possibly implies that dietary practices are rather important compared to residence of the study area. However, it does not mean that immediate living environment does not have any effect on nutritional status. It may be noted that because of small sample size, we had to combine children belong to villages, though our field experiences suggest that a complete absence of hygienic environment in squatters. Any further analysis is, however, not feasible from the present data set due to informational constraints, it calls for qualitative studies to understand how immediate living environment affect nutritional status of children is a better measure of nutritional status compared to anthropometric measurements. There are many endogenous problems associated with the intake of food as it depends on socio-economic characteristics of the household. This study has been conducted in two taluks of Mayiladuthurai District. The estimated results could vary if we would have considered adequate representation from all communities in our sample. Also to note, the entire analysis was based on information of only 268 children. Moreover, it is a cross-sectional study, and thus imposes restrictions in inferring cause –effect relationships. To best our knowledge, hardly any large-scale study has been carried out on nutritional status of these children.

Selected References

Lahiru Sandaruwan Galgamuwa1, Devika Iddawela1, Samath D. Dharmaratne and G.L.S. Galgamuwa1 (2017), "Nutritional status and correlated socio-economic factors among preschool and school children in plantation communities, Sri Lanka", *BMC Public Health,* 17 (377): 1-11.

Murugkar DA, Gulatic P, Gupta C (2013), "Nutritional status of school Going Children (6-9) years in rural area of Bhopal District, Madhya Pradesh, India", *International journal of food and nutritional sciences,* 2 (4): 61-67.

Nina Berr, Yemisrach Nigatu and Nebiyu Dereje (2021), "Nutritional status among orphans and vulnerable children aged 6 to 59 months in Addis Ababa, Ethiopia: a community-based cross-sectional study." *BMC Nutrition* 1-10.

Sen, A. (1999). Health in development. Bulletin of the World Health Organization, 77(8), 619–623.

Vandana Sati and Saroj Dahiya, (2012), "Assessment of nutritional status of rural school going children 7 – 9 years of Hisar District", *Scientific Report* : 369.

Zidni Ilma Nafi'a, Istiqomah Zakiyah Shodiq, and Lina Handayani (2021), "Nutritional Status of Children Under Five Years in the Work Area of Puskesmas Cipadung" , 15(2) : 125-132.

The Guest House by Rumi

The dark thought, the shame, the malice,
meet them at the door laughing,
and invite them in.

Be grateful for whoever comes,
because each has been sent
as a guide from beyond.

ISSN 2320-4842

கலிங்கப்போரும் வேலும்

ச. மோகனப்பிரியா
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்

முனைவர் ச. குருஞானாம்பிகா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்

ஆய்வுச்சுருக்கம்

பழந்தமிழர் தம் வாழ்வை அகம், புறம் எனப் பகுத்து வாழ்ந்தனர். புற வாழ்வில் போரே மேலோங்கியிருந்தது. போருக்குச் செல்லும் நாட்டினர் போர்புரியத் தம் நாட்டிலேயே ஆயுதங்கள் செய்தனர். ஒவ்வொரு நாட்டிற்கும் ஆயுதக் கிடங்கு ஒன்று இருந்தது. அக்கிடங்கில் தம் ஆயுதங்களைப் பாதுகாத்து வைத்தனர். போரில் அரசரின் முதன்மையான ஆயுதம் வேல் ஆகும். பல போர்களில் வேல் சிறப்பிடம் பெற்றிருந்துள்ளது. வேலின் சிறப்பையும் கலிங்கப்போரில் வேல் பயன்படுத்தப் பட்ட முறையையும் அறிவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

திறவுச் சொற்கள்: வேல், கலிங்கத்துப்பரணியில் வேல், போர்க் கருவிகள், கைவிடுபடை, கைவிடாபடை.

முன்னுரை

சிற்றிலக்கியங்களை பிரபந்த இலக்கியம் என்பர். சிற்றிலங்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். அவற்றுள் பரணியும் ஒன்று. பரணி இலக்கியம் போரை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது. போரில் பல ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. பொதுவாக அரசர்கள் போருக்கு முன் ஆயுதக் கிடங்கைச் சரிபார்த்தப் பின்பே போருக்குச் செல்லுவர். வீரர்களின் திறனைப் போரில் வெளிப்படுத்த ஆயுதங்களே பேருதவிப் புரிந்தன. ஒவ்வொரு காலக்கட்டத்திற்கு ஏற்றவாறு ஆயுதங்கள் உருமாற்றம் பெறுகின்றன. கலிங்கப்போரில் பல ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் வேல் ஒரு முக்கியமான ஆயுதமாகும். வேலின் சிறப்புகள் மற்றும் அவற்றின் பயன்பாடு குறித்து இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

போர்க்கருவிகள்

மனிதன் பிற உயிர்களிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள ஆயுதங்கள் பயன்பட்டன. மனிதன் வேட்டை யாடவும் உணவு தேடவும் பல ஆயுதங்களைப் பயன்படுத்தினான். போராட்டங்கள் மற்றும் நிலப்படையான கரிப்படை, பரிப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகியவற்றிலும் போர்க்கருவிகளும் இடம்பெற்றன. தமிழர் கள் தொல்காப்பியக் காலந்தொட்டே கருவிகளைக் கையாள்வதில் சிறப்புற்று விளங்கினர். கேடயம், வாள், வில், வேல் போன்ற போர்க்கருவிகளைப் பயன்படுத்துவதற்கு முன் மனிதன் கற்களையும் கம்புகளையுமே முதன்மை ஆயுதமாகப் பயன்படுத்தினான். பின் இரும்பால் பல ஆயுதங்களைச் செய்து விலங்குகளை வேட்டை யாடவும் பிற செயல்களுக்கும் பயன்படுத்தினர். மன்னர் காலத்தில் போரிட ஒவ்வொரு நாட்டினரும் போர்க் கருவிகளைத் தாமாகவே தயாரித்து அவற்றைக் கொண்டு போர்புரிந்தனர். அன்றைய காலத்தில் பயன்படுத் தப்பட்ட போர்க்கருவிகள் இன்று பல வழக்கத்தில் இல்லாமல் மறைந்து போயின. தமிழர்கள் ஆயுதங் களைக் **கைவிடுபடை, கைவிடாப்படை** என இருவகைப்படுத்தினர்.

கைவிடுபடை

கையிலிருந்து எறியும் ஆயுதங்கள் கைவிடுபடை ஆகும். விட்டேறு, குந்தம், தோமரம் ஆகியன எறியும் ஆயுதங்களானாகும். எய்யும் ஆயுதங்கள் அம்பு, சன்னகம், கவண்டை ஆகியன ஆகும்.

கைவிடாப்படை

கையில் வைத்துக்கொண்டே பகைவரை அழிக்கப் பயன்படும் ஆயுதங்கள் கைவிடாப்படை ஆகும். பகை வரைக் குத்தப் பயன்படுத்தும் ஆயுதமான சூலம், வெட்டும் ஆயுதமான வாள், கோடாரி ஆகியனவும், அடிக்கும் ஆயுதமான தண்டு, தண்டம், உலக்கை ஆகிய ஆயுதங்களும், போரில் தடுக்கப் பயன்படுத்தும் கிடுகு, தோல் ஆகிய ஆயுதங்களும் கைவிடாப்படையைச் சார்ந்த ஆயுங்கள் ஆகும். இத்தகைய போர்க் கருவிகள் சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வேலின் வகைகள்

தமிழர்கள் பழங்காலத்தில் பல வகைப்பட்ட வேலினைப் பயன்படுத்தியுள்ளனர்.

முத்தலை வேல்: மூன்று தலைகளின் வடிவினது.

சூல வேல்: சூலமும் வேலும் இணைந்த வடிவினது.

உடம்பிடி வேல்: முக்கோண இலை வடிவும் கூரிய முனையும் உடையது.

சிறியிலை எஃகம்: சிறிய ஒடுங்கிய இலையினைக் கொண்ட வேல்.

ஏந்திலை முகட்டுவேல்: நீளமான இலை உடையது.

தூரியம்: நீளமானதாங்குடையதூரிகை போன்ற வேல்.

முத்தகம்: முத்தக இலை போன்ற அமைப்புடையது. கோரைப்புல் போன்று சிறிது அகன்று மிகவும் நீள மாக இருக்கும்.

இத்தகைய வேல்களைத் தமிழர்கள் பயன்படுத்தியதைத் தமிழ் இலக்கியங்கள் மூலம் அறியலாம்.

வேலின் பாகங்கள்

வேலானது 1. தாங்கு-வேலின் பிடி, 2. பிடங்கு-வேலின்குழைச்சு, 3. தரங்கி-வேலின் நுனி, 4. இலை -வேலின்அலகு ஆகிய நான்கு பாகங்களுடையது.

இலக்கியத்தில் வேல்

தொல்காப்பியம், ***வேல்மிகு வேந்தனை மொய்த்த வழி ஒருவன் (தொல்.புறத்.1018)*** என்கிறது. பெரிய படை களையும் தாக்கும் இலக்கு கொண்டது வேல் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

போர்க்கருவிகளுள் ஒன்றான வேல் உறுதியானது. நீளமானது. அழகான வடிவினது. இலை போன்ற முனையை உடையது.

ஒளிறுவேல் மறவரும் வாய் மூழ்த்தனரே(புறம்-336:5)
திருந்து இலை நெடுவேல் வடித்திசின் (புறம்-180:13)
எனும் புறநானூற்று அடிகளால் இதனை அறியலாம். சுரை, காழ், மடை என்பன வேலின் பகுதிகளாகும். வேலின் வலிமையும் திரட்சியும் பொருந்திய காம்பு உள்துளையுடன் இரும்பால் இயன்றது. இலை வடிவ முனை இக்காம்புடன் ஆணிகள் வைத்துப் பொருத் தப்பட்டிருக்கும். இத்தகு வேலினைப் பெண்களின் கண்களுக்குஉவமையாகக் குறிப்பிடுவர். வேல் எவ்வாறு பகைவரை வீழ்த்துமோ அவ்வாறே பெண்களின் வேல் போன்ற விழிகள் ஆண்களைக் காதலில் வீழ்த்தும் என்பர் கவிஞர்கள்.

பகைவரைக் குத்திக் கிழிக்கும் ஆற்றல் வாய்ந்தது வேல் என்பதனை,

வேலே குறும்பு அடைந்த அரண் கடந்துஅவர்
நறுங் கள்ளின் நாடு நைத்தலின்
சுரை தழீஇய இருங் காழொடு
மடை கலங்கி நிலை திரிந்தனவே (புறம். 97:4-7) என்ற பாடல் எடுத்தியம்புகின்றது.

வேல் கையில் எடுத்து எறியப்படும் கருவியாதலால் உறுதியான இரும்பினால் காம்பு அமையின் அதன் பளு மிகுதியாகி அது செல்லும் தொலைவும் வேகமும் குறையும். எனவே பளுவைக் குறைக்க உள்துளை யுடைய இரும்புக் குழலால் காம்பை அமைத்தனர். இதனால் வேகமாகவும் தொலைவாகவும் வேலைச் செலுத்த இயலும் என்ற நுட்பத்தைப் பண்டைத் தமிழர் அறிந்திருந்தனர்.

போர்க்களத்தில் பயன்படும் போர்க்கருவிகளைப் பொதுவாக மூவகைகளாகக் கூறலாம். தாக்கப்படும் குறி எவ்வளவு தொலைவில் இருக்கிறது என்பதைக் கணித்து அதற்கேற்ற கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். இக்காலத்திலும் இம்முறையே பின்பற்றப் படுகிறது. ஒரு வீரன் தனக்கு எதிரில் நிற்கும் பகை வரின் இருப்பிடத்தின் அண்மை, இடைத்தொலைவு, நெடுந்தொலைவு என்ற முந்நிலைகளாகக் கணித்து செயல்படவேண்டும். இக்காலக் கருவிகள் வெடிமருந் தின் ஆற்றலை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் பழந்தமிழர் பயன்படுத்திய கருவிகள் உடல் வலிமையை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

மேற்குறிப்பிட்ட முந்நிலைக்கும் ஏற்ற கருவிகளைப் பகுக்கலாம்.

வாள்: கையில் பிடித்த நிலையிலேயே அருகிலுள்ள பகைவர்களைத் தாக்குவது.

வேல்: கையால் வீசப்பட்டு ஓரளவு தொலைவு வரை செல்லும். ஆதலால் இடைப்பட்ட தொலைவிலுள்ள பகைவரைத் தாக்குவது.

வில்: செலுத்துபவன் கையிலிருந்து விடுபட்டுச் சென்று பகைவரைத் தாக்குவது.

அம்பு: வில்லில் பொருந்திய நாணின் வேகத்தால் செலுத்தப்படுவது. நெடுந்தொலைவிலுள்ள பகைவரை அழிப்பது.

பண்டைத் தமிழர்கள் மரபுசார் போர்க் கருவியாக வேலினைப் பயன்படுத்தினர். சங்கத்தாய் தன் மக னுக்கு வேல் தந்து வீர உணர்வைக் கற்றுத் தந்ததை,

வேல் கைக்கொடுத்து, வெளிது விரித்து உடிஇப்,
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
ஒருமகன் அல்லது இல்லோள்,
செருமுக நோக்கிச் செல்க என விடுமே! (புறம். 279)
என்று புறநானூறு குறிக்கிறது. போரின் பேரொலி கேட்டு தன் சிறுவயது பிள்ளையை வேல் ஏந்திப் போருக்குச் செல்லுமாறு கூறுகிறாள். போர்க்களத்தில் வேலின் மகத்துவத்தை உணர்த்தும் வகையில் இப் பாடல் அமைகிறது. வேலின் சிறப்பைத் தொல்காப் பியம்,

கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்
சென்ற உயிரின் நின்ற யாக்கை
இருநிலம் தீண்டா அருநிலை வகையொடு
இரு பாற்பட்ட ஒரு சிறப்பின்றே (தொல்.017)
என்கிறது. அம்பும் வேலும் ஒன்றாகச் செல்லும்போது பகைவர்களின் உடலை ஈ மொய்ப்பது போன்று தாக்கிக் கொல்லும் எனத் தும்பைத் திணையில் வேலின் சிறப்பைத் தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார்.

போருக்குச் செல்லுமுன் வேலினை வழிபடுவதும் வழக்கமாக இருந்துள்ளது. முருகன் கையில் வேல் உள்ளதால் வேலன் எனப்பட்டான். தொன்மையான கோயில்களில் முருகன் சிலைக்குப் பதிலாக வெறும் வேல் வைத்து வழிபடும் வழக்கம் உள்ளது.

சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல் (திருமுரு.46)

முருகப்பெருமான் கையில் வேல் வைத்திருந்ததை நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் எடுத்துரைக்கிறார். இத்தகைய வேல் வழிபாடானது இன்றளவும் சில கோவில்களில் நிலவிவருகின்றது.

கந்தபுராணத்தில் வேல்

தெய்வீக வேல் என்பது முருக பகவான் அசுரன் சூர பத்மனை அழிக்கப் பயன்படுத்திய ஒரு கருவியா கும். சூரபத்மன் முருகனின் கவனத்திலிருந்து தப்பத் தன்னை ஒரு மாமரமாக மாற்றிக்கொண்டான். அதை யறிந்த முருகன், தனது வேலினை அம்மாமரத்தின் மீது செலுத்தினார். அம்மரம் இரண்டாகப் பிளந்தது. மாமரத்தின் ஒரு பாதி சேவலாகவும், மற்றொரு பாதி மயிலாகவும் உருமாறியது. பின்னர், சேவல் போர்க் கொடியின் ஒரு சின்னமாகவும், மயில் முருகனுக்கு வாகனமாகவும் உருவெடுத்தது. இதனை,

செங்கதிர் அயில்வாள் கொண்டு செருமுயன்(று) உருமின் ஆர்த்துத்
துங்கமொ(டு) எதிர்ந்து சீறும் சூர்உரம் கிழித்துப் பின்னும்
அங்கம(து) இருகூறாக்கி அலைகடல் வரைப்பில் வீட்டி
எங்கணும் மறைகள் ஆர்ப்ப எஃகம்வான் போயிற்(று) அம்மா (கந்தபுரா.பா-490) என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.

வேல் காவல்

மன்னர்களின் ஆணைக்கு இணங்க காவல் காக்கும் அரண்மனைக் காவலர்கள், ஒற்றர்கள் மற்றும் வீரர் கள் வேலினைக் கையில் பிடித்துக் காவல் காப்பர். தமிழ் மன்னர்களின் தனித்த ஆயுதம் வேல் ஆகும். பெரும்பாலும் வேலினைப் படைத்தலைவர்களும் மன் னர்களும் ஏந்துவர். பகைவர்களின் சிறந்த போர் வீர னைக் குறிவைத்தே வேலை எறிவர். வேல் கொண்டு காவல் புரிவதை,

வேலாரும் வில்லாலும் வேலி கோலி,
வெற்பு அதனை விடியளவும் காத்து நின்றே(கலிங். 465) எனும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

கலிங்கத்துப் போரில் தோற்றோடிய கலிங்க வீரர்கள் மலைகளில் ஒளிந்தனர். அவர்கள் வெளியே வந்தால் பிடிப்பதற்காகக் கையில் வேலும், வில்லும் ஏந்திய வீரர்கள் காவல் புரிந்தனர் என்று கலிங்கத்துப்பரணி குறிப்பிட்டுள்ளது. மன்னர் ஆணையின்படி வேல் கொண்டு வீரர்கள் காவலில் ஈடுபட்டதை அறியமுடி கிறது.

வேலால் வீழ்ந்தோர்

வேலானது பகைவரைத் தொலைவிலிருந்து தாக்கி வீழ்த்தக்கூடியது. போர்க்களத்தில் வேலால் பல வீரர் கள் தாக்கப்பட்டு மாண்டது குறித்து,

வாயினில் புகுவேல்கள் பற்று
வலக் கையோடு நிலத்திடைச்
சாயும் மற்றவர் காளம் ஊதிகள்
தம்மை ஒத்தமை காண்;மினோ! (கலிங். 499) எனக் கலிங்கத்துப்பரணி எடுத்துரைக்கிறது. வேலானது ஒரு வீரனின் வாயில் புகுந்துள்ளது. அவ்வீரன் வீழ்ந்து கிடக்கும் நிலையை உணர்த்துவதாகவும் வேலினால் வீழ்ந்த வீரரின் நிலையை எடுத்துரைக்கும் வகையி லும் இப்பாடல் அமைகிறது.

காலனும் காலம் பார்க்கும் பாராது
வேல்ஈண்டு தானை விழுமியோர் தொலைய
வேண்டுஇடத்து அடூஉம் வெல்வோர் வேந்தே (புறம்.41:1-3)

உயிரைக் கொள்வதற்குக் காலனும் காலம் பார்ப் பான். அவ்வாறு பாராமல் வேல் முதலாம் கருவி களைக் கொண்ட உனது படை, வல்லோர் அழியு மாறு போரிடும் வலிமை மிக்கது என்று இப்பாடல் வேலின் சிறப்பினை எடுத்துரைக்கின்றது.

நாக கன்னிகை

நாரதர் சோழர்களின் வரலாற்றைக் கூறினார். கிள்ளி வளவன் நாகக் கன்னிகையை மணம் செய்தான். அவள் விழிகள் வேல் போன்றது என்று,

தளவு அழிக்கும் நகை வேல்வழி பிலத்தின் வழியே
தனி நடந்து உரகர் கண்மணி கொண்ட அவனும் (கலிங். 196) கலிங்கத்துப்பரணி கூறுகிறது. வேலைப் போலவே விழியும் கூர்மையானது என அறிய முடி கின்றது.

சிவந்த வேல்

முதலாம் குலோத்துங்க சோழன் பகைவரை அழித்துப் பல போர்களில் வெற்றி பெற்றயவன். அவனது கீர்த்தி மிகப் பெரியது. அத்தகு மாவீரனின் வேலை,

விரதராச பயங்கரன் செங் கையில்
வேல் சிவந்தது. கீர்த்தி வெளுத்ததே (கலிங்.257) என்ற பாடல் மூலம் குலோத்துங்க சோழனின் சிவந்த கையில் சிவந்த வேல் இருந்ததை கலிங்கத்துப்பரணி எடுத்துரைக்கிறது.

வாயில் புகுவேல்

போர்க்களத்தில் வீரர்கள் வாள், வேல், அம்புகளால் தாக்குண்டு கிடந்தனர். தாக்குண்ட ஆயுதங்களை வீரர்கள் தம் கைகளால் பிரித்தெடுப்பர்.

வாயினில் புகு வேல்கள் பற்று
வலக் கையோடு நிலத்திடைச்
சாயும் மற்றவர் காளம் ஊதிகள்
தம்மை ஒத்தமை காண்மினோ! (கலிங். 499)

தொடர்ச்சி: பக். 85

ISSN 2320-4842

திருக்குறள்–கலைஞரின் உரைத்திறன்

முனைவர் பொ. செந்தில்குமார்
உதவிப்பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாப்பிரெட்டிப்பட்டி 636 905, தருமபுரி மாவட்டம்

முன்னுரை

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுந்த, உலகப் பொதுமறை எனப் போற்றபடும் திருக்குறளுக்கு இதுவரை 300க்கும் மேற்பட்டோர் உரை எழுதியுள்ளனர். அவர்களுள், தன் வாழ்நாள் முழுவதும் தமிழர்களுக்காகவும் தமிழ் மொழிக்காகவும் வலிய, எளிய ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்காகவும் வாழ்ந்து மறைந்த கலைஞர், திருக்குறளுக்கு உரை எழுதிய திறனையும், அவ்வுரை எவ்வாறு தமிழ்ச் சமூகத்திற்குப் பயன்படு கிறது என்பதையுமே இந்த ஆய்வில் முன்மொழியப்பட்டுள்ளன.

உரைகளின் வரலாற்றில் திருக்குறள்

தமிழிலக்கிய உலகில் உரைகளின் வரிசையில் திருக்குறள் முக்கிய இடம் வகிக்கின்றது. பல்வேறு சிறப்பு களையுடைய இந்நூலுக்கு முதலில் பத்து பேர் மட்டும் உரை எழுதியுள்ளனர் என்பது வரலாறு. அதில் பத்தாவதாகப் பரிமேலழகர் உரை பார்க்கப்படுகிறது. இதனை,

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிதி பரிமேலழகர் - திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர் நூற்கு
எல்லையுரை செய்தார் இவர் என்கிறது தனிப்பாடல். இவர்களில் பரிமேலழகர், மணக்குடவர், காலிங்கர், பரிதி, பரிப்பெருமாள் ஆகிய ஐவர் உரைகள் மட்டும் வெளிவந்துள்ளன. தருமர், தாமத்தர், நச்சர் ஆகிய மூவரின் உரைகள், சில குறட்பாக்களுக்கு மட்டும் கிடைத்துள. திருமலையர், மல்லர் ஆகிய இருவர் உரை மட்டும் கிடைக்கவில்லை.

திருக்குறளுக்கு உரை எழுதாதவர்கள் தமது மற்ற படைப்புகளில் ஆங்காங்கே திருக்குறளை மேற்கோள் காட்டியும் வந்துள்ளனர் என்பதனை மு.வை. அரவிந்தன் தனது *உரையாசிரியர்கள்* நூலில், ***திருக்குறளுக்கு நேரே உரை எழுதியவர்களே அல்லாமல் இளங்கோ அடிகள், சீத்தலைச்சாத்தனார், சேக்கிழார், கம்பர் போன்ற புலவர் பெருமக்கள் தம் நூல்களில் ஆங்காங்கே திருக்குறளை எடுத்தாண்டு விளக்கமும் கூறியுள்ளனர். அப்பகுதி களை எல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தால் அச்சான்றோர்கள் திருக்குறளுக்குச் செய்யுள் வடிவில் உரைவிளக்கம் கூறி இருப்பது வெளிப்படும்***[1] என்பதிலிருந்து திருக்குறளின் சிறப்பும் உரைக்குப் பயன்பட்ட அமைப்பையும் அறியமுடிகிறது.

திருக்குறள் பழைய உரைகள் மட்டுமன்றி, கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதல் தற்போதுவரை தமிழ் மொழி யில் குறிப்பிடத்தக்க உரை எழுதியவர்களில் முக்கியமானவர்களாகக் கீழ்க்கண்ட அறிஞர்களைக் கால நிரலில் தொகுத்துக் கூறலாம்:

1. மணக்குடவர் (கி.பி.10ஆம் நூ.), 2. காலிங்கர் (கி.பி.10-13ஆம் நூ.), 3. பரிதியார் (கி.பி.10-13 ஆம் நூ.), 4. பரிப்பெருமாள் (கி.பி.10-13ஆம் நூ.), 5. பரிமேலழகர் (கி.பி. 13ஆம் நூ.), 6. காரி இரத்தினக் கவிராயர்(கி.பி.1550-1575), 7.சுகாத்தியர்(கி.பி.1889), 8. வ.உ.சிதம்பரனார்(கி.பி.1935),9.திரு.வி.கலியாண சுந்தரனார் (கி.பி.1939), 10. கி.ஆ.பெ.விசுவநாதம், 11. மு.வரதராசன்(கி.பி.1948), 12. இரா.சாரங்கபாணி, 13.தெ.பொ.மீனாட்சிசுந்தரம்,14. வ.சுப.மாணிக்கம், 15.குன்றக்குடி அடிகளார், 16.தமிழண்ணல், 17. சாலமன் பாப்பையா(1995), 18. ஆரூர்தாஸ் (2000), 19. அ.மா.சாமி(2003), 20. க.ப. அறவாணன்(2006), 21. மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர்(1966), 22. மு.கருணாநிதி (2007).

பல் சமய வள்ளுவர்

திருவள்ளுவர் சமயம் கடந்தவர் என்று கூறினாலும் உரை எழுதிய அறிஞர்கள் தமது சமயக் கருத்துக்களை வள்ளுவத்தில் புகுத்தி ஒவ்வொருவரும் தமது மதத்தினர் என்று கூறிவந்தனர். திருக்குறள் தோன்றிய பின் மணிமேகலைக் காப்பியம் இயற்றிய சாத்தனார்,

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் பெருமழை என்ற அப்

பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்[2] ***(மணி.22: 59-61)*** என வள்ளுவரின் ஒரு குறளை மேற்கோள் காட்டி அவரைப் போற்றினார். அவர் வள்ளுவரைப் பவுத்தராகக் கொண்டாடினார். முருகரத்தினம் தனது ஆய்வுக்கட்டுரை ஒன்றில் திருவள்ளுவரின் சமயத்தை வரலாற்று நோக்கில் குறிப்பிடும்பொழுது, ***நீலகேசி என்னும் சமணக் காப்பியத்தில் அதன் ஆசிரியர் 'தேவன் உரைப்பத் தெளிந்தேன்' என வள்ளுவரைக் குறிப்பிடுகி றார். அதற்கு உரை எழுதிய சமய திவாகரமுனிவர், வள்ளுவர் முப்பாலை 'இஃது எம் ஒத்து' என உரிமை கொண்டாடி எழுதியுள்ளார். இன்றும் சமணர்கள் முப்பா லைத் தம் நூல் எனக் கொண்டாடிவருகின்றனர். சைவ சமயத்தவர்-முன்பு இல்லாமற் போனாலும் - இன்று முப் பாலைத் தம் நூலாக உரிமை கொண்டாடுகின்றனர். 'திருக் குறளின் உட்கிடை சைவசித்தாந்தமே' (1953) என வச்சிர வேல் முதலியார் நூல் எழுதிச் சைவத்தின் உரிமையை நிலைநாட்ட முயன்றுள்ளார்; அண்மையில் திரு.ரா. கேசவ அய்யங்கார் 'வள்ளுவருள்ளம்' (1985) என்னும் பெரு நூலின்வழி வள்ளுவரது முப்பால் வைணவ நூலே எனக் காட்ட முயன்றுள்ளார். கிறித்துவர்களும் தயங்கவில்லை. முனைவர் மு.தெய்வநாயகம், 'திருவள்ளுவர் கிறித்து வரா?'(1989) 'நீத்தார் யார்?' (1970) முதலான நூல்கள் வழியாகவும், டாக்டர் இரா.அருளப்பா 'திருக்குறள் புத் தாய்வு' (1987) என்னும் உரைநூல் வாயிலாகவும் முப் பாலைக் கிறித்துவத்தாக்க நூல் எனக்காட்ட முனைந்த னர். டாக்டர் ஜி.யு.போப் சென்ற நூற்றாண்டில் முப் பாலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அதில் கிறித்து வத் தாக்கம் உண்டு எனக் காட்டியுள்ளார்***[3] என்று கூறு வதிலிருந்து உரையாசிரியர்கள் திருக்குறளை எப்படி அணுகினர் என அறியமுடிகிறது.

இப்படிப் பல் சமயத்தாரும் தமது மத நூல் என்று பரப்புரை செய்துவந்தனர். அவ்வகையில் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழர்களின் பண்பாட்டுக் குறியீடாகத் திருக்குறளை அடையாளப்படுத்தவும் தேர்ந்தெடுப்பதிலும் பகுத்தறிவியக்கங்கள் முனைப்புக் காட்டின. பல்வேறு உரைகள் அவரவர் மதம் சார்ந்த குறியீடுகளை மையப்படுத்தியே விவாதத்திற்குள்ளா யின.

ஆரியச் சார்புடையபரிமேலழகர் உரை வள்ளுவர் உள்ளத் திற்கு இட்ட திரையே ஆனது என்று பாரதிதாசன் கடுமை யாகச் சாடினார். அவ்வமயம் பகுத்தறிவு நோக்கில் பல புதிய உரைகள் எழுதப்பட்டன.

புலவர் குழந்தை, அறிஞர் கா.அப்பாதுரை, பாவேந் தர் பாரதிதாசன், நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி ஆகியோர் முப்பாலுக்குப் பகுத்தறிவு நோக்கில் உரை வகுத்தனர்.

உரைஞரும் கலைஞரும்

உலகப் பொதுமறையை எளியவர்களும் அறியும் வகை யில் செவ்வியல் நடையில் உரைகண்டோர் பலர். அதில் வாழ்வின் உணர்விலே கலந்திட்ட நடையிலே வள்ளுவரை நோக்கும் முயற்சியில் கலைஞர் உரை பகன்றுள்ளார். இதனை, ***வள்ளுவர் வாழ்ந்த காலத்து நம்பிக்கைகள் பண்பாடுகள், அவை குறித்து அவரது பார்வை ஆகியவற்றுக்கு மாறு படாமலும், வலிந்து என் கருத்து எதையும் திணிக்காமலும், குறளில் அவர் கையாண்டுள்ள சொல்லுக்கு இதுவரை உரையாசிரியர்கள் கொண்டுள்ள பொருண்மையில் தமிழில் மற்றொரு பொருளும் இருக்கிறது என்ற உண்மை நிலை யைக் கடைப்பிடித்து, நான் எண்ணுவது போல் அவர் எண்ணினாரா என்று நோக்காமல் அவர் எண்ணி எழுதி யது என்ன என்பதை அறிவதில் மட்டுமே அக்கறை கொண்டு என் அறிவுக்கும் ஆற்றலுக்கும் எட்டியவரை யில் இந்தப் பொன்னாடையை நெய்துள்ளேன்!***[4] என்று கலைஞரே தன் முகவுரையில் கூறியுள்ளார்.

இமயமலைக்குப் பொன்னாடை போர்த்துகிற முயற்சியில் ஈடுபடுவதும், திருக்குறளுக்கு உரை எழுதுவதும் ஒன்று தான்[5] எனத் தமக்கே உரித்தான முறையில் திருக்குற ளுக்குஉரையெழுதுவதன்அருமைப்பாட்டைக்கலைஞர் அழகுற விளக்கியுள்ளார்.

எவ்விதச் சார்புமற்ற எளிய உரை பலர் எழுதியிருப் பினும் கலைஞரின் உரை இன்றைய உலகுக்கேற்ற உரையாக அமைந்துள்ளது. எனவே, ***இக்காலத் தேவை யைச் சரியாக ஈடுசெய்ய வல்லதாய் எழுந்ததே கலைஞர் உரை என்னும் நெறியுரையாகும்***[6] என்ற மா.நன்னனின் கருத்து உற்று நோக்குதற்குரியதாகிறது.

கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைசிறந்து விளங்குவ தற்குக் காரணம் அவர் திருக்குறளை நன்கு படித்தத னால்தான்[7] என்ற கி.ஆ.பெ.விஸ்வநாதம் கூற்றின்வழிக் கலைஞரின் உரைத்திறனை உணர முடிகிறது.

குறளோவியமும் சங்கத்தமிழும் எழுதிய கலைஞர் திருக்குறள் முழுமைக்கும் உரை வரைந்திருப்பது குறித்து, ***திருக்குறள் வகுத்திட்ட வாழ்க்கைநெறியொன்றே திருவிடத்தின் பண்பாட்டு ஊற்றுக்கண் ஆதலின் திரு மறை உரைபொருள் எவரும் எளிதுணரத் திருக்குறள் கருத்துரை வரையலானார் கலைஞர். குறட்பா மொழிந் திடும் பொருளொன்றே குறள்பொருள் தெளிவார் உணர் திறன் வேறாகலின் குறட்பா சொற்றொடர் புணர்வகை யாலன்றிக் குறள்நெறி உளத்தூன்ற உரைத்தந்தார் கலைஞர்***[8] எனப் பேராசிரியர் க. அன்பழகன் குறிப் பிடுவது உரைகளுக்கு உயர்வர் கலைஞர் என்ற கூற்று இங்கு மெய்ப்பிக்கப்படுகின்றது.

கடவுளும் கலைஞரும்

பகுத்தறிவுச் சிந்தனையோடு உரை வகுக்க வரும் கலைஞர் வள்ளுவரின் சிந்தனையைச் சிதைக்காமல் பாதுகாத்திட வேண்டுமெனத் தனது முகவுரையில், ***கடவுள் வாழ்த்து எனும் அதிகாரத் தலைப்பை வழிபாடு எனக் குறித்துள்ளேன். வள்ளுவரைக் கடவுள் மறுப்பாளர் அல்லது கடவுள் நம்பிக்கையாளர் எனும் வாதத்திற்குள் சிக்க வைக்க நான் விரும்பவில்லை. வழிபாடு எனும் அதிகாரத்தில் அமைந்துள்ள குறட்பாக்களுக்கு நான் எழுதியுள்ள உரைகளைக் கொண்டு இதனை உணரலாம்***[9] என்று குறிப்பிடுகிறார்.

குறளின் பாயிரம் எனப்படும் 'கடவுள் வாழ்த்து'ப் பகுதி

ISSN 2320-4842

யினைப் பலரும் பலவாறு பொருளமைத்துக் கொண்டனர். அது திரு.வி.க - ஆதிபகவன், உலக முதல் என்று இருநிலைகளில் கூறி, பின்னர் கடவுள் வாழ்த்து என்பதினையே ஏற்றுக்கொண்டார். சுகாத்தியார் 'முதற்பொருள் வாழ்த்து' என்றும் இலக்குவனார் 'இறைநலம்' என்றும் க.அப்பாத்துரையார் 'இறைவாழ்த்து' என்றும் பாவாணர் முதற்பகவன் என்றும் புலவர் குழந்தை 'இறைநலம்' என்றும் வ.சுப.மாணிக்கனார் 'ஆதிபகவன்', 'வாழ்த்து' என்றும் பாவலரேறு 'அறமுதல் உணர்தல்' என்றும் பலவாறு கூறியுள்ளனர்.

அறத்திற்கெல்லாம் மூல முதலாகிய ஆற்றல் கூறை உணர்தற்கென்றே உணர்த்தியது என உணர்ந்து புத்தம் புதிய தலைப்பாக 'அறமுதல் உணர்தல்' என்னும் அழகிய-நேரிய அருந்தொடர்ச் சொல் வழி ஆங்குப் பதித்துள்ள துணிவு-போக்குணர்ந்த நோக்கு வீறு[10] என்ற பாவலரேறுவின் கூற்றும் கலைஞரின் வழிபாடு என்ற தலைப்பும் பொருத்தமுடையதாக இருப்பதை அறிய முடிகிறது.

வழி என்பது ஏழனுருபு, இதற்கு ஒழுக்கம், மரபு, மார்க்கம் என்றும், வழிபாடு என்பதற்கு ஆராதனை, வணக்கம், கோட்பாடு, வழக்கம் என்றும் பவானந்தர் சொல்லகராதி பொருள் கூறுகிறது. கலைஞரைப் பொறுத்தவரை வழிபாடு என்பதற்குக் கோட்பாடு, வழக்கம் அல்லது ஒழுக்கம் என்ற பொருளில் தலைப்பிட்டிருக்கலாம்.

இறைவன் என்பதற்குப் பழைய உரையாசிரியர்களில் இருவரின் பொருளுரையும், புதிய உரையாசிரியர்கள் இருவரின் பொருளுரையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கலைஞரின் பகுத்தறிவுச் சிந்தனை முற்றிலும் உணர்வுகளினடிப்படையிலும் வரலாறுகளின் அடிப்படையிலும் சிந்திக்க வைக்கிறது.

வ. எண்	சொற்கள்	மணக்குடவர்	பரிமேலழகர்	மு.வ	கலைஞர்
1	ஆதிபகவன்	ஆதியாகிய பகவன்	ஆதிபகவன்	கடவுள்	ஆதிபகவன்
2	வாலறிவன்	விளங்கினவறிவினையுடையவன்	மெய்யுணர்வினதை உடையவன்	தூயஅறிவு வடிவாக விளங்கும் இறைவன்	தன்னைவிட அறிவில் முத்த பெருந்தகையாளர்
3	மலர்மிசை ஏகினான்	மலரின்மேல் நடந்தானது	மலரின் கண்ணே சென்றவனது	அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுள்	மலர் போன்ற மனத்தில் நிறைந்தவன்
4	வேண்டுதல் வேண்டாமை இலான்	இன்பமும் வெகுளியுமில்லாத தனது திருவடி	ஒரு பொருளையும் விழைதலும் வெறுத்தலும் இல்லாதவன்	விருப்பு வெறுப்பு இல்லாத	கடவுள் விருப்பு வெருப்பற்றுத் தன்னலமின்றித் திகழ்பவன்
5	இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு	தலைவனது ஆகிய மெய்ப்பொருள் சேர்ந்த புகழ்ச்சிச் சொற்களைப் பொருந்தினார்மாட்டு	இறைவனது மெய்மை சேர்ந்த புகழ்	கடவுளின் உண்மைப் புகழை விரும்பி அன்பு செலுத்துகின்றவர்	இறைவன் என்பதற்குரிய பொருளைப் புரிந்துகொண்டு புகழ் பெற விரும்புகிறவர்கள்
6	பொறிவாயில் ஐந்தவித்தான்	மெய்,வாய்,கண், மூக்கு,செவி யென்னும் ஐம்பொறிகளின்	மெய்,வாய்,கண், மூக்கு,செவி எனும் ஐந்து அவாவினையை அறுத்தான்	இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர்	மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறி களையும் கட்டுப்படுத்திய தூயவன்
7	தனக்கு உவமை இல்லாதான்	தனக்கு நிகரில்லாதவன் திருவடி	ஒருவாற்றானும் தனக்கு நிகர் இல்லாதவன்	தனக்கு ஒப்புமை இல்லாத தலைவன்	ஒப்பாரும் மிக்காருமில்லாதவன்
8	அறவாழி அந்தணன்	அறமாகிய கடலை யுடைய அந்தணன்	அறக்கடலாகிய அந்தணனது தாள் ஆகிய புனையைச் சேர்ந்தார்க்கு அமைந்தது	அறக்கடலாக விளங்கும் கடவுள்	அந்தணர் என்பதற்குப் பொருள் சான்றோர் என்பதால் அறக்கடலாகவே விளங்கும்
9	எண் குணத்தான்	எட்டு குணத்தான்	எண் வகைப்பட்ட குணங்களை உடையானது	கேட்காத செவி பார்க்காத கண் முதலியன போல்	ஆற்றலும் பண்பும் கொண்டவன்
10	இறைவன்	இறைவன்	இறைவன்	இறைவனுடைய திருவடிகள்	தலையானவனாக இருப்பவனின் அடி

மேற்கூறிய பழைய புதிய உரையாசிரியர்களில் இறைவன் என்பதற்கு தலையானவன் என்ற பொருளைக் கலைஞர் பயன்படுத்தியிருப்பது தலைமைப் பண்பை ஒருங்கிணைக்கின்ற ஒருவரையே தலைவன் எனும் இறைவனாகின்றான் என்று அறியலாகிறது.

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்

நன்னூலாரின் பத்து வகை அழகுகளில் கூறியதைப்போல் எளியவர்களும் புரிந்துகொள்ளும் வகையில்

பொருளினைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது கலைஞரின் தனித்திறனாக அவர் உரையில் பார்க்க முடிகிறது.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்[11]

அடக்கம் அழியாத புகழைக் கொடுக்கும். அடங்காமை வாழ்வையே இருளாக்கி விடும்.

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது[12]

பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவர்களைப் பசி யென்னும் கொடிய நோய் அணுகுவதில்லை.

நகையும் உவகையும் கொல்லுஞ் சினத்தின்
பகையும் உளவோ பிற[13]

சினம் கொள்கிறவர்களுக்கு முகமலர்ச்சி மாத்திர மின்றி மனமகிழ்ச்சியும் மறைந்து போய் விடும்.

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு[14]

பற்றுகளைப் பற்றிக்கொண்டு, விடாதவர்களைத் துன்பங் களும் விடாமல் பற்றிக்கொள்கின்றன.

அறிவாற்றல் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்[15]

பகையால் அழிவு வாராமல் பாதுகாக்கும் அரண் அறிவு ஒன்றுதான்.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கொடுப்பா ரிலானுங் கெடும்[16] *- 408*

குறையை உயர்த்துவோர் இல்லாத அரசு தானாகவே கெடும்.

உண்டார்க ணல்லது அடுநறாக் காமம் போல
கண்டார்மகிழ் செய்தல் இன்று[17]

மதுவை உண்டால் தான் மயக்கம் வரும். ஆனால் கண்டாலே மயக்கம் தருவது காதல்தான் என எளிய நடையில் உரை வகுக்கின்றார் கலைஞர்.

தெளிந்த நீரோடை போன்ற உரை

கலைஞர் பல இடங்களில் தெளிந்த நீரோடை போன்று சுருக்கமாகவும் ஆழமாகவும் உரை வகுத்துள்ளார்.

1. நல்லொழுக்கம் வாழ்க்கையில் நன்மைக்கு வித் தாக அமையும் தீயொழுக்கம் தீராத துன்பம் தரும்.[18]

2.புலனடக்கம் வாய்ந்த தூயவர், வறுமையில் வாடும் நிலையிலே கூடப் பொருளைக் கவர்ந்திட மாட்டார்.[19]

3. மயக்கம் சிறிதுமில்லாத மாசற்ற அறிவுடையர் மறந் தும்கூடப் பயனற்ற சொற்களைச் சொல்லமாட்டார்கள்.[20]

4. நமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டிப்பதற்குச் சரியான வழி அவர் வெட்கித் தலைகுனியும் படியாக அவருக்கு நன்மை செய்வதுதான்.[21]

5. கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப் பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை.[22]

6. சொல்லுவது எல்லோருக்கும் எளிது; சொல்லியதைச் செய்து முடிப்பதுதான் கடினம்[23]

7. பசியும், பிணியும் பகையுமற்ற நாடுதான் சிறந்த நாடு எனப் பாராட்டப்பெறும்.[24]

8. பனையளவாகக் காதல் பெருகிடும்போது தினையளவு ஊடலும் கொள்ளாமல் இருக்க வேண்டும்.[25]

9. காதல் இன்பம், மலரைவிட மென்மையானது அதனை அதே மென்மையுடன் நுகருபவர்கள் சிலரே அவார்கள்[26]

10. துன்பம் வரும்போது அதனைத் தாங்குவதற்கு நெஞ் சமே துணையாக இல்லாவிட்டால் பிறகு யார் துணை யாக இருப்பார்?[27]

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள உரைகளில் செறிவு, நுட்பம், சுருக்கம், இனிமை, படிப்பவரின் ஆழ்மன ஓட்டம் ஆகியவை தெளிவுறுகிறது.

அண்ணாவின் கொள்கை

கலைஞரின் நெஞ்சுக்கு நீதியாக, அரசியல் ஆசானாக அண்ணாவைத் தன் இறுதி மூச்சுவரை போற்றிவந் தார். அண்ணா இறந்தபோது தன் இரங்கற்பாவில்,

கண்மூடிக் கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்.......... இன்று
மண் மூடிக் கொண்டுன்னைப்
பார்க்காமல்
தடுப்பதென்ன கொடுமை,
கொடுமைக்கு முடிவு கொண்டாய்;
எமைக் கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்
எதையும் தாங்கும் இதயம்
வேண்டுமென்றாய்
இதையும் தாங்க ஏதண்ணா
எமக்கிதயம்

என்ற கலைஞர் குறிப்பிடுவதிலிருந்து தான் வாழ்நாள் முழுவதும் அண்ணாவின் தொண்டனாய், தளபதியாய், கொள்கைப் பிடிப்பாளனாய், வாழ்ந்தவர் கலைஞர். இறுதியாக அண்ணாவைப் பார்த்தவர் தன் திருக்குறள் உரையிலும் அண்ணாவின் கொள்கையை,

உற்ற நோய் நோன்றல் உயிர்குறுகண் செய்யாடை
அற்றே தவத்திர் குரு என்ற குறளுக்கு உரை வகுக் கும் பொழுது, *எதையும் தாங்கும் இதயத்தைப் பெற் றிருப்பதும் எந்த உயிருக்கும் தீங்கு செய்யாமல் இருப் பதும்தான் 'தவம்' என்று கூறப்படும்*[28] என்கிறார்.

பகுத்தறிவுச் சிந்தனை

பகுத்தறிவு என்பது எதனையும் ஆதாரத்தோடு மெய்ப் பிப்பது என்ற தந்தை பெரியாரின் கொள்கைவழி யில் கலைஞர் பகுத்தறிவு என்ற சொல்லாடலைக் கையாளுகிறார்.

கொலை வினைய ராகிய மாக்கள் புலை வினையர்
புன்மை தெரிவா ரகத்து
பகுத்தறிவை இழந்து செயல்படும் கொலைகாரர் களைச் சான்றோர் உள்ளம் இழிதகைப் பிறவிகலாகவே கருதும்.[29]

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் சிந்திக்கத் தோன்றும் பகுத்தறிவைப் பயன்படுத்தி வாழ்க்கை வாழ்ந்திட வேண்டும் என்றுரைக்கிறார் கலைஞர்.

நல்லாட்சி

கலைஞர் ஐந்து முறை முதல்வராக இருந்து மக்கள் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் நல்ல பல திட்டங்களைக் கொணர்ந்து திறம்பட ஆட்சி நடத்தியவர்.ஓர்அரசு எப்படி இருக்க வேண்டும் என்பதனை,

இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு என்ற குறளின் உரையில், ***முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்***[30] என்பதிலிருந்து கலைஞரின் நிருவாகத் திறமையும் தொலைநோக்குப் பார்வையும் ஒரு சேர வெளிப்படுகிறது.

சமூக நீதி

சமூக நீதி என்பது அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் உயிர் மூச்சாகும். இச்சமூக நீதிதான்இன்று தமிழகத்தில் உயர்வு தாழ்வு இன்மை, தீண்டாமைக் கொடுமை அறவே நீங்கியமை, சாதி வேற்றுமை பார்க்கப்படாமை முதலியவற்றுக்கு அடிப்படை எனலாம். பிறப்பால் அனைவரும் சமம் என்ற கொள்கையினை,

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் என்ற குறளுக்கு, ***பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும்***[31] என்கிறார் கலைஞர். குறளுரையில் அவர் சமூக நீதியின் தத்துவத்தை எடுத்துரைக்கிறார்.

பெண்மையைப் போற்றல்

மங்கையராகப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டும் என்றார் கவிமணி. பெண்ணினத்தைப் போற்றுவது, அவர்களின் கல்வி நிலையை உயர்த்துவது ஆகியவை அறிஞர்களின் வழிவழிச் சிந்தனை ஆகும். ஒவ்வொரு படைப்பிலும் பெண்மையை உயர்த்தும் நோக்கில் படைப்புகளை உருவாக்கினர். திருக்குறளில் பெண்வழிச் சேறல் அதிகாரத்தை உரையாசிரியர்கள் தம் பார்வையில் பெண்மையைப் பலவாறாக உரையெழுதினர். குறிப்பாக,

மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினை விழைவார்
வேண்டாப் பொருளும் அது என்ற குறளுக்கு மணக்குடவர், ***மனையாளைக் காதலித்தொழுகுவார் நற்பயனை பெறார்; யாதானும் ஒரு வினையைச் செய்து முடிக்க வேண்டுவார் விரும்பாத பொருளும் அவரை விழையாமை (எ.று)***
இஃது அறத்தினும் பொருளினும் காதலின்றி, அவர் தம்மையே காதலிப்பார்க்கு அறனும் பொருளும் இல்லையாமென்றது[32] என்று கூறுகிறார்.

பரிமேலழகர் தமது உரையில், ***இன்பம் காரணமாகத் தம் மனையாளை விழைந்து அவள் தன்மையராய் ஒழுகுவார் தமக்கு இன்துணையாய அறத்தினை எய்தார்; இனிப் பொருள் செய்தலை முயல்வார் அதற்கு இடையீடென்று இகழும் பொருளும் அவ் இன்பம். மனையும், விழைதலும், பயனும் ஆகுபெயர், 'அவ் இன்பம்' அவள் தன்மையராதற்கு ஏதுவாய் இன்பம் இஃது அவளாற் பயனாய அறத்தினும் அவ் அறத்திற்கும் தனக்கும் ஏதுவாய பொருளினும், செல்லவிடாமையின் விடற்பாற்று என்பதாம்***[33] என்று எழுதுகிறார்.

மு. வரதராசனார் தனது உரையில், ***மனைவியை விரும்பி அவள் சொன்னபடி நடப்பவர் சிறந்த பயனை அடையமாட்டார்; கடமையைச் செய்தலை விரும்புகின்றவர் வேண்டாத பொருளும் அதுவே***[34] என்கிறார். ***கடமையுடன் கூடிய செயல்புரியக் கிளம்பியவர்கள் இல்லற சுகத்தைப் பெரிதெனக் கருதினால் சிறப்பினாலான புகழைப் பெறமாட்டார்கள்***[35] என்கிறார் கலைஞர்.

மேற்கூறிய மணக்குடவர், பரிமேலழகர், மு.வரதராசனார் பெண்மையைப் பேசும்பொழுது, தமது உரைகளில் குறைவாக மதிப்பிடுவதையும் கலைஞரின் உரையில் அப்பெண்மையை மேம்படுத்தி உரைப்பதையும் உணரமுடிகிறது. கலைஞரின் திருக்குறள் உரைக்கு நன்னன் வழங்கிய மதிப்புரையில், ***கலைஞர் வள்ளுவரின் பெண் வழிச்சேறல் எனும் அதிகாரத்தைக் காண்கிறார். அவ்வாறு கண்ட கலைஞர் தம் உரையின் வாயிலாகப் பழைய உரையாசிரியர்களால் பெண்மைக்கு ஏற்பட்டிருந்த பழியை நீக்கியுள்ளர்***[36] என்கிறார். கலைஞர் பழமைக்குப் புதுமையாய்ப் பெண்மையைப் போற்றுபவராகவும் ஆண் பெண் என்ற வேறுபாட்டைக் களைபவராகவும் உரை வகுத்துள்ளார்.

நடைத்திறன்

கலைஞரின் திருக்குறள் உரையில் பல்வேறு நடைகளை மிக நுட்பமாகக் கையாண்டுள்ளார். எதுகை, மோனை, இயைபு, முரண், ஆகிய நடைகளையும் அடுக்கு நடை, சொற்பொருள் விருத்த நடை ஆகிய நடைகளையும் ஆண்டுள்ளார்.

எதுகை நடை

அழுக்காறாமை அதிகாரத்தில் 170ஆவது குறளுக்கு, ***பொறாமை கொண்டதால் புகழ் பெற்று உயர்ந் தோரும் இல்லை, பொறாமை இல்லாத காரணத்தால் புகழ் மங்கி வீழ்ந்தோரும் இல்லை***[37] என்பதில் எதுகையைப் பயன்படுத்தியுள்ளார். 246ஆவது குறளுக்கு உரை வகுக்கும்பொழுது, ***அருளற்றவர்களாய்த் தீமைகளைச் செய்து வாழ்பவர்கள் பொருளற்றவர்களாகவும் கடமை மறந்தவர்களாகவும் ஆவர்***[38] என்ற உரையில் எதுகையைப் பின்பற்றியிருக்கின்றார்.

மோனை நடை

புலால் மறுத்தல் அதிகாரத்தில் 254ஆவது குறள் உரையில், ***கொல்லாமை அருளுடைமை யாகும்; கொல்லுதல் அருளற்ற செயலாகும், எனவே ஊன் அருந்துதல் அறம் ஆகாது***[39] என்று மோனையைப் பயன்படுத்தியுள்ளார். வாய்மை அதிகாரத்தில் 294ஆவது குறள்

ISSN 2320-4842

உரையில், ***மனதால் கூடப் பொய்யை நினைக்காமல் வாழ்பவர்கள், மக்கள் மனத்தில் நிலையான இடத்தைப் பெறுவார்கள்***[40] என்று மோனையில் கூறுகின்றார்.

அடுக்கு நடை

வினைத்தூய்மை அதிகாரத்தின் 659ஆம் குறள் உரையில் கலைஞர், ***பிறர் அழத் திரட்டிய செல்வம் அழ அழப் போய்விடும். நல்வழியில் வந்த செல்வ மென்றால் அதனை இழந்தாலும் மீண்டும் வந்து பயன் தரும்***[41] என்ற அடுக்கு நடையில் கூறியுள்ளார்.

முடிவுரை

ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி
வேதப்பொருளாய் மிகவிளங்கித் - தீதற்றோர்
உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு

மாங்குடி மருதனாரின் பாடல் ஒத்த திருக்குறளுக்கு உரை வகுத்திருப்பது கலைஞரின் உரைத்திறன் வெளிப் பாடாகவே அறியலாகிறது.

உரை அறத்தைப் பின்பற்றுபவராகக் கலைஞர் இருந் தார் என்பதற்குக் குறள் வைப்புமுறையைக் கூறலாம். மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காலிங்கர் போன்றோர் முதல் அதிகாரத்தில் குறள் வைப்பை மாற்றிவைத்தனர். உரையாசிரியர் வரிசையில் பரிமே லழகர்முதல் பின்வந்த உரையாசிரியர்களில் கலைஞர் வரை ஒரே வைப்புமுறையைப் பின்பற்றிவந்ததில் கலைஞரின் உரை அறம் வெளிப்படுகிறது.

கலைஞர் சங்கத்தமிழ், தொல்காப்பியப்பூங்கா, திருக் குறள்உரை ஆகிய மூன்று நூல்களுக்கு உரை எழுதி யிருந்தாலும், திருக்குறள் உரை அவரின் பகுத்தறி வுச் சிந்தனைக்கும் சமூகநீதிக்கருத்துக்கும் தளமாகவே இருக்கின்றது.

கடவுள், தெய்வம் என்பதற்குக் கலைஞர் இயற்கை யின் ஆற்றல், தலைவன், மனிதன் என்ற சொல்லாட லைப் பயன்படுத்துகிறார். ஒரு காலத்தில் மக்களுக்கு நன்மை செய்பவர்களைக் கடவுள் என்றோ தெய்வம் என்றோ வைத்திருக்கலாம் என்ற பகுத்தறிவுச் சிந்த னையை வெளிப்படுத்தியிருப்பதையும் அறிய முடிகி றது.

பேடி என்ற சொல்லை வள்ளுவர் 614, 727 ஆகிய இரு குறள்களில் பயன்படுத்துகிறார். கலைஞரும் அச் சொல்லை வள்ளுவர் பயன்படுத்தியதைப் போன்றே உரை எழுதுகிறார். பின்னாளில் *பேடி* என்பதற்குத் *திருநங்கை* என்ற சொல்லாடலை அரசாணையாகப் பிறப்பித்ததும் கலைஞர்தான் என்பதையும் ஈங்கு எண்ணிப் பார்க்கலாம்.

வரைவின் மகளிர் என்பதற்குப் பொதுமகளிர், இன்ப வல்லிகள், விலைமகள், விலைமாதர்கள் எனக் கலைஞர் உரை வகுத்திருப்பதை அறிய முடிகிறது.

முதல் மூன்று அதிகாரங்களை இடைச்சொல்லாக அறிஞர் கருதுவர். அதிலும் குறிப்பாக வ.உ.சி கருதி னார். அதனை,

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார் (குறள்.3) என்ற குறளுக்கு உரை தருமிடத்து, ***பூமிசை நடந்தான் என்பது ஒரு மதக் கடவுளின் பெயர். மலர் என்பதற்கு உள்ளக் கமலம் என்று உரைப்பாரும் உளர். அவ்வாறு உரைப்பது வலிந்து பொருள் கோடலாகும்*** என்று வ.உ.சி வழங்கியுள்ள கருத்தை யும், கலைஞரின் வழிபாடு என்ற அதிகாரப்பெயர்ப் புதுமையில் உரைக்கிற கருத்தையும் ஒப்பிடும்போது, ***மலர் போன்ற மனத்தில் நிறைந்தவனைப் பின்பற்றுவோ ரின் புகழ்வாழ்வு, உலகில் நெடுங்காலம் நிலைத்து நிற் கும்*** என்று உரை எழுதுகிறார். நவீன சிந்தனைக்கு வித்திடுவதாகக் கலைஞரின் உரை அமைந்துள்ளது.

கலைஞரின் உரைத்திறன் குறித்து இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். இவ்வாய்வைப் பிறகு விரித் திடும் எண்ணம் உள்ளது. திருவள்ளுவர் எழுதிய 1330 குறள்களில் ஏழு சீர்கள் நம்மை ஈர்த்தாலும் கலைஞரின் திருக்குறள் உரை பல இடங்களில் ஆறு சீர்களில் அமைந்து வள்ளுவனுக்கே வலிமை சேர்க் கும் வண்ணம் உள்ளது.

கலைஞரை வள்ளுவர் வழியில் கூறின்,

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது - 68 என்ற குறளின் வழி உலகில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களின் மகிழ்ச்சிக்காகவும் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தன் இறுதி மூச்சுவரை வாழ்ந்தார் என்பதை இவ்வுரை மெய்ப்பித்துள்ளது.

அடிக்குறிப்புகள்

1.மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப-337

2.சீத்தலைச்சாத்தனார், மணிமேகலை, 22-59-61

3.பேரா.தி.முருகரத்தனம், திருக்குறள்- கலைஞர் உரை சில சிந்தனைகள், பக் 201-202

4.கலைஞர் மு.கருணாநிதி, திருக்குறள் கலைஞர் உரை முகவுரை -ஏஐ

5.மேலது

6.ம.நன்னன், திருக்குறள் கலைஞர் உரை, ப-ஓஐஐ

7.கி.ஆ.பெ.விசுவநாதம், 'திருக்குறளின் செயல்திறன் கலைஞர்',கலைஞர் மணிவிழா மலர்,1984.

8.பேரா.க.அன்பழகன், திருக்குறள் கலைஞர் உரை,ப.ஐஓ

9.பாவலரேறு பெருஞ்சித்திரனார்,திருக்குறள் மெய்ப்பொருளுரை.பக்-23-24.

10.மேலது,ப-25

11.கலைஞர் மு.கருணாநிதி, திருக்குறள் கலைஞர் உரை,ப-25

12.மேலது,ப-46

13.மேலது,ப-61

14.மேலது,ப-70

15.மேலது,ப-87

16.மேலது,ப-92

தொடர்ச்சி: பக்.42

ISSN 2320-4842

சமூகவியல் நோக்கில் இயேசு காவியம்

முனைவர் சா. சாம் கிதியோன்
உதவிப்பேராசிரியர், தமிழ் ஆய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி

முனைவர் இரா. ஜெய்சங்கர்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (CDOE), பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி

முன்னுரை

தமிழ் இலக்கிய ஆய்வுலகில் மரபு ரீதியான ஆய்வுகளுடன் சமூகவியல், உளவியல், மானுடவியல் ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்த ஆய்வு புதிய புரிதலையும் புதிய பொருண்மையையும் வெளிப்படுத்தும். அவ்வகையில் கவிஞர் கண்ணதாசனின் படைப்பான இயேசு காவியத்தில் மலைப்பொழிவுப் பகுதியை சமூகவியல் நோக்கில் ஆராய்ந்து புதிய புரிதலுக்கு வழிவகுப்பது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரையில் சமூகவியல் சார்ந்த பகுப்பாய்வு திறனாய்வு அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது. சமூகத்தில் அனைத்துத் தரப்பு மக்களும் ஒன்றுபோல் செயல்படுவது இல்லை. அவ்வாறே, மனிதனுக்கு மனிதன் சிந்தனையில் மாறுபடுகிறான். இம்மாறுபாடுகளை உணர்ந்து செயல்படுவது வளமான வாழ்விற்கு வழிவகுக்கும். அந்த வகையில் இயேசு, மலைப்பொழிவில் எட்டு வகையான மனித மனங்களையும் அவற்றின் செயல்பாடுகளையும் நுட்பமாக விவரித்து அதன்படி செயல்பட அறிவுறுத்தியுள்ளது இக்காலத்திற்கும் மிகத்தேவை என்பதையும், சமூகவியல் அறிஞர்களின் கருத்தியலோடு பெரிதும் ஒன்றிப்போகிறது என்பதையும் கருதுகோளாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது..

கண்ணதாசன்

கவிஞர் கண்ணதாசன் திருப்பத்தூர் அருகே சிறுகூடல்பட்டி எனும் ஊரில் 26-06-1927இல் காத்தப்பன்-விசாலாட்சி இணையருக்கு மகனாய்ப் பிறந்து, தமிழ் அன்னைக்குப் பல வகைகளில் சிறப்புச் செய்து, 17-10-1981இல் மறைந்தார். எனினும் ***நான் நிரந்தர மானவன் அழிவதில்லை, எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை*** என்று தன்னைப் பற்றிக் கூறியதற்கேற்ப, தன் படைப்பு வாயிலாக அவர் மரணமிலாப் பெருவாழ்வினை வாழ்ந்து கொண்டிருக்கிறார். விசாலமான எண்ணமும், பரந்த கண்ணோட்டமும், எதார்த்த மனப்பக்குவமும் கொண்ட கண்ணதாசன், எம்மதமும் சம்மதம் என்ற பெருந்தன்மையுடன் இயேசுவின் வாழ்வினையும், அவரது அருள் வாக்கினையும் எளிய தமிழ் நடையில் இயேசு காவியமாக உருவாக்கி இறவாக் காவியமாக மிளிரச் செய்துள்ளார். இயேசுகாவியம் ஐந்து பாகங்களாக 403 பக்கங்களில் படைக்கப்பட்டுள்ளது. இதன் முதல் பதிப்பை 1982இல் திருச்சி, கலைக்காவிரி கல்லூரி வெளியிட்டுள்ளது. இயேசு காவியத்தில் இடம்பெறும் மலைப் பொழிவு மட்டும் இங்குச் சமூகவியல் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

சமூகவியல்

சமூகவியல் என்பது தனிநபருக்கும் சமூகத்துக்கும் பயன்படும்படியான அறிவியல் கொள்கையாக இருக்கிறது. மக்கள் அறிவியல் நெறியுடன் வாழ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. மேலும் இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் முதலிய மூன்று காலகட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து சமூகத்தை நன்னெறி நோக்கிச் செலுத்த சமூக அறிவியல் பயன்படுகிறது (சமூகவியல் அறிஞர்களும் கோட்பாடுகளும், ப.18).

சமூகவியல் அறிஞர் ஆகஸ்ட் ஹோம், மனித உறவுகளையும் செயல்களையும் அறிவியல் முறைப்படி ஆராய முற்படுவது சமூகவியல் ஆகும் என்கிறார். மேலும் அவர், 1. மனித நேயம் (Humanity) 2. அறிவியல் (Science) 3. ஒன்றிணைதல் (Synthesis) 4. நம்பிக்கை (Faith) இவை நான்கும் சமூக அறிவியலின் கொள்கைகளாக வலியுறுத்தியுள்ளார்.

தொழிற்புரட்சியும் பிரெஞ்சு புரட்சியும் சமூதாயத்தில் சிந்தனையைத் தூண்டின. சமூகக் கட்டுப்பாடுகள் விலகின. அதே சமயத்தில் சமூகத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றங்கள் காரணமாக வேலைவாய்ப்பின்மை பெருகியுள்ளது. மேலும் முதலாளி, தொழிலாளி இடையான பிரச்சனைகள் உருவாகியுள்ளன. இச்சூழலில், சமூகத்தில் ஒழுங்கையும் வளர்ச்சியையும் உருவாக்க வேண்டிய தேவை சமூகவியல் அறிஞர்களின் கடமையாகியுள்ளது. இச்சூழ்நிலையில் சமூகவியல் அறிஞர் ஆகஸ்ட் ஹோம் சமூகத்திற்கு ஒழுங்கையும் (social statics), வளர்ச்சியையும்(social dynamics) இரு கொள்கைகளாகக் குறிப்பிட்டு இந்த இரண்டையும் வளர்த்தெடுத்தால்தான் சமூகத்தைப் பற்றிய கல்வியறிவு நிறைவடையும் எனக் குறிப்பிட்டுள்ளார். இச்சிந்தனை

களை அடியொற்றி இலக்கியங்களை ஆராயும் போக்கு ஆய்வாளர்களிடையே பெருகியுள்ளது.

சமூகங்களில் ஏற்படும் மாற்றங்களுக்கான காரணத்தை ஆராய்ந்த சமூகவியல் அறிஞர் ஸ்பென்சர், சமூகத்தின் கூட்டிணைப்பு அதிகரிக்கும்போது, வாழ்க்கை முறையும், தலைமைப் பண்பும் அதிகரிக்கிறது என்பதைத் தெளிவாக விவரித்துள்ளார். மேலும், சமூகவியலானது சமூகங்களின் பரிணாம வளர்ச்சியைச் சுட்டிக்காட்டுவதுடன் சக மனிதரின் கூட்டுச் செயற்பாட்டை(Co-operation) வலியுறுத்துகிறது என்பது இவரின் சிந்தனையாகும் (சமூகவியல் அறிஞர்களும் கோட்பாடுகளும், ப.37). மேற்காணும் சமூகவியல் அறிஞர்களின் கோட்பாடுகளை அடியொற்றி, இயேசுவின் மலைப்பொழிவு ஆராயப்பெற்றுள்ளது.

எண்வகை மனிதர்கள்

மனிதன் தோன்றியதும் அவனுக்குப் பழக்கவழக்கங்களையும் மரியாதை, உணர்ச்சி, வீரம், பண்பு முதலியவற்றைச் சமூகம் அவனுக்குக் கற்றுக் கொடுக்கின்றது என்பது சமூகவியல்அறிஞர் மார்க்ஸ் கூற்றாகும் (சமூகவியல் கோட்பாடுகள்,ப.9). இக்கூற்றுக்கிணங்க, ஒவ்வொரு சமூகத்தின் பரிணாம வளர்ச்சிக்கேற்ப மனிதர்களின் இயல்பு நிலைகள் அமைகின்றன. அவ்வகையில் இயேசு காவியத்தில் கண்ணதாசன் எட்டு வகை மனிதர்களையும் அவர்களுடைய இயல்புகளையும் தெளிவாகச் சுட்டிக்காட்டி விவரித்துள்ளார். அவை:

1. எளிய மனத்தோர்

மனமது செம்மையானால் மந்திரங்கள் செபிக்க வேண்டாம் என்ற முதுமொழிக்கு ஏற்ப, மனித மனமே அனைத்துச் செயல்களுக்கும் அடிப்படை காரணமாகிறது. எளிய மனமுடையவர்கள் பேறு பெற்றவர்கள். அவர்கள் அகப்பற்றும் புறப்பற்றும் இல்லாமல் இறை மீது பற்று வைத்தால் விண்ணுலகைச் சேரலாம் என்பது இயேசுவின் நற்செய்தி, இச்செய்தியானது.

பற்றுக பற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்றுவிடற்கு (கு.50) என்ற குறள் கருத்துடன் ஒப்புநோக்கத்தக்கது. செல்வத்தின்மீது நாட்டம் கொள்ளாமல், வஞ்சமில்லாத நெஞ்சத்துடன் இறைவன்மீது பற்றுக்கொண்டால் எளிய மனத்தோராக வாழ முடியும். இதனால் உலக உயிர்கள் அனைத்தும் நலம் பெறும் என்பது கண்ணதாசன் பாடல்வழி அறியமுடிகிறது.

2. துயரமுறுவோர்

மனித வாழ்வில் மது, மாது, இசை போன்ற ஆயிரம் இன்பங்களை அனுபவித்து உயிரே பெரிதென்று வாழ்வது வாழ்வல்ல; பிறருடைய நலனுக்காகத் துன்பம் உறுவதே மிகச்சிறந்த வாழ்வாகும். இத்தன்மை உடையோர் பாக்கியசாலிகள் என்பதை இயேசுவின் வழிக் கண்ணதாசன் சுட்டிக்காட்டியுள்ளார். ***தமக்கென முயலாநோன்தால் பிறர்க்கென முயலுநர் உண்மையானே*** (புறம்.182) என்ற புலவர் இளம்பெருவழுதியின் சிந்தனை மேற்காணும் இயேசுவின் சிந்தனையோடு ஒத்துள்ளது.

கண்ணெதிரே ஆயிரம் கொடுமைகள், அநீதிகள் நடந்தும், அதைக் கண்டும் காணாமல் செல்லும் சுயநலக் கூட்டத்தின் மத்தியில், அநீதிக்கு எதிராகப் போராடி நீதியைப் பெறுவது எளிய செயலல்ல. அது தொடர் உழைப்பால் தியாகத்தின் மூலம் கிடைக்கக்கூடியது. அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்டவர்களின் வேதனையைத் தீர்ப்பதற்குத் தன்னை வருத்திக்கொள்ளும் தியாகிகள் சொர்க்கத்தில் வாழ்வர். அவர்கள் நீதிக்காகப் போராடினால் கண்மூடித்தனமாகத் தாக்குவார்கள் அதை விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டு கொடுமையைத் தாங்கிக் கொள்ளுங்கள். சொல்வது எல்லோருக்கும் எளிது. உபதேசங்கள் மட்டும் போதாது சொல்பவனும் நடப்பதுதான் நியாயமானது என்பதை மலைப்பொழிவில் இயேசு சிடர்களுக்கு அறிவுறித்திய சிந்தனையானது, ***சமூகத்திற்கு ஒழுங்கையும் (social statics), வளர்ச்சியையும் (social dynamics) இரு கொள்கைகளாகக் குறிப்பிட்டு இந்த இரண்டையும் வளர்த்தெடுத்தால் தான் சமூகத்தைப் பற்றிய கல்வியறிவு நிறைவடையும்*** என்ற சமூகவியல் அறிஞர் ஆகஸ்ட் ஹோம் சிந்தனைக்கு (சமூகவியல் அறிஞர்களும் கோட்பாடுகளும், ப.37). வலுசேர்ப்பதாக அமைகிறது.

3. சாந்தமுடையோர்

இவ்வுலகில் சின, பழிவாங்கும் எண்ணம், கொடுமை செய்யும் நெஞ்சம் கொண்ட எத்தனையோ நபர்கள் வாழ்கின்றனர். இவர்களுக்கிடையே வாழும் அமைதியான குணமுடையோர் இம்மண்ணுலகையும், விண்ணுலகையும் சிறப்புச் செய்து மகத்துவம் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர். தலைவராகத் திகழத் தகுதியுடைய இவர்கள். மண்ணையும் விண்ணையும் ஆளும் மகத்துவம் கொண்டவர்கள் என இயேசு, சீடர்களுக்கு அறிவுறுத்தியிருப்பதை;

சாந்தம் உடையோர் பேறுபெற் றோரெனத்
தத்துவமும் சொன்னார் (இயேசு காவியம்,ப.28) என்கிறார் கண்ணதாசன். ஒரு அமைப்பு அல்லது இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கு அதன் முரண்பாட்டில் அமைந்துள்ளதுஎன்னும் சமூகவியல் அறிஞர் ஹெகல் சிந்தனைக்கேற்ப, ஒருசாரார் சமூகத்தில் அமைதியின்மையை உருவாக்கிகொண்டே இருப்பார்கள்.
வேறு சிலர் ***நச்சு விதைகளை விதைத்து வெறுப்பு நீரூற்றி, வேற்றுமைப் பயிர் வளர்த்து, பகையை விளைச்சலாக்கி, வேதனையை அறுவடை செய்கின்றனர். இதனால் மக்கள் ஒருவர்க்கொருவர் ஜாதி, மதங்களை குறித்து ஏளனம் செய்வதும், மற்றவரின் மனம் நோகப் பொய்யுரைப்பதும், அருவருக்கத்தக்க வகையில் சொல்லாடுவதும் தொடர்ச்சியாகச் செய்வார்கள். இப்போக்கானது ஆரோக்கியமான சமூகத்திற்கு வழி வகுக்காது*** (தியாகராசன், டி. எஸ்,தினமணி நாளிதழ் கட்டுரை,ஜனவரி-2023). இவ்அறிஞர்களின் சமூகம் பற்றிய புரிதலைப்

பொதுமக்களுக்குப் புரிய வைக்க வேண்டிய தேவை உள்ளது. இச்சூழ்நிலையில், சாந்தம் உடையோரால் மட்டுமே உலகில் அமைதியை நிலைநாட்டமுடியும். இச்சமூகச் சிந்தனையை இயேசுவின் மலைப்பொழிவு வழிக் கண்ணதாசன் அறச்சீற்றத்துடன் சுட்டியுள்ளார்.

4. நீதியின்பால் தாகம் கொள்பவர்

நீதியின்பால் தாகம் கொள்பவர் முறையாக வாழ்ந்து, நிறைவாக மகிச்சியடைவர்.

சாதிக ளாலும் பேதங்க ளாலும்
தள்ளாடும் உலகம் - அது
தர்மம் ஒன்றை நம்பிய பிறகே
அடங்விடும் கலகம் (இயேசு காவியம்,ப.95) என்ற கண்ணதாசனின் பாடலடிகள் கவனிக்கத்தக்கன. இக் காலக் கணினியுகத்தில் குற்றங்கள் பெருகிக்கொண்டே உள்ளன. தர்மம் மின்னல் கீற்றாக நிலைகொண்டுள் ளது. மேலும், சட்டம் ஓர் இருட்டறை; அதில் வக்கீல் களின் வாதம் அவ்விருளைப் போக்கக்கூடியது என்ற அண்ணாவின் வாக்கிற்கிணங்க, அறநூல் கற்ற சான் றோர்கள் சாதி, மத பேதங்கள் பாராது தர்மத்தை நிலைநாட்டப் பாடுபட்டுவருகின்றனர். ஆனால், சமூ கத்தில் ***வாழ்க்கைச் சுகங்கள் அதிகமாக ஆக, கலைகள் பூரணத்துவமடைய, ஆடம்பரம் பெருகப்பெருக, உண்மை யான வீரம், உழைப்பு தேய்ந்துபோகிறது. ஒழுக்கங்கள் மறைந்துபோகின்றன விஞ்ஞானத்தின் அதீத வளர்ச்சி யானது, ஒரு உதவாக்கரை சொகுசு வர்க்கத்தை உரு வாக்கி ஒடுக்குமுறைக்கும், அநீதிக்கும், ஆடம்பரத் திற்கும் இட்டுச்செல்லும் (ரூசோ,மனசாட்சி உதிர்கின்றது, ப.37).***

தனிமனித ஒழுக்கமும், தர்மமும் சமூகத்தில் அன்றா டம் குறைந்து வருவதைக் காண முடிகிறது. இவை மீட்டெடுக்கப்பட்டால்தான் சமூகத்தில் அறமும் நேர்மை யும் மீட்டுருவாக்கம் பெறும். சமூகத்தில் ஏற்படும் கல கம் அடங்கும். இதற்கு நீதியின் பால் தாகம் கொள் பவர் தேவையென இயேசு சுட்டியுள்ளயதைக் கண்ண தாசன் சமூக அக்கறையுடன் பதிவு செய்திருப்பதைக் காண முடிகிறது. மனித சமூகத்தில் தோன்றியுள்ள அறிவியல், கலை, மதம், தத்துவம் முதலிய அனைத் தும் பண்பாட்டின் கூறுகளாக அமைகின்றன. இக்கூறு களுக்கிடையே உள்ள உறவைத் தெரிந்து, அதனைச் சமூகத்திற்கு எடுத்துகூறுவதன் மூலம் பல நன்மை களைச் சமூகம் அடையும் என்பது தெளிவாகிறது.

5. இரக்கமுடையோர்

இவ்வுலகில் அதிக வட்டி வசூலிப்போரும், வேலைக் கேற்ற கூலி கொடுக்காமல் தொல்லை கொடுப்போ ரும், இறக்கும் தருவாயிலும் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்காதவரும் உள்ளனர். இவர்களுக்கு மத்தியில் பிறரிடம் இரக்கம் கொள்பவர்கள் பேறு பெற்றோர் ஆவார். இவர்கள் இரக்கத்தைக் காட்டி இரக்கத்தைப் பெறுவார்கள் என்கிறார் இயேசு.

எல்லாம் இருந்தும் மனிதர்கள் நெஞ்சில்
இரக்கம் தானில்லை (இயேசு காவியம்,ப.96)

இரக்க குணம் உள்ள நபருக்கு பிற உயிர்களின் மீது அன்பும், கரிசனமும், நேர்மையும் இயற்கையாகவே வந்து விடுகிறது. அவர்களால் மற்றவர்களின் மனதைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு பாதுகாப்பாகவும் செயல்படவும் முடிகிறது. சமூகம் இக்குணங்கள் இருக்கும் நபர்களை நம்பி அவர்களின் பின்னால் செல்லத் தயாராக இருக் கிறது. இதனை முன்னால் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா *Empathy is a quality of character that can change the world* ***என்கிறார். ஆக மக்களிடம் இரக்க குணம் தொடர்ந்து இருக்கும்படி வளர்த்து ஆளாக்கும் மிகப்பெரிய கடமை சமூகத்திற்கும் இருக்கிறது(வைத்திய லிங்கம், ப, மருத்துவர். இரக்க குணமும் குழந்தையும், பக்.46).*** இச்சிந்தனை இயேசுவின் சிந்தனையுடன் ஒப்பு நோக்கத்தக்கதாகவும் யதார்த்தத்தைச் சுட்டிக் காட்டுவதாகவும் அமைகிறது.

6. தூய மனத்தோர்

மனிதசமூகத்தைக் காமம், களவு, பொறாமை போன்ற எண்ணற்ற கூறுகள் வாட்டிவதைக்கின்றன. இதனைக் கண்ணதாசன்,

வாயும் வயிறும் ஆசையில் விழ்ந்தால்
வாழ்க்கை பாலைவனம் - அவர்
தூய மனத்தில் வழநினைத்தால்
எல்லாம் சோலைவனம் (இயேசு காவியம்,ப.21) என்று விவரித்துள்ளார். மேலும், தூய மனத்தோர் கடவுளை நேரில் காண்பர், அவருக்குச் சொர்க்கம் உண்டு என் பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். சக மனிதரிடம் பகை கொண்டு இறைவனுக்குக் காணிக்கை செலுத்துவதி னால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. மனித வாழ்வில் பகைவர்களை உருவாக்கிக்கொண்டு பிறகு கோவிலுக்கு வந்தால் இறைவன் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார். கபடதாரியாகவும், மண், பெண்மீது ஆசை கொண்டவராகவும், நிலையில்லாத சொற்களால் பிறர் நெஞ்சத்தைச் சுடுவராகவும் இருந்தால் நரகம் கிட்டு வது உறுதி என இயேசு மலைப்பொழிவில் உறுதிபடக் கூறியுள்ளதைக் கண்ணதாசன் எடுத்துரைக்கும் முறை தனித்துவமானது.

மனத்துக்கண் மாசிலன் ஆதல், அனைத்து அறன்
ஆகுல நீர பிற (கு.34) என்ற குறள் கருத்துடன் ஏறத் தாழ ஒத்த நிலையில் அமைந்துள்ளது.

7. அமைதி கொடுப்போர்

சண்டை சச்சரவுகள் நிறைந்த இவ்வுலகில், அமைதி யைத் தருபவர்கள் ஆண்டவன் பெற்ற பிள்ளைகளா வர். பொய்யான உறவு கொள்ளாமல் அமைதியுடன் வாழ்ந்தால் இதயம் கையளவு சிறுமையுடையதாயி னும் அது மலையளவாய் விரிந்து நிற்கும் என்பதை இயேசு சொற்பொழிவுவழிக் கண்ணதாசன் சுட்டியுள் ளார். மேலும், உண்மையான தெய்வ வழிபாடு என்பது,

தாழிட்ட வீட்டினில் நின்று - பூசை
தந்தைக்குச் செய்வதே நன்று (இயேசு காவியம்,ப.103)

என்கிறார்.மனித வாழ்க்கை திரை போட்டு மறைக்க அல்ல, அடுத்தவர் அறிந்துகொள்வதற்கும், தூயவன் மகிழவும்தான். செல்வத்தைத் தேடுவதனால் தீராத துன்பம் உண்டாகும். கடவுளைத் தேடுவதால் நிம்மதி உண்டாகும். நாளைப் பொழுது நம்மிடம் இல்லை. கவலைப்படுவது கடவுளின் வேலை பரம பிதாவைத் திருப்தி செய்தால் தினமும் சொர்க்கமே. புகுந்தது புதிய வெள்ளம், ஆண்டவன் பெயரில் ஆணையிடு வதை விட்டுவிட்டு வேண்டிய காரியம் செய்தால், வேதத்தின் தத்துவம் கிட்டும். நம்மிடம் அன்பற்று இருப்பவரிடம்அன்பு பாராட்டுதலே மானுடப் பண்பு. போலித்தனமாகவும், விளம்பரத்திற்காகவும், இலாபம் எதிர்பார்த்தும், மதிப்பு, மரியாதை வேண்டியும் உதவிகள் செய்பவன் ஆண்டியாகக் கருதப்படுவான். உதவிசெய்வதைப் பிறருக்கு அறியாது கொடுப்பவன் மன்னனாகக் கருதப்படுவான். ஆடம்பரமான, போலி யான பக்தி கூடாது. இவ்வாறு செயல்படக்கூடியவர் கள் உலகமக்களுக்குத் தலைவராகத் திகழத் தகுதி யுடையவர்கள். மண்ணையும் விண்ணையும் ஆளும் மகத்துவம் இவர்களுக்கு உண்டு என்று சீடர்களுக்கு ஏசு அறிவுறுத்தியதைக் கண்ணதாசன் உவமை நயத் துடன் பாடியிருப்பதைக் காண முடிகிறது.

8. நீதிக்காகத் துன்பம் அடைவோர்

நீதியை நிலை நாட்டுவதற்காகத் துன்பமடைவோர் பேறுபெற்றவர்கள். பிறருக்கு இழைக்கப்படும் அநீதி களைக் கண்டும் காணாமல் இருப்பது சுயநலச் செய லாகும். பிறர் வேதனைகளைப் போக்குவதற்கு முயல் பவர் ஞானிகள் ஆவார். ஊருக்கு உபதேசம் செய் வது சிறப்பு என்றாலும் உபதேசம் செய்பவனும் கடைப்பிடிக்க வேண்டும். அதுதான் உயர்ந்த நியதி. கொலை செய்பவனுக்கு மட்டும் நரகமல்ல, கொடிய செயல் செய்பவனுக்கும், கொடிய சொல்லால் பிறர் நெஞ்சைச் சுடுபவருக்கும், உறவினர்களைத் தூற்றுப வருக்கும், நண்பர்களைப் பழிசொல்பவனுக்கும் நரகம் உண்டு என்பதை உறுதிபட இயேசு கூறியுள்ளார். மனிதர்களைப் பகைத்து இறைவனுக்கு மடிநிறையக் காணிக்கை செலுத்துவதில் பயனில்லை. அனைவரும் நட்புக் கொண்டு எதைக் கொடுத்தாலும் இறைவன் ஏற்பார். மேலும்,

ஊருக்கு தீமைகள் செய்து - உன்
உள்ளம் மகிழ்வது பாவம்
யாருக்கும் தீமை யில்லாமல் - நீ
அழிந்து விடுவதே லாபம் (இயேசு காவியம்) என்று அறிவுறுத்தியிருப்பதை மலைப்பொழிவில் காண முடி கிறது. மேலும் பிறர் தவற்றினை மன்னித்துவிட்டால் மன்னிக்கப்படுவீர் என்பனபோன்ற வாழ்வியல் மேன் மைகளைக் கண்ணதாசன் எளிய தமிழ் நடையில் சிறப்பாக விவரித்துள்ளார்.

நிறைவுரை

இயேசுநாதர், தன் சீடர்களுக்கு மலைப்பொழிவில் எண் வகை மனிதர்களின் மன இயல்புகள் பற்றியும், மனித வாழ்வின் மேன்மைகள் பற்றியும் விவரித்துள்ள பாங் கினைக் கண்ணதாசன் எளிய, இனிய கவிதை நடையில் நுணுக்கமாக விவரித்துள்ளதைக் காணமுடிகிறது. உலக மக்கள், உயர்வு தாழ்வு இல்லாத வாழ்வு பெற, தர்மம் செழித்ததோங்க வேண்டும். அப்போது, சமூக விரோதிகள் உருவாக்கும் கலகம் அடங்கும். இவை இயேசுவின் உன்னதமான அருள்வாக்கு என்பதைக் கண்ணதாசன் உவமைநயத்துடன் விவரித்திருப்பதைக் காண முடிகிறது. கவிஞரின் விவரிப்பு முறையின் பொருண்மையை நோக்குமிடத்துச் சங்க இலக்கியம், அற இலக்கியத்தின் தாக்கத்தினைக் கண்டுணர முடி கிறது. இயேசு காவியத்தில் இடம்பெறும் மலைப் பொழிவுச் சிந்தனையானது; சமூகவியல் நோக்கில் ஆராயுமிடத்துச் சமூகவியல் அறிஞர்கள் சுட்டியுள்ள மனிதநேயம், ஒன்றிணைதல், நல் நம்பிக்கை, இரக் கம், நீதி பரிபாலனை குறித்த சிந்தனைகளுடன் ஏறத் தாழ ஒன்றிப்போகிறது. மேலும் இயேசுவின் சமூக வியல் சிந்தனைகளுக்கு வலுசேர்க்கும் விதமாகவும் அமைகிறது.இயேசு காவியத்தை முழுமையாகச் சமூக வியல் ஆய்வுக்கு உட்படுத்தும்போது கண்ணதாசனின் கவிதையாக்கும் ஆற்றல் மட்டுமல்ல, இயேசுவின் சர்வ சமயப் பொது நோக்கும் புலப்படும்.

குறிப்பு நூல்கள்

கவியரசு கண்ணதாசன், *இயேசு காவியம்*, கலைக் காவிரி, திருச்சிராப்பள்ளி, முதல் பதிப்பு 1982.

கிருஷ்ணமூர்த்தி,ஜெ., *சமூகவியல் கோட்பாடுகள்*, சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 2000.

சுப்பையா, அரங்க,. சமூகவியல் அறிஞர்களும் கோட்பாடு களும், ராஜேஸ்வரி புத்தக நிலையம், சென்னை 2003.

தமிழருவிமணியன், *எங்கே போகிறோம் நாம்*, கற்பகம் புத்தகாலயம், சென்னை முதல் பதிப்பு 2008.

தியாகராசன், டி. எஸ் ,அந்நியர்களா அந்தணர்கள், தினமணி நாளிதழ் கட்டுரை, ஜனவரி- 2023.

தாயம்மாள் அறவாணன், *தமிழ்ச்சமூகவியல் ஒரு கருத்தாடல்*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை 2002.

பரிமேலழகர், *திருக்குறள்*, திருமகள் நிலையம், சென்னை1998

மணிக்கவாசன்)உ.ஆ),(1998),புறநானூறு, உமா பதிப்பகம், சென்னை-.600001

வைத்தியலிங்கம்,ப. மருத்துவர், இரக்க குணமும் குழந்தையும், நியூ செஞ்சுரியின் *உங்கள் நூலகம்*, இதழ்-9, மலர்-14, டிசம்பர் 2022.

ஜெய்சங்கர், இரா., *மனசாட்சி உதிர்கின்றது*, சரவணா பிரிண்ட் சொல்யூஷன்ஸ், சென்னை 2017

what is stronger
than the human heart
which shatters over and over
and still lives

- Rupi Kaur

ISSN 2320-4842

மம்மட்டியான் கொலைச்சிந்திற்கான பின்புல வரலாறு

முனைவர் தி. பெரியசாமி
பேராசிரியர்–தலைவர், தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம் 636 011

முன்னுரை



காலங்காலமாகப் பாமர மக்களின் உயிரோடும் உணர்வோடும் கலந்துள்ள நாட்டுப் புறவியலானது பல்வேறு கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மக்களின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் வடிவமாக மட்டுமன்றி, அவர்களுடைய அகப்புற இன்ப, துன்பங்களை எடுத்துரைப்பதாகவும் அமைகின்றது. பாடல்கள், நடனங்கள், கதைகள், விடுகதைகள், பழமொழிகள், மருத்துவ முறைகள் ஆகியவற்றைப் பல் வேறுபட்ட பண்பாட்டுப் பதிவுகளோடு பாதுகாத்து மண் சார்ந்த அறிவு நிலையை முன்னெடுத்து நிற்கும் அவற்றின் ஒருகூறாக அமைவதுகதைப்பாடலாகும். கதையைப் பாடலாகக் கூறுவதும் அல்லது பாடலில் கதையைப் பொதித்துப் பாடுவதும் இதன் முதன்மை இயல்புகளாகும். ஒரு நிகழ்வு அல்லது உபகதைகளைக் கொண்ட ஒரு கூட்டுக் கதைப்பாடலாகவும் அமைவது இதன் சிறப்பாகும். புராணம், இதிகாசம், தெய்வம், வரலாறு எனப் பாடுபொருள் தன்மைகளைக் கொண்டிருந்தாலும் மக்க ளின் வாய்மொழி வழக்காறுகளில் தனக்கென ஒரு இடத்தைத் தக்கவைத்தபடி, உயிர்ப்பு நிலையோடு வலம் வருகின்றது. அதன் அடிப்படையில், மேச்சேரி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் வாழ்ந்த மம்மட்டியானை மையமாக வைத்துக் கொலைச்சிந்து உருவாகியுள்ளதைத் துணைமை ஆதாரமாகக்கொண்டு அக்கொலைச்சிந்திற்கான பின்புல வரலாற்றையும் அதன் நாட்டுப்புற மரபுக்கூறுகளை யும் வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அய்யந்துரை மம்மட்டியானாக மாறிய வரலாறு

சேலம் மாவட்டத்திலுள்ள மேச்சேரியின் ஒருபகுதியாகக் கோல்காரனூர் அமைந்துள்ளது. இங்குப் பிறந்தவரே அய்யந்துரை. இவருடைய அப்பா மொட்டையக்கவுண்டர் என்கிற நல்லப்பன். பள்ளிப்படிப்பை பயிலாத, விவசாயத்தைக் குடும்பத் தொழிலாகக்கொண்ட இவர், பொருளாதாரத் தேவைக்காகச் சாலை செப்பனிடும் பணி யாளராகவும் இருந்துள்ளார். இப்பின்புலத்தோடு வாழ்ந்த மம்மட்டியான் குடும்பத்தாருக்கும் அவன் மாமன் முறை குடும்பத்தாருக்கும் காலங்காலமாகத் தீராத பகையுணர்வு இருந்துள்ளது என்பது இங்குச் சுட்டிக் காட் டத்தக்கது. இவருடைய மாமன் வீட்டாரை இன்றும் மம்மட்டியான் குடும்பத்தார் *வினையத்தான் வீட்டார்* என்று அழைப்பதே வழக்கம். அய்யந்துரையின் அண்ணி செம்பாயின் விவசாய நிலத்தில் வினையத்தான் வீட்டா ரைச் சார்ந்த பெண் மாட்டுக்குப் புல் பிடுங்கியபோது பிரச்சினை கருக்கொள்ளத் தொடங்குகிறது. மாட்டுக்குப் புல் பிடுங்கிய பெண்ணைச் செம்பாயி தாக்க பதிலுக்கு அடுத்தநாள் செம்பாயி பால் கறந்து கொண்டு போகும் வழியில் வினையத்தான் வீட்டாரைச் சார்ந்த ஐந்து பேர் தாக்கியது பிரச்சினை முற்றத் தொடக்கப் புள்ளி ஆயிற்று. இச்சம்பவம் நிகழ்ந்தபோது அய்யந்துரை சேலத்தில் அவரது மாமனார் ஊரான சீலநாயக்கன் பட்டியில் கம்பளி விற்கும் தொழில் செய்துவந்தார் என்று சொல்லப்படுகின்றது. அண்ணி செம்பாயி தாக்கப் பட்ட நிகழ்வினைத் தொடர்ந்து கோல்காரனூருக்கு அய்யந்துரை வந்து விவசாயத் தொழில் செய்துவந்தார். ஒருநாள் அப்பிரச்சினையின் தொடர்ச்சியாக, அய்யந்துரையின் அப்பாவான நல்லப்பன் விவசாய நிலத்தில் நடந்துகொண்டிருந்தபொழுது வினையத்தான் வீட்டார் அவரை அரிவாளால் தாக்கியது காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்காக மாறுகின்றது.

வேடமிட்ட நிகழ்வு வழியிலான பிரச்சினை

மேச்சேரி காளியம்மன், மாரியம்மன் பண்டிகையானது ஆடிமாத்தில் கொண்டாடப்படுவது வழக்கம். அத் திருவிழா நாட்களில் வேடமிடும் நிகழ்வு முக்கியதுவம் வாய்ந்தது. ஒவ்வோர்ம் ஆண்டும் அய்யந்துரையின் குடும்பத்தார் தமது சொந்த ஊரிலிருந்து கோயில்வரை வேடமிட்டு ஊர்வலமாகச் செல்வது வழக்கம். இப்போதும் மம்மட்டியான் குடும்பத்தைச் சார்ந்தோர் வேடமிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். அய்யந்துரையின் அப்பா நல்லப்பன், சித்தப்பா பொன்னுப்பையன், அவர் மகன் சின்னண்ணன், அண்ணன்கள் சேமன், குறட்டையன், தம்பி பழனி என்கிற ஊமையன் என அனைவரும் வேடமிட்டு ஆடிப் பாடிச் எறகொண்டப்பட்டியைக் கடந்தபோது, எதிர்த்தரப்பினர் அரிவாள், நாட்டுத்துப்பாக்கியால் தாக்கியதில்

ISSN 2320-4842

நல்லப்பன், பொன்னுப்பையன் சம்பவ இடத்திலே உயிரைவிட்டனர். எஞ்சியோர் காயங்களோடு தப்பினர். இச்சம்பவத்தால் பதியப்பட்ட வழக்கின் அடிப்படையில், எதிர்த்தரப்பைச் சார்ந்த மூவரில் இருவருக்கு இரண்டு ஆண்டு சிறைத்தண்டனையும் ஒருவருக்கு மூன்று ஆண்டு சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது. இந்த இடைப்பட்ட காலத்தில் மம்மட்டியான் குடும்பம் சற்று செல்வாக்குப் பெறத்தொடங்கியது. இந்நிலையில், சிறைத்தண்டனை அனுபவித்தவர்கள் வெளியில் வந்தனர். அவர்கள் விடுதலையான ஆண்டு 1959.

படம்: மம்மட்டியானின் பேரன் அய்யந்துரையின் வேடம்

மம்மட்டியானும் அவன் கூட்டாளிகளும் வினையத்தான் குடும்பத்தாரைப் பழிவாங்கச் சபதமேற்றுக் காத்திருந்தனர். ***தங்களுக்குச் சேர வேண்டியதைச் சேரவிடாமல் தடுக்கும் போதும் சூழ்ச்சி மூலம் தீய செயல்களைச் செய்து அது கண்டுபிடிக்கப்படும் போதும் அவமானம் மூலம், ஒன்றை அடைய முடியாத நிலை வரும் போதும் மக்கள் சபதம் செய்வது நடைமுறை வழக்கில் உள்ளது***[1] இரவில் மின்சாரம் அணைக்கப்பட்டிருந்த சமயம் பார்த்து மம்மட்டியானும் அவருடைய கூட்டாளிகளும் வேலாயுதம், சின்னக்குட்டி, முத்துசாமியார், வைத்தி, பச்சையண்ணன், சுப்பிரமணி, சுப்பிரமணியன், அய்யந்துரை உட்பட ஒன்பது பேரையும் அரிவாளால் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிர் போகவைத்தனர்.

தலைமறைவு வாழ்க்கை

கொலை நிகழ்ந்த பிறகு, அங்கிருந்த தப்பித்த மம்மட்டியான் மாதேஸ்வரன் மலைப்பகுதி, ஒகேனக்கல், தர்மபுரி, காவேரிப்பட்டிணம், ஒசூர், பொம்மிடி உள்ளிட்ட பகுதிகளில் தலைமறைவு வாழ்க்கையை வாழத் தொடங்கினான். அதில், சின்னண்ணன், சாமியண்ணனைக் காவல்துறையின் கைவசப்பட்டனர். ரத்தினவேலு, சுப்பிரமணியன், நல்லப்பன் ஆகிய மூவரும் சேலம் 2ஆம் எண் நீதிமன்றத்தில் சரணடைந்தனர். 1961-62இடைப்பட்ட பகுதியில் மம்மட்டியான் கொல்லப்பட்டான். மம்மட்டியான் இறப்பில் பல திரிபான தகவல்கள் வாய்வழியாகச் சொல்லப்பட்டுவருகிறது. முதலவதாகப் பெண்ணாகரம் அருகே ஏரியூரில் மம்மட்டியானுக்கும் கருப்பண்ணன் என்பவருக்கும் தொடர்பு ஏற்பட்டதாகவும் கருப்பண்ணன் அரசின் அறிவிப்பின்படி, கிடைக்கும் தொகைக்கு ஆசைப்பட்டுச் சோற்றில் நஞ்சு கலந்து அவரைக் கொன்றதாகவும் தகவல் உண்டு. இரண்டவதாகக் கருப்பண்ணன் மம்மட்டியானைக் காவல்துறையினருக்குக் காட்டிக் கொடுக்க அவர்கள் சுட்டுக்கொன்றதாகவும் தகவல் உண்டு. மூன்றவதாக, காவல் துறையினரே மம்மட்டியானைச் சுட்டுக்கொன்றனர் என்கிற தகவலும் உண்டு. அவர் இறந்துகிடந்த பாறை, சிகர அள்ளியில் இன்றும் உள்ளது. அப்பகுதி மக்கள் சிலர் அங்குப் பூசை செய்து வணங்கிவருகின்றனர். அவர் தலைமறைவாக வாழ்ந்த சமயம் வீரப்பனுக்கும் இவருக்கும் தொடர்பு ஏற்பட்டதாகவும் ஒருசிலர் கூறுகின்றனர். மம்மட்டியான் இறப்பு நிலையைப் பற்றிய கருத்தாக்கங்கள் கதை சொல்வோரின் நிலை, இடம் சார்ந்து இன்று வரை வேறுபட்டுத்தான் இருக்கிறது.

தொடக்கமுறை உத்திகள்

நாட்டுப்புறக் கதையாகட்டும், கதைப்பாடலாகட்டும் அதைப் பாடக்கூடிய ஆசிரியர் அதன் தொடக்கத்தில் நாட்டுப்புற இலக்கியதிற்கே உரிய சில உத்தி முறைகளைக் கையாண்டிருப்பார். பல கதைப்பாடல்களின் தொடக்கத்தைப் பொறுத்தமட்டில் இசைக் குறிப்புச் சொற்கள், கடவுளைப் பற்றிய வாழ்த்து, நாட்டுவளம், மங்கல நிகழ்வுகள் போன்றவை கையாளப்பட்டுள்ளன. மம்மட்டியான் கொலைச்சிந்தானது மகாபாரதப்போரை மையமிட்டுத் தொடங்கியிருப்பது கவனிக்கத்தக்கதாகும். இத்தகு பாங்கு பாரதப் போர் பற்றிய கதையாடல் வாய்மொழி மரபாக நாட்டுப்புற மக்களிடையே வழங்கப்பட்டுவந்துள்ள செல்வாக்கைப் புலப்படுத்துவதாகும்.

ஆதியிலே பாண்டவர்கள் பாரதப்போரு
காதிலே கேள் சேலம் ஜில்லா மேச்சேரி யூரு

படம்: தற்போது உள்ள மேச்சேரி மாரியம்மன் கோவில்

கந்தனும் தனியார் பத்திரிக்கைக்கு அளித்துள்ள தகவலின் அடிப்படையில், ஒன்பது பேரை வெட்டிக்கொன்ற மம்மட்டியான் சில மாதங்களுக்குப் பிறகு ஐந்து பேருடன் சிகர அள்;ளியின் வழியே வந்ததாகவும் அவருக்குப் பணம் முந்நூறு கொடுத்து உதவியதாகவும் சொல்கின்றனர். மேலும், சிகர அள்ளிக்கு அருகே வசித்து வந்த நல்லமாளுக்கும் மம்மட்டியானுக்கும் பழக்கம் ஏற்பட்டதாகச் சொல்;கின்றனர். அரசின் அறிவிப்பின்படி கிடைக்கும் தொகைக்காக நல்லமாளின் அண்ணன் கருப்பண்ணனால் மம்மட்டியான் சுடப்பட்டான். இந்த இறப்புச் செய்தியைக் கேட்ட நல்லமாள் அழுதாள் என்றும், பிறகு, அவளும் அவள் வீட்டாரும் ஒகேனக்கல் பகுதி பக்கம் சென்றுவிட்டதாகவும் சொல்கின்றனர். மம்மட்டியான் கொலைச்சிந்தை அடிப்படையாக வைத்துப் பார்க்கின்றபோது, நல்லமாள் என்ற பெண்ணைக் காதலித்தான் எனத் தெளிந்துகொள்ள முடிகிறது. நல்லமாளைத் தவிர, வேறு குறிப்பிடும்படியான பெண் நபர் அதில் இல்லையென்பது இங்குச் சுட்டத்தக்கது. எல்லா நாட்டுப்புறக் கதைகளையும் ஒட்டு மொத்தமாகப் படித்துப் பார்க்கும்போது சில பாத்திரங்கள் கதைகளுக்குத் திருப்பத்தையும் திறத்தையும் அளிக்கின்றன என்று புரிந்து கொள்ள முடிகிறது3

மம்மட்டியான் நல்லமாளிடம் தனது விருப்பத்தைச் சொல்லியதைக் கதைப்பாடல் பின்வருமாறு பதிவு செய்துள்ளது.

ரஞ்சித மாமயிலே கண்ணே இப்போ
கொஞ்சி விளையாட வாராய் பெண்ணே நீ
அஞ்சிடாதே காட்டுராஜா ஐயன்துரை மம்மட்டியானும்
நான் தான் எனக்குத் துணை நீதான்

மம்மட்டியான் விருப்பத்தைக்கேட்ட நல்லமாள் உங்களுடைய ஆசை அனைத்தையும் எங்கள் குடும்பத்தாரிடம் சொல்லுங்கள் என்றும் அவர்கள் அனுமதியுடன் தான் வருவதாகவும் சொல்லியதை,

அண்ணன் தம்பி தாய் தகப்பனுண்டு-நீங்கள்
அவர்களை நேரில் போய் கண்டு
உங்கள் ஆசையச் சொல்லிக் கேளு-அப்புறம்
அவர்களோட இஷ்டம் அல்லால் கஷ்டம் என்னும் வரிகள் உரைக்கின்றன.

நல்லமாள் குறித்து மம்மட்டியானின் பேரன் அய்யந்துரையிடம் கேட்டபோது, அதைப் பற்றிய முழுமையான தகவல்கள் தெரியவில்லை என்றும் மம்மட்டியானுக்கு இரண்டு மனைவிகள் உள்ளனர் அவர்கள் சின்னப்பிள்ளை, மந்தியம்மாள் என்று கூறினார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

மம்மட்டியான் கொலைச்சிந்து காட்டும் நம்பிக்கை

நாட்டுப்புறச் சமுதாயமானது பலவகைப் பண்பாட்டுக் கூறுகளை அடித்தளமாகக்கொண்டு வளர்ச்சியடைந்து வருகின்றது. அத்தகு சிறப்புப்பெற்ற நாட்டுப்புற மக்களின் பண்பாட்டுக் கூறுகளில் முக்கியத்துவம் வாய்ந்தது அவர்களது நம்பிக்கையாகும். நம்பிக்கையானது மக்களின் நன்மை, தீமை குறித்த எண்ணங்களை அடிப்படையாகக்கொண்டு கட்டமைக்கப்படுவதாகும். ***நம்பிக்கைகள் காலங்காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினர்க்குப் பரவி வருகின்றன. மனிதன் பிறப்புமுதல் இறப்புவரை பலவித நம்பிக்கைகளைக் கொண்டிருக்க காண்கிறோம்***[2] என்கிறார் சு. சக்திவேல்.

இறந்துபோனவர்களைத் தெய்வமாக நினைத்து வழிபடுகிற நம்பிக்கை நாட்டுப்புறம் சார்ந்த மக்களிடம் பெருவாரியாக இன்றுவரை இருந்துவருகிறது. இறந்துபோனவர் தெய்வமாக மாறித் தம்மைக் காத்து நிற்பர் என்பதன் அடிப்படையில், மம்மட்டியான் இறந்துபோய்ப் புதைக்கப்பட்டுள்ள தன் தம்பியின் சவக்குழிக்குச் சென்று பூமாலை, சந்தனம், பத்திவாடை போன்றவற்றைக்கொண்டு வணங்கினான்.

ஜாமத்தில் மம்மட்டியான் போய் தம்பி சவக்குழிக்கு
பூமாலை சந்தனம் பத்தி வாடை
கட்டி பெரியதாய் கட்டி வைத்தான் மேடை என்பதன் வழி அறியலாம்.

வேடுவனால்(எமன்) உயிர் பறிக்கப்படுவதை எவராலும் தடுக்க முடியாது என்பதை வலியுறுத்தியும் கதைப்பாடலடிகள் இடம்பெற்றுள்ளன. மனிதனாகப் பிறந்தவன் அன்பு, ஆசை, கோபம் பொதிந்த சூழலைக் கொண்டிருந்தாலும் அவனுடைய வாழ்வானது நிலையற்றது என்பதை வலியுறுத்துகின்றது.

கூடுவிட்டுக் கூடு பாய்ந்தாலும் மலைக்குகைக்குள் மறைந்து இருந்தாலும்
வேடுவன் வந்து அழைத்தால் அவனிடம்
வேறொன்றும் சொல்ல முடியாதப்பா

மம்மட்டியான் - நல்லமாள் பற்றிய கருத்தாக்கங்கள்

மம்மட்டியான், நல்லமாள் பற்றிய தொடர்பாடலைப் பார்க்கிறபோது சிகர அள்ளியில் மம்மட்டியானைப் பார்த்ததாகச் சொல்லுகின்ற கோவிந்த செட்டியும்,

மம்மட்டியான் கொலைச்சிந்தின் முடிவு

கதையைப் பாடுவோர் அதைக் கேட்போரின் வசதிக்கேற்பவும் அவர்களுடைய ஆர்வத்தினைத் தூண்டுவதற்கும் பல உத்திமுறைகளை உட்புகுத்திப்

பாடுவர். அந்த உத்திமுறைகளில் ஒன்றுதான் கதையின் முடிவும். கதையில் வரும் முக்கியக் கதைமாந்தர்களின் மகிழ்ச்சியான முடிவை வைத்தோ சோகமான முடிவை வைத்தோ முடிக்கப்பெறுவது வழக்கமாக இருக்கிறது. சில கதைப்பாடல்கள் மக்கள் நலன் சார்ந்த அறிவுரைகளை முன்வைப்பதாகவும், கதை பாடியவர் இறைவன் அருள் வேண்டி நிறைவு செய்வதாகவும் அமைகின்றன. ***தமிழ்நாட்டுப் பாடல்களில் தலைவர்கள் அல்லது தலைவிகள் கதை முடிவில் சாகிறார்கள். நூற்றுக்குத் தொண்ணூறு கதைகளின் முடிவு, சோக முடிவாகவே இருக்கின்றன***[4] என டாக்டர் நா. வானமாமலை, தமிழ்நாட்டுக் கதைப்பாடல்களில் சோக முடிவு எனும் கட்டுரையில் குறிப்பிடுகின்றார். அத்தகு உத்தி முறைகளின் அடிப்படையில் மம்மட்டியான் கொலைச்சிந்தினை அணுகுமிடத்தில், மம்மட்டியான் இறப்புச் செய்தியோடு தொடருகின்ற கதையின் முடிவானது குரு வணக்கத்தோடு முடித்திருப்பதை அறிய முடிகின்றது. மேலும், கதைப்பாடலின் உண்மைத்தன்மைக்காக மாலைமுரசையும் தந்தியையும் போலீஸ் அறிக்கையும் பார்க்கவும் எனக் குறிப்பிட்டு, அதுமட்டுமல்லாமல் கொலைச்சிந்தினை டி. எம். திருமலைசாமிதாஸ் இயற்றிய தகவலும் அதனைப் பதிப்பித்தது பாட்டுக்காரர் கே. கிருட்டிணசாமி என்பதும் புலனாகின்றன.

சேலம் மாவட்டம் திருப்பளிப்பட்டி கிருட்டிணன் சிங்காரடேப்
இசைப்பாடல்பாடி நாலா திசையிலும் பேர்விளங்க குரு நல்லாசித் தந்தார் வணக்கமையா என முடிவு பெற்றுள்ளது.

மம்மட்டியானின் இறுதிச் சடங்கு குறித்து விசாரித்த போது, அவருடைய பேரன் அய்யந்துரை கூறியது: ***மம்மட்டியான் எறந்துகிடந்த போது எங்க குடும்பத்த சாந்த எவரும் பாக்கப்போகல, அப்போ, எங்க அப்பா சின்ன வயசு பையனா சீலநாயக்கன்பட்டியில இருந்தாரு, மூணு வருசம் முன்னாடி 2020லதான் எங்க அப்பாவும் நானும் மம்மட்டியானுக்கு ராமேஸ்வரம் போயி திதி கொடுத்து வந்தோம்.***[5]

இறந்த நிலையில் மம்மட்டியானின் புகைப்படம்

முடிவுரை

மக்கள் இலக்கியமாகப் போற்றப்படுகின்ற நாட்டுப்புற இலக்கியமானது காலத்திற்கேற்ற பல்வேறு வளர்ச்சி நிலைகளை எட்டியுள்ளன. பாமர மக்களின் பல்வேறு உணர்வுகளையும் அவர்களது வாழ்வியல் சார்ந்த பரந்துபட்ட நிலைகளையும் எடுத்துரைக்கும் அதன் பண்புநிலைகளை இன்னும் வளர்ச்சி சார்ந்த ஆய்வு நிலைக்கு உட்புகுத்தும் காலத்தேவையில் நாம் இருக்கின்றோம். அதனடிப்படையில், மேச்சேரி மற்றும் அதன் சுற்று வட்டராப் பகுதிகளில் மம்மட்டியான் பற்றிய கதையானது, மக்களின் வாய்மொழி வழக்காறுகளில் இன்றுவரை சொல்லப்படுபவரின் நிலைக்கேற்ப, பல்வேறு திரிபுகளுக்கு உட்பட்டு உலவி வருகின்றது. அதன் கதையாடலை வெளிப்படுத்துவதன் நோக்கில், அய்யந்துரை எனும் சாதாரண மனிதன் மம்மட்டியானாக மாறிய நிகழ்வுக்குத் துணைபோகிய சூழலமைவையும் அதைக் கருத்துருவாக்கமாக வெளிப்படுத்தும் பொருட்டு அமைந்துள்ள இக்கட்டுரையில், மம்மட்டியான் கொலைச்சிந்தில் காணலாகும் நாட்டுப்புற மரபுகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

துணைநின்ற நூல்கள்

1. டாக்டர் பெ. சசிகலா, கதைப்பாடல்களில் தமிழரின் பண்பாட்டுப் பதிவுகள், காவ்யா வெளியீடு, பக்கம் - 238

2. டாக்டர் சு. சக்திவேல்., நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், பக்கம் - 189

3. சு. சண்முகசுந்தரம்., நாட்டுப்புற இயல், காவ்யா வெளியீடு, பக்கம் - 181

4. தே. லூர்து (பதிப்பாசிரியர்), நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், முல்லை நிலையம், பக்கம் - 95

5. தகவலாளர் ந. அய்யந்துரை(மம்மட்டியானின் பேரன்), கோல்காரனூர்

Shadows on the wall
Noises down the hall
Life doesn't frighten me at all

Bad dogs barking loud
Big ghosts in a cloud
Life doesn't frighten me at all

- Maya Angelou

Go placidly amid the noise and haste, and
remember what peace there may be in silence.
As far as possible, without surrender, be on
good terms with all persons.
Speak your truth quietly and clearly; and listen
to others,
even to the dull and ignorant; they too have
their story.

- Max Ehrmann

ISSN 2320-4842

மாத்தளை சோமுவின் திருக்குறள் உரைத்திறன்

முனைவர் சு . ஜெயசீலா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை(CDOE)
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி

முனைவர் இரா. ஜெய்சங்கர்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (CDOE)
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி

முன்னுரை

திருக்குறள், உலகப்பொதுநூல் என உலகப் பேரறிஞர்களால் ஒருமனதாகப் பாராட்டப்பெறும் அருமையும் பெருமையும் உடையதாகும். வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றபடி கடல்கோளுக்கும் படையெடுப்பிற்கும் தப்பி, இன்றும் பழமையைப் பாதுகாத்து நிற்பன தொல்காப்பியமும் திருக்குறளும் என்பதை அனைவரும் ஒத்துக்கொள்வர்.

திருக்குறளுக்கு உரை கண்டவர்கள் பலர். அவர்கள் கண்டுரைத்த பொருள்களோ பலப்பல. அவ்வுரையில் அவரவர்கள் விருப்பு வெறுப்புகளைக் கலக்காமல் விட்டதில்லை. சிலர் சமணச் சார்பில் உரை கண்டனர்; சிலர் பௌத்தச் சார்பில் உரை கண்டனர்; சிலர் வைதிகச் சார்பில் உரை கண்டனர்; சிலர் பகுத்தறிவு இயக்கச் சார்பில் உரை கண்டனர்; சிலர் இயற்கை நெறிச் சார்பில் உரைகண்டனர். இந்த உரைகளால் சில தெளிவுகளும் சில குழப்பங்களும் உருவாகியுள்ளன என்பது நிதர்சனமான உண்மையாகும்.

திருவள்ளுவர் சாதி, சமயம், மொழி, இனம், நாடு என்ற எல்லை கடந்து உலகம் எனும் உயர்ந்த நோக்கில் தம் நூலைப் படைத்தவர். இந்நூலுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட உரைகள் எழுதப்பட்டிருப்பினும் மாத்தளை சோமுவின் திருக்குறள் உரை அறிவியல் நோக்கில் எழுதப்படட ஒரு முன்னோடியான உரையாகும். இவர் எழுதிய திருக்குறள் உரையில் உள்ள சிறப்புக்கூறுகளை ஆராய்வதற்கு முன்பு,

உரையாசியரைப் பற்றி…

மாத்தளை சோமுவின் மூதாதையர் நாடு தமிழகம்; பிறந்த தேசம் இலங்கை; வாழும் நாடு ஆஸ்திரேலியா. புலம் பெயர்ந்து வாழும் இவர் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா, பிரிட்டன், ஆஸ்திரே லியா ஆகிய நாடுகளின் தமிழ் வளர, அங்குள்ள முன்னணி இதழ்களில் சிறுகதை, கவிதை, கட்டுரை எனப் பலவற்றை எழுதிப் பெயர் பதித்தவர். இவர் நான்கு சிறுகதைத் தொகுதிகள், நான்கு நாவல்கள், ஒரு குறு நாவல், மூன்று பயணக் கட்டுரைகள், இரண்டு குட்டிக்கதைகள் எழுதியுள்ளார். *அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்* என்ற நாவல் இலங்கை அரசின் சாகித்திய விருதையும், *எல்லை தாண்டா அகதிகள்* (1994), *மூலஸ்தானம்* (1998) ஆகிய நாவல்கள் இலங்கை சுதந்திர இலக்கியச் சங்கத் தின் சிறந்த நாவலுக்குரிய விருதுகளையும் பெற்றுள்ளன.

மலேசியாவில் நன்கு அறிமுகமான இவர், மலேசியத் தமிழ்ப் படைப்புகளை அறிமுகம் செய்வதில் ஈடுபாடு கொண்டவர். மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளைத் தொகுத்துத் தமிழிலும், அவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும் வெளியிட்டுள்ளார். ஐரோப்பிய நாடுகளுக்கும், கனடாவுக்கும் பல முறை இலக்கியப் பயணம் மேற்கொண்ட இவருக்குக் கனடா நாட்டில் உதயன் பத்திரிகை எழுத்தாளருக்கான தங்கப்பதக்க விருதை (2000) வழங்கிச் சிறப்புச் செய்துள்ளது.

ஒழுக்கம் தவறாமை

மறப்பினும் ஒத்துக்கொளல் ஆகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும் (குறள்.134)

இக்குறளுக்குப் பலரும் பலவாறு உரை எழுதியுள்ளனர். அனைவரின் ஒட்டுமொத்தக் கருத்து பார்ப்பான் தான் கற்ற வேதத்தை மறந்து போனாலும் மீண்டும் அதனைக் கற்றுக்கொள்ளலாம். ஆனால், ஒரு மனித னின் பிறப்புக்குச் சிறப்புச் சேர்க்கும் ஒழுக்கத்திலிருந்து அந்தப் பார்ப்பான் தவறினால் அவன் குடிப்பிறப்பு அழிந்து போகும் என்பதாகும்.

மாத்தளை சோமு இக்குறளுக்கு விளக்கம் அளிக்கும்போது, கற்ற வேதத்தை மறந்தாலும் அதனை மீண்டும் கற்றுக்கொள்ளலாம். ஆனால் ஒழுக்கத்தில் தவறினால் அவனும் இழிந்த குலத்தவனாகிவிடுவான். இதுதான்

அந்தத் திருக்குறளின் மறைபொருள் என்றும், எனவே திருவள்ளுவர் சாதியின் அடிப்படையில் பார்ப்பான் (பிராமணன்) உயர்ந்தவன் என்பதை ஒப்புக்கொள்ள வில்லை. ஒருவனின் உயர்குடி என்பது ஒழுக்கத்தை வைத்துக் கணிக்கப்படும் என்றார். அவர் அவ்வாறு கூறியதற்கு வடபுலத்தின் மனுதர்ம சாத்திரத்தில் எழுதி யவையே காரணமாகும் என்கிறார்.

மனுதர்மத்தில் பிராமணன் முதல் வருணத்தான் என் றும், பிராமணன் சூத்திரனுடைய பொருளை அவன் விருப்பப்படிக் கொள்ளையிடலாம் என்றும் சொல்லப் பட்டதைத் திருவள்ளுவர் ஏற்கவில்லை. உயர்வான சாதியென்று சொல்லிக்கொண்டு ஒழுக்கக் கேடாய் நடப்பதைத்திருவள்ளுவர் நியாயப்படுத்தவும் இல்லை. ஒருவனின் ஒழுக்கமே பிறப்பின் உயர்வு தாழ்வைத் தீர்மானிக்கும் என்று மனுவிற்கு மறுப்புக்குரல் கொடுக் கிறார். பிராமணன் பிறப்பால் உயர்வானவன் அல்லன், ஒழுக்கமே அவனுக்கான அளவுகோல் என்பதே வள்ளுவரின் உறுதியான குரலாக இருந்திருப்பதை உரையாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தோன்றின் புகழொடு தோன்றுக

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று (குறள்.236)

உரைவேறுபாடுகள் கொண்ட குறள்களுள் இது முக்கி யத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இக்குறளுக்கு, மக்க ளாய்ப் பிறக்கின் புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க; அக்குணம் இல்லாதவர் மக்களாய்ப் பிறத்த லின் விலங்காய்ப் பிறத்தல் நன்று என்கிறார் பரிமே லழகர். அவர் உரையைத் தழுவிப் பலர் உரை எழுதி யுள்ளனர். சான்றாக, பரிமேலழகரைத் தழுவி உரை கண்ட மீ.கந்தசாமிப்புலவர் விலங்குகள் என்பதற்குப் பதிலாக விலங்கு, பறவைகளாக எனப் பொருள் தந் துள்ளார்.

மக்களாய்ப் பிறந்தவர் புகழுடன் வாழ வேண்டும் (சாமி. சிதம்பரனார், 1959); ஓர் இடத்திற்குச் சென்றால் பலரும் புகழும்படியான தன்மையில் செல்லுதல் வேண்டும் (மயிலை சிவமுத்து, 1952).

தோன்றுக என்பதற்குப் பிறக்க வேண்டும் எனப் பொருள் கொள்ளும் போக்கிலிருந்து வேறுபட்டு *விளங்க வேண்டும்* என்னும் பொருளை முன் வைத் துப் பேராசிரியர் கா.சு.பிள்ளை (1920) பொருள் காண்பதாகவும், மணக்குடவர் உரைக் குறிப்பில் இது *புகழ்பட வாழ வேண்டும்* என்று குறிப்பிடப்படுவதை யும் கு.மோகனராசு தன் நூலில் (ப.56) குறிப்பிட் டுள்ளார். மேலும் இக்குறளுக்கு,

பரந்த இவ்வுலகில் பிறந்தால் புகழ் உண்டாகும்படி வாழ வேண்டும் - சி.மா. பாலதண்டாயுதம் (1993) எனப் பொருள் கொள்கிறார். இதில் மணக்குடவர் உரையின் தாக்கம் இருப்பதைக் காண முடிகிறது. ***மாந்தர் தாம் தோன்றுகிற இடங்களிலெல்லாம் பெயரோடும் புகழோ டும் விளங்க வேண்டும்*** என்கிறார் ச.வே. சுப்பிரமணி யம் (2001).

தோன்றுதல் என்பதற்கு ஒரு செயலில் ஈடுபடுதல் என்னும் பொருளாக்கத்திற்கு வித்திட்டவர் நாமக்கல் வே.இராமலிங்கம்பிள்ளை ஆவார். இவரின் உரைக் கருத்தை அடியொற்றி இக்குறளுக்கு மாத்தளை சோமுவின் உரைக்கருத்தும் அமைகிறது. அதாவது தோன்றின் புகழோடு தோன்றுக என்பது மக்களாய்ப் பிறந்தால் புகழத்தக்க வகையில் பிறத்தல் வேண்டும் என்று பலர் எழுதியுள்ள உரை அறிவியல் ரீதியில் ஏற்க இயலாது என்றும், பிறக்கும்போது எவரும் ஞானியாகவோ, அறிஞனாகவோ, தலைவனாகவோ பிறப்பதில்லை. இயேசுநாதர், நபிபெருமான், வள்ளு வர், புத்தர் போன்றவர்களுக்கெல்லாம் பிறக்கின்ற போது எந்தப்புகழும் இருக்கவில்லை. அவர்களின் செயல்களினால் புகழ் தோன்றியது. எனவே ஒரு செயலில் ஒருவர் ஈடுபட்டால் அச்செயலுக்கும் தமக் கும் புகழ் உண்டாகுமாறு நிலைகொள்ள வேண்டும். அது இயலாதவர் அச்செயலில் நிலை கொள்வதை விட நிலை கொள்ளாததே நன்று என உரை யாத் துள்ளது சிறப்புடையதாக அமைந்துள்ளது.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (குறள்.972)

இக்குறள் இருவகைக் கருத்துகளை உள்ளடக்கியதாக அமைகின்றது. பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் என்பது ஒரு கருத்து. சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான் என்பது பிறிதொரு கருத்து. இவ்விரு கருத்தாக்கங்களுக்கும் பொருள் காண்பதில் உரையா சிரியர்கள் பெரிதும் வேறுபட்டுள்ளனர்.

இக்குறளில் வரும் *எல்லா உயிர்க்கும்* எனும் தொடர் ஓரறிவுமுதல் ஆறறிவுவரை உள்ள எல்லா உயிர்களை யும் சுட்டுகின்றதா? மக்கள் உயிர்களைச் சுட்டுகின் றதா? என்பது ஆராயத்தக்க ஒன்றாகும்.

இக்குறளில், அடுத்து வரும் *சிறப்பு ஒவ்வா செய் தொழில் வேற்றுமையான்* என்னும் தொடரில் செய் தொழில் என்பது மக்கள் சார்ந்த கருத்தாக்கம் உடை யதாக அமைகிறது. எனவே திருவள்ளுவர் எல்லா உயிர்க்கும் என்னும் தொடரை மக்களைச் சுட்டும் தொடராகப் பயன்படுத்தியுள்ளார் என்பது கருத்தில் கொள்ளத்தக்க ஒன்றாகும்.

எனவே,பிறப்பிற்கான கருவாக்கம், உறுப்புகள் போன்ற வற்றின் உருவாக்கம், பிறக்கும் முறை, பிறந்த பிறப் பிற்கான மதிப்பு, வளர்ச்சி ஆகிய அனைத்தும் எல்லா மக்களுக்கும் ஒத்தே அமைகின்றன. இவற்றில் மாறு பாடு இல்லை. இவற்றில் வெவ்வேறு வருணத்திற்கு வெவ்வேறுபிறப்பு இயல்புகள் என்று இல்லை, மக்கள் பிறப்பிற்கான பிறப்பு இயல்புகள் அனைத்தும் ஒத்தே அமைகின்றன. அதனால்தான் திருவள்ளுவர், ***பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்*** என்றார். ஒக்கும் என்னும் சொல், இங்கு எண்ணிப் பார்க்கத்தக்க வகையில் அமைகிறது.

அறிவியல் அடிப்படையிலும் ஆன்மீக அடிப்படையிலும் பிறப்பு சில வேறுபாடுகளைப் பெற்றிருப்பதைக் காண முடிகிறது. அதனால்தான் திருவள்ளுவர் ஒன்றும் எனக் கூறாமல், ஒக்கும் எனக் கூறுகின்றார். ஒக்கும் என்றால் பெரிதும் ஒன்றி அமையும் அல்லது ஒத்து அமையும் என்னும் பொருள் கொண்டதாக அமைகின்றது.

இரண்டு வகைக் கொள்கைகளை உள்ளடக்கியதாக இக்குறள் அமைகின்றது. முதற்கொள்கை சமுதாயச் சமன்மையைப் (Social Equality) பேசுகிறது. பிறப்பால் ஏற்றத்தாழ்வுகளைக்கற்பித்துப் போற்றுவது தகாது. அடுத்து, பொருளியல் சமன்மையைக் (Economic - Equality) கூறுகிறது. ஒருவனுடைய செய்தொழில் காரணமாக ஏற்றத்தாழ்வுகளைக் காட்டும் வகையில் சிறப்பைத் தருவது தகாது (கு.ச.ஆனந்தன், 1986).

தொழிலில் கேவலம் பார்க்கும் நாடு, பகைவர்கள் அழிக்காமலே அழிந்து போய்விடும் என்பது சமூகவியல் கூற்று. ஆகவே செய்கிற தொழிலின் சிறப்பைப் பார்த்துப் புகழுங்கள்; பெருமைப்படுத்துங்கள். செய்கிற தொழிலையே இழித்தும் பழித்தும் பேசாதீர்கள்; தொழிலை வைத்து மக்களைப் பிரிக்காதீர்கள்; அழிக்காதீர்கள் என்று பிரஞ்சுப் புரட்சி செய்த சீரமைப்புப்போல இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சமதர்மச் சமுதாயம் காண விழைந்தார் வள்ளுவப் பெருமகனார் என்பதைச் (கு.மோகனராசு, ப.94) சுட்டிக் காட்டியுள்ளார்.

மேற்கண்ட கருத்தை அடியொற்றியே மாத்தளை சோமுவின் உரைவளமும் அமைகின்றது.

இக்குறளின் வாயிலாக வடபுலத்தில் ஓங்கி ஒலித்த மனுதர்மம், பகவத்கீதை, கௌடில்யம் போன்ற வடநூல்களில் மனிதரின் பிறப்பில் இருக்கிறதாகச் சொல்லப்பட்ட உயர்வு தாழ்வுக்கு எதிராக ஒரு மானுடம் தோய்ந்த நீதிக்கான குரலைத் திருவள்ளுவர் முன்வைப்பதாகவும், மனுதர்மம் மனிதர்களைப் பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என நான்காகப் பிறப்பால் பிரிக்கிறது. பிறப்பால் உயர்வு தாழ்வு வேறுபாடுகள் இருப்பதை வலியுறுத்துகிறது. ஆக வடபுல மனுதர்மம் உட்பட நூல்கள் எல்லாம் (பகவத்கீதை) மனிதரின் பிறப்புகளிலே பிரிவுகள் வேறுபாடு உண்டு என்பதைத் தீவிரமாக அழுத்தமாக வலியுறுத்துகின்றன. இவைபோலவே மேலை தேச அறிஞர் பிளேட்டோ (Plato) மக்களை, ஆள்வோர் (Rulers), காவலர் (Guardian), பிரபு (Artisans) ஆகிய மூன்று பிரிவாகப் பிரித்துக் காட்டுகிறார். ஆனால் திருவள்ளுவர் மானுட நீதித்தளத்தில் நின்று மனிதர்கள் பிறப்பால் ஒருவரே; பிறப்பால் உயர்வு தாழ்வுகள் இல்லையென்று ஓங்கி ஒலித்த குரலின் அடையாளமே இக்குறளாகும் என்பதை மாத்தளை சோமு சுட்டுகிறார்.

உலகம் உருண்டையானது

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை (குறள்.1031)

இக்குறளில் ஓர் அறிவியல் உண்மை இருக்கிறது என்பதை மாத்தளை சோமு சுட்டிக்காட்டி விவரித்துள்ளார். சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் என்றால் ஏர்த்தொழிலின் பின்னே சுற்றும் உலகம் என அறியப்படுகிறது. சுற்றும் உலகம், உலகம் சுற்றுவதனால் அதன் வடிவம் உருண்டையாக இருக்க வேண்டும். இக்குறளின் அறிவியல்படி உலகம் உருண்டை வடிவமே. ஆனால் உலக வரலாற்றில் உலகம் தட்டையானது என 15ஆம் நூற்றாண்டுவரை மேலை நாட்டினர் நம்பி வந்தார்கள்.

கி.பி.1440இல் போலந்து நாட்டு அறிஞர் நிக்கோலஸ் கிரப்ஸ் என்பவர் உலகம் தட்டை அல்ல என்றார். அதனை எவரும் நம்பவில்லை. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கலிலியோ என்ற ஞானி உலகம் உருண்டை என விளக்கினார். அதன் பிறகே உலகம் உருண்டை என மக்கள் நம்பினர். ஆனால் தமிழர் மரபில் திருவள்ளுவரும், சங்ககால இலக்கியங்களும் 15ஆம் நூற்றாண்டிற்கு முன்பே உலகம் உருண்டை எனத் தெளிவாகக் கூறியுள்ளனர். இக்குறளில் உலகம் பற்றிய ஓர் அறிவியலும் உழவு பற்றிய அறிவியலும் பொதிந்துள்ளதை மாத்தளை சோமு சிறப்பாக விளக்கியுள்ளார்.

திருமால் - வாமன அவதாரம்

மடிஇலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு (குறள்.610)

இக்குறளில் வரும் *அடியளந்தான்* என்பதற்குப் பரிமேலழகர் முதற்கொண்டு பல அறிஞர்களும், திருமால் வாமன அவதாரத்தில் மூவுலகத்தையும் மூன்றடியில் அளந்தான் என்ற கதையைப் பொருத்திப் பொருள் கண்டுள்ளனர். ஆனால் வள்ளுவர் சொன்ன கருத்தை ஆழமாக ஊன்றிப் பார்த்தால் அடியளந்தான் என்பது கற்பனை என்பது புரியும். வாமன அவதாரத்தைவிட மண்ணில் வாழும் மனிதனை (மன்னனை) வள்ளுவர் உயர்த்துவது புரியும். அடியளந்து நிலப்பரப்பைப் பெற்ற வாமனனைவிடச் சோம்பல் இல்லாத மன்னன் நிலம் பெறுவான் என்பதே திருவள்ளுவரின் கருத்து என்பதை மாத்தளை சோமு பதிவுசெய்துள்ளார். மேலும் சோம்பலை முறித்த மனிதன்தான் சந்திர மண்டலத்தையும் தாண்டிச் செவ்வாய் மண்டலத்திற்கும் போக முனைகிறான். சோம்பலை முறிப்பவனே வெற்றியின் குறிக்கோளை அடைவான். சோம்பல் இல்லாத மனிதனின் குடும்பம் சுதந்திரத்தைச் சுவாசிக்கும், சோம்பல் இல்லாத மக்களைக் கொண்ட நாடு சோதனையிலும் வெல்லும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

வானம் தொடும் தொலைவில்தான்

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து (குறள்.353)

இக்குறளுக்கு உரை கண்டுள்ள மாத்தளை சோமு சந்தேகங்களிலிருந்து நீங்கி, உண்மை அறிவாளராக

இருக்கிற அறிவியலாருக்குப் பக்கத்திலுள்ள பொருள் மட்டுமல்ல, தொலைவிலுள்ள பொருளையும் கண்டறிய முடியும் எனக் கூறியுள்ளார். இன்றைய விஞ்ஞானிகள் கருவிகளின் துணையோடு செவ்வாய்க் கோளுக்கு விண்கலம் அனுப்பிச் செவ்வாய் சிவந்த கிரகம், அதன் மண் சிவப்பாக இருக்கிறது என்கிறார்கள். ஆனால் இதே கருத்தைக் கருவிகள் இல்லாமல், விண்கலம் ஏவாமல் (செவ்வாய் சிவந்த கிரகம் என்று) பழந்தமிழ் இலக்கியங்களில் கூறியுள்ளனர். செவ்வாய்க்குத் தமிழர் இட்ட பெயரே சிவந்த கிரகம். செவ் என்றால் சிவப்பு எனப் பொருள். ஆங்கிலேயர் அதற்கு இட்ட பெயர் MARS. தற்போது செவ்வாய்க்கு விண்கலம் போய் வந்த பிறகு சொல்வது RED PLANET. தமிழரோ செவ்வாய்க்குப் போய் வராமலே சொன்னது செவ்வாய் - சிவந்த கிரகம்.

மேலும் மண்ணிலிருந்து கொண்டே பூமி, சூரியன், சந்திரன் இதரக் கோள்கள் பற்றியெல்லாம் இன்றைய அறிவியல் ஏற்றுக்கொள்கிற உண்மைக் கருத்துகளை சங்க இலக்கியங்கள் (புறநானூறு, பரிபாடல்) கூறியுள்ளன. இவை எவ்வாறு என்று கேட்கலாம்? இந்தக் குறளைப் புரிந்துகொண்டால் அது சாத்தியம் என்பதே உண்மை. சந்தேகங்கள் நீங்கிய மெய்யான அறிவால் மண்ணிலிருந்து கொண்டே விண்வெளியைப் பற்றிச் சொல்ல முடியும். இன்றைய விஞ்ஞானமும் அதனையே உறுதி செய்கிறது என்பதை மாத்தளை சோமு சிறப்பாக விவரித்துள்ளார்.

சிறந்த மக்களைப் பெறுதல்

மனம்தூயார்க் கெச்சம்நன் றாகும் இனந்தூயார்க்கு
இல்லைநன் றாகா வினை (குறள்.456)

இக்குறளின் பொதுவான பொருள் வருமாறு: உள்ளம் தூய்மையானவர்களுக்கு அவர்களின் அடுத்த தலைமுறையை அடையாளப்படுத்தும் மக்கள் (மகள், மகன்) நல்லவர்களாக அமையப்பெறுவர். இனம் தூய்மை உடையார்க்கு அவர்களால் அமையப்பெறும் செயல் எல்லாம் நன்மை தராத செயலாக எப்போதும் அமையாது.

மாத்தளை சோமு இக்குறளுக்கு விளக்கம் அளிக்கும்போது, இந்தக் குறளில் எச்சம் என்பது மக்கள் செல்வத்தைக் குறிப்பதே ஆகும். இந்த மக்கள் செல்வம் சிறந்ததாக அமைய உள்ளத் தூய்மை மிக முக்கியம். இன்றைய விஞ்ஞானத்தின்படி பெற்றோரின் இயல்பு பிறக்கிற குழந்தையிலே அமைகிறது. தாய் தந்தையரின் குணங்கள், உறவின்போது உள்ளத்திலே ஏற்படும் எண்ணங்கள் யாவும் உருவாகும் கருவிலே பதிகின்றன. பெற்றோரின் உடற்கூறு பலவீனங்கள் குழந்தைகளைப் பாதிக்கின்றன. இவற்றை இன்றைய மரபணு ஆய்வு உறுதி செய்கிறது. ஆகவேதான் உள்ளத் தூய்மையே நல்ல பிள்ளைச் செல்வங்களை உருவாக்கும் என ஓர் உயிரியல் நுட்ப விஞ்ஞானிபோல் திருவள்ளுவர் கூறியுள்ளார் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

கவரிமா

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின் (குறள்.969)

இக்குறள் அனைவருக்கும் தெரிந்த, கருத்து நுட்பம் கொண்ட குறளாகும். குறளின் பொதுவான கருத்து மயிர் நீங்கினால் உயிர் வாழாத கவரிமா என்னும் விலங்கினைப் போன்றவர் தமக்கு மானக்கேடு வந்தால் தம் உயிரையே விட்டுவிடுவர். இக்குறளுக்கு மாத்தளை சோமு விளக்கம் வருமாறு:

கவரிமா என்பது பனிபடர்ந்த இமயமலைப் பகுதியில் வாழ்ந்துவரும் விலங்கு. அதன் உடல் முழுவதும் குளிர் தாங்க அடர்த்தியான மயிர்த்தோகை உண்டு. அம் மயிர்த்தோகை நீங்கப் பெறுமானால் குளிரைத் தாங்க முடியாமல் (கவரிமா) இறக்கும் என்பதையே இக்குறளில் உவமையாக்கியிருக்கிறார் திருவள்ளுவர்.

நரந்தை நறும்புல் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனை பருகிஅயல
தகரத் தண்ணிழல் பிணையொடு வதியும்
வடதிசை அதுவே வான்தோய் இமயம் (புறம்.132)

எனப் பழந்தமிழ் இலக்கியங்களில் கவரிமா பற்றிக் குறிப்புகள் உண்டு. இவ்விலங்கு நரந்தைப் புல்லை மேய்ந்து உண்ணும்; குவளை மலர் பூத்திருக்கும் அழகிய சுனைகளிலுள்ள நீரைப் பருகிப் பக்கத்திலுள்ள தகர மர நிழலில் தன் துணையோடு மகிழ்ந்திருக்கும். மேலும் கவரிமா இமயமலைப் பகுதியில் இருப்பதைப் பதிற்றுப்பத்து வாயிலாக அறியலாம். ஆகவே கவரிமா என்பது இமயமலையில் வாழ்கிற ஒரு விலங்கு என்பது உண்மையாகிறது. இதே கருத்து அகராதியிலும் இடம்பெறுகிறது. இக்கவரிமாவைத்தான் வள்ளுவர் தம் குறளில் பயன்படுத்தியிருக்கிறார் என்பதை மாத்தளை சோமு விவரிக்கிறார்.

பாம்பு நிலவை விழுங்கியது

கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று (குறள்.1146)

இக்குறளுக்கு டாக்டர் மு.வ.வின் கருத்து வருமாறு: காதலரைக் கண்டது ஒரு நாள்தான். அதனால் உண்டாகிய அலரோ, திங்களைப் பாம்பு கொண்ட செய்தி போல் எங்கும் பரந்துவிட்டது.

இக்குறளுக்கு மாத்தளை சோமுவின் கருத்தாவது: திருவள்ளுவர் சந்திரகிரகணத்தை அறிவியல் பூர்வமாகப் புரிந்தே இந்தக் குறளை எழுதியுள்ளார் என்றும், காதலர்கள் சந்தித்தது ஒரே ஒருநாள். ஆனால் ஊரார் அவர்கள் பலநாள் சந்தித்ததுபோல் பொய் புனைந்த பழிச்சொல் பரப்பினர். அந்தப் பொய்யைத் திங்களைப் பாம்பு விழுங்கியதற்கு ஒப்பாக்கியுள்ளார் வள்ளுவர். அதன் மூலம் பாம்பு நிலவை விழுங்குவது பொய் என்னும் அறிவியல் கருத்து சங்ககால இலக்கிய மரபாகும் என்பதை இவ்வுரையாசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார்.

குறளில் மருத்துவம்

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று (குறள்.941)
மருத்துவ நூலோர் வாதம், பித்தம், சிலேத்துமம் என எண்ணிய மூன்றும் அளவு மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும் - மு.வரதராசனார்.

இக்குறளுக்கு மாத்தளை சோமுவின் கருத்தாவது: மருத்துவ நூல்கள் இயற்றியவர்கள் கூறுகிற காற்று, சூடு, நீர் ஆகிய மூன்றும் ஒரு மனிதரது உடலில் அளவுக்கு மிகுந்தாலும் குறைந்தாலும் நோயை உண் டாக்கும்.

வள்ளுவர் கூறிய காற்று, சூடு, நீர் ஆகிய மூன்றும் இன்றைய ஆங்கில மருத்துவத்திலும் முக்கியமாக உள்ளன. நோயுற்ற ஒருவனை ஆங்கில மருத்துவம் படித்த மருத்துவர்கள் பரிசோதிக்கும்போது நோயாளி யின் உடல் சூடு, மூச்சுவிடும் முறை, வெளியாகும் சிறுநீரின் தன்மை ஆகியவற்றைக் கண்டே மருந்து தருகின்றனர். இவ்வாறு பார்ப்பதே மருத்துவத்தின் அடிப்படையாக இருக்கிறது. இதற்கான கருவிகளும் இன்றைக்கு இருக்கின்றன. உடலில் ஏற்படுகிற எல்லா நோய்களுக்கும் காற்று, சூடு, நீர் ஆகிய மூன்றே அடிப்படைக் காரணமாக இருக்கின்றன. இம்மூன்றும் அதிகமானாலும் குறைந்தாலும் நோய்தான் என்பதை விரிவாக விவரித்துள்ளார் மாத்தளை சோமு.

முடிவுரை

தமிழ் இனத்தின் ஒப்பற்ற நூல் திருக்குறள். தங்க, வைரச் சுரங்கம் போல் தோண்டத் தோண்டப் புதிய புதிய கருத்துக்களையும் சிந்தனைகளையும் மனித சமூ கத்திற்கு விதைக்கக் கூடியது அது. இந்நூலுக்கு நூற்றுக்கும் மேற்பட்டோர் உரை எழுதியுள்ளனர். ஒவ் வோர் உரையும் ஒவ்வொரு நோக்கில் எழுதப்பட் டுள்ளது.

அவ்வகையில் மாத்தளை சோமுவின் அறிவியல் உரை குறிப்பிடத்தக்க தனித்துவத்தைக் கொண்டுள் ளது. இவர் அறிவுக்கு ஒவ்வாதவற்றை மறுத்துப் பல குறள்களுக்கு அறிவியல் முறைப்படி விளக்கம் தந்திருப்பது அவரது தனித்துவத்தையும் அறிவியல் மேன்மையையும் சுட்டிக் காட்டும் வண்ணம் அமைந் துள்ளது.

வியக்க வைக்கும் தமிழர் அறிவியல் என்னும் நூல் எழுதிய மாத்தளை சோமு மரபு மீறாமல், அனைவ ரின் கவனத்தையும் ஈர்க்கும் அறிவியல் ரீதியாக உரை எழுதியிருப்பது சிறப்பாக உள்ளது.

இவரின் உரையின் இடையிடையே குறள்வழிப் பொன் மொழிகள் 108 இணைக்கப்பட்டிருப்பது உரைக்கு வலு சேர்ப்பதாக உள்ளது.

உரையின் இடையிடையே பல இடங்களில் விளக் கத்தில் கருத்துவேறுபாடு இருப்பினும், இந்நூல் தமிழ் உலகிற்குக் கிடைத்த சிறப்பு என்பதில் மாற்றுக் கருத் துக்கு இடமில்லை.

திருக்குறளை நேசித்து, அதன் சிறப்பை உணர்ந்து அறிவியல் பார்வையுடன் நூலாசிரியர் உரை வகுத் திருப்பது அவரின் பரந்து விரிந்த நோக்கையும், நுண்மாண் நுழைபுலத்தையும் வெளிப்படுத்தும் வண் ணம் அமைந்துள்ளது.

துணைநூற்பட்டியல்

அறவாணன், க.ப., திருக்குறள் சிறப்புரை(2007), தமிழ்க் கோட்டம்,சென்னை.

சிதம்பரனார், சாமி. (2003), பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும், சென்னை: அறிவு பதிப்பகம்.

பரிமேலழகர் (உ.ஆ), (1998), திருக்குறள், சென்னை: திருமகள் நிலையம்

மாத்தளை சோமு, திருக்குறள் அறிவியல் அகலவுரை,(2008), தமிழ்க்குரல் பதிப்பகம், திருச்சி.

புறநானூறு, ஞா. மாணிக்கவாசகன் உரை (1998), உமா பதிப்பகம், சென்னை.

மோகனராசு. கு., திருக்குறள் ஆய்வு மெய்யுரைகள் (2011), மணிவாசகர், பதிப்பகம், சென்னை..

வரதராசனார், மு., திருக்குறள் தெளிவுரை (2003), சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

29ஆம் பக்கத் தொடர்ச்சி

17.மேலது,ப-222

18.மேலது,ப-28

19.மேலது,ப-35

20.மேலது,ப-40

21.மேலது,ப-63

22.மேலது,ப-82

23.மேலது,ப-135

24.மேலது,ப-149

25.மேலது,ப-261

26.மேலது,ப-264

27.மேலது,ப-266

28.மேலது,ப-53

29.மேலது,ப-66

30.மேலது,ப-79

31.மேலது,ப-134

32..Project Madurai- org (மணக்குடவர் உரை) குறள் -901

33.திருக்குறள் பரிமேலழகர் உரை ப.276

34.டாக்டர் மு.வரதராசனார், திருக்குறள் தெளிவுரை ப.184

35.கலைஞர் மு.கருணாநிதி, திருக்குறள் கலைஞர் உரை ப.183

36.பேரா.ம.நன்னன்,திருக்குறள் கலைஞர் உரை.ப.ஒஏஜ

37.மேலது,ப-34

38.மேலது,ப-50

39.மேலது,ப-51

40.மேலது,ப-134

41.மேலது,ப-59

ISSN 2320-4842

யுனெஸ்கோ கூரியர் இதழின் தமிழியல் பங்களிப்பு

முனைவர் ப. ராஜசேகர்
விருந்துநிலை விரிவுரையாளர், தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை 600 005

தமிழ் இலக்கியப் பெரும்பரப்பில் பல்வேறு வகையான இலக்கியங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு அவை உருவாவதற்கு ஒருவகையில் மனித அறிவின் பரிணாம வளர்ச்சி காரணமாக அமைகிறது. தமிழக வரலாறு என்பது தமிழகத்தில் அவ்வப்போது ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டது. ஐரோப்பியர் வருகையால் இந்தியாவில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றுள் அச்சுக் கருவிகளின் அறிமுகம், மொழி சார்ந்த புலமை ஆகியன முதன்மையானதாகக் கருதப்படுகின்றன. அந்த வகையில் இதழியல்துறைக்கு மிக முக்கிய பங்கு உண்டு எனலாம். இந்த வரிசையில் யுனெஸ்கோ கூரியர் என்ற இதழ் இடம்பெற்றுள்ளது.

யுனெஸ்கோ (UNESCO - UNITED NATIONS EDUCATIONAL SCIENTIFIC AND CULTURAL ORGANI SATION - ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் மற்றும் கலாசார சபை மூலம் 1948ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து *கூரியர்* என்ற திங்களிதழ் முதன்முதலில் ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ் போன்ற மொழிகளில் வெளிவந்தது. பின்னர் அரபிக், ரஷ்யன், சைனிஷ், ஜெர்மன், ஜப்பான், இத்தாலி எனப் பல மொழிகளிலும் வெளிவந்தது.

இதழின் நோக்கம்

இவ்விதழின் முக்கிய நோக்கம், யுனெஸ்கோவின் உறுப்பு நாடுகளிலுள்ள கல்வி, அறிவியல், பண்பாட்டுச் செய்திகளை உலக நாடுகளுக்குக் கொண்டுச் செல்வதே ஆகும். யுனெஸ்கோவின் துணை இயக்குநராக இருந்த மால்கம் ஆதிசேஷையா, தமிழின் பெருமை, தொன்மை, வளர்ச்சி ஆகியவற்றை உலகத் தமிழர்கள் முமையாகப் பயன்படுத்திக்கொள்ளப் பல உதவிகளைச் செய்தார். திருக்குறளை ஆங்கிலம், பிரஞ்சு, ஸ்பானிஷ், ரஷ்யன், அரபு மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடச்செய்தார். பல்துறையில் தமிழாராய்ச்சி நடந்தால்தான் தமிழின் எதிர்காலம் வளமாய் இருக்கும் என்றெண்ணிய ஃபில்லியோசா, தனிநாயகம் அடிகள் ஆகியோரின் ஆலோசனையை ஏற்று, சென்னையில் யுனெஸ்கோ உதவியுடன் *உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்* தொடங்க உதவிசெய்தார். 1970ஆம் ஆண்டு இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து முதல் ஐந்து ஆண்டுகள் இந்நிறு வனத்திற்குத் தேவையான நிதியுதவியை யுனெஸ்கோ அளித்தது. மால்கம் ஆதிசேஷையா உலகம் முழுவதும் பரவியிருக்கும் தமிழர்கள் தமது மொழியின் தொன்மையையும் பண்பாட்டையும் படித்து அறிந்துகொள்ள ஏதுவாக யுனெஸ்கோ கூரியர் இதழைத் தமிழில் வெளியிடப் பெருமுயற்சி செய்து அதில் வெற்றியும் பெற் றார். இவை தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் 1968ஆம் ஆண்டு சனவரித் திங்கள் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு மால்கம் ஆதிசேஷையா அளித்த பரிசு என்றே சொல்லவேண்டும் என்று ஆ. அறிவழகன் குறிப்பிட்டுள்ளார் (தினமணி, ஏப்ரல்.17; ப.08).

யுனெஸ்கோ தொடங்கப்பட்ட இருபதாவது ஆண்டு யுனெஸ்கோ கூரியர் தமிழிலும், இந்தியிலும் வெளிவந் தது. 1967 சூலைத் திங்கள்முதல் *உலகைக் காட்டும் ஜன்னல்* என்ற அடைமொழியோடு யுனெஸ்கோ கூரியர் தமிழில் வெளியானது. ஒவ்வோர் இதழும் கல்வி, அறிவியல், பொருளாதாரம், இலக்கியம் விஞ்ஞானம், பண்பாடு, கலை என்கிற பொருண்மையில் வெளிவந்ததோடு, உலக நடப்புகளை தமிழ் வாசகர்களுக்கு நல்ல தமிழில் மொழிபெயர்த்துக் கட்டுரையாகவும் அளித்தது. இதன் மூலம் சங்கத் தமிழ்ச் சொற்களை இன்றைய அறிவியலுக்கு ஏற்றவகையில் பயன்படுத்தியதோடு பல கலைச்சொற்களையும் தமிழுக்கு இவ்விதழ் தந்துள் ளது. தமிழில் உடனுக்குடன் மொழிபெயர்க்கப்பட்டு மேனாட்டு இதழ்களுக்கு இணையாக ஆங்கில இதழ் வெளியாகும் அதே நேரத்தில் தமிழிலும் வெளியிடப்படுகின்றன. இவ்விதழில் இடம்பெறும் கட்டுரைகள் முழுவதும் மொழிபெயர்புகளே ஆகும். இத்தகைய அரிய வாய்ப்பைப் பெற்ற ஒரே தமிழ் இதழ் இதுவே ஆகும். இது போன்று தமிழின் தொன்மை, பண்பாட்டுச் செய்திகளைப் பிற மொழிக் கூரியர் இதழ்களிலும் மொழிபெயர்த்து அளித்துள்ளது.

இவ்விதழின் ஆசிரியர்களாக எஸ்.கோவிந்தராஜுலு, தெ.பொ.மீனாட்சிசுந்தரம், நெ.து.சுந்தரவடிவேலு, மணவை முஸ்தபா ஆகியோர் சிறப்புடன் பணியாற்றியுள்ளனர். இவ்விதழ் 56 பக்கங்களைக் கொண்டது. 36 மொழி களில் வெளிவந்தது. கிட்டத்தட்ட 53 நாடுகளில் வெளிவந்தது. கல்வி, கலை, மருத்துவம், பண்பாடு இவற்றைப் பற்றிப் பேசுவதே இவ்விதழ் ஆகும். தமிழ் உட்பட முப்பது உலக மொழிகளில் வெளிவந்து அரிய புரட்சி செய்துவரும் ஒரே சர்வதேச மாத இதழாகத் திங்கள் தோறும் வளர்ந்தது.

எல்லா வயதினருக்கும் ஏற்ற, ஆவலைத் தூண்டும் அரிய செய்திகள், படங்கள், விளக்கங்கள், வண்ணப் படைப்புகள்,ஒவ்வோர் இதழிலும் தொடர்ந்து வெளி வந்துள்ளன. தமிழின் தனிப்பெரும் ஆற்றலைத் தரணிக்குணர்த்தி, *தமிழ் ஓர் அறிவியல் மொழி* என் பதைச் செயல்பூர்வமாக நிலைநாட்டி அதன் வளர்ச் சிக்கு வழிகாட்டும் காலக் காண்ணாடி இது எனலாம்.

இதழின் விலை

யுனெஸ்கோ கூரியர் தனி இதழ் விலை ரூ.4/-. நவம்பர் 1998 நவம்பர் இதழில் அடுத்த ஆண்டு முதல் விலை சற்று உயர்கிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. முக்கிய அறிவிப்பு என்று குறிப்பிட்டு புதிய சந்தா விவரங்கள், தனி இதழ் ரூ.7/-; தனிப்பட்டவர்க ளுக்கு ஆண்டுச் சந்தா ரூ.74/-; கல்வி நிறுவனங் களுக்கும் நூலகங்களுக்கும் சலுகைச் சந்தா ரூ.67/; புதிய சந்தா விகிதம் ஜனவரி 1999முதல் நடை முறைக்கு வருகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் மிகப் பெரிய வியப்பு, தரமான இதழ், தர மான தாளின் அட்டை, தரமான செய்திகள், அதுவும் உலகளாவிய செய்திகளை ஒரே இதழில் பார்ப்பது போன்றவை இருந்தும் இதழின் விலை மிகக் குறை வாக இருப்பது. இவ்விதழின் நோக்கம் பொருளீட்டு வதல்ல. பரந்துபட்ட செய்திகள், பரந்துபட்ட பார்வை இவை அனைத்தும் உலகளவில் உள்ள தமிழர்கள் வாசித்து அறிவினைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்னும் முதன்மை நோக்கத்தை இதழ் கொண்டி ருப்பது சிறப்புக்குரிய ஒன்றாகும்.

இதழின் வெளியான படைப்புகள்

நவம்பர் 1998இல் வெளியான இதழில் உலக நாடு களிலுள்ள செய்திகள் வெளிவந்துள்ளன. குறிப்பாக, தமிழகத்திலிருந்து அன்றைய தமிழ்நாடு உயர்கல்வி மன்றத் துணைத்தலைவர் மு. ஆனந்த கிருஷ்ணன் அவர்கள் *வளர்ச்சிக்கு வழிவகுக்கும் உயர்கல்வி* என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றைப் படைத்துள்ளார். அதில் பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பத் துறைக ளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்பதைப் பற்றி யும் பள்ளிப் படிப்பு முடித்த பின் உயர்கல்வி தேடிச் செல்லும் மாணவ, மாணவிகளின் தொகை வேக மாக வளர்ந்துவருகிறது என்பதையும் புள்ளி விவரங் களோடு பதிவு செய்துள்ளார்.

உயர்கல்வியினால் மட்டுமே சிறந்த சிந்தனையாளர் களையும், அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர்களையும் உருவாக்க முடியும்.மற்ற வளர்ந்த நாடுகளின் பொருள் உற்பத்தி நிலையை எட்ட முடியும். உலகப் பொருளா தாரப் போட்டியின் உண்மை நிலைகளை அறிந்து செயல்பட முடியும் என்பதையும் அழுத்தம் திருத்த மாக இக்கட்டுரை வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார்.

போராளி தாலிலா

தாலிலா தாலிப், 32 வயது வீராங்கணை; தீவிர அரசி யலில் நீண்ட அனுபவம் வாய்த்தவர். அல்ஜீயர்சில் 1988 அக்டோபரில் நடந்த கலவரங்களில் 500 இளைஞர்கள் மாண்டது கண்டு மனம் பொறாத அவர் தாலிலா, தன்னந்தனியராகிவிட்ட நாட்டின் இளைஞர் களைப் பாதுகாக்க முடிவு செய்தார். சில நண்பர் களுடன் சேர்ந்து 1993இல் இளைஞர் நடவடிக்கை இயக்கத்தைத் தொடங்கினார்.

இதற்கு அமோக ஆதரவு திரண்டது முதல் தலைவி தாலிலா, தலைநகரின் ஏழை, எளிய இளைஞர்களி டையே பெரும் செல்வாக்குப் பெற்றார். முகத்திரை யணிந்த இளம் பெண்கள்முதல் ‘பாப்’ இசை ஆர்வ லர்கள்வரை, இஸ்லாமிய ஆதரவாளர்கள்முதல் புதுமை விரும்பிகள்வரை பல்வேறு தரப்பினரும் இதில் உறுப் பினர்களாயினர். அடித்தள மக்களுடன் தொடர்பு அறாமல் தாலிலா அரசியலில் இறங்கினார். 1997 நாடாளுமன்றத் தேர்தலில் *சமதருமக் கூட்டணி* என்ற எதிர்க்கட்சியின் சார்பில் தமது சொந்த பெஜாயா தொகுதியில் போட்டியிட்டு வென்றார். *சொல்லின் செல்வி* எனப் புகழ் பெற்றுள்ள இவர் எல்லா வகை வன்முறையையும், அனைத்து எதேச்சதிகார நடவ டிக்கையினையும் எதிர்த்து அதனைச் செய்பவர்கள் யாராயிருந்தாலும் உரத்த குரல் கொடுக்கிறார். (1998, நவம்பரில் வெளியான யுனெஸ்கோ கூரியர் இதழிலிருந்து)

தலையங்கம்

இவ்விதழில் வெளியான தலையங்கத்தில் *முன்னேற் றம் யாருக்காக?* என்ற தலைப்பில் தலையங்கம் ஒன்று வெளிவந்துள்ளது. அதில் பணக்கார நாடுகள் தங்கள் மொத்த தேசிய உற்பத்தியில் GNP 0.7% அளவைகூட மிகவும் நலிந்த நாடுகளுக்கு ஒதுக்க முடியவில்லையென்றால்நிலைபெற்ற மேம்பாடு எனும் ஒரு பொது முயற்சியை வெற்றிகரமாக நிறைவேற் றலாம் என்று நாம் எவ்வாறு நம்ப முடியும்? என்ப தைப் பற்றியான செய்திகள் தலையங்கத்தில் இடம் பெற்றுள்ளன.

தள்ளாடும் தந்தக் கோபுரம் என்ற தலைப்பில் புதுமைக் கால வாழ்வின் வேகத்திற்குத் தாக்குப்பிடிக்கும் வகை யில் பல்கலைக்கழகங்கள் மாறியுள்ளன. இவ்விரைவு மிகு ஊழியில் இவை எங்கே சென்று கொண்டிருக் கின்றன என்பதைப் பற்றிய கட்டுரை ஒன்று இடம் பெற்றுள்ளன.

உலகப் புகழ்பெற்ற கல்வியாளர் பொன்மொழிகள்

கிங்ஸ்டன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் (யு.கே)

பாடம் கற்பிக்கும் போதும் மனிதர்கள் பாடம் படிக் கிறார்கள். - செனிக்கா(இளையவர்) கி.மு.4 - கி.பி.65.

கல்விக் கூடங்களில் பயனற்ற எத்தனையோ பாடங்களை, அளவுக்கு மிக அதிகமாகக் கற்றுக் கொடுக்கிறார்கள். - ஜோகான் உல்ஃப்காங் வான்கதே, ஜெர்மனி,1749-1832.

தொடர்ச்சி: பக். 62

ISSN 2320-4842

தெ .பொ. மீனாட்சி சுந்தரனார்

முனைவர் சி. முத்துமாலை
உதவிப் பேராசிரியர், எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை 600 008

முன்னுரை

தமிழகப் பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறைத் தலைவராகவும் துணைவேந்தராகவும் ஆராய்ச்சி அரங்கங்களின் இயக்குநராகவும் விடுதலை வீரராகவும் சமய ஞானியாகவும் பல்வேறு கோணங்களில் புகழ் பெற்றவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார். தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக உலகம் முழுவதும் சுற்றி அகிலமெங்கும் தமிழ் மணக் கச் செய்தவர். இந்திய சுதந்திரத்திற்காக சத்தியாகிரகப் போராட்டங்களில் கலந்து சிறை சென்ற உத்தமர். பல துறைகளிலும் பெரும் புகழும் பெற்ற இவருக்கு சாகித்ய அகாதெமி பட்டத்தை வழங்கிச் சிறப்பித்த அரசு, இவரைக் கலை, பண்பாட்டுத் தலைவராகவும் நியமித்து சோவியத் குடியரசு மற்றும் ஜப்பான் ஆகிய நாடு களுக்கு அனுப்பிவைத்தது. தாமே முயன்று பல மொழிகள் பயின்ற இவர் சமசுகிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி முதலான இந்திய மொழிகளையும் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலான அந்நிய மொழிகளையும் ஆர்வத்துடன் கற்றார். *பன்மொழிப் புலவர்* என்னும் பட்டம் பெற்ற இவர் தம் பன்மொழிப் புலமையின் பயனாய் ஆராய்ச்சி அறிஞரானார்.

பல்கலைச் செல்வராகவும் பண்பாட்டின் உறைவிடமாகவும் திகழ்ந்த இவர் இந்த நூற்றாண்டில் வாழ்ந்த மா மேதைகளுள் ஒருவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும், மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராகவும் அவர் செய்த தமிழ்த் தொண்டுகள் தமிழுலகத்தால் என்றும் போற்றப்படு பவை. தமிழகத்தில் பேராசிரியர் பரம்பரையில் 20ஆம் நூற்றாண்டில் தமிழ் ஆய்வுக்கு ஒரு பெரும் பரம் பரையைத் தயாரித்த பெருமை கொண்ட பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் ஆராய்ச்சிப் பணிகளைப் பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தெ.பொ.மீனாட்சி சுந்தரம் அவர்களின் குடும்பம்

தெ.பொ.மீ. தென்பட்டினம் பொன்னுசாமி கிராமணி-ருக்மணி அம்மாள் இணையருக்கு மகனாகப் பிறந்தார். அவர் குடும்பம் சென்னைப் பட்டினத்தின் வரலாற்றோடு முந்நூறு ஆண்டுகாலத் தொடர்புடையதாகும். அவர் குடும்பமே தேசபக்தி கொண்டதாகும். அவர் தந்தையார், தமையனார் இருவருமே தேசபக்தராவார். அவர் தமையனார் கிருஷ்ணசாமிப் பாவலர் காந்தியடிகளின் விடுதலை இயக்கத்திற்கு ஆதரவளிக்க, *தேசபந்து* என்னும் மாத இதழை நடத்தினார். இவர் நாடக உலகில் புகழ்மிக்க பேராசிரியராகவும் விளங்கினார். *பாவலர் பாய்ஸ் கம்பெனி* என்ற பெயரில் ஒரு நாடகக் குழுவையும் நடத்திவந்தார்.

இளமைப் பருவமும் கல்வியும்

தெ.பொ.மீ. 08-02-1901இல் சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் பிறந்தார். இவரது சொந்த ஊர் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள தென்பட்டினம். சிந்தாதிரிப்பேட்டை பள்ளியிலும் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியிலும் படித்துப் பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ.பட்டம் பெற்றார். சட்டக் கல்லூரியில் தேர்ச்சி பெற்றுப் பின்னர் பொருளாதாரம், அரசியல், வரலாறு ஆகிய முத்துறைகளிலும் பயின்று எம்.ஏ., பட்டம் பெற்றார். வித்துவான் பட்டத்தில் மாநிலத்திலேயே முதலாவதாகத் தேறி பி.ஓ.எல்., எம்.ஓ.எல். பட்டமும் பெற்றார். இவர் தனது 19ஆம் வயதில் கி.பி.1920ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று அரசியல் உலகில் பிரவேசித்தார். நகரசபையில் 16 ஆண்டுகள் பொறுப்பான பதவியில் இருந்துள்ளார்.

தனது 27ஆவது வயதில் 1928ஆம் ஆண்டு சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் எனும் ஆன்மீகத் தொடரை ஏறக்குறைய நான்கு ஆண்டுகள் பத்திரிகையில் எழுதியுள்ளார். இவரது எழுத்தாற்றல் இவரைப் பலருக்கு அறி முகப்படுத்தியது. வழக்கறிஞராகத் தொழிலாற்றியதோடு தனியே தமிழும் படிக்கத் தொடங்கினார். சிந்தாதிரிப் பேட்டை வேதாந்த சங்கத்தின் தலைவர் பெரும்புலவர் கோ.வடிவேலு செட்டியார் அவர்களிடம் தமிழைப் படித்தார். விரைவில் வித்துவான் தேர்வுக்குரிய அளவுக்கு நல்லபடி பயின்று வித்துவான் முதல்நிலை, நிறைநிலை இரண்டுக்கும் ஒரே ஆண்டில் தேர்வு எழுதினார். மாநிலத்தில் முதல் மாணவராகவும் வெற்றி பெற்றார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்தவர், மாநிலக் கல்லூரியில் படிப்பித்தவர். வரலாற்றுத் துறையில் எம்.ஏ.பட்டம் பெற்றவர், பி.எல் படித்த வழக்கறிஞர், பிரெஞ்சு முதலிய ஐரோப்பிய மொழிகளையும் பொருளி யல் முதலிய கலைகளையும் கற்றவர்.

தெ.பொ.மீனாட்சி சுந்தரம் வகித்த பதவிகள்

தெ.பொ.மீ. எதைக் கற்றாலும் கசடறவே கற்றமையால் எல்லாத் துறையும் தலைமைத்தன்மை கொடுத்து அவரைப் போற்றியது. மொழிமீது அவர் மிகுந்த நேசம் கொண்டவர். 1923இல் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவுசெய்துகொண்டார். எனினும் தமிழ் கற்பிக்கும் பேராசிரியராகவே இவர் பணி பின்னாளில் தொடர்ந்தது.

1924இல் சென்னை நகராண்மைக் கழக உறுப்பினராகப் பணியாற்றினார். 1925இல் அலுமினியத் தொழிலாளர் சங்கத் தலைவராய் இருந்து தொண்டு புரிந்தார். இவரது தமிழ்ப் புலமை கண்ட அண்ணாமலை அரசர்,அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு இவரைப் பேராசிரியராகப் பொறுப்பேற்ற தெ.பொ.மீ. 1946வரை அங்குப்பணியாற்றினார். மீண்டும் 1958இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல், இலக்கியத் துறைகளின் தலைமைப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். இவரது தமிழ்ப் புலமையை உலகிற்கு அடையாளம் காட்டிய பெருமை அண்ணாமலை அரசரையே சாரும். தருமபுர ஆதீனம் *பல்கலைச் செல்வர்* என்றும் குன்றக்குடி ஆதீனம் *பன்மொழிப் புலவர்* என்றும் இவருக்கு விருதுகள் அளித்துச் சிறப்பித்தன.

தெ.பொ.மீனாட்சி சுந்தரம் படைத்த நூல்கள்:

20ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழறிஞரான தெ.பொ.மீ. தமிழிலும் ஆங்கிலத்திலும், இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம், ஒப்பிலக்கியம் மொழியியல் குறித்த பல கட்டுரைகளையும் நூல்களையும் திறனாய்வுகளையும் எழுதியுள்ளார். ஆங்கிலத்தையும் திறம்பட கற்ற அவர் A History of Tamil Literature என்ற நூலை எழுதினார். இந்நூலும் அவருடைய 61ஆவது பிறந்த நாளினைச் சிறப்பிப்பதற்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள Collected Papers of Prof. T.P. Meenakshi Sundaram எனும் நூலும் ஆராய்ச்சி உலகு பெற்ற அருங்கொடைகள் என்கிறார் சி.பா. *நற்றிணை நாடகங்கள் பிறந்தது எப்படியோ?*, *நீங்களும் சுவையுங்கள்* முதலான நூல்கள் அவர்தம் நுண்மான் நுழைபுலத்தை வெளிப்படுத்துகின்றன. 80க்கு மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார். ***வள்ளுவரும் மகளிரும், மனோதத்துவ சாத்திரம், நற்றிணை நாடகங்கள், தமிழா நினைத்துப்பார், குடிமக்கள் காப்பியம், கானல்வரி, நாடகக் காப்பியங்கள்*** போன்ற நூல்களும், A Pegeant of Tamil Literature என்ற ஆங்கில நூலும் அவற்றுள் சில.

இவர் எழுதியுள்ள நூல்கள்

தல புராணங்கள்: 22, சரித்திரம்: 3, மான்மியம்: 1, காப்பியங்கள்: 2, பதிகம்: 4, பதிற்றுப்பத்தந்தாதி: 6, யமக அந்தாதி: 3, மாலை: 7, பிள்ளைத்தமிழ்: 10, கலம்பகம்: 2, கோவை: 3, உலா: 1, தூது: 2, குறவஞ்சி: 1, பிற நூல்கள்: 7.

ஆராய்ச்சி பற்றித் தெ.பொ.மீ.

தமிழ் படித்தவர்கள் தமிழ் மொழியை மட்டுமே கற்க முடியும். பிற மொழிகள் அவர்களுக்கு வராது என்பதை மாற்றி மொழியியல் என்ற புதிய துறையின் புதுமையைத் தமிழுக்குக் கொண்டு வந்து அதை வளரச்செய்த முதல் முன்னோடி தெ.பொ.மீ. ஆவார். தமிழ்மொழியின் மரபு சிதையாமல் மாண்பு குறையாமல் நவீனப்படுத்தி உலகை ஏற்றுக்கொள்ளச் செய்தவர். ***தமிழின் முக்கியத்துவம் அது பழமைச் சிறப்பு வாய்ந்த ஒரு செவ்வியல் மொழியாக இருப்பதுடன் அதே வேளையில் வளர்ந்துவரும் நவீன மொழியாகவும் ஒருங்கே விளங்குவதில்தான் சிறப்புப் பெறுகிறது*** என்பது அவர் கருத்து.

செவ்வியல் மொழியான தமிழுக்குத் தான் செய்ய வேண்டிய பணி குறித்துக் கூறும்போது ஏராளமாகத் தமிழில் படைக்கப்பட்டுள்ள படைப்புகள் பிற ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்படாமையால் பரவலாக அறிஞருலக ஆய்வுக்குக் கிடைக்காமல் இருக்கின்றன என்று தமிழுக்கு நாம் செய்திருக்க வேண்டிய பணியை நினைவூட்டியுள்ளார். மிகச் சிறந்த இலக்கியத் திறனாய்வாளராக விளங்கிய இவருடைய நூல்கள் ‘ஆராய்ச்சி’ என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதை நமக்குக் காட்டுகின்றன.

ஒரு பொருளைப் பற்றி பல கோணங்களில் ஆய்வு செய்தபின்னரே ஒரு முடிவுக்கு வருவார். தெளிவாக உணர்ந்தவற்றை ஆய்வு முடிவுகளாகத் தந்துள்ளார். உறுதிப்படுத்திக் கூறமுடியாத முடிவுகளில் ஐயம் ஏற்பட்டால்அதைமுற்ற முடிந்த முடிவுகளாகக் கூறாது ஐய முடிவுகளாக அவரே அறிவித்து மேலாய்வுக்குப் பிறரைத் தூண்டும் பழக்கமுடையவர் என்பதை நாம் அறிவோம்.

தெ.பொ.மீ-யின் ஆராய்ச்சி பணிகள்

இலக்கியத்துறையில் இருட்டாக இருந்த இடங்களைத் தன்னுடைய பேரறிவால் திறனாய்வுப் பார்வையில் விளங்கச்செய்தவர் தெ.பொ.மீ. உலகக் காப்பியங்களோடும் உலக நாடகங்களோடும் சிலப்பதிகாரத்தை ஒப்பிட்டுப்பார்த்து அதை நாடகக் காப்பியம் என்றும் குடிமக்கள் காப்பியம் என்றும் ஒரு வரியில் கூறியவர்.

தமிழ் இலக்கிய வரலாற்றை வேறொரு புதிய கோணத்திலிருந்து பார்க்கும் அரிய முயற்சியை Sri Aurovindo's theory of Poetry and Tamil Poetry எனும் தலைப்பில் அவர் எழுதிய அச்சேராத ஆங்கிலக் கட்டுரையில் காணலாம் என்கிறார் ப. மருதநாயகம். கலைக்களஞ்சியத்தில் பல்வேறு பொருள்கள் பற்றி, குறிப்பாகத் தமிழ் எழுத்துக்களின் வடிவங்கள் பற்றி அவர் ஆராய்ந்து எழுதிய கட்டுரைகள் இன்றைய ஆராய்ச்சியாளர்களுக்கு நல் விருந்தாக அமைந்துள்ளன. அவரது சொற்பொழிவுகள் எப்போதும் ஆராய்ச்சி அடிப்படையிலேயே அமைந்திருக்கும்.

தன்னெஞ்சறிவது பொய்யற்க என்று வள்ளுவர் கூறியுள்ளதை மறத்தல் ஆகாது, உண்மையைக் காண்ப

ISSN 2320-4842

தோடு நில்லாது அதனை உள்ளவாறே எடுத்துக் கூறும் துணிவும் வேண்டும் என்பது அவருடைய கருத்து. தான் கண்ட குறையை மறைக்க முயல்வது ஆராய்ச்சியாகாது; அரசியல் சூழ்ச்சியாகும். ***ஆராய்ச்சி என்பது முடிவிலாது கடவுள்போல வளர்ந்து ஒளிர்வது ஒன்று*** என்பார் தெ.பொ.மீ. என்கிறார் தொகுப்பாசிரியர் ப. மருதநாயகம். ஆராய்ச்சியாளன் தன்னை எப்படித் தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதையும் அவர் அறிவிக்கிறார். அறிவுப் பண்பாட்டோடு எந்தப் பொருளைப் பற்றி ஆராய்கிறோமோ அதற்கு வேண்டிய தகுதிகள் யாவையும் பெறல் வேண்டும் என்பதுஅவரது கருத்து. ஆய்வுக்கு வேண்டிய தகுதிகளையெல்லாம் ஆய்வாளன் பெற வேண்டும் என்று வற்புறுத்திய தெ.பொ.மீ. சில குறிப்பிட்ட ஆய்வுகள் எப்படிச் செய்யப்படவேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

வாழ்க்கை வரலாறும் காப்பியமும் ஒன்றென்று எண்ணுவது பெரும் குழப்பத்தை விளைவிக்கும் என்ற கருத்தினர். அவர் எழுதிய காப்பியமும் வாழ்க்கை வரலாறும் என்ற கட்டுரை ஓர் இலக்கியத்தை அணுகும் முறை எப்படி என்பதைத் தெளிவாக்குகிறது. எக்காப்பியமாக இருந்தாலும் அதனை ஆராயும்போது உடலெங்கும் உயிர் பரவியிருப்பதுபோலக் கதையில் அமைந்துள்ள உயிர் அமைப்பாய் பாவிகம் பரவியிருப்பதை ஆய்வாளன் மனதில் கொள்ள வேண்டும் என்பது தெ.பொ.மீ. கருத்து.

கதையியில் வரும் தலைவன் தலைவியரைத் தனித் தனியே பிரித்தெடுத்து ஆராய்வதும் உடலிலிருந்து தலையையும் கையையும் காலையும் வேறுவேறாக்கி ஆராயும் பிண ஆராய்ச்சியாகும் என்று இடித்துரைக்கிறார் தெ.பொ.மீ. சிலம்பையும் இராமாயணத்தையும் மனோன்மணியத்தையும், குயில்பாட்டையும் ஆராயும் போது ஒவ்வொன்றின் பாவிகத்தையும் நினைவில் வைத்து முழுக் காவியமாகவே பார்க்கிறார்.

இலக்கிய வரலாறுகள் அவை தோன்றிய ஆண்டுகள், ஆசிரியர்கள், அவர்கள் வரலாறுகள் ஆகியவை பற்றிய வெறும் பட்டியலாகவே அமையக்கூடாது என்பது அறிஞர்களின் கருத்தாகும். தமிழ் இலக்கிய வரலாறு சங்ககாலம் என்ற நூலில் தமிழிலக்கியங்களைத் தனித்தனி இலக்கியங்களாக ஆராய்ந்தால் அது தமிழிலக்கிய வரலாறு ஆகாது. இந்தத் தனி இலக்கியங்களிடையே ஓர் ஒற்றுமை காண வேண்டும் என்று கூறியுள்ளார்.

தெ.பொ.மீ. எழுதிய *A History of Tamil Literature* என்ற ஆங்கில நூல் தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் படிப்படியாகக் காட்டுகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றைப் புதியபுதிய கண்ணோட்டங்களில் காண வேண்டுமென்ற ஆர்வம் உடையவர் என்பது புலனாகிறது.

தெ.பொ.மீ. மொழிபெயர்த்த டி.எஸ். எலியட்டின் திறனாய்வு பற்றிய கட்டுரை ஒப்பியல் அணுகுமுறையின் இன்றியமையாமையைக் காட்டுகிறது. ஒப்பிடலும் பகுத்தாய்தலும் திறனாய்வாளன் கையாளும் முக்கியக் கருவிகள். பிறமொழி நூல்களைத் தமிழ் நூல்களோடு ஒட்டி ஆராயும் ஆராய்ச்சியில் தமிழர் ஈடுபட வேண்டும் என்று வற்புறுத்தியவர் தெ.பொ.மீ.

தெ.பொ.மீ. பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொண்ட தலைப்புகள் பலதரப்பட்டவை தமிழ் நாடக வரலாறு, தமிழ் இசைவரலாறு,அகராதிகள் வரலாறு என்பன போன்ற மொழியும் வரலாறும் இணைந்த தலைப்புகளை எடுத்து ஆராய்ந்துள்ளார்.

ஆய்வுக் கண்டுபிடிப்புகள்

சங்க இலக்கியம், திருக்குறள், சிலம்பு, கம்பராமாயணம் பற்றி எழுந்த தவறான கருத்துக்களை சுட்டிக் காட்டி அவற்றின் உண்மையான சிறப்புகளை நிலை நாட்ட நாளும் முயன்றுள்ளார் என்கிறார் ப. மருதநாயகம்.

தெ.பொ.மீ. அவர்கள் தன் ஆய்வின் மூலம் கண்ட திருவாசகப் பாடல்களை *மறைந்துபோன திருவாசகம்* என்ற தலைப்பிட்டு வெளியிட்டார்.

பெரியபுராணம் வடமொழி, மொழிபெயர்ப்பு என்ற சர்ச்சை எழுந்தபோது கரதத்த முனிவர் சேக்கிழாருக்குப் பின் வாழ்ந்தவர் என்பதை தெளிவுப்படுத்துகிறார்.

கம்பநாடகம் என்ற கட்டுரையில் மலையாளத்தில் வழங்கும் பாவைக் கூத்தாகிய *அங்கதன் தூதுக் கூத்துக்களி*யை ஆராய்ந்து அதில் வரும் 25 பாடல்கள் கம்பன் அங்கதன் தூதுப் படலத்தில் பாடியுள்ள பாடல்களே என்பதை அறிவித்துள்ளார்.

முடிவுரை

நுண்ணறிவு, நூலறிவு, பலதுறை அறிவு, பட்டறிவு ஆகிய யாவும் வாய்க்கப்பெற்ற இவர் திறனாய்வு அணுகுமுறைக்கு மிக முக்கிய இடமளித்தார். தமக்கெனத் தனிப்பாதை வகுத்துக்கொண்டு செயல்பட்டார். இவருடைய நூல்களில் டி.எஸ். எலியட், பேரறிஞர் அரவிந்தர் ஆகியோரின் செல்வாக்கை நாம் காண முடியும்.

இலக்கிய ஆய்வில் இலக்கியத் தன்மைக்கே முதலிடம் தரவேண்டும் என முழங்கியவர் டி.எஸ். எலியட். இதனை முழுமையாக ஏற்றுக்கொண்டவர் தெ.பொ.மீ. தமிழிலிருந்த பழம் நூல்கள் பற்றி ஆங்கிலத்தில் எழுதி வெளிநாட்டார்க்கு அவற்றின் சிறப்பை அறிமுகப்படுத்தினார்.

பல தமிழ் இலக்கியங்களைத் துருவிதுருவி ஆய்ந்து பல புதிய ஆய்வு கண்டுபிடிப்புகளை வெளியிட்டார். திருக்குறளிலும் சிலம்பிலும் பிறர் குறையென்று சொன்னவற்றைத் தக்க விளக்கம் தந்து அவை குறையல்ல என்று நிறுவினார்.

தொடர்ச்சி: பக். 61

ISSN 2320-4842

தொல்காப்பியம் மற்றும் அகநானூற்றில் தெய்வங்கள்

ந. மாலதி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கே. எஸ். ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு 637 215

திறவுச்சொற்கள் Keywords: தொல்காப்பியம்-அகநானூறு-முருகன்-திருமால்-இந்திரன்-வருணன்-கொற்றவை-நிமித்தம்.

முன்னுரை

மக்களின் வாழ்க்கை முறைகளை முழுவதுமாக எடுத்துக்கூறும் முதல் தமிழ் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இலக்கண நூல்களில் கூறப்பட்ட தெய்வங்கள் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களுள் ஒன்றான அகநானூற்றில் மிகுதியாகக் காணப்படுகின்றன. தெய்வங்கள் மக்களின் வாழ்க்கை முறையில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மன அமைதி தரக்கூடிய இறைவன்மீது மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். தெய்வங் களுக்கு வழிபாடுகளும் பூசைகளும் பழங்காலம்முதல் இக்காலம்வரை நடத்தப்பட்டுவருகின்றன. இத்தகைய முறை அவர்களின் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றது. இயற்கை வளம் காக்கும் சக்தியாகவும், ஒவ்வொரு இடத்தையும் பாதுகாக்கும் சக்தியாகவும், ஏரி, குளம் இவற்றைக் காக்கும் சக்தியாகவும், நோய்களை எதிர்த்து மக்களைப் பாதுகாக்கும் சக்தியாகவும், கால்நடைகளைப் பாதுகாக்கும் சக்தியாகவும் கருதித் தெய்வங்களை வணங்கிவருகின்றனர். தொல்காப்பியம், அகநானூற்றில் கூறப்பட்டுள்ள தெய்வம் பற்றிய கருத்துகள் ஒன்றுக் கொன்று ஒத்துப்போகக்கூடியவை.

கடவுள் சொல்லும் பொருளும்

சங்க இலக்கியங்களில் பல்வேறு பொருள்களில் கடவுள் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. எந்த இடத்திலும் கடவுள் என்ற சொல் கடவுளின் முழு வல்லமையையோ, எங்கும் உள்ள தன்மையையோ, எல்லாக் காலத் திற்கும் உரிய இயல்பையோ குறிக்கப் பயன்படுத்தப்படவில்லை. துறவிகள், மரம், மலர், தூண், நடுக்கல்லான மறவர்கள், கொற்றவை, முருகன் போன்ற பொருள்களில் கடவுள் என்ற சொல் பரவலாகப் பயன்படுத்தப் படுகிறது. முனிவர்கள், வீரர்கள், முருகன், பத்தினிப் பெண்டிர் ஆகியோர் கடவுளராக மதிக்கப்பட்டதைப் போல ஒருசில மரங்களும் கடவுளாக மதிக்கப்படுகின்றன. இனக்குழு வாழ்க்கை நிலையில் குலக்குறிச் சின்னங் களில் மரங்கள் தலைமை இடம் பெறுகின்றன. இத்தகு அடையாள மரங்கள் கடவுளாகவும் கடவுள் உறையும் இடங்களாகவும் வணங்கப்படுகின்றன.

தெய்வம்

பண்டைய மக்கள் முதலில் இயற்கையை வழிபட்டனர். பிறகு முன்னோர்களால்தான் தமது வாழ்வில் நன்மை தீமைகள் நடப்பதாக எண்ணி அவர்களை வழிபடத் தொடங்கினர். அவர்கள் பயன்படுத்திய கருவிகளையும் அவர்கள் நினைவாக நட்ட கல்லையும் வழிபட்டனர். இத்தகு வழிபாடு பின்னர் கண்ணுக்குப் புலப்படாத ஒரு சக்தி இருப்பதாக நினைத்தபோது தெய்வ வழிபாடாக மலர்ந்தது. மக்கள் அச்ச உணர்வுடனும், நம்பிக்கை யுடனும் நன்றியுடனும் தெய்வங்களை வணங்கினர்.

தெய்வம் குறித்து அறிஞர்களின் கருத்து

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே சிவன் வழிபாடு பெருந்தெய்வ வழிபாடாகமாறிப்போனது. சிவன் ஓர் இனக் குழுவின் கடவுளாகக் கருதப்படுகின்றான். காளை, நாகம், மான், கொன்றை மரம், வன்னி மரம், உடுக்கை போன்ற வற்றை இனக்குறியீடாகக் கொண்ட இனக்குழுக்களை வெற்றிகொண்டதாகவும் அமைகின்றன. இதன் விளைவே இவையெல்லாம் சிவனிடம் வந்து சேர்ந்தன என்கிறார் சே.இரகுராமன்.[1] (Kanagalakshmi.S, 2011)

பத்தினி வழிபாடு பண்டைய மரபாகும். வீரர் வழிபாட்டின் ஒரு வகை யாகும். செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்தபின் அம்மரபு தெற்கே இலங்கைக்கும் வடக்கே மாளவத்திற்கும் பரவின. பத்தினித் தேவியின் உருவம் அண்மைக் காலம்வரை கோயில்களில் காணப்பட்டது என்கிறார் ஏ.கே.குமாரசாமி. ***இலங்கையில் பழஞ்சிற்பக் கலைக்கு உதாரண மாகக் கூறப்படுவது தெய்வீகப் பெண்மணியின் உருவங்களாகும். துளு நாட்டில் கோசர்கள் மங்கல மடந்தைக்கோர் கோட்டம் அமைத்தார்கள். மேலைக் கடற்கரையிலுள்ள அவ்வூர் பிற்காலத்தில் மங்களாபுரி அல்லது மங்களூர் என்றும் அழைக்கப்படுகிறது.***[2] (Subramanian.N, 1986)

தெய்வ வழிபாட்டின் வகைகள்

மக்கள் பழங்காலம் தொட்டுப் பல்வேறு வழிபாட்டு முறைகளைப் பின்பற்றினர். அவை: நடுகல் வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, பெருந் தெய்வ வழிபாடு.

நடுகல் வழிபாடு

நடுகல் வழிபாடு என்பது நட்ட கல்லை வழிபடுதல் ஆகும். இது முன்னோர் வழிபாட்டுடன் தொடர்புடை யது.இறந்தவர்களுக்கு அமைக்கப்படும் *பதுக்கை* என் பதற்குக் *கற்குவியல், மணற்குன்று* என்று தமிழ்ப் பேரகராதி பொருள் கூறுகிறது. இப்பதுக்கைகளிலி ருந்தே நடுகல் வழிபாடு தோன்றியிருக்க வேண்டும் என்கிறார் கா.ராஜன்.

பிணத்தை விலங்குகள் தோண்டி எடுக்காமலிருக்க அதன்மீது குவியலாகக் கற்களைக் குவித்து வைத்த னர். அக்கற்குவியல்கள் பதுக்கைகள் எனப்பட்டன. இவற்றை இலைகளால் மூடியும் வைத்தனர்.

மலைவாழ் மக்களின் மதம் ஒரு பக்கமும், இந்து மதம் மறுமுனையுமாக இருப்பதாகக் கருதுவதோடு நாட்டுப் புறத் தெய்வ வழிபாடு இவ்விரு முனைகளுக்குள் அடங் குவதாகக் எஸ்மன் குறிப்பிடுகிறார்[3] (Kaliyaperumal. K, 1997).

உவலிடு பதுக்கை ஆளுகு பறந்தலை (அகம்.67:14)
இரலை சேக்கும் பரலுயர் பதுக்கை (அகம்.91:10)
எண்ணுவரம் பறியா உவலிடு பதுக்கைச (அகம்.109:8)
பதுக்கைத் தாய செதுக்கை நீழற் (அகம்.151:11)
ஆளழித் துயர்த்த அஞ்சுவரு பதுக்கைக(அகம். 215:11)
படுகளத் துயர்த்த மயிர்த்தலைப் பதுக்கை (அகம்.231:6)
உயர்பதுக் கிவர்ந்த ததர்கொடி அதிரல் (அகம். 289:2)

எனக் கூறப்பட்டுள்ள பதுக்கை கற்குவியலையும், தழைகளால் மூடிய கற்குவியலையும் குறிக்கின்றன.

நடுகல் அமைக்கும் முறை

காட்சி, நடுகல்லுக்குத் தகுதி உடைய நல்ல கல்லைக் கண்டுபிடிப்பது, *கால்கோள்,* உரிய முறைப்படி அக் கல்லை எடுத்து வருவது, *நீர்ப்படை,* கல்லை நீரால் கழுவுவது ஆகும்.

காட்சி கல்கோள் நீர்ப்படை நடுதல்சீர்த்தகு மரபில்
பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று மரபிற் கல்லொடு புணர[4] (புறத்.63:19-21)

நடுதல், கல்லை உரிய இடத்தில் உரிய முறைப்படி நடுதல், பெரும்படை, நடுகல்லுக்குப் படையல் இடு தல், வாழ்த்து, நடுகல்லை அனைவரும் வாழ்த்தி வணங்குவது என்கிறார் தொல்காப்பியர். தலைவன் தலைவியை அவள் சுற்றத்தார் அறியாவாறு அழைத் துச் சென்றுவிட்டான். நற்றாய் தன் மகளைத் தலை வன் சுரவழியில் வருந்தாவாறு அழைத்துச் செல்ல வேண்டும் எனத் தன் மனத்துள்ளேயே தெய்வத்தை வணங்குவதாகக்கூற்றுஅமைகிறது.(Ilampooranar,1953).

வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்துத்
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்[5] (அகம். 35:7-9)
எழுத்துடை நடுகல்' இன்னிழல் வதியும் (அகம்.53:11)
நெடுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டுஞ் (அகம்.289:3)

மணற்குன்றின் மேலுள்ள நடுகல் தெய்வத்தை வழிபடுவதற்காக அக்கல்லில் மயில்தோகைகளைச் சூட்டினார்கள். துடியை முழக்கி நெல்லால் ஆக்கிய கள்ளொடு செம்மறிக்குட்டியைப் பலி கொடுத்தனர் என்ற செய்தி குடவாயிற் கீரத்தனார் பாடல் மூலம் தெரிகிறது. *எழுத்துடை நடுகல்லில்* போரில் இறந்த வீரன் பெயரும், அதற்கான காரணமும் எழுதப்படு வது வழக்கம். இதுவே நடுகல்லின் சிறப்பாகப் பேசப் படுகின்றன. (Venkatasamy Nattar Urai.N.M, 2007)

சிறுதெய்வம் - பெருந்தெய்வம்

சிவன், பெருமாள், இராமர், கிருஷ்ணன், பார்வதி, சரசுவதி, இலட்சுமி போன்ற தெய்வங்கள் பெருந் தெய் வங்களாகவும், மாரி, காளி, துர்க்கை, வீரன், அய்யனார், பிடாரி, முனீசுவரன் போன்ற கடவுள் கள் சிறுதெய்வங்களாகவும் மக்கள் வழிப்பட்டார்கள். ***ஜான் மார்ஷல் சிந்துவெளி நாகரிகம் புதைவிடங்களிலி ருந்து இலிங்கங்கள் பலவற்றைக் கண்டுபிடித்தார் என்றும் டாக்டர் ஸ்டெயின் என்பவர் பலுசிஸ்தானப் பகுதியில் இலிங்கங்களைக் கண்டெடுத்துள்ளார் என்றும் கூறுவர். எனவே ஆரியர் இந்தியாவிற்குள் வருவதற்கு முன்பே இலிங்க வழிபாடு இந்தியாவில் இருந்தது.***

ஐந்திணை மக்களின் தெய்வங்கள்

பிழை மணத்தை ஒழித்து நன் மணத்தை அருளுக என்று தோழியும் தலைவியும் முருகன்பால் வேண்டு கின்றனர் என்கிறார் இளங்கோ. ***பிழை மணம் என்பது களவைக் குறிக்கும்; களவொழுக்கத்தைத் தவிர்த்து நாடறிந்த நன்மணமாகிய கற்பொழுக்கத்தை முடிக்க வேண்டும் என் பதே தோழியின் வேண்டுரை; களவைப் பிழை மணம் என்றதனால் களவு தீது என்பது தெளிவு என்கிறார் மகா வித்துவான் ரா.இராகவையங்கார்[6] (Manikkanar. V.Suba, 2007)***

மாயோன் மேய காடுறை உலகமும்...
சொல்லவும் முறையாற் சொல்லவும் படுமே(அகத்.5:1-6)

மாயோன் என்பது கருநிறத் திருமாலையும், காடு நிறைந்த நிலத்தையும், சேயோன் என்பது செந்நிற முரு கனையும், மேகங்கள் சூழ்ந்த மலைசூழ் நிலத்தையும், வேந்தன் என்பது இந்திரனையும் நீர்நிலைகள் நிறைந்த நிலத்தையும், வருணன் பொருந்திருக்கும் கடல் சார் பெருமணல் நிறைந்த நிலத்தையும் குறிப்பிடும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் போன்ற நிலங்கள் பற்றி யும், முல்லையும் குறிஞ்சியும் திரிந்த நிலை பாலை; பாலை நிலத்தின் தெய்வம் கொற்றவை. குறிஞ்சித்தி ணையில் *கொல்லிப்பாவை* என்றும் முல்லை, மரு தத் திணைகளில் *கானமர் செல்வி* என்றும் நெய்தல் திணையில் *குமரி* என்றும் வணங்கப்பட்டதாகச் சங்க இலக்கியங்கள் கூறுவதால் *தாய்த் தெய்வ வழிபாடா* கவும் கருதப்படுகிறது.

முருகன் - குறிஞ்சி

வரைவிடை வைத்துப் பிரிந்த காலத்துத் தலைவி ஆற் றாளாகத் தோழி தலைவனை இற்பழிப்ப, தலைவி இயற்பட மொழிந்ததும், தலைவன் இரவுக்குறி வந்து சிறைப்புறத்தானாக, தோழியாற் சொல்லெடுக்கப்பட்டுத் தலைவி கூறுவதாக இக்கூற்று அமைகிறது.

களநன் கிழைத்துக் கண்ணி சூட்டி...
முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்(அகம்.22:8-11)
முருகனை வழிபட, வேலனை அழைத்து வெறியா டும் களத்தினை அமைத்தனர். முருகன் வேலிற்கு மாலை சூட்டி வளம் பொருந்திய வீட்டில் ஒலியுண் டாக முருகனைப் பாடிப் பரவிப் பலி கொடுத்தான். அழகிய சிவந்த தினையினைக் குருதியுடன் கலந்து தூவி முருகனை வரும்படி அழைத்து வழிபட்டனர் என்ற செய்தி *வெறி பாடிய காமக்கண்ணியார்* பாட லடிகள் புலப்படுத்துகின்றன. திருமுருகாற்றுப்படையில் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, திருவேரகம் (சுவாமிமலை), பழமுதிர்ச்சோலை, திருத்தணி ஆகிய ஆறு இடங்களில் முருகன் கோயில்கள் சிறப்புற்றுள.

திருமால்-முல்லை

திருக்குறளில் *இல்வாழ்க்கை* அதிகாரத்தில் (குறள்:50) மனிதன் செய்கின்ற அறநெறியால் அவன் அடையும் நன்மைகளையும் தெய்வத்திற்கு ஈடாக மதிக்கப்படு வதையும் சுட்டிக் காட்டும் விதமாக அமைகின்றன.
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்[7] (குறள்.50)
உலகில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிற வன் வானுலகிலுள்ள தெய்வமுறையில் வைத்து மதிக் கப்படுவான் என்கிறது குறள் (Varatharasanar.M,1949) அகப்பாடல்களின் கருப்பொருள்கள் ஏழனுள் ஒன்று தெய்வம் என்கிறார் தொல்காப்பியர்.
தெய்வம் உணாவே மா மரம் புட்பறை (அகத். 20:1)
பிரிவின்கண் வற்புறுத்தும் தோழிக்குத் தலைவி கூறிய தும்,தலைவன் பிரிவால் வேறுபாடுற்ற தலைவி தானே தோழிக்குக் கூறுவது இக்கூற்று:
நேர்கதிர் நிரைத்த நேமியஞ் செல்வன்
போரடங்கு அகலம் பொருந்திய தார்போல்
திருவில் தேஎத்துக் குலைஇ உருகெழு[8] (அகம்.175:14-16)
ஆரங்கள் கொண்ட சக்கரப்படையுடைய திருமாலின் பகைவரின் போர் எண்ணம் அடங்குதற்குக் காரண மான மார்பிடத்தே பொருந்திய மாலைபோலப் பல நிறங்களைக் கொண்ட அழகிய வில்லை வளைத்துத் தோற்கடித்தான் என்ற செய்தி *ஆலம்பேரி சாத்தனார்* பாடலடிகள்மூலம் தெளிவாகிறது. (Venkatasamy Nattar Urai.N.M, 2007)

கொற்றவை - பாலை

மரம், செடி, கொடிகளும் பழங்களும் பெண்ணின் பிறப் புறுப்போடு தொடர்பு கொண்டவை. தந்திரத்தில் பயன் படும் பூரணகும்பம் இதன் அடிப்படையில் அமைந் ததே.கும்பமாகப் பயன்படும் குடம் பெண்ணின் கருப் பையைக் குறிக்கும். இதுவே காளிபூசையின் (துர்கா பூசை) அடிப்படை என்கிறார் *த. சட்டோபாத்தியாயா.* ***குலக்குறி அடையாளச் சின்னங்கள், இனக்குழு மக்களின் பாலுறவின் வெளிப்பாடு என்று சிக்மெண்ட் ஃபிராய்டு குறிப்பிடுகின்றார்.மரவழிபாடு தந்திரத்தோடு தொடர்புடை யது என்றும், அத்தந்திரம் பாலுறவின் அடிப்படையில் உருவானதுஎன்றும் சிக்மெண்ட்ஃபிராய்டின் கருத்து வலுப் பெறுவதை நம்மால் உணர முடிகிறது.[9]*** (Nedunchezhiyan. K, 1990)

பாலைநிலக் கடவுளாக கொற்றவை வணங்கப்படுகிறாள். மதுரையில் கொற்றவைக் கோயில் இருந்ததாகச் சிலப் பதிகாரம் கூறுகின்றது. பிரிந்த தலைவனும் தலைவியும் ஒன்று கூடும்போது மீண்டும் பிரியாதிருக்கக் கொற்றவை யின் வரம் வேண்டுதல் வழக்கமாக கருதப்படுகின்றன. கொற்றவை வழிபாடே பின்னாளில் சக்தி வழிபாடாக மாறி சைவக் கடவுளாக்கப்பட்டது எனமா.இராசமாணிக்கம் குறிப் பிடுகிறார். திராவிட மக்கள் ஏற்றிருந்த முதல் தாய்த் தெய்வ வழிபாடு கொற்றவை வழிபாடாகும். கொற்றவை கானமர்செல்வி, பாய்கலைப்பாவை போன்ற பெயர்க ளால் அழைக்கப்படுகிறாள். தாய்த் தெய்வம் வெற்றியின் நம்பிக்கைச் சின்னமாகவும், இனப்பெருக்கத்திற்கும், செல் வச் செழிப்பிற்கும் மூல முதற் கடவுளாகவும் தமிழர் களால் நம்பப்படுகிறாள்.[10] (Sedhuraman.G, 2017)

ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்[11] (கற்பு.144:9)

அச்சம் தரும் களவுக்காலத்தில் காவலாக இருந்து காத்த கடவுளைத் தோழி வணங்கியதைத் தொல்காப் பியர் விளக்குகிறார். தோழிக்குத் தலைவி கூறுவது இக்கூற்று அமைகின்றன. **(Ilampoornar**, 1953)

கானமர் செல்வி அருளலின் வெண்காற்
பல்படைப் புரவி எய்திய தொல்லிசை
நுணங்குநுண் பனுவற் புலவன் பாடிய[12] (அகம்.345: 4-6)
புகழ் வாய்ந்த கொற்றவை அருள் கூர்ந்து அளிக்க, வெண்ணிறக் காலினையும், பல படையினையும், உடைய குதிரைகளைப் பரிசிலாகப் பெற்றவனும், பழைமைப் புகழினையும், நுட்பமான செய்யுள்கள் பல இயற்றிப் பெருமை கொண்டவனும், புலவர் பெருமகனால் பாடிய சிறப்பினைக் கொண்டவனுக்கு அருள் தந்ததைக் *குடவாயிற் கீரத்தனார்* பாடல் உணர்த்துகிறது. (Venktasamy Nattar Urai.N.M, 2007)
வேந்தன் - இந்திரன் - மருதம்
நித்திரைப் பூமியிலே -சிவனார்
புகல ஆரம்பித்தார்[13] (பா.க.66:31-34)

சைவப்பற்று என்ற தலைப்பிலான பாரதிதாசன் பாடலில்,சிவன் நேரில் எழுந்தருளிக் காட்சியளித்துப் புதிதாகச் சிலவற்றைக் கூறிப் புகலத் தொடங்கியது இடம்பெற்றுள்ளது. (Pavendhar Bharathidasan, 1998)

கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்தினும் (கற்பு.148:4)
தலைவனுக்குத் துன்பம் நீக்கிக் காத்த தெய்வத்தை வணங்க வேண்டும் என்பதைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இல்லம் சென்ற தலைவன் தலைவி யிடம் யான் பரத்தையொடு புனலாடினேன் அல்லன் என்று கேட்ட பரத்தை தன் பாங்காயினார் கேட்பக் கூறும் விதமாக இக்கூற்று அமைகின்றன.
உயர்பலி பெறூஉம் உருகெழு தெய்வம்
புனையிருங் கதுப்பின் நீகடுத் தோள்வயின்
அனையேன் ஆயின் அணங்குக என்னென(அகம்.166: 7-9)
தலைவன் பரத்தையுடன் புனலாடவில்லை. அவை உண்மையென்றால் அச்சம் தரும் தெய்வம் வாழ்கிற

வேம்ர்த் தெய்வம் என்னை வருத்துவதாக என்று சூளுரைத்துத் தலைவன் தன் மனைவியைத் தெளிய வைத்ததை *இடையன் நெடுங்கீரனார்* கூறுகிறார்.

வருணன் - நெய்தல்

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் குறள்: 10 கடலின் சிறப்பினையும் இறைவனின் வணக்கத்தை யும் எடுத்துக் கூறுகின்றார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார் (குறள்.10)

இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தின் பிறவி யாகிய பெரியக் கடலை கடக்க முடியும் என்றும் மற்றவர்களால் கடக்க இயலாது என்கிறது குறள்.

அணங்கேவிலங்கே கள்வர்தம் இறையென[14] (மெய்ப்.252: 1)

அச்சச்சுவை தோன்றும் மெய்பாடுகளான தெய்வம் (அணங்கு), விலங்கு (சிங்கம், புலி, கரடி), கள்வர், இறை(மேலே உள்ளவர்-மேலாளர், பெற்றோர்,அரசர், அதிகாரி) ஆகியோரால் அச்சம் தோன்றும் என்கி றார் தொல்காப்பியர். (Ilampoornar, 2001)

தலைவன் தலைவியைக் காண இரவுக்குறி வந்தான். தலைவன் இரவு நேரத்தில் வருவதால் ஏற்படும் இடையூறினை எடுத்துக்கூறி பகல்வா என்று பகற் குறிக்குரிய இடத்தைக் கூறுவது இக்கூற்று. ***அணங் குடைப் பனித்துறை கைதொழு தேத்தி(அகம். 240:8)***

நெய்தல் நில மக்கள் சுற்றத்தாருடன் கூடித் தெய்வ மாகிய வருணனைக் கையால் தொழுது துன்பங் களை நீக்க வேண்டும் என்று வாழ்த்தி வழிபடுத லும், குறைகள் தீர்த்தால் நேர்த்திக்கடன் செய்தலும் மரபாகும். நீருண்ணும் குளிர்ச்சிமிகு துறையிலுள்ள தெய்வத்தைத் தாய் தன் தோழிமாருடன் தொழுது வழிபட்டதை *எழூஉப்பன்றி நாகன் குமரனார்* பாடல் சுட்டுகிறது.

கடல் தெய்வம்

மணமானபின் நிகழும் மெய்ப்பாடாய், தெய்வத்திற்கு அஞ்சுதலைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். ***தெய்வம் அஞ்சல் புரையறந் தெளிதல் (மெய்ப். 268:1)*** குல தெய்வ வழிபாடு அனைவரின் வாழ்க்கையிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. வாழ்வு சிறக்க வேண்டும் என்பதற்காகவும் பழி பாவம் நீங்கவும், குற்றங்குறை தொடராது காக்கவும் தெய்வத்தை வணங்கி அஞ்சி நடக்க வேண்டும் என்பது தமிழர் பண்பாடாகும். வீட் டின் உள்ளே தெய்வம் வாழ்வதாகக் கருதி விளக் கேற்றி வழிபடும் மரபும் கூறப்படுகிறது.

கடல்தெய்வம் காட்டிக் காட்டி[15] (சிலம்பு.கா.வ.5:2)

கரியகுவளை மலர் போலும் கண்களுடைய தலைவி யின் கரம் பற்றிக் கடல் தெய்வத்தைச் சாட்சியாக வைத்து சூளுரை கூறிய தலைவன் தீச்செயல் செய் வதை *இளங்கோவடிகள்* காட்டுகிறார். (Manikka vasagan. G, 1995)

பூக்கமழ் கானலில் பொய்ச் சூள் பொறுக்க என்று
மாக்கடல் தெய்வம் நின் மலர் அடி வணங்குதும் (சிலம்பு. கா.வ.51:3-4)

தலைவனின் பொய் வாக்குறுதிகளைப் பொறுத்தருள்க என்று பெருமை மிகு கடல் தெய்வத்தின் மலரடி பணிந்து வணங்குவோம்! 'பிரியேன்' என்று கூறிய தலைவன் பிரிந்துச் சென்றான். பொய்யுரையானதால் பொய் சொன்னவரைப் பொறுத்தருளத் தெய்வத்தை வணங்க வேண்டும் என்றக் கருத்து ***பிழை பொறுக்க வேண்டுவோம்*** என்ற தலைப்பில் இளங்கோவடிகள் பாடலடிகள் மூலம் அறியலாம்.

முடிவுரை

பழங்காலம்முதல் இக்காலம்வரை மக்கள் தெய்வ நம் பிக்கைக் கொண்டு தனக்கு மீறிய ஒரு சக்தி இருப்ப தாகக் கருதி தெய்வங்களை வணங்கி வழிபட்டுவரு கின்றனர். மக்களின் பண்பாட்டிற்கு அடிப்படையான தெய்வ வழிபாட்டினால் வாழ்க்கையில் நம்பிக்கை ஏற்படுகிறது. வழிபாடுமூலம் மக்களிடையே ஒற்றுமை நிலவுகிறது. ஏற்றத்தாழ்வுகள், தீங்குகள், அச்சம் நீங்கு கின்றன. மக்களின் தேவைகள் நிறைவேறுவதால் மனத் திற்கு மகிழ்ச்சியும் அமைதியும் கிடைக்கின்றன. வாழ்க் கையில் அன்பு பெருகி, வளமை நிலைபெறுகிறது. தெய்வங்கள் ஐந்திணை மக்களின் வாழ்க்கை முறை களிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. தெய்வத்தின் அருளே மக்களின் செயல்பாடாக வெளிப்படுகிறது என்பன தெளிவாகின்றன.

References

Kanagalakshmi.S,Thevira.,(2011)Thamizharvalviyal (Part - I), Nanthini Publication,Chennai.

Subramanian.N.,(1986) Sanga Kala Vazhvial, NCBH, Chennai.

Kaliyaperumal.K.,(1997)Ulagath Tamilar Panpattu Kalanjiyam, Vallalar Anbu Nilayam, Malaysia.

Ilampooranar Urai., (1953) Tholkappiyam-Porulathikaram (Part-I) Agathinaieyal, Purathinaieyal, The South India Saiva Siddhanta Works Publishing Society,Tinnevelly Ltd,Chennai.

Venkatasamy Nattar Urai.N.M.,(2007),Akananooru-Kalitriyanai nirai,Tamilman Publications House, Chennai.

Manikkanar.V.Suba., (2007), Tamil Kadhal, Saratha Publication, Chennai.

Varatharasanar.M., (1949), Thirukkural Thelivurai, The South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai.

Venkatasamy Nattar Urai.N.M.,(2007), Akananooru - Manimidai Pavalam,Tamilman Publications House, Chennai.

Nedunchezhiyan.K.,(1990),Tamil Ilakiyathi Ulakaytham, Pari Nilayam, Chennai.

Sedhuraman.G.,(2017),Thamizhaga Samudhaya Panpattu Kalai Varalaaru, NCBH, Chennai.

IlampoornarUrai.,(1953), Tholkaapiam-Porulathikaram (Part-II), (Kalaviyal, Karpiyal, Poruliyal The South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai.

Venkatasamy Nattar Urai.N.M.,(2007), Akananooru Nithilakovai, Tamilman Publications House, Chennai.

Pavendhar Bharathidhasan.,(1998),Bharathidhasan Poetry Muluvathum, Manivasakar Publication,Chennai.

Ilampoornar Urai.,(1953),Tholkaapiam - Porulathikaram (Part-III), (Meipattiyal,Uvamaieyal, Seiyuliyal,Marapiyal),The South India Saiva Siddhanta Works Publishing Society,Chennai.

Manikkavasagan.G.,(1995), Silapathikaram Theliurai, Uma pathippagam, Chennai.

ISSN 2320-4842

ராஜம் கிருஷ்ணனின் மாறி மாறிப் பின்னும் புதினத்தில் பெண்ணியச் சிந்தனைகள்

ரா. மீனா
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு 637 205

நெறியாளர்: முனைவர் ந. கமலஹாசன்
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம் 637205
(இணைவு: பெரியார் பல்கலைக்கழகம்

முன்னுரை

பெண்களின் சமத்துவத்தையும் முன்னேற்றத்தையும் வலியுறுத்துவதோடு பெண்களை அடிமைத் தளையினின்றும் விடுவிப்பது முதலிய பெண்ணுரிமைச் சிந்தனைகளில் கவனம் செலுத்தியவர் ராஜம்கிருஷ்ணன். இருபதாம் நூற்றாண்டில் எழுத்துவேள்வியைத் தொடங்கி இந்த நூற்றாண்டிலும் சாதனை படைத்த இணையற்ற பெண்மணி இவர். பிற பெண்களின் காதல் கதைகளும் குடும்பக் கதைகளும் படைத்துக் கொண்டிருந்த காலக்கட்டத்தில் நேரடியாகக் களத்திற்குச் சென்று, தகவல் திரட்டிப் புதினங்கள் எழுதியவர் இவர். இவரது கதைகளில் புனைவு களைவிட ஆய்வுப் பார்வையும் சமுதாய நோக்குமே மேலோங்கி இருக்கும். இவரது புதினங்களில் அமைந் துள்ள *பெண்ணியச் சிந்தனைகள்* குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குடும்பம்

குடும்பம் என்றவுடன் நம் நினைவுக்கு வருபவர்கள் பெண்களே. பெண்கள் இல்லையென்றால் குடும்பம் என்ற ஓர் அமைப்பே இல்லாமல் போய்விடலாம். சிதைவுபடலாம். குடும்பத் தலைவனாக ஓர் ஆணைக் கருது கிற முறை இருந்தாலும், குடும்பப் பொறுப்புகளை அதிகமாகச் சுமப்பவள் குடும்பத் தலைவியான பெண் மட்டுமே. அப்படிப்பட்ட குடும்பங்கள் பெண்களுக்கு ஓர் பெரும் சுமையாகவே உள்ளன. மனிதகுலத்தில் தோன்றிய மிகப்பெரிய பொக்கிஷம் பெண். அவள் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும். இதனை,

மங்கையராய் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா என்கிறார் கவிமணி.

குடும்பத்தில் பெண்களின் நிலை

கூடி வாழும் ஒரு சமூக விலங்கு என மனிதனைக் குறிக்கலாம். அவன் கணவன், மனைவி, குழந்தை, பெற் றோர் என்று கூடி வாழும்போது அவ்வமைப்பைக் குடும்பம் என்கிறோம். இன்றைய சமுதாயத்தில் குடும்ப பாரம் என்பது பெருமளவு பெண்களைச் சார்ந்ததாகவே உள்ளது. வீட்டு வேலைகள் அனைத்தையும் பெண் களே செய்ய வேண்டும் என்ற நிலை உள்ளது. இக்குடும்பச் சூழலில் அம்மா, மனைவி, மகள், அக்கா, தங்கை, மாமியார், மருமகள், அண்ணி, நாத்தனார் எனப் பல நிலைகளில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனை களை ராஜம்கிருஷ்ணன் புதின மாந்தர்வழி அறியலாம்.

மாறிமாறிப்பின்னும் புதினம்வழி ராஜம் கிருஷ்ணன், ரேவு எனும் கதாபாத்திரத்தின் மூலம் குடும்பத்தில் பெண்களின் நிலை குறித்து, ***பதின்மூன்று வயசில் இவளைக் கல்யாணம் என்று கயிற் றைக் கட்டி, மாமியாருக்கும் பாட்டிக்கும் சேவை செய்ய, மலஜலம் எடுக்க, புருஷனுக்கு ஈடுகொடுக்க என்று பூட்டி வைத்தார்களே, அப்போது வந்ததா? நடுத்தெருவில் வந்து விழுந்திருக்க வேண்டிய பூவை, அலையவிடாமல் நிழல் தந்து, அடுத்த வேளைச் சோற்றுக்கு அலைய விடாமல் 'பாதுகாத்தார்களே', அதனால் வந்ததா? இவளுக்கு ஒரு குடும்ப 'அந்தஸ்து', இன்னார் வீட்டு மாட்டுப்பெண் என்று, தாலியும் குங்குமுமாக, குருமடத்தில், சாதிக்குரிய சேலைக் கட்டுடன் 'உயர்சமூகம்' அங்கீகரிக்கக்கூடியதே, அப்போது வந்ததா? அவனும் பஞ்சகச்சம் உடுத்தி, வேசம் பூண்டு, உத்தம புருசனாக, இவளுக்குப் புரியாத மந்திரங்களைச் சொல்லி இவளுடன் சுவாமிகளைவிழுந்து பணியும்போது, இவள் இவன் 'சகதர்மிணி'யாக அந்த வீட்டின் 'தலைவி' என்ற பொறுப்பில், இன்னமும் தன்னைப் பொறுப்புள்ள வளாக உயர்த்திக் கொண்டாளே! இரண்டு பிள்ளை களைப் பெற்ற தாய் என்று குருட்டு வட்டத்தில் செக்கு மாடாகச் சுழன்றிருக்கிறாள்?*** என்று குறிப்பிடுகிறார்.

இல்லறச் சுமை

இல்லறத்தில் பெண்கள் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் அடையும் துன்பங்களை இல்லறச்சுமை எனலாம். பெண்கள் உரிமைகள் அவர்களுக்கில்லை. சமூக அநீதிகளால் சமுதாயத்தின் ஓர் அங்கம் எனக் கருதப்பட் டாலும் அவர்கள் அடிமைப் பெண்களாய் வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இல்லற வாழ்வில் சமைய லறைகள் பெண்களுக்கென்றே ஒதுக்கப்படுவது தவறாகும்.

மாறிமாறிப் பின்னும் புதினத்தின் கதைமாந்தர் ரேவு என்கிற ரேவதியை ராஜம்கிருஷ்ணன் அறிமுகப்படுத்தும் விதம் மூலம் பெண்ணின் இல்லறச் சுமையைக் காட்டுகிறார். சமையலறையிலே அவள் உறைந்துபோகி றாள் என்பதற்கு, ***அடுப்படியை நன்றாகத் துடைத்து, ஒழிந்த பாத்திரங்களை ரேவு, தொட்டி முற்றத்தில் போடு கிறாள். கணவனும் இரண்டு பையன்களும் சாப்பிட்ட எச் சில் தட்டுகள் குழம்புக் கற்சட்டி. மாவு கரைத்த பாத்திரம், இன்னும் தொட்டுத் தொடாத தம்பளர், கிண்ணம் என்று எல்லாவற்றையும் சுத்தம் செய்கிறாள். மணி பத்தடித்து விட்டது. காலையில் நாலரை மணிக்கு எழுந்ததிலிருந்து பத்தடிக்கும் வரையிலும் மூச்சு விட முடியாது*** என்று விளக்குகிறார்.

ஆணாதிக்கம்

ஆணாதிக்கம் என்பது பெண்ணடிமைத்தனம் என்று தான் கூற வேண்டும். ஏனென்றால் ஆண்கள் தம்மை உயர்ந்தவர்கள் என்றும் குடும்பப்பொறுப்பு அனைத் துமே தமது கண்ணோட்டத்தில்தான் நடக்க வேண்டும் என்றும் எந்த முடிவாயினும் அதனை ஆண்களின் அனுமதியோடுதான் எடுக்க வேண்டும் என்று பலவித மான கட்டளைகளை விதித்துக்கொள்கிறார்கள். இத னால் பெண்கள் தம் வீட்டில் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

அலுவலகத்தில் ஒரு பெண் வேலை செய்வதைவிட சம்பளம் இல்லாமல் வீட்டில் பத்து மடங்கு உழைக்கி றாள். ரேவுக்குக் கழுத்தைப் பிடிக்கும் வேலைகள், வீடு நிறைந்த குடும்பத் தொல்லை. பதின்மூன்று வயதிலே திருமணமான இவளுக்கு சுகம் என்பதே கிடையாது. இவள் பெற்றெடுத்த இரண்டும் ஆண்வருக்கம். ஒரு பெண் குழந்தை பிறக்கக் கூடாதா? என வருந்துகி றாள். தன் மகன் பரத் தீயவர்களுடன் பழகுகிறானோ என்று ஐயம் அவளுக்கு ஏற்படுகிறது. இதை பரத் திடம் கேட்க, அவன் கோபித்துக்கொண்டு சாப்பிடா மல் உறங்கிவிடுகிறான். இந்நிகழ்வை ரேவு கணவனிடம் கூற அவன். ***ஏண்டா, ராத்திரி சாப்பிடாமப் படுத்திட் டயா? உடம்பு என்னத்துக்காகறது? உங்கம்மாலே கோபிச் சுக்கோ, சோத்து மேல், கோபிச்சுக்கக் கூடாது. பொட் டைக் குட்டிகள்தான்சாப்பாட்டில் கோபம் காட்டி உடம்பை மெலியப் போடணும் உனக்கென்ன, நல்லாச் சாப்பிட்டு வஸ்தாது மாதிரி ஆகணும் என்ன?*** என்று கூறுவது, ஆணாதிக்கத்தின் வெளிப்பாடாக ராஜம்கிருஷ்ணன் *மாறி மாறிப்பின்னும்* புதினத்தில் சித்திரிக்கின்றார்.

ரேவுவின் தந்தை, அம்மாவை நடுவீதியில் அடித்து விரட்டினாரே இதை எவரும் தவறு என உணரவில்லை. தன் கணவனைப் போன்று தந்தையும் ஆணாதிக்கத் தின் அடையாளமாகவே காண்கிறாள். இறைவழிபாடு, இறைபக்தி என்று இருக்கும் இவர்கள் பெண்ணை மதிக்க வேண்டும் என்பதை மட்டும் ஏன் உணரவில்லை. இந்த சாமி, மதம், பூசை எல்லாமே பொய் என்று நினைக்கிறாள். வேரோடிப்போன ஒரு நச்சுக்களையை ஆட்டிப் பிடுங்கிப் போடுவது போல் தோன்றுகிறது. இதனை ராஜம் கிருஷ்ணன், ***கட்டினப் பெண்டாட்டி, கண்ணில உசிரைவச்சிண்டு,இவருக்குச் சமைச்சுப் போட்டு, அஞ்சாறு பிள்ளையப் பெத்து, வாயைத் திறக்காமல் தியா கம் பண்ணினாளே, அவளை மனசோடு அடிச்சு விரட் டினஒருத்தனைநியாம்னுஏத்துண்டு பாராட்டும் குருமடம்.... என்ன குரு, என்ன சாமி! எனக்கு அங்கே போனாலே ஆத்திரமா வரும். அப்பாவை அங்கே கண்டாலே வெட் டிடணும்போல இருக்கும். இப்பவும் காசி மடத்துல இருக் காராம்*** என்று கூறுவது ஆணாதிக்கத்தின்மீது கொண்ட கோபத்தின் வெளிப்பாடாக அமைந்துள்ளது.

தன்னை அடிமையாக நினைத்து அடக்கியாளும் தன் கணவன் வேறொரு பெண்ணிடம் அடிமையாக இருப் பதை நினைத்து மகிழ்கிறாள். இதனை ரேவுவின் வாயிலாக. ***கட்டினவன் மிருகம்னு வந்தவள், இன்னொரு மிருகத்தை அடக்கி ஆளுறாளா? உள்ளூற ஒரு மகிழ்ச்சி உண்டாகிறது. ஒரு பெண்ணாய்ப் பிறந்தவள், மேல் அதி கார பதவியில் இருந்து, எல்லா வளையங்களையும் தூக்கி எறிந்து விட்டு... இவனுடைய அகங்காரத்தை அவள் குத்த வேணும். அந்தக் குந்தலை அவன் இவளிடம் வந்து காட்டினாலும் பொறுத்துக்கொள்ளலாம். அவன் குத்துப் பட வேணும். தன் மேல் விழுவது தூசி, அபகீர்த்தின்னு தெரிஞ்சும் பொருட்படுத்தாமல் தைரியமாக, துணிச்சலாக அவள் நடக்கிறான்னா, அது ஆச்சரியம் தான் சுதா...*** என *மாறிமாறிப்பின்னும்* புதினத்தில் ஆசிரியர் கூறு கிறார்.

கணவன்-மனைவி உறவு நிலை

குடும்பத்தில் அன்பு, ஆதரவு, பாதுகாப்பு. வலிமை போன்றவற்றை மனைவி, கணவனிடத்து எதிர்பார்க் கிறாள். கணவன், மனைவியிடம் காதல், மென்மை, ஈடுபாடு, உதவி போன்றவற்றை எதிர்பார்க்கின்றான். குடும்பத்தில் குழந்தைகள் பிறந்தபின் இந்தப் பிணைப்பு மேலும் வளர்கின்றது.

உலகில் முதன் முதலில் தோன்றிய உறவு கணவன்-மனைவி உறவாகும். குழந்தைப்பேறு கணவன்-மனைவி உறவை அடையாளப்படுத்துகின்றது. இத்தகு நெருக்க மானபிணைப்புள்ள கணவன்-மனைவி, தந்தை-மகன், தந்தை-மகள், தாய்-மகள், தாய்-மகன், அண்ணன்-தம்பி, அண்ணன்-தங்கை ஆகிய உறவுகள் குடும்பத் தின் முதல் நிலை உறவுகள் ஆகும். இதற்கு அடுத்த படி, மாமியார்-மருமகள், மாமனார்-மருமகள் அண்ணி -நாத்தனார். மாற்றாந்தாய்-மகள் போன்றவை இரண் டாம் நிலை உறவுகளாகும்.

இத்தகைய குடும்ப உறவின் இணைப்புப் பாலமாகத் திகழ்வது கணவன்-மனைவி உறவு நிலையே ஆகும். இருவருக்குமிடையே அன்பு, பொறுமை, நம்பிக்கை. விட்டுக்கொடுத்தல், நிதானம் இப்பண்புகள் இல்லை யென்றால் கணவன்-மனைவி உறவில் விரிசல் ஏற் படும். இதனால் குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப் படும். இதை உணர்ந்த குடும்பப் பெண் கணவனின் உரிமை மீறிய செயல்களைக் கண்டு விட்டுக்கொடுக்

கிறாள். இதனை, ***அவன் ஒண்ணும் அப்படிச் சொல்ல மாட்டான்!....ஏய் நீ போற போக்கு சரியில்ல. உன் மாமா, தகப்பனாருக்குச் சமானம், அவன் ஜீவன்னு பேசற? உங் கப்பாவும் உன்னைத் தண்ணீரைத் தெளிச்சி விட்டிருக் கிறார். போன மாசமே ஒரு நாள் உன் ட்ரௌசர் பாக் கெட்டில் இருந்து சின்ன நெருப்புப்பெட்டி கண்டுபிடிச் சேன். உன் உதடெல்லாம் கறுத்துக் கிடக்கு. நீ எங்கிட்ட நோட்ஸ் வாங்க ணும் அது இதுன்னு பணம் கேட்பதும் அதிகமாயிட்டது. நீ எங்கே போறே யாரிட்டப் பழகறே, எதுவும் தெரியலே...***

உண்மையில்,தன் ஆற்றாமையில் அழுகையே வந்து விடும்போல ரேவு புலம்புகிறாள். ரேவுவின் இயலா மையை *மாறிமாறிப்பின்னும்* புதினத்தின்வழி ஆசிரி யர் குறிப்பிடுகிறார்.

முடிவுரை

சமூகத்தில் ஆணாதிக்க உணர்வே பெண்ணின வளர்ச் சிக்குத் தடை. வீட்டில் மணமான பெண்ணின் உழைப்பு சுரண்டப்படுவதைப் போன்று அவர்கள் பணிபுரியும் இடங்களிலும் உழைப்பு சுரண்டப்படுகின்றது. ஆண், பெண் எனும் வேறுபாடு பிறப்பில் மட்டுமன்றி உழைப் பிலும், ஊதிய விகிதத்திலும் காணப்படுகிறது.

கல்வியறிவு இருந்தால் பெண்கள் தமது அறிவாலும் திறமையாலும் வாழ்வில் ஆண்களுக்கு நிகராக முன் னேற முடியும். சமூகத்தில் பெண், கல்வி கற்று தன் வாழ்வைத் திட்டமிட்டு, ஆண்களுக்கு இணையாக உழைத்து வாழ்வில் என்றும் வெற்றி பெற இயலும் என்ற ராஜம் கிருஷ்ணனின் சிந்தனை குறிக்கத்தக்கது

பார்வை நூல்கள்

1. தொல்காப்பியர். தொல்காப்பியம் பொருளதிகாரம்;.
2. இரா.பிரேமா, பெண்ணியம்.
3. பாரதியார், பாரதியார் பாடல்கள்.
4. பாரதிதாசன். பாரதிதாசன் கவிதைகள்
5. பெரியார். பெண் ஏன் அடிமையானாள்?
6. திருவள்ளுவர், திருக்குறள்.
7. சரளா. இராசகோபாலன், பேராண்மையாளர்களின்

53ஆம் பக்கத் தொடர்ச்சி

சில தமிழ் நூல்களை மொழிபெயர்ப்புகள் என்ற சிலர் கூறியபோது அவை மூலநூல்களே என்பதைச் சான்றுகளோடு எடுத்துக்காட்டினார். தமிழிலிருந்து வடமொழிக்குப் போயிருக்கிற நூல்களும் கருத்து களும் பல உண்டு என்பதையும் தெளிவாக்கினார்.

வடமொழி நூல்களை எழுதிய பலர் தமிழர் என்ப தையும் இங்கிருந்து அங்கே சென்றவற்றை இருட்ட டிப்புச் செய்வதும் அங்கிருந்து இங்கு வந்ததை மறுப் பதும் உண்மையான ஆராய்ச்சி நெறியல்ல என்று வற்புறுத்தினார். எவையெவை தாக்க ஆய்வுக்கும் இணைவரை ஆய்வுக்கும் ஏற்றவை என்ற பல தலைப்புகளைப் பட்டியலிட்டுக் காட்டியிருக்கிறார். இவரால் வளமுற்ற தமிழ் பிற்காலத்தில் மகாகவி பாரதியால் மறுமலர்ச்சி கண்டது. தெ.பொ.மீ. அவர்களால் தமிழுக்கு மரியாதையும் அபிமானமும் பெருகியது.

தமிழ் இலக்கணத்தை மொழியியல் நோக்கிலும் இலக்கியங்களை அறிவியல் நோக்கிலும் அணுகி ஆராய்ந்தவர். சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், பாரதியின் கவிதைகள் ஆகியவற்றுக்குப் புது விளக் கங்களைக் கொடுத்தவர். தேசப்பற்று, உயர்ந்த உள்ளம், எளிய தோற்றம், பன்மொழிப்புலமை, ஆரவாரமில்லாத அமைதியான ஆற்றல், வரம்பு கடந்த தாயன்பு அதற்குரிய வடிவம் தெ.பொ.மீ. என்கிறார் முனைவர் க. சிவகாம சுந்தரி. எத்தனை எத்தனை திறனாய்வு நூல்கள் தமிழில் தோன்றினாலும் *கானல்வரி* என்ற ஒப்பற்ற நூல் குன்றின்மேல் இட்ட விளக்காக ஒளி வீசிக்கொண்டே இருக்கும் என்பதில் ஆய்வுலகத்தில் முதல்அடிஎடுத்து வைக்கும் எவர்க்கும் ஐயமில்லை.

தெ.பொ.மீ.அவர்களின் ஆராய்ச்சி முடிவுகள் அறிவி யலை அடிப்படையாகக் கொண்டதால் முடிவுகள் தவறுதலாக இருக்குமா என்பதை நாம் எண்ணித் துணிய வேண்டும்.

பார்வை நூல்கள்

1. மயிலை சீனி வேங்கடசாமி, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் (1800 - 1900), பரிசல் புத்தக நிலையம், சென்னை, முதல் பதிப்பு 2012.
2. 20ஆம் நூற்றாண்டுத் தமிழ்த் திறனாய்வாளர்கள்- பதிப்பாசிரியர் முனைவர் ப. மருதநாயகம், முனைவர் சிலம்பு. நா.செல்வராசு, முதல் பதிப்பு, திசம்பர் 2005, காவ்யா வெளியீடு.
3. வழக்கறிஞர்கள் வளர்த்தத் தமிழ்-ஆசிரியர் பின்னத்தூர் மு. விவேகானந்தன், அன்னை வெளியீடு, திசம்பர், 2003.
4. பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ.- ஒரு திறனாய்வு-தொகுப்பு மா.ரா. இளங்கோவன், முதல் பதிப்பு 2013, அருள் பதிப்பகம்.

The same stream of life that runs
through my veins night and day runs
through the world and dances in rhythmic measures.
It is the same life that shoots in joy
through the dust of the earth in numberless blades of grass and
breaks into tumultuous waves of leaves and flowers.

- Rabindranath Tagore

ISSN 2320-4842

நற்றிணை உணர்த்தும் வாழ்நெறி விழுமியங்கள்



ப. நீலாவதி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத் துறை, ஏ.வி.சி. கல்லூரி (தன்னாட்சி), மன்னம்பந்தல், மயிலாடுதுறை
(இணைவு: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

முனைவர் இரா. கௌரி
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை, ஏ.வி.சி. கல்லூரி (தன்னாட்சி), மன்னம்பந்தல், மயிலாடுதுறை (இணைவு: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

ஆய்வுச் சுருக்கம்

மனிதன் அறத்தை அகவாழ்விலும் புறவாழ்விலும் கடைப்பிடித்தால் அவன் வாழ்வு செழுமையுறும். எனவேதான் சான்றோர்கள் அறத்திற்கு உயர்வளித்தனர். அறம் செய விரும்பு, அறத்தால் வருவதே இன்பம், மற்றெல்லாம் புறத்த புகழும் இல் என்பன போன்ற வாழ்நெறி அறிவுரைகள் கூறும் அறநூல்கள் எழுந்தன. நற்றிணையில் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத உயர்ந்த சிந்தனைகள் இடம்பெற்றுள. இக்கட்டுரையில் அகம், புறம், அகப்புற விழுமியங்கள் பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. மேலும் மெய்ப்பாடுகள், காதல் (இன்ப ஊடகம்), இல்லறம் இவற்றின் தாக்கங்கள் நற்றிணைவழி, ஆண், பெண் இணை விழைவு, புரிந்துணர் தன்மை எவ்வாறு அமைந்துள என்பதை இக்கட்டுரை விளக்குகிறது. தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் உடலாலும் மனத்தாலும் தீங்கு நேரா வண்ணம் வாழ்வை நகர்த்திச் செல்லும் வழிமுறையைக் கற்றுக் கொடுப்பனவற்றை வாழ்நெறி என வரையறுக்கலாம். அகம், புறம் எனும் இரு திணையிலும் வாழ்வின் மிக முக்கியமான பண்புகள் விவரிக்கப்பட்டுள. அவற்றையும் இக்கட்டுரை விளக்குகிறது.

விழுமியம்

ஒருவனின் உயர்ந்த குணங்கள், பண்பு நலன்கள், நம்பிக்கைகள், காதல், வீரம், அவன் மேற்கொள்ளும் அறங்கள் இவற்றைக் குறிப்பதே விழுமியம் எனலாம். *விழு* என்னும் வேர்ச்சொல்லிலிருந்து *விழுமியம்* எனும் சொல் உருவாகியுள்ளது. சிறப்பு, உயர்வு, மேன்மை முதலிய பொருள்களில் *விழு* தொல்காப்பியத்தில் ஆளப்பட்டுள்ளதை, ***விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும் (தொல்: சொல்: உரி: 55)*** என்னும் நூற்பாவால் அறியலாம். விழு எனும் சொல் ஓர் இடத்திலும், விழுமியது என்ற சொல்லை மற்றோர் இடத்திலும் ஆண்டுள்ளது தொல்காப்பியம்:

தலைவரும் விழுமநிலை
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்
வேற்றுநாட்டு அகல்வயின் விழுமத்தானும்
தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும் (தொல்: பொருள்: 42)

இவ்வாறே சங்க, சங்க மருவிய இலக்கியங்களிலும் பின்வருமாறு *விழு* என்பதன் அடியாகத் தோன்றிய பல்வேறு சொற்கள் இடம்பெற்றுள்ளன.

வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து (புறம்:27)
நின்உறு விழுமம் களைத்தேன்
தன்உறு விழுமம் நீத்துமோ எனவே (அகம்:170)

வேண்டினும் நன்று மற்றென்று விழுமியேர்
காண்தொறும் செய்வர் சிறப்பு (நாலடி:159)

அக விழுமியங்கள்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையினை எடுத்துரைப்பனவாக சங்க அகப்பாடல்கள் அமைந்துள்ளன. இல்லற விழுமியங்கள், காதல், களவு, கற்பு, இன்பநிலை, மெய்ப்பாடுகள் போன்றவற்றை அகப்பாடல்களிலிருந்து அக விழுமியங்களாக நாம் பெற முடிகிறது. மனித வாழ்வில் மிக முக்கியமான பெண்ணுடல் ஆணின் இன்பத்துய்ப்பிற்கான பொருளாக உள்ளது. பெண் தன் காமவிழைவை வெளிப்படுத்தலாகாது என்பது தொல்காப்பியம் முதல் அனைத்து நூல்களும் வலியுறுத்துகின்றன.

இன்ப - ஊடகம் (காதல்)

பெண் உடல், இன்ப ஊடகமாக நெடுங்காலமாகப் பார்க்கப்படுகிறது. இன்பத்துய்ப்பு குழந்தைப்பேற்றுடன் கூடியதாக வலியுறுத்தப்படுகிறது. மறு உற்பத்தி சாத்தியமில்லாத இன்பத்துய்ப்பு இயற்கையானது அல்ல என மறுக்கப்படுகிறது. பெண் எந்த நிலையிலும் தனித்துச் செயல்பட இயலாத சூழலுக்கும் பால்சார்ந்த அவள் உடலே

காரணமாகிறது. பெண் உடல் பல நேரங்களில் ஊட கப் பரிமாற்றங்களுக்காகவும் விநியோகத்தின் இச்சைப் பொருளாகவும் காண்பிக்கப்படுகிறது.

சூருடை நனந்தலைச் சுனை நீர் மல்க
மால்பெயல் தலைஇய மன்நெடுங் குன்றத்துக்
கருங்கால் குறிஞ்சி மதன்இல் வான்பூ
ஓவுக்கண் டன்ன இல்வரை இழைத்த (நற்:268)

ஒளித்து இயங்கும் மரபின் வயப்புலி போல,
நல்மனை நெடுநகர்க் காவலர் அறியாமைத்
தன்நசை உள்ளத்து நம்நசை வாய்ப்ப,
இன்உயிர்குழைய முயங்குதொறும் மெய்ம்மலிந்து(அகம்: 22)

களவு

முற்றத்தில் வெண்மணல் பரப்பியுள்ளனர். வேலனை அழைத்துக்கழங்குக் காய்களைக் கொண்டுதலைவிக்கு ஏற்பட்ட மாற்றங்களுக்கான கராணத்தைக் கூறுமாறு தாய் கேட்கிறாள். நம் தலைவன்ஊரிலுள்ள வீடுகளில் குறிஞ்சி மலர்களை நுழைவாயிலில் கட்டிவைத்துள்ள னர். அவ்வூரில் பெரிய தேனடைகளுக்குத் தேவையான அளவு அப்பூக்களிலே ஊறிக்கொண்டுள்ளது. அத்தகு கைய ஊரிலிருந்துவருகிற தலைவன் நாம் அன்பால் கொண்ட காதலை எக்காரணத்தாலோ உணரவில்லை. இது எதனால் என்று வெறியாடும் வேலனைக் கேட் போம் எனத் தாய் புலம்புகிறாள்.

வெறியாடிய இரவில் சந்தனமரச்சாரலில் தலைவன் இரைக்காக யானையைத் தேடும் பார்வையுடன் பதுங் கிப் பாய வல்ல புலியைப்போல நம் மனையின் காவலர்கள் அறியாதவாறு வந்து இன்ப ஆசையை நிறைவேற்றித் தழுவியதால் துன்பம் நீங்கிய என்னைக் கண்டு வெறியாடிய வேலனால் இவன் துன்பம் நீங் கிற்று என்கின்றனர். இதை நினைத்து எனக்குச் சிரிப்பு வருகிறது என்று தோழியிடம் தலைவி கூறியது இப் பாடல்.

தலைவியின் காமநோய்க்கு மருந்து தலைவனே எனத் தெரியாமல் வெறியாட்டு வேலனை அழைக் கிறாள் என்றும் தலைவி கூறும் இடம் காமத்தினை வெளிப்படையாகக்கூறுகிகிறது. இணைவிழைவு இருவ ரின் உடல் உணர்வுகளுக்கு முக்கிய இடம் அளிப் பதை உணரலாம். ***காதல் செய்தும் காதலம் அன்மை*** என்ற தொடரில் காமக்கண்ணியார் காமம் ஒருதலை யால் இன்னாது காமம் என்பதையும் காதல் இருவர் காமத்திற்கும் மதிப்புக் கொடுப்பதில் உள்ளது என்ப தையும் வெளிப்படுத்துகிறார்.

தலைவியின் இன்பத் துய்ப்பு இயற்கையோடு தன் னைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் முன் வைக்கப்படு கிறது. ***தன்னறு வேட்கையைக் கிளத்தல் பெண்ணுக்கு இல்லை*** என்ற கருத்து பலரின் மத்தியில் தன் காம நோய்க்குக் காரணம் தலைவன் என்று சொல்வேன் என்பதால் நூற்பாவின் கருத்தைக் கட்டுடைக்கிறது.

காமத்தை வெளிப்படுத்தலும் பெண்பாற் புலவரின் துணிவைக் காண முடிந்தாலும் இவர் தன் காமத்தை பகிரங்கப்படுத்தினாலும் ஆணின் முயக்கத்திலிருந்து பெண்ணினை எல்லைப்படுத்துகிறார்.

கற்பு

கற்பு சிறந்தது என்றும் திண்மை, நிறை இரண்டு சொற்களும் கற்பைக் குறிக்கிறது என்றும் தொல்காப் பியம்வழி அறியலாம்.

உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புசிறந் தன்று (தொல். பொருள்: 111). இதனையே நற்றிணைப் பாடல் இப்படிக் கூறு கிறது:

துறந்தோர் தேஎத்து இருந்து நனிவருந்தி
ஆர்உயர் அழிவது ஆயினும் நேரிழை!
கரத்தல் வேண்டுமால் மற்றே பரப்புநீர்த்
தண்ணம் துறைவன் நாண (நற்:382)

தலைவனைப் பிரிந்த தலைவி ஒரு தனியிடத்திலே இருந்து வருந்தினாலும், தனது அருமையான உயிரே போவதாயினும், சிறந்த ஆபரணங்களை அணிந்த கற்புடைய மகள் தன் துன்பத்தை மறைத்துக்கொள்ள வேண்டும்; இன்றேல் குளிர்ந்த நீர்த்துறையையுடைய தலைவன் நாணமடையும்படி பகைவரால் இகழப்படும் பழி அவன்மீது அமர்ந்து விடுவதாக விவரிக்கிறது.

இணை விழைவு - மெய்ப்பாடுகள்

கூழை விரிதல் - கதொன்று களைதல்

நற்றிணையில் இணைவிழைவு மெய்ப்பாடுகளில் கூந் தல் முக்கிய இடம் வகிக்கிறது. தலைவியின் உள்ள உணர்வு நெகிழ்வாலும் வேட்கை மிகுதியாலும் உணர்வு மிக்க மயிர்க்கால்களைக் கொண்ட தலைவியின் கூந் தல் நெகிழ்வடையும். இது கூழை விரித்தல் என்று கருதப்படுகிறது. இத்தகைய களவு மெய்ப்பாடுகள் பரத்தையிடம் நிகழ்ந்தமையை நற்றிணை கூறுகிறது.

ஐயகுறு மகள் கண்டிகும் வைகி
மகிழ்நன் மார்பில் துஞ்சி அவிழ்இணர்த்
தேம்பாய் மராஅம் கமழும் கூந்தல்
துளங்குஇயல் அசைவர கலிங்கம் துயல்வர (நற்: 20)

காதற்பரத்தை தலைவன் மார்பில் கிடந்து உறங்கினாள். அவளது கூந்தல் கூட்டத்தால் உணர்ச்சி வயப்பட்டு நிமிர்ந்து நெகிழ்வுற்றது. கூந்தல் துளங்கிய துவட்சி யோடு சிறுபுறம் வீழ்ந்து அசைந்தது என்று கூந்தல் வாயிலாக இணைவிழைவுக் காமத்தின் வெளிப்பாடு அமைகிறது.

திருமணத்திற்கு முந்தைய களவிலும் பிந்தைய கற் பிலும்நிகழும் மெய்ப்பாடுகள்: 1. களவுக்கால மெய்ப் பாடுகள், 2. பிரிவுக்கால மெய்ப்பாடுகள், 3. வரை வுக்கு வழிவகுக்கும் மெய்ப்பாடுகள், 4. கற்புக்கால மெய்ப்பாடுகள். இதன் அடிப்படையில் நற்றிணையில் அகத்திணை மெய்ப்பாடுகள்உள்ளன. அவை: 1. புதிய நாட்டத்தை விரும்புதல், 2. தலைவியின் நுதல் வியர்த் தல், 3. விருப்பத்தால்ஏற்படும் முறுவலை மறைத்தல், 4. தன் உள்ளச் சிதைவு பிறருக்குப் புலப்படாதுநிறுத்துதல். இதனைத்தொல்காப்பியர் முதல்நிலை மெய்ப்பாடுகள் என்கிறார். இதே கருத்தை நற்றிணைப் பாடல்களும்

உணர்த்துகின்றன.

இணைவிழைவு - மதிப்பீடுகள்

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும் (தொல்:1169)

உடல் வளர்ச்சி பசியால் உண்டு. உள்ள வளர்ச்சி காமத்தால் உண்டு. காம மெய்ப்பாடுகளை மெய்ப் பாட்டியலில் தொல்காப்பியர் வகைபடக் கூறியுள்ளார். சங்கப்பாட்டு எதுவும் அன்புக் காமத்தை இழிவெனச் சுட்டியதில்லை.

புணர்ச்சிப் பெருக்கத்திற்கு உடல் கிளர்ச்சி வேண்டும். 1. தொடுதல், 2. மோத்தல், 3. கேட்டல், 4. பார்த் தல், 5. சுவைத்தல் ஆகியவை மூலம் அக்கிளர்ச்சி நிகழும்.

நோய் அலைக் கலங்கிய மதன் அழிபொழுதில்
காமம் செப்பல் ஆண் மகற்கு அமையும்
யானோ பெண்மை தட்ப நுண்ணியதின் தாங்கி (நற்:94)

இந்த ஐந்தும் புணர்ச்சிக்கு முதன்மை. காமம் அள வுக்கு மீறிய நோயாகி, தனது மனவலிமை குறைந்த போது தனது புணர்ச்சி ஆசையை வாய்விட்டுச் சொல் வது ஆணுக்குப் பொருத்தமானது. ஆனால் பெண் களுக்கு இயலாதது; தாங்கியாக வேண்டும்.

மார்பு - புணர்ச்சிக்களம்

சங்க இலக்கியத்தில் இனக்கவர்தலின் ஊடாகவும் புணர் வுக்குரிய அடையாளமாகவும் மணமிகுந்த பொருட் களை ஆண், பெண் இருபாலர் பயன்படுத்தியதற் கான பதிவுகள் உள. அவ்வகையில் ஆடவர் தமது மார்புப்பகுதியில் வண்டுகள் மொய்க்கும் வகையில் மணமிகுந்த சந்தனச்சாந்தினை பூசிக்கொண்டதை,

ஆரம் நீவியை அணிகிளர் ஆகம்
ஆரம் நீள்இடைச் சாலவண்டு ஆர்ப்ப (நற்: 344) எனும் அடிகள் தெளிவுறுத்துகின்றன.

பூநாறு செவ்வாய் சிதைத்த சாந்தமொடு
காமர் நெஞ்சம் துரப்ப,யாம் தன்
முயங்கால் விருப்பொடு குறுகினேமாக (நற்:250)

இவ்வடிரிகளில் பெண்ணின் ஊடலைத் தீர்க்க விரும் பியவன், தெருவில் தேரை இழுத்து நடைபயின்ற தம் புதல்வனைத் தூக்கித் தன் மார்போடு அணைக்கிறான். அப்போது அச்சிறுவனின் வாயில் உமிழ்நீர் ஒழுகிய தால் அவன் மார்பில் பூசியருந்த சந்தனம் சிதைந்தது. இவன் மார்புச் சந்தனம் சிதைந்ததைக் கண்டவள் அதற்குக் காரணம் புதல்வன் என அறியாது வேறு ஒருத்தியுடன் இவன் முயங்கியதே எனக் கருதி ஊடு கிறாள். பெண்ணைமுயங்கும் பொருட்டு ஆண் தனது மார்பிலே சந்தனம் பூசிக்கொள்வதும் முயக்கத்தால் மார்புச் சந்தனம் சிதைவுறுவதும் தெளிவுறச் சுட்டப் பட்டுள்ளது.

நறுங்காம் ஆராமொடு மிடைந்த மார்பில்
குறும் பொறிக் கொண்ட கொம்பை அம்புகர்ப்பின்
கருங்கண் வெம்முலை ஞெமுங்கப்புல்லிக்
கழிவதாக...(நற்:314)

இப்பாடலிலும் நறுமணம் கமழும் சந்தனம் பூசிய மார்பினை உடையவன், பெண்ணின் முலையிடத்துக் கமழும் நெருக்கமாக அணைத்திருக்கும் அணைப்பி னைப் பெரிதும் விரும்புகிறான். இத்தகு அணைப் பினை உடையவருடன் என் காலம் கழிய வேண்டும் என அமைகிறது.

பரத்தையர்

சங்க இலக்கியத்தில் தலைவன் ஒருத்திக்கு மேற்பட்ட பலரை மனம் செய்து வாழ்ந்துள்ளான். பரத்தையர் விலைமகளிர் அல்லர். மாறாக, தலைவியின் தங்கை யாகவும் புதல்வனின் தாயாகவும் கருதத்தக்கவர். பரத்தையரையும் தலைவன் வதுவைவழிக் கூடியுள் ளான். பரத்தை தெய்வாம்சம் பொருந்தியவளாகவும் குறிக்கப்பெற்றுள்ளாள்.

சங்க இலக்கியங்களில் பரத்தை, பரத்தன், பரத்தமை என்ற சொற்களும் இணைப்பொருள் உடைய விலை நிலப் பெண்டிர், விலைக்கணிகை, கொண்டி மகளிர் போன்றனவும் பயின்றுள. தனக்கென வரையப்பட்ட பெண்ணை விடுத்துப் பல பெண்டிரிடம் உடலுறவு கொள்பவன் என்னும் பொருளில் பரத்தன் என்றும் தனக்கென ஒருவனை வரைந்து கோடலன்றித் தான் விரும்பியோருடனும் உடலுறவு கொள்பவள் எனும் பொருளில் பரத்தை எனச் சுட்டப்பட்டாள். பரத்தமை ஒழுக்கத்தில் ஈடுபட்டவர்கள் கலைகளில் நன்கு பயிற்சி உடையவராய் ஆடவர்களைப் பிணிக்கும் பண்போடு அதற்காகத் தம்மை அழகுபடுத்திக்கொள்வதில் கவன முடையவர்களாகவும் காணப்படுகின்றனர்.

கள்ளமில்லா நோக்கமைந்த அழகிய கண்கள், மயிர் சாந்தனைந்து மனம் ஊட்டப் பெற்ற கூந்தல், பருத்த தோள்கள், ஒழுங்குற வளர்ந்த வெண்பற்கள், திரண்டு நெருங்கிய துடைகள் என்று பரத்தையர்கள் பேரழகு பெற்றவர்களாகவும், இணைவிழைவுத் தேவைக்கு ஆணின் போகநுகர்ச்சிப் பொருளாகவும் பரத்தையர் பார்க்கப்படுகிறார்கள். இதனை,

மடக்கண் தகரக் கூந்தல் பனைத்தோல்
வார்ந்தவால் ஏற்று சேர்ந்து செறி குரங்கின் (நற் 170)

எனும் பாடல்வழி விளக்கமாக அறிய முடிகிறது.

புற விழுமியங்கள்

அக இலக்கியமாயினும் நற்றிணையில் புறத்தின் கூறு களான அரசன், வள்ளல், வீரன் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள.

வீரை வேண்மான் வெளியின் தீத்தன்
முரசு முதற்கொளீஇய மாலை விளக்கின் (நற் 58)

சோழமன்னன் தித்தன் உறையூரை ஆண்டான். அந் நாட்டில் மாலை நேரத்தில் பணி பெய்யத் தொடங்க முரசு,சங்குகளுடன் ஒலித்தன. விளக்குகள் ஏற்றப்பட் டன எனும் பாடற் செய்தி நாட்டையும் மக்களையும் செழுமையுடனும் பாதுகாப்புடனும் வைத்திருந்தனர் என்பது புலனாகிறது.

மாரிஅம் கிடங்கின் ஈரிய மலர்ந்த
பெயல்உறு நீலம் போன்றன விரலே (நற்: 379)

தலைவியின் கண்களுக்குச் சோழனின் குடைவாயி

லிலுள்ள ஊரில் இருக்கின்ற நீலமலரை ஒப்பிட்டும் தலைவியின் சிவந்த கைகளைப்பாண்டிய மன்னனின் பொதியலில் பூத்த காந்தள்மலரோடு ஒப்பிட்டும் பாடல் உண்டு. ஒலிக்கிற மணியை உடைய யானையையும் பசிய பொன்னாலாகிய பூண்களையும் கொண்டவன் சோழன் என்பதற்கும் பாடல் உண்டு.

படுமணி யானைப் பசும்பூட் சோழர்
கொடிநுடங்கு மருகின் ஆர்க்காட்டு ஆங்கன்

சேர சோழ பாண்டியர் ஆகிய மூவேந்தர்களும் சிற்றரசர்களும் சங்க காலத்தில் ஆட்சி புரிந்துவந்தனர் என்றும் அவர்கள் செல்வச் செழிப்புடன் நாட்டைப் பகைவர்களிடமிருந்து காப்பாற்றி வளர்த்தும் வந்தனர் என்றும் அறிய முடிகிறது.

விருந்தின் வெண்குருகு ஆர்ப்பின் ஆஅய
வன்மகிழ்நாள் அவைப் பரிசில் பெற்ற (நற்167) என வரும் பாடலடிகளில் நெய்தல் நிலத்தில் நாரை நரமும் ஒலி, கடையேழு வள்ளல்களின் ஒருவனாகிய ஆஅய் அன்டிரனது அவையில் பரிசிலாகப் பெற்ற தேரினது ஒலிபோல ஒலிக்கும் கடற்கரைத் தலைவனாகிய காதலன் நின்னைத் தூதாக விடுத்துள்ளான். அவனுக்கு தக்கவாறு பேசுகின்ற பொய்ம்மொழிகள் ஞாழல் மலரோடு புன்னை மலரும் சேர்ந்து இக் கடற்கரையில் வீசும் அத்தகைய சோலையின்கண் வாழும் என் தலைவி முன்னரே தலைவனால் கை விடப்பட்டவள், எனவே தூதாக வந்த பாணனைத் திரும்பிச் செல்; தலைவியின் பசலை நோய்க்குத் தலைவனே காரணம் என்று தோழி கூறுவதாக இப் பாடல் அமைந்துள்ளது. புறவிழுமியங்கள் என்கிற பாடல்களிலும் அகத்தின் தாக்கம் இருப்பதை உணர முடிகிறது. அகவிழுமியங்களின் தொடர்பு புற விழுமியங்களில் நிறைய இடம்பெற்றுள்ளன.

வாய்மைப் பண்பு

நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்
என்றும் என்தொள்பிரிபு அறியலரே (நற்: 1)

நம் இனிய காதலர் சொல்லிய சொல் தவறாதவர், உயர்ந்து தோன்றும் இயல்பினர் என்று தலைவனின் வாய்மைப் பண்பைத் தலைவி கூறுவதாக இப்பாடல் அமைகிறது. காதல் வாழ்வில் நம்பிக்கையும் தலைவனின் உயர்ந்த மாண்பையும் தலைவி எடுத்து கூறும் இப்பாடல்வழிச் சங்க காலம் வாய்மைப் பண்பில் சிறந்து விளங்கியமையைப் புரிந்துகொள்ள முடிகிறது.

மனிதநேயம்

பிற உயிர்களிடத்தும் அன்பு காட்டும் பண்பு மனிதர்களிடத்தில் இயல்பாகவே உண்டு. மற்றவர் துன்பம் கண்டபோது தனக்குற்றதாகவே எண்ணிக் கலங்கும் உள்ள உணர்வு, அன்பை நேசிக்கும் உணர்வு சங்க அகப் பாடல்களில் நிரம்ப இடம்பெற்றுள்ளன.

நீர் அடு நெருப்பில் தனிய இன்று அவர்
வாரா ராயினோ நன்றே சாரல் (நற்: 154)

இவ்வடிகளில் தலைவன் இரவுக்குறிக்கு வரும் கொடிய வழியை எண்ணி அஞ்சிஅவ்வழியில் வராதே என்று தோழி கூறுவதன் மூலம் அவளின் மனித நேயப் பண்பினை அறிய முடிகிறது.

விளையாடு ஆயமொடு வெண்மணல்
அழுத்தி மறந்தனம் துறந்த காழ்முளை (நற்: 172)

இப்பாடல் ஓரறிவுயிராகிய மரத்தைத் தன் உணர்வு ஒன்றிய உடன்பிறப்பாக எண்ணச் செய்கிறது. பெற்ற மகளைவிட உயிருடைய பெண்பிள்ளையைப்போல் வளர்த்த மரத்தினை உயர்வாக எண்ணிய பழந்தமிழரின் பாங்கினைப் பார்க்க முடிகிறது. இதுபோன்ற பல பாடல்கள் நற்றிணையில் இடம்பெற்றுள்ளன இப் பாடல் கருத்துக்கள் அக்கால மனிதநேயத்தைப் பறைசாற்றும் விழுமியங்களாகும்.

இல்லறம்

சங்க இலக்கியத்தில் குடும்பம் பெரும்பங்களிப்பைச் செய்கிறது தன்மானம் உள்ள பெண்கள் தம் வீட்டுக் குறைகளைப் பிறர் அறிய இடம் கொடுக்க மாட்டார்கள். வறுமையால் வாடினாலும் உள்ளதைக் கொண்டு மகிழ்வார்களே அன்றி இரவல் சோற்றுக்கு ஏங்கியிருக்கமாட்டார்கள். அவர்களின் வறுமை கண்டு பெற்றோர் அன்புடன் உணவுப் பொருட்களை அனுப்பி வைத்தாலும் அவற்றை ஏற்க மாட்டார்கள். இந்தக் குணம் தமிழர்களுக்கே உரிய சிறந்த பண்பாடாகும் இதனை விளக்கும் நற்றிணைப் பாடல் பின்வருமாறு

அறிவும் ஒழுக்கமும் யாண்டுநர் தன் கொள்
கொண்ட கொழுநன் குடிவரன் உற்றென
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள் (நற்: 110)

சிறந்த அறிவையும் அறநெறியையும் எங்கே கற்றுக் கொண்டாளோ? அவளைக் கொண்ட கணவனுடைய குடும்பம் வறுமை அடைந்துவிட்டதை அறிந்து குடும்பத்திற்கு அவள் தந்தை அனுப்பி வைத்த உணவுப் பொருட்களைக்கூடப் பெரிதாக கருத மாட்டாது தம் புகுந்தவீட்டு வறுமையைப் பொருட்படுத்தாது வாழும் வாழ்க்கைப் பாடத்தை அவள் யாரிடமிருந்து கற்றுக் கொண்டாள் என வியந்து பாராட்டுவதாக இப்பாடல் கூறப்பட்டுள்ளது. பெண் பெருமை பேசும் இடங்களாகச் சங்ககால வாழ்நெறிக் கருத்துக்கள் கணவனோடு சேர்ந்து வாழ்வதும் கணவர் வீட்டுக் குறைகளைப் பிறந்த வீட்டில் கூறாமல் வாழ்வதும்தான் சிறந்த இல்லறத் தன்மையாக சங்க கால விழுமியங்கள் விவரிக்கின்றன. இல்லறத்திற்கு அழகு சேர்ப்பவள் மனைவி. இல்லறத்திற்கு அழகு மனையாளின் முகமும்இழைத்தசொல்லும் எனச் சங்ககாலம் முதலே ஆணின் துணை பெண்ணுக்கு முக்கியமானது. கணவன் என்கிற உறவின் பார்வையாகச் சமூகம் எப்படியான விழுமியத்தைப் பெண்ணுக்கு மட்டுமே துணை தேவையானது என்பது போன்ற கருத்தாக்கங்கள் ஆழமாக வேரூன்றி இருப்பதைக் காண முடிகிறது.

முடிவாகச் சில:

நற்றிணையில் அகம், புறம் சார்ந்த விழுமியங்கள், காதல், வீரம், கொடை, ஊடல், இல்லறம், இணை விழைவு எனப் பல்வேறு ***தொடர்ச்சி: பக்.93***

ISSN 2320-4842

உளவியல் குறித்த விழிப்புணர்வு

பா. மேகலா
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
(பதிவு எண் : 24389/Ph.D K6/ Tamil / Full Time / January 2018/ Date 01.04.2018) தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) கும்பகோணம் (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

நெறியாளர்: **முனைவர் கோ. ஜெயஸ்ரீ**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம் 612 001

ஆய்வுச்சுருக்கம்

உளவியல் என்பது மனதைப் பற்றிய அறிவியல். கட்புலனாகா மனம், மூளை, நரம்பு மண்டலம் இவற்றின் நுண் ணிய செயல்பாடுகளின் ஒருங்கிணைந்த தொகுப்பாகும். மனிதனின் நடத்தையைப் பல்வேறு நிலைகளில் அளவிடலாம். நாம் அனைவருமே ஏதேனும் ஒரு வகையில் மனித நடத்தையைக் கணிப்பவர்களாகவே உள்ளோம். நமது சொந்த முறை களைக் கொண்டு அளவிடுவதால் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமான கணிப்புகள் உருவாகின்றன. உளவியல் குணாதிசயங்களான ஆளுமை, மனப்பான்மை, நுண்ணறிவு போன்ற வற்றில் நாம் வேறுபடுகிறோம். இவற்றை அளக்க முடியும் என்று முறையாகக் கண்டுணர்ந்தது சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் எனினும் இப்போது பல்வேறு அளவிடும் முறைகள் உருவாக்கப்பட்டுள. உளவி யல் சோதனைகள் பல்வேறு சூழ்நிலைகளில் முக்கியப் பங்கு வகிக் கின்றன. இவை தனிமனித வேறுபாடுகளைப் பகுத்தாராய்வதற்கும், பொது நுண்ணறிவு, மனப்பான்மை, கல்வியியல் அடைவுகள், குறிப்பிட்ட ஒரு தொழிலுக்குத் தகுதியுடையவரா என்று அளப்பதற்கும், ஆளுமைக் குணாதிசயங்களை அளப்பதற்கும் பயன்படுகின்றன. ப்ராய்டு (1856/1939) மனோதத்துவ ஆராய்ச்சிக்காகத் தம் வாழ்நாள் முழுவதை யுமே செலவிட்டார். தம்மிடம் வந்த இலட்சக்கணக்கான நரம்பு நோயாளிகள், மனநோயாளிகளைப் பரிசோதனை செய்து தாம் கண்ட முடிவுகளை அவர் நூல்களாக வெளியிட்டார். அவற்றில் முக்கியமானவை கனவுகள் பற்றிய மனோதத் துவ ஆராய்ச்சியும், ஆண், பெண் இயல் பற்றிய மனோதத்துவ ஆராய்ச்சியுமே. இவ்வாராய்ச்சிகள்மூலம் உலகம் எங்கும் வாழும் பல ஆயிரக்கணக்கான நரம்பு நோயாளிகளுக்குப் புதுவாழ்வு கிடைத்துக்கொண்டிருக்கிறது. இன்று உலகெங்கும் மனோதத்துவ ஆராய்ச்சியும் உள்ளுணர்வு விசாரணையும் படிப்படியாக வருவதற்கும், மனிதனின் தனி வாழ்க்கையிலும், சமுதாயத்தின் அகவாழ்க்கையிலும் மனோதத்துவ இயல்புக்கு உள்ள முக்கியத்துவத்தை அறிஞர் கள் உணர்ந்து ஒப்புக்கொண்டுவருவதற்கும் சிந்தனையாளர் பிராய்டின் ஆராய்ச்சிகளே காரணம் என்பது தெளிந்த முடிபாகும். மேற்கண்ட கூற்றுகளை தெள்ளிதின் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முன்னுரை

உளவியல் மனிதனுடைய வாழ்க்கையுடன் மிகுதியும் தொடர்புடையது. மனித நடத்தையின் அடிப்படை விதி களை விளக்குவது. தன்னைப் பற்றிய உண்மையறிவை அறிந்துகொளத் துணைசெய்கிறது. இவ்வறிவு, உலகில் அமைதியுடன் நல்வாழ்வு வாழ்வதற்கு ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. உடல்நலமும் உளநலமும் பெற்று சமூகத்துடன் நல்ல பொருத்தப்பாட்டோடு வாழ்வதற்கு உளவியல் அறிவு தேவை. இன்று மருத்துவம், பொறி யியல் போன்ற துறைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பொது நுண்ணறிவு, குறிப்பிட்ட துறை நுண்ணறிவு, நாட்டம், படைப்பாற்றல் போன்றவை உளவியல் சோதனைகள் மூலமாகவே அளந்தறியப்படு கின்றன. இவற்றின் நோக்கம், நுண்ணறிவு ரீதியாக அவர்களின் தகுதி நிலையைக் கண்டறிவது மட்டுமன்றி அவர்களின் நாட்டத்திற்கு ஏற்றவாறு வகைப்படுத்தி அதற்கேற்ற துறைகளைத் தேர்ந்தெடுக்கச் செய்வதாகும். மேலும், மனித வாழ்வைச் சீராக்கும் உளவியல், அதன் வளர்ச்சி குறித்து ஆராய்வோம். தொல்காப்பியம் முதல் இக்கால இலக்கியம்வரை உளவியல் குறித்த விழிப்புணர்வு தமிழுலகில் பரக்க இருப்பதைக் காணலாம்.

தொல்காப்பியரின் மெய்ப்பாடுகள்

கட்பொறியானும், செவிப் பொறியானும் அறியப் பெறும் சுவைகள், மெய்ப்பாடுகள் எட்டாகும். இதனை,

பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப. ***(தொல். மெய்.1)*** என்று அவர் கூறியுள்ளார்.

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப ***(தொல்.மெய்.3)*** என்கிறார். இவற்றுள் நகையாவன எள்ளல், இளமை, பேதைமை, மடன் என நான்காகும். இதனுள் பேதைமை என்பதற்கு நகை, சிரிப்பு என்ற பொருளில் வரும். சான்றாக ஒரு தலைவி தாய் தன்னை வெகுள்வதன் காரணத்தைத் தன் பேதைமையால் உணராது அது பற்றி நகைக்கிறாள்.

நகை நீ கேளாய் தோழி (அகம்.248)

அழுகை மெய்ப்பாட்டிற்கு, பாலில்லாத மார்பினைச் சுவைத்துப் பால் பெறாமையால் அழுகிற தன் குழந்தையின் முகம் பார்த்து நீர் நிறைந்த கண்களுடன் இருக்கும் தாய் என்ற கருத்தை,

இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉம் தன்மகத்து முகம் நோக்கி
நீரொடு நிறைந்த ஈர்இதழ் மழைக்கண் (புறம். 164)
எனும் புறநானூற்றுப் பாடலால் அறியலாம்.

அச்ச மெய்ப்பாட்டிற்கு, அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே எனும் பாரதியின் அடிகளைச் சுட்டலாம். அடுத்து, உவமை என்னும் மெய்ப்பாடு மனம் மகிழ்வுற்ற நிலையில் தோன்றுவதாகும். இது செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு எனும் நான்கு நிலைகளில் தோன்றும். உதாரணமாக, கூர்மையான அறிவு நுட்பம் உடையவர்கள் தாமாக ஒன்று கூடி மகிழ்ந்து பேசிக்கொள்வதைக் காட்டிலும், வானுலகம் இன்பம் தருவது அன்று எனலாம். இதனை,

இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்போம் (நாலடி. 137) என்ற நாலடியாரில் ஒருவர் தம் கல்வியறிவால் மகிழ்வதை அறியலாம்.

மனித வாழ்வைச் சீராக்கும் உளவியல்

ஆதிகால மனிதன் தன் உடலையன்றி வேறொன்றையும் அறியான். ஆனால், காலம் செல்லச்செல்ல உடம்பினுள்ளே உறுபொருள் ஒன்று உண்டு என உணர்ந்தான். அதுவே ஆன்மா அல்லது ஆவி எனப்படும் அருவப்பொருள்என அறிந்தான். கனாக்களும், நெறி பிறழ்வு அல்லது அசாதாரணமான நடத்தைகளும் அவனை இவ்வாறு எண்ணத் தூண்டின. தன் உடல் ஓரிடத்தில் செயலற்றுக் கிடந்த நிலையில் தான் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று பற்பல அனுபவங்கள் பெறுவது போன்ற உணர்ச்சி கனாக்களில் தோன்றுகிறது. ***நம் எல்லோருக்கும் ஒவ்வொரு இரவிலும் குறைந்தது முந்நூறு கனவுகள் உருவாகின்றன. அதாவது ஓர் ஆண்டில் ஆயிரத்திற்கும் சற்றுக் கூடுதலான கனவுகள் எழுபது ஆண்டுகள் வாழ்ந்திருக்கும் ஒருவர் குறைந்தது 50,000 மணிநேரம் கனவுகாண்பதில் கழிக்கிறார் (ராஜா கணேசன், கனவுகள், ப. 21).***

ஆதிமனிதனின் இவ்வனுபவங்கள் உடலுக்குரியவை அல்ல.உடலுள் உறையும் ஆன்மாவின் செயல் என எண்ணலானான்.இவ்வாறே மனக்கோளாறு நிலைப்பட்டோர் தம் இயல்பான நடத்தை முறைக்கு மாறாக ஒழுகுங்கால் அது அவர்களது உடலைப் பற்றியுள்ள வேறு ஓர் ஆவியின் செயல் என்றும் பழங்கால மனிதன் கருதினான். இத்தகைய ஆன்மா அல்லது ஆவியின் இயல்புகளை ஆராய்ந்து எடுத்துக்கூற உளவியல் தோன்றிப் பல நூற்றாண்டுகள்வரை தத்துவ சாத்திரத்தின் ஒரு பிரிவாக இருந்துவந்தது.

கிரேக்கத் தத்துவ ஞானி அரிஸ்டாட்டில் எழுதிய *ஆன்மாவின் இயல்புகள்* என்ற நூலே உளவியல் பற்றிய முதல் நூல். இதற்குப் பின் வெளிவந்துள்ள பல அறிஞர்களின் நூல்கள் ஆன்மா, உள்ளம் பற்றிய பல கருத்துக்களைக் கொண்டிருந்தன. உள்ளத்தின் அமைப்பு, தொழில்கள் பற்றி ஓரளவு அறிவியல் முறைப்படி சிந்தித்துத் தம் கருத்துகளை வெளியிட்டவர் தேகார்ட்டே (Des Cartes) எனும் பிரெஞ்சுத் தத்துவ அறிஞராவார். இன்று ஆங்கிலத்தில் அறிமுகமாகப் பழக்கமாகிவிட்ட சைக்காலஜி என்ற பெயரை முதன்முறையாகத் தம் நூலுக்கு இட்டவர் குளோகல் ஆவார்.

உளவியல் துறையின் வளர்ச்சி

உளவியல் முதலில் தத்துவத் துறையின் கூண்டுக்குள் அடைபட்டுக் கிடந்தது. தத்துவ அறிஞர்களாக இருந்துகொண்டே தேகார்ட்டேயும், சான் லாக்கும் (John Locke) ஐரோப்பியக் கண்டத்தில் உளவியல் முன்னேற்றத்திற்குத் தொண்டுபுரிந்துவந்தனர். அறிவியல் அடிப்படையில் உளவியல் தொடங்கப்பட்ட காலம் கி.பி. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. சிக்மண்ட் பிராய்டு (1856-1939) கார்ல் யுங் (1875-1961). ஆல்பிரட் ஆட்லர் (1870-1937) ஆகியோர் உளவியல் துறையின் மும்மூர்த்திகளாவர்.சோன்சு முல்லர் (1801-1858) வெபர் (1795-1878) எம் கோல்டு (1821-1894). பெட்ச்னர் (1801-1887) வில்கெல்ம் உண்ட் (1832-1920) பிரான்சிஸ் கால்ட்டன் (1822-1911) போன்றோர் உளவியல் முன்னோடிகளாவர். உளவியல் பரிசோதனைக் கூடம் 1879இல் செர்மனியிலுள்ள இலீட்சிக்கு நகரத்தில் வில்கெல்ம் உண்ட் என்ற உளவியல் அறிஞரால் முதன்முதலில் தொடங்கப்பட்டது. இவரைப் பரிசோதனை உளவியலின், தந்தை என்பர். இவரது உடற்கூற்று உளவியல் நூல் அறிவியல்வழி உளவியல் முன்னேற உதவியுள்ளது. ***உடல் நலம் பேணுவதற்கு உடலியல் அறிவு இன்றியமையாது வேண்டப்படுவதுபோல உளவளத்தைப் பேணி வளர்ப்பதற்கு உளவியல் அறிவு மிகவும் இன்றியமையாதது என்பது கல்வி முறை வல்லார் கண்ட முடிவு*** (ந. சுப்புரெட்டியார், கல்வி உளவியல் கோட்பாடுகள்). இன்று உளவியல் பல துறைகளைக் கொண்ட அறிவியல் துறையாக வளர்ந்துள்ளது.

உளவியல் தந்தை ஃபிராய்டு

மனோதத்துவ மன்னர் எனவும், மன இயக்க ஆய்வுகளின் தந்தை எனவும் உலகம் போற்றும் சிந்தனையாளர் பிராய்டு ஆவார். அறிஞர்கள் பலர் மனிதனின் சூழ்நிலையில் காணப்படும் புறப்பொருட்கள் பற்றி ஆராய்ந்துகொண்டிருந்தபோது ப்ராய்டோ மனித மனஇயல்புகளை,அவை வாழ்க்கையை ஆட்டிவைக்கும் தன்மையை, சமுதாயத்தையே மாற்றியமைத்துவிடக்கூடிய அதன் போக்கைப் பற்றி ஆராய்ந்தார். கனவுகள், காதலுணர்வுமுதல் மன விகாரங்கள், மன நோய்கள்வரை மனம் தொடர்பான மன ஓட்டங்கள்

அனைத்தையும் பற்றிச் சிந்தித்தார்.

மனத்தின் மூன்று நிலைகள்

மனித நடத்தைக்கு அடிப்படையானது மனம் எனும் மையம். இம்மனம் மூன்று தொடர்புடைய நிலை களைக் கொண்டது. 1. நனவுப்பகுதி, 2. இடைநிலை மனம், 3. நனவிலி மனம்

1. நனவுப்பகுதி: மனம் விழிப்பு நிலையில் இருக்கும் போது பெறும் அனுபவங்கள்.

2. இடைநிலை மனம்: இடைநிலை மனத்தில் நனவுப் பகுதியில் பெற்ற அனுபவங்கள் சில பதிந்துகிடக்கும். நமக்குத் தேவையானபோது வேண்டிய செய்திகளை வரவழைத்துப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

3. நனவிலி மனம்: பண்படாத ஊக்கிகள், வெற்றி பெறாது ஒடுக்கப்பட்டஎண்ணங்கள், சமூகத்தில் வெளிப் படுத்த முடியாத மனவெழுச்சிகள் ஆகியவை நனவிலி மனத்தில் புதைந்து கிடக்கின்றன.

திரு.வி.க., மனத்தின் அமைப்பு முறைகளைத் தமிழ் மரபையொட்டி வகைப்படுத்தியுள்ளார். அவர் மனத் தின் நிலைகளை, மேல்மனம் அல்லது புறமனம், நடுமனம், அடிமனம் என்று மூன்றாகப் பகுப்பினும் மனம் ஒன்றே. ஒரே மனம். அஃது அடையும் பக்கு வத்திற்கு ஏற்ப மூன்று நிலைகளையும் அடைகிறது. இதனை ஓர் உவமைவழிப் பின்வருமாறு தெளிவாக் குகிறார்.

காட்டினின்றும் புதிதாகக் கொணரப்பெற்ற குதிரை, முத லில் மருட்சியுற்று, கட்டுக்கடங்க மறுத்துப் பாதையில் ஒழுங்காகச்செல்லும். எனினும் சிறிது மூர்க்கம் இருக்கவே செய்யும். முற்றும் பண்பட்டு மூர்க்கம் அறவே ஒழிந் தால், ஓட்டுபவன் உறங்கினாலும், அது ஒழுங்காகப் பாதை வழி பற்றி ஏகும். குதிரையின் மூன்று நிலைகளும் மனத் தின் மூன்று நிலைகளுக்கும் முறையே பொருந்தும் என் கிறார் (திரு.வி.கலியாணசுந்தரனார், உள்ளொளி, ப. 21)

பொறி புலன்களின் போக்கில் சென்று அலைந்து அல்லற் படும் மனநிலையே புறமனம். அது சிறிது தெளிவு பெற் றுக் குவியும்போது நடுமனமாகிறது. நடுமனம் விளக்க முறும்தருவாயில்அதை விளக்கமுறவொட்டாமல் புறமனம் பலவாறு அல்லற்படுத்துகிறது. அந்நிலையில் நடுமனத்தை நல்வழிப்படுத்துவதற்கு மனப்பயிற்சி தேவைப்படுகிறது. நடுமனம் நல்லுணர்வால் வலிமை அடையும்போது புற மனத்தின் தாக்குதல் மறைகிறது. அந்நிலையில் அந்த நடுமனம் பல அருஞ்செயல்களைச் செய்கிறது. நாளடை வில் அது மேலும் பண்பட்டு அடிமனமாக மாறுகிறது. அந்த அடிமனம் தூய உணர்வுகளின் பிறப்பிடமாக அமைகிறது. அறத்தின் உறையுளும் அடிமனமே என்று விளக்குகிறார் (கரு.நாகராசன், மனமது செம்மையா னால், ப.227). மனத்தை உணர்வு மனம், உணர்வறு மனம் என்ற இரண்டாகவும் நோக்குவர் அறிஞர்கள்.

சுவாமி விவேகானந்தர், ***மனத்திற்கு மூன்று நிலைகள் உண்டு. ஒன்று தமஸ் என்று அழைக்கப்படும். இது மிருகங்களிடம், மூடர்களிடம் காணப்படுவது, தீமை செய்ய மட்டுமே இது செயல்படுகிறது. இதைத் தவிர வேறு எந்த எண்ணமும் மனத்தின் இந்த நிலையில் எழுவதில்லை. அடுத்தது மனத்தின் செயல்படுநிலை அதாவது ரஜோ குணநிலை. அதிகாரமும் இன்ப நுகர்ச் சியும் அதன் முக்கிய நோக்கங்கள். நான் அதிகாரம் பெற்று மற்றவர்களை அடக்கி ஆள்வேன் என்ற எண் ணம். மூன்றாவதாக அமைதியும் சாந்தமும் நிறைந்த சத்வ நிலை உள்ளது. இங்கே அலைகள் ஓய்ந்து விடுகின்றன. மனமாகிய குளத்தின் நீர் தெளிவாக இருக்கிறது.***

ஒரு குளத்தின் மேற்பரப்பை அலைகள் மூடியிருந்தால் அடியை நாம் காண்பதில்லை. அலைகள் அடங்கி நீர்ப் பரப்பு அமைதியுற்றால் மட்டுமே அடிப்பகுதியைச் சிறிதா வது காணமுடியும். நீர் சேறு கலந்ததாக இருந்தாலோ, கலங்கி இருந்தாலோ அடியைக் காண முடியாது. நீர் தெளிந்து அலையற்று இருந்தால்தான் அடிப்பகுதியைக் காணமுடியும். குளத்தின் அடியே உண்மையான நமது ஆன்மா. குளமே சித்தம். அலைகளே விருத்திகள் என்று தத்துவ ரீதியில் விளக்குகிறார் (சுவாமி விவே கானந்தர், தியானமும் அதன் முறையும், ப. 13)

பிராய்டின் கருத்துப்படி மனம்

தனிமனிதப்பண்பியல் தொகுப்பினை இத் (Id), ஈகோ (Ego), சூப்பர் ஈகோ (Super Ego) என்று பிராய்டு பிரிக்கிறார். இந்த இன்பக் கொள்கை (Pleasure Principle)உள்மனதைச் சார்ந்தது. இன்பமான வாழ்வைத் தேடி அலையும் மனிதர்க்குத் தேவையான உணவு, உறைவிடம், சுவாசிக்கக் காற்று ஆகியவை முதலில் நிற்கின்றன. பல நிலைகளிலும் இன்பத்தை நாடும் மனிதனுக்குப் பகையுணர்வு போன்றவற்றிற்கு அடித் தளமே இந்த இன்பக் கொள்கையாகும்.

ஈகோ

வெளிமனத்துடன் தொடர்புடைய ஈகோ எனப்படும் நடைமுறைக் கொள்கை (Reality Principle) சுற்றுச் சூழலை அறிவதிலும், எண்ணங்கள், செயல்கள், உணர்ச்சிகள் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

சூப்பர் ஈகோ

சூப்பர் ஈகோ எனப்படும் நீதிக் கொள்கை (Moral Principle) உலக நடைமுறைகளையும், பண்பாடு ரீதி யான நடைமுறைகளையும் சீர்தூக்கிப் பார்க்கின்றது, இதனையே மனசாட்சி என்கிறோம். நடைமுறைக் கொள்கையின் சிறந்த செயல்களை ஊக்குவிப்பதும், உற்சாகப்படுத்துவதும் இந்நீதிக் கொள்கையின் செய லாகும்.

இயற்கை உணர்வுகள், ஆசைகள், கனவுகள், அனுப வங்கள் எல்லாம் நனவிலி மனப்பகுதியில் அமைந் துள. நம் மன இயக்கத்தின் 90% இங்கிருந்துதான் வருகின்றன. பொதுவாகச் சமூகத்தால் ஏற்றுக்கொள் ளப்படாதஉணர்ச்சிகளும் காம இச்சைகளுமே ஒருவ னது நனவிலி மனத்தில் அழுந்திக் கிடப்பதாக பிராய்டு கூறுகிறார். ஏன்? எதற்கு? எப்படி? போன்ற கேள்வி

களின் வாயிலாகவே அறிவியல் துறை வளர்ச்சி பெற்றது. மனநோயாளியிடம் பல்வேறு கேள்விகள் கேட்பதன் மூலமாகவே அவன் நோயைப் பற்றி மன நோய் மருத்துவர் அறிகிறார். ஒருவர், நான் எனது என்கிற ஆணவத்தை விட்டால் போதும். தேவர் களைப்போல உயர்ந்த புகழை அடைவார் என்பதை வள்ளுவர் இப்படிக் கூறுகிறார்:

யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் (குறள்: 346)

முடிவுரை

வளர்ச்சியுள்ள முழு மனிதனின் ஆளுமை, அவன் எண்ணங்கள், பயிற்சித் திறமைகள், இயற்கை விருப் பங்கள், நுண்ணறிவு முதலியவற்றை முறையாக அறிந்துகொள்ள மேற்கண்ட விளக்கங்கள் தேவை. மருத்துவத் துறையில் தனிமனிதத் துன்பங்களுக்கான காரணங்கள் உளவியல் சோதனைகள் மூலம் கண்ட றியப்படுகின்றன. வணிகம் மற்றும் தொழிலகத் துறை களில் குறிப்பிட்ட பணிக்குத் தக்கவரைத் தேர்ந்தெ டுக்க உளவியல் சோதனைகள் பெரிதும் உதவுகின்றன.

தொகுப்புரை

இதுகாறும் உளவியல் குறித்த அடிப்படைச் செய்தி களைத் தெளிவாகக் கண்டோம். மனித வாழ்வை உள வியல் எவ்வாறு சீராக்குகிறது என்பதையும் ஆய்ந் தோம். உளவியல் குறித்த விழிப்புணர்வு, மனித வாழ் வில் உளவியலின் பெரும்பங்கு ஆகியவை பற்றிப் பல அறிஞர்களின் ஆய்வு, கூற்றுகள்வழி அறிந்து கொண்டோம். உளவியல் தந்தை பிராய்டு கூறிய உளவியல் கருத்தாக்கங்களைப் பரக்கக் கண்டோம்.

சான்றெண் குறிப்புகள்

தொல். பொருள் ப.482.

புறநானூறு, பா.164

ராஜா கணேசன், கனவுகள், ப.21.

கல்வி உளவியல் கோட்பாடுகள், ப.X முன்னுரை

திரு.வி.க, உள்ளொளி, ப.21.

கரு.நாகராசன், மனமது செம்மையானால், ப.227.

சுவாமி விவேகானந்தர், தியானமும் அதன் முறையும், ப.13.

பயன்பட்ட நூல்கள்

தொல்காப்பியம் பொருளதிகாரம், (தெளிவுரை), முனைவர் ச.வே.சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

புறநானூறு மூலமும்உரையும், புலியூர்கேசிகன் உரை, சென்னை.

ராஜா கணேசன், கனவுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

ந.சுப்புரெட்டியார், கல்வி உளவியல் கோட்பாடுகள், மணிவாச கர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1989.

திரு.வி.கல்யாணசுந்தரனார், உள்ளொளி, அரசி புக் டிப்போ, சென்னை, முதற்பதிப்பு, 1969.

கரு.நாகராசன், மனமது செம்மையானால், மணிவாசகர் பதிப் பகம், சென்னை.

சுவாமி விவேகானந்தர், தியானமும் அதன் முறையும், ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை, முதல் உடன் நிகழ் பதிவு.

44ஆம் பக்கத் தொடர்ச்சி

என்னுடைய கல்விக்கு என் பள்ளிப்படிப்பு இடையூறாக இருக்க நான் எப்போதும் அனுமதித்ததில்லை.

-மார்க் ட்வைன், அமெரிக்கா, 1835-1910.

மக்கள் ஓர் ஆடையைக் கழற்றி விட்டு, இன்னோர் ஆடையை அணிந்துகொள்வதுபோல, பழைய பல்கலைக் கழகத்தை ஆடை அலமாரியில் தொங்கவிட்டுவிட்டு, புதியதொரு பல்கலைக்கழகத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

-ஜோஸ் மார்ட்டின், கியூபா, 1853 - 1895.

விரிவான, சிறப்பான கல்விமுறைகள் அனைத்தின் மீதும் எனக்கு ஐயம் எழுந்துள்ளது. ஒவ்வொரு குழந்தையும் அடிமுட்டாள் என்றும், அதற்குச் சிந்திக்கக் கற்பிக்க வேண்டும் என்றும் கருதும் ஊகத்தின் அடிப்படையில் இந்த முறைகள் அமைந்துள்ளதாகத் தெரிகிறது.

-ஆன் சுல்லிவன் மேசி, அமெரிக்கா, 1866-1936.

நவம்பர் 1998-இல் வெளிவந்த யுனெஸ்கோ கூரியர் இதழில் இவ்வாறான பதிவுகள் தொடர்ச்சியாக வெளி வந்துள்ளன. குறிப்பாக, தமிழில் மொழிபெயர்க்கப் பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

நிறைவாக

யுனெஸ்கோ கூரியர் இதழ் தமிழுக்கும் தமிழ்மொழிக் கும் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது. மேலும், கூரியரில் வெளியான செய்திகள் பெரும்பாலும் மொழிபெயர்ப்பு ஆகும். உலக அளவில் நடக்கும் நிகழ்வுகள் பற்றிய செய்திகளை ஒரே இடத்தில் காண அல்லது வாசிக்க வேண்டும் எனில், அது கூரியர் இதழில்தான் சாத்தியம். மேலைநாட்டு அறிஞர்களின் படைப்புகள் அனைத்தையும் இவ்விதழின் வாயிலாக வாசிக்க முடிகிறது.

பயன்பட்ட இதழ்கள்

தமிழ்ப் பதிப்பு, ஆசிரியர் - மணவை முஸ்தபா, யுனெஸ்கோ கூரியர், நவம்பர், 1998.

தமிழ்ப் பதிப்பு, ஆசிரியர் - மணவை முஸ்தபா, யுனெஸ்கோ கூரியர், மே, 2000.

ஆ. அறிவழகன், யுனெஸ்கோவின் தமிழ்க் கொடை, ப-8, தினமணி கட்டுரை, ஏப்ரல், 17, 2016.

Early to bed and early to rise makes a man healthy, wealthy, and wise.

- Benjamin Franklin

ISSN 2320-4842

தமிழ் இலக்கியங்களில் வடமொழிச்சொற்கள்

முனைவர் ச. ஆனந்தி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நிர்மலா மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர் 641018

ஆய்வுச்சுருக்கம்

'தமிழ் இலக்கியங்களில் வடமொழிச்சொற்கள்' என்னும் இவ்வாய்வில் மொழி குறித்தும் மொழியின் இன்றியமை யாமை குறித்தும் பதிவுசெய்யப்படுகின்றன. தமிழ்மொழியின் சிறப்புகள், தொன்மை குறித்தும் தெளிவுபடுத்தப்படு கின்றன. தமிழ்மொழியில் பிறமொழிக் கலப்புப் பற்றியும் சுட்டிக்காட்டப்படுகின்றது. தமிழ் மொழியும் வடமொழியும் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. மொழிக்கலப்புக் குறித்தும் இவ்வாய்வுவழி அறியப்படுகிறது. வடமொழிச் சொற்கள் பற்றிய செய்திகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களிலும் காப்பியங்களிலும் வடமொழிச் சொரற்கள் இடம்பெற்றுள்ளது ஆய்வின் மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது.

கலைச்சொற்கள்: தமிழ் இலக்கியங்கள், வடமொழிச் சொற்கள்

முன்னுரை

மொழி என்பது ஓர் இணைப்புக் கருவியாகும். மொழி உணர்வுகளிலிருந்து தோற்றம் பெற்றிருக்கிறது என்பது ரூசோ போன்ற சிந்தனையாளர்களின் கருத்தாகும். மனிதமொழி உற்பத்தித்திறன், இடப்பெயர்ச்சி ஆகிய இயல்பு களைக் கொண்டது. அத்துடன் அது சமூக மரபுகள், கற்றல் ஆகியவற்றில் முழுமையாகத் தங்கியுள்ளது என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். தமிழ் இலக்கியம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலான தொடர்ச்சியும் உலகின் சிறந்த இலக்கியங்களில் ஒன்றாக இருந்துவருவதையும் சான்றுகள் வாயிலாக அறியமுடிகிறது.

வாழ்வின் பல்வேறு கூறுகளைத் தமிழ் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. தமிழ் இலக்கியத்தில் வெண்பா, குறள், புதுக்கவிதை, கட்டுரை, பழமொழி, தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்கள் எனப் பல வடிவங்கள் உள்ளன. தமிழில் வாய்மொழி இலக்கியங்களும் முக்கிய இடம் வகிக்கின்றன. இத்தகைய தமிழ் இலக்கியங் களில் வடமொழிச் சொற்கள் இடம்பெற்றிருப்பதை ஆழ்ந்து ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

மொழி

மொழி, அதைப் பேசுகின்ற இனத்தின் அரசியல், கலை, வரலாறு, சமூகநிலை, பழக்கவழக்கம், ஒழுக்க நெறிகள், எண்ணங்கள் போன்ற பல வாழ்வியல் கூறுகளையும் பண்பாட்டு நிலைகளையும் வெளிப்படை விளக்கமாகவும் உள்முகச் செய்திகளாகவும் கொண்டு விளங்குகிறது. மனித மொழி இயற்கையான மொழியாகும். மொழி கற்க முற்படும் அறிவியல் மொழியியல் எனப்படும். மொழியின் வளர்ச்சிப்பாதையாகப் பேச்சு, எழுத்து, புரிதல், விளக்கம் எனும் படிநிலைகள் கொண்டது. பிறப்பு, இறப்பு, வளர்ச்சி, இடம்பெயர்தல், காலத்திற்கேற்ற மாற்றம் என மொழி பன்முகம் கொண்டது. தொடர்ந்து காலத்திற்கேற்றாற்போல் தனக்குள் மாற்றத்தை ஏற்றுக்கொள்ளும் மொழியே வாழும் மொழியாகக் கருதப்படுகிறது.

மொழியின் இன்றியமையாமை

தொடக்கத்தில், கருத்துப் பரிமாற்றத்திற்கான கருவியாக மட்டுமே மொழி இருந்துள்ளது. ஆனால் காலப்போக் கில் அது தன் பங்களிப்பைப் பல்வேறு தளங்களில் அளிக்கத் தொடங்கியதைச் சான்றுகள் உணர்த்துகின்றன. ஒரு மொழி பேசுகிற இனம் காலம்காலமாகத் தொடர்ந்து வாழும் இடம் நாளடைவில் அவ்வினத்தின் நாடாகிறது.

மொழிவளர்ச்சி

மக்களின் அறிவு, கலை, நாகரிகம், பண்பாடு என்று பலவற்றின் வளர்ச்சிக்கும் மொழி துணைசெய்கிறது. தவிர இவற்றை அடுத்தடுத்த தலைமுறையினர் பெற்றுக்கொள்ளவும் அவற்றை அவர்கள் வளர்க்கவும் வழிகோலுகிறது. மொழி இன்றேல் உலகம் தன் இயக்கத்தின் ஒரு பகுதியை இழந்துவிடும் என்பது பாவலரேறு பெருஞ்சித்திர னார் கருத்தாகும்.

தமிழ் மொழி

தமிழ்மொழி தமிழர்களினதும் தமிழ் பேசும் பலரின் தாய்மொழி ஆகும். தமிழ், உலகிலுள்ள முதன்மை யான மொழிகளில் ஒன்றும், செம்மொழியும் ஆகும். தமிழ்மொழி இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அதிக அளவிலும், ஐக்கிய அரபு அமீரகம், தென்னாப்பிரிக்கா, மொரீஷியஸ், பிசி போன்ற

நாடுகளில் சிறிய அளவிலும் பேசப்படுகிறது

2500 ஆண்டுகளுக்குமேல் பழமை வாய்ந்த இலக்கிய மரபைக் கொண்டுள்ள தமிழ்மொழி, தற்போது வழக்கிலுள்ள ஒருசில செம்மொழிகளில் ஒன்றாகும் என்பதும் ஆய்வாளர்கள் கருத்தாகும். தமிழ் மிக நீண்ட இலக்கிய, இலக்கண மரபுகளைக் கொண்டது. தமிழ் இலக்கியங்கள் சில 2500 ஆண்டுகளுக்குமேல் பழமையானவை என்பதைச் சான்றுகள்வழி அறியமுடிகிறது.

தமிழ்மொழியின் தொன்மை

தமிழ்மொழி திராவிட இனத்தின் முதல் மொழி ஆகும். நமக்குக் கிடைத்துள்ள இலக்கியங்களைக் கொண்டு நோக்கினால் கி.மு.300க்கு முன்பே நாகரிகத்துடனும் பண்பாட்டுடனும் இலக்கிய வளத்துடனும் விளங்கியது தமிழ்மொழி என்பது புலனாகும். அம்மொழி தோன்றிய காலத்திலிருந்து இன்றளவும் தொடர்ந்து மக்களால் பேசப்பட்டுவருகிறது. அது தோன்றிய காலத்தில் தோன்றியதாகக் கருதப்படும் சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழிகள் வழக்கிலிருந்து நீங்கின என்பதைச் சான்றுகள் பறைசாற்றுகின்றன. இத்தகு பழமை வாய்ந்த தமிழ் இலக்கியங்களில் பல்வேறு மொழிச் சொற்களும் இணைந்திருப்பதைச் சான்றுகள் உணர்த்துகின்றன.

தமிழும் பிறமொழிகளும்

தமிழ்மொழி தொன்மைக் காலத்தில் பழந்திராவிட மொழி என்ற நிலையில் இருந்தது. அந்தப் பழந்திராவிட மொழிக்கூறுகள் பலவற்றை அப்படியே கொண்டுள்ள மொழி தமிழ் மட்டுமே. அப்பழந்திராவிடத் தமிழ்மொழியோடு சமஸ்கிருதம் தொடர்பு கொண்டதால் முதலில் பிரிந்த மொழி கன்னடம், அதனைத் தொடர்ந்து தெலுங்கும் துளுவும் அதனைத் தொடர்ந்து மலையாளம் என இன்றைய அளவில் மொழிகள் பிரிந்தன. இவ்வாறு தமிழிலிருந்து தனித்துப் பிரிந்த மொழிகள் எல்லாம் தமக்கென இலக்கிய இலக்கணங்களை உருவாக்கிக்கொண்டன. துளுமொழிக்கு மட்டும் பிற்காலத்தில் இலக்கணம் உருவாக்கப்பட்டது. தமிழோடு தொடக்கக் காலத்தில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழில் சொற்கள் பல வழக்கிற்கு வந்தன.

தமிழில் பிறமொழிக்கலப்பு

ஒரு மொழியில் பிறமொழிச் சொற்கள் பின்வரும் சில காரணங்களால் ஏற்படுகின்றன. ஆங்கிலேயர் ஆட்சியில், ஆங்கிலம் தமிழில் கலந்தது. ஆரியரின் பண்பாட்டுப் படையெடுப்பால் தமிழக மக்கள்முதல் மன்னர்கள்வரை வாழ்வியல் கூறுகளில் சமஸ்கிருதம் கலந்தது. அரேபியர், யூதர், பாரசீகர், சீனர், ஐரோப்பியர்கள் போன்ற வெளி நாட்டவரின் வாணிகத் தொடர்புகள் வாயிலாக அவர்களது மொழிச்சொற்கள் தமிழில் கலந்தன. மேலும் கண்டுபிடிப்புகள் வாயிலாக அவற்றின் பெயர்கள் கண்டுபிடித்தவரின் பெயரிலேயே பயன்படுத்தும்போது பிற மொழிச் சொற்கள் கலக்கின்றன. சான்றாக, மொபைல், டீசல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். பிறமொழியில் கல்வி பயிலும் போதும், வேலை வாய்ப்புக்காகப் பிறமொழியைப் பயிலும்போதும் அம்மொழிச் சொற்கள் தாய்மொழியில் கலந்துவிடுகின்றன. நாளேடுகளில் பிற மொழிச் சொற்கள் கலந்து எழுதுவதும் பிறமொழிக்கலப்பிற்குக் காரணமாகிறது. சான்றாக, தர்ணா, பந்த், புருஷன், வாஸ்தவம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

வடமொழி

தொல்காப்பியர் காலத்திலிருந்தே தமிழோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்ட மொழி சமஸ்கிருதம் எனப்படும் வடமொழியாகும். தொல்காப்பியர் வடக்கிலுள்ள மொழியைப் பற்றிப் பொதுவாக வடசொல் எனக் குறிப்பிடுகிறார். அதனால் இச்சொல் பிராகிருதம், பாலி ஆகிய மொழிகளையும் குறிப்பதாயிருக்க வேண்டும் என்கிறார் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார். செய்யுளில் இடம்பெறும் நால்வகைச் சொற்களைத் தொல்காப்பியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

இயற்சொல் - சாதாரண எளிய சொற்கள்

திரிசொல் - இலக்கியச் சொற்கள். ஒரு பொருள் பல சொல்லும் பல பொருள் ஒரு சொல்லும் இதில் அடங்கும்.

திசைச்சொல் - கிளைமொழிச் சொற்கள்

வடசொல் - இந்நான்கு சொற்களுள் வடசொல் என்பதனையும் சேர்த்துக் கூறுவது தொல்காப்பியர் காலத்திலேயே வடசொல் தமிழில் இடம்பெற்றிருந்ததை அறிய முடிகிறது. வடசொற்களைத் தமிழில் எடுத்தெழுதுவது பற்றியும் தொல்காப்பியர் தெளிவுபடுத்துகிறார். இதை,

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே (தொல்.சொல்.395)
சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்(தொல்.சொல். 396) என்னும் நூற்பாக்கள்வழி அறியமுடிகிறது.

வடமொழிக் கலப்பு

கபிலர் ஆரியரை நோக்கி, ***முற்சடைப் பலனில்வேறாகிய முறைமைசொல் நால்வகைச் சாதியிந் நாட்டினீர் நாட்டினீர்*** என்று கூறுவதினின்றும் வடமொழிக் கலப்பிருந்தமையை அறியலாம்.

சங்க இலக்கியங்களில் வடமொழிச்சொற்கள்

சமண, பௌத்த சமயங்களின் தொடர்பால் வடமொழிச் சொற்கலப்பு அதிகமானதால் சங்க இலக்கியங்களில் பல வடமொழிச் சொற்களைக் காண முடிகின்றது. சான்றாக,

ஓங்கிரும் பெண்ணை நுங்கொடு பெயரும்
ஆதி யருமன் மூதூ ரன்ன (குறுந். 293: 4) என்னும் பாடலடிகளில் ஆதி எனும் வடசொல் இடம்பெற்றுள்ளதை அறியமுடிகிறது. திருக்குறள் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் ஆதி எனும் சொல் இடம்பெற்றுள்ளதை,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (குறள்:1) என்னும் குறள்வழி அறியமுடிகிறது.

நள்ளென் றன்றே யாமம் சொல்லவிந்
தினிதடங் கினரே மாக்கள் முனிவின்று
நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே (குறுந்தொகை, 6 : 1)
என்னும் பாடலடிகளில் யாமம் என்னும் வடசொல் இடம்பெற்றுள்ளது. யாமம் = நள்ளிரவு.

புறநானூறு, கலித்தொகை போன்ற சங்கத் தொகை இலக்கியங்களில் ***தருமபுத்திர*** என்ற வடசொல் ***அறவன் மகன்*** எனவும், ***ஸ்ரீ*** என்ற சிறப்பு அடைச்சொல் ***திரு*** எனவும் தமிழாக்கம் பெற்றுள்ளதைச் சான்றுகள்வழி அறியமுடிகிறது. ***லக்ஷ்மி*** என்ற வடமொழிப்பெயர் முதன் முதலாக மணிமேகலையில் ***இலக்குமி*** எனத் தமிழாக்கம் பெற்றுள்ளதையும் சான்றுகள் எடுத்துரைக்கின்றன. ***வாரணாசி*** என்ற காசியின் பெயரைக் கலித்தொகைப் பாடலில் ***வாரணவாசி*** என்று குறிப்பிட்டுள்ளமையை,

தெருவின்கண் காரணம் இன்றிக் கலங்குவார் கண்டுநீ
வாரணவாசிப் பதம் பெயர்த்தல், ஏதில
நீ நின்மேல் கொள்வது (கலித்.60: 13) என்பதினின்றும் அறியலாம். ***யமுனா*** என்ற வடஇந்திய ஆற்றினைத் ***தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை*** என்று சிலப்பதிகாரம் குறிப்பிட்டுள்ளது. பரிபாடலில் நரசிம்ம அவதாரம் ***நரமடங்கல்*** என்றும் பிரகலாதன் ***பிருங்கலாதன்*** என்றும் குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

காப்பியங்களில் வடமொழிச்சொற்கள்

சிலப்பதிகாரம் இயற்றப்பட்ட காலத்தில் வடமொழிக் கலப்பு சங்க இலக்கியத்தைக் காட்டிலும் கூடுதலாக இருப்பதைக் காணமுடிகிறது. குறிப்பாகக் கண்ணகியும் கோவலனும் புகாரை விட்டு மதுரைக்குச் செல்லும் போது இராமனைப் பிரிந்த அயோத்திபோல என்ற குறிப்பைக் காணலாம்.

ஆயினன் இவ்வடிவு அறிமி னோவெனச்
சாவகர்க் கெல்லாம் சாற்றினன் காட்டத்
தேவ குமரன் தோன்றினன் என்றலும்
....
சாரணர் கூறிய தகைசால் நல்மொழி
ஆர் அணங்கு ஆக, அறம் தலைப்பட்டோர் (சிலப். 15: 190)
மேற்கண்ட சிலப்பதிகாரப் பாடலில் ***சாவகர், சாரணர்*** என்னும் இரண்டும் வடமொழிச் சொற்களாகும்.

ஞான நல் நெறி நல் வரம்பு ஆயோன்,
தானம் கொள்ளும் தகைமையின் வருவோன்
தளர்ந்த நடையின் தண்டு கால் ஊன்றி
வளைந்த யாக்கை மறையோன்- தன்னை (சிலப்.15:43)
மேற்கண்ட பாடலடியில் ***தானம்*** என்னும் வடசொல் பயின்றுள்ளது. தானம் = கொடை.

உன்பெருந் தானத் துறுதி யொழியாது
துன்ப நீங்கித் துயர்க்கட லொழிகென
விஞ்சையிற் பெயர்த்து விழுமந் தீர்த்த
எங்குல தெய்வப் பெயரீங் கிடுகென (சிலப்.15:36)
என்னும் பாடலடிகளில் ***விஞ்ஞை*** என்னும் வடசொல் இடம்பெற்றுள்ளது. விஞ்ஞை = வித்தை.

அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப்
பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோள் (சிலப்.15: 116)

மேற்கண்ட பாடலடிகளில் ***இயக்கி*** எனும் வடசொல் பயின்றுள்ளது. ***இயக்கி*** என்பதற்கு, ***யட்சப்பெண், கந்தருவப்பெண், குபேரன் மனைவி, தருமதேவதை*** என்று தமிழ் அகராதி பல பொருள் கூறுகிறது.

நிம்பம் முளைத்து நிகழ்தல் நித்தியம்
நிம்பத்து அப்பொருள் அன்மை அநித்தியம் (மணி. 27: 185)
இந்த மணிமேகலைப் பாடலடிகளுக்கு, பயறு போன்ற வித்துத் தன்மை கெடாது உதிர்ந்துவிடுவது மாயம். செயலாக்கம்பெற்று அதன் வித்துத் தன்மை அழிவது. இது எங்கும் உள்ளது. பொருள்களை இயங்கச் செய்யும் என்று பொருளாகும். ***அநித்தியம்*** என்பதற்கு நிலையில்லாதது என்று பொருளாகும்.

பொன்அணி நேமி வலங்கொள்சக் கரக்கை
மன்உயிர் முதல்வன் மகன்எமக்கு அருளிய
அருமறை நன்னூல் அறியாது இகழ்ந்தனை
தெருமரல் உள்ளத்துச் சிறியை நீஅவ்
ஆமகன் ஆதற்கு ஒத்தனை அறியாய்
நீமகன் அல்லாய் கேள்என இகழ்தலும் (மணி.13:57)
தங்கச்சக்கரத்தை வலக்கையில் சுழற்றிக்கொண்டுள்ள மன்னுயிர்களுக்கு முதல்வனாக விளங்கும் திருமால் அருளிய வேதமாகிய நன்னூலை நீ தடுமாறும் உள்ளத்தில் இகழ்ந்து பேசும் சிறியவன். ஆதலின் அந்த பசுவுக்கு மகன் ஆபுத்திரன் ஆதற்கு ஒத்தவன். மகன் என்று உன்னைக் கொள்வதற்கில்லை என்று அவர்கள் கூறி, ஆபுத்திரனை இகழ்ந்தனர் என்பது பாடலின் பொருளாகும். ***நேமி*** என்பதற்கு ***வட்டம், தேரின் சக்கரம்; தேருருளை,சக்கராயுதம், ஆஞ்ஞாசக்கரம், சக்கரவாளம், பூமி, கடல், மோதிரம், சக்கரவாகம் எனும் பறவை, சக்கராயுதனாகிய திருமால், தீர்த்தங்கரர் இருபத்துநால்வருள் ஒருவர்*** என்று பல்வேறாகத் தமிழ் அகராதி பொருள் தருகிறது.

மேரு என்னும் வடசொல் ***மேரு வலம் திரிதலான்*** என்று சிலப்பதிகாரத்திலும் ***நடுவு நின்ற மேரு குன்றமும், மேரு குன்றத்து ஊரும் நீர் சரவணத்து*** என்று மணிமேகலையிலும் இடம்பெற்றுள்ளது.

பிற்காலத்தில் வடசொல் கலப்பு

திருப்புகழிலும், வில்லிபுத்தூரார், தாயுமானவர் பாடல்களிலும் சமஸ்கிருதத் தொடர்கள் செல்வாக்குற்றிருந்தன என்பதைச் சான்றுகள் உணர்த்துகின்றன. மக்களின் பேச்சுத் தமிழிலும் சமஸ்கிருதச் சொற்கள் புகுந்தன. 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய முதல் தமிழ்ப் புதினமான பிரதாபமுதலியார் சரித்திரம்

தொடர்ச்சி: பக். 70

ISSN 2320-4842

கானகன் புதினம் காட்டும் பண்பாட்டுப் பதிவுகள்

தீபிகா. ஆ.
முனைவர்பட்ட ஆய்வாளர் (பதிவுஎண்:20PHTMF008), தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி
நிறுவனம், கோயம்புத்தூர் 641 043

முனைவர் ச. பிரியதர்ஷினி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல்
மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் 641 043

ஆய்வுச் சுருக்கம்

பளியர் இன மக்களின் வாழ்வியலைப் பேசும் லக்ஷ்மி சரவண குமாரின் கானகன் புதினம் இனவரைவியல் பின்புலத்தில் இயற்றப்பட்டுள்ளது. பழனி முதல் செங்கோட்டை வரையிலான மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பல்வேறு பழங்குடியின மக்கள் வாழ்கின்றனர். பளியர், மலைவர், மலைக்குறவர், மலைவேடர், மூப்பர், காணிக்காரர் முதலிய பல பழங்குடியின மக்கள் வாழ்கின்றனர். இவர்களுள் பளியர் இன மக்கள் பிரதான பழங்குடிகளாக தென்மாவட்டங்களில் பரவலாகக் காணப்படுகின்றனர்.

பளியர்கள் குறித்து எழுந்த இலக்கியங்கள் குறைவு என்றாலும் கானகன் புதினம் பளியர்களின் பண்பாடு, பழக்க வழக்கங்களை நுட்பமாகப் பதிவு செய்திருக்கும் படைப்பாகக் கருதப்படுகிறது. மலைசார் பழங்குடிகளின் பண்பாட்டியல், அவர்கள் சந்திக்கும் வாழ்வியல் சிக்கல்கள், அவர்தம் நம்பிக்கைகள் ஆகியவற்றை இப்புதினம் பதிவுசெய்துள்ளது. கானகன் புதினத்தில் பளியர் இனக்குழு மக்களின் சமூக வாழ்வியலை பார்க்கும்போது இயற்கையோடு பின்னிப் பிணைந்த அவர்களது வாழ்வியல் சிதைக்கப்படுவதையும் அதனால் அம்மக்கள் இயற்கைச் சூழலை தொலைத்த வாழ்க்கையை நோக்கிப் பயணப்படுவதையும் பார்க்க முடிகிறது. கானகன் புதினத்தில் பளியர்களின் வாழிடம், உணவுப் பண்பாடு, வழிபாட்டுமுறைகள், சடங்குகள், உறவு நிலைகள், தொன்மங்கள், இடப்பெயர்ச்சிக் கதைகள், பழமொழிகள், அடையாள நெருக்கடிகள் எனப் பளியர்களின் பண்பாட்டியலை முதன்மையாகக் கொண்டு இவ் ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழும் வேட்டைக்காரனுக்கும் அவன் வளர்க்கும் பழங்குடியின சிறுவனுக்குமான வாழ்வியலை சித்தரிப்பதே கானகன் புதினம். ஒரு பனி காலத்தில் ஆரம்பித்துக் கதையை இளவெனில், கடுங்கோடை, பெரும்மழை என நான்கு காலங்களுக்குமாக பிரித்து ஒவ்வொரு காலத்துக்கும்ஒரு இயல்பைச் சொல்லி அதிலிருந்து கதையை ஆரம்பித்து நகர்த்திச் செல்கிறார். பன்னாட்டு நிறுவனங்களாலும், தனியார் நிறுவனங்களாலும் பளியக் குடிக்கு ஏற்படும் பண்பாட்டுச் சிதைவுகளை படைப்பாளர் எடுத்துரைக்கிறார். மலைகளில் வாழும் பழங்குடியினர் பற்றியும் வனத்தோடு இயைந்த அவர்களின் வாழ்க்கை முறை, வேட்டை, அறம், இறை நம்பிக்கை பற்றியும், நிலக்குடி முதலாளிகளின் பேராசையினால் மலையக மக்களின் கைகளில் இருந்து நழுவும் இயற்கைச் செல்வங்களைப் பற்றி இவ் ஆய்வு எடுத்தியம்புகிறது.

திறவுச் சொற்கள்: பளிச்சியம்மன்-தொன்மங்கள்-பாட்டா-பழங்குடிகள்-கண்ணகி-வேட்டை-பட்டாம்பூச்சிகள்-மகப்பேறு-கானகம்-குழந்தைத் திருமணம்-ஆன்மா-வனவளம்-இயற்கை-வேளாண்மை.

Keywords: Pallichiamman – thonmangal – paatta – palankudiyinar – kannaki – vettai – pattampoochigal – magaperu – kanagam – kulanthai thirumanam – anma- vanavallam – iyarkai – velanmai.

முன்னுரை

பண்பாடு என்பது நம் வாழ்க்கை முறையையே குறிக்கும். சமுதாயத்தில் வாழ்கிற மக்களின் நடத்தைகளையும், எண்ணங்களையும் வெளிப்படுத்துவதே பண்பாடு. பண்பாடு மனித குலத்தின் தனித்துவமான பண்பு. மக்கள் பல தலைமுறைகளாகக் குழுவாகக் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், பழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த தொகுதியே பண்பாடு ஆகும்.

மானிடவியல் ஆய்விற்கு *பண்பாடு* என்னும் கருத்தாக்கம் மிகவும் இன்றியமையாததாகிறது. மானிடவியலின் பரந்துபட்ட ஆய்வுப் பரப்புகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் பாங்கினைப் *பண்பாடு* பெற்றுள்ளது. பண்பாட்டிற்குப் பல அறிஞர்கள் பல்வேறு வரையறைகள் தந்துள்ளனர். அவற்றுள் அறிஞர் பக்தவத்சல பாரதியின் வரையறை நம் கவனத்தைக் கோருகிறது. ***மானுட வாழ்வின் ஒட்டுமொத்த வெளிப்பாடே பண்பாடு (பண்பாட்டு மானிடவியல், பக்.140)*** என்று விளக்கமளிக்கிறார். அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், வழக்கம் முதலியவை பண்பாட்டின் கூறுகளாகும். மனிதன் சமூகத்தின் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பழக்க வழக்கங்களும் திறமைகளும் அடங்கிய தொகுதியே பண்பாடு எனலாம்.

பளியர் இன மக்களின் வாழ்க்கைச் சூழலானது மலையின் ஏற்றத்தைப்போலக் கடுமையானதாக இருந்தாலும்,

அவர்களின் பண்பு மட்டும் மலையின் உயரத்தைப் போன்று உயர்ந்திருக்கிறது. எளிமையான அன்றாடத் தேடல்களை மட்டும் நிறைவுசெய்து கொள்வதாகப் பளியர் இன மக்கள் வாழ்வியல் உள்ளது. அவ்வகையில் *கானகன்* புதினம் வெளிப்படுத்தும் பண்பாட்டுப் பதிவுகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

பளியர் இன மக்களின் வாழிடம்

மனிதன் தனது வாழ்க்கையின் தொடக்கத்தில் வாழ்விடம், உணவு, உடை, தொழில் போன்ற கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டான். பிற்காலத்தில் அடிப்படைத் தேவைகளிலிருந்து ஆடம்பரத்தை நோக்கி மெல்லமெல்ல நகரத் தொடங்கினான். இந்த இடைவெளிஅவனது பண்பாட்டு விழுமியங்களைச் சிதைக்கத் தொடங்கியது. இயற்கைக்கும் அவனுக்குமான தொடர்பு சிதையத் தொடங்கியது. நாகரிகம் என்று கருதும் கருதுகோள்தான் சமூகப் பண்பாட்டுக் கட்டமைப்புகளைக் கொஞ்சம்கொஞ்சமாக இழக்கச்செய்து வருகிறது.

தேனி மாவட்டத்தில் உள்ள கம்பம் மெட்டு, போடி, அகமலை, வருசநாடு ஆகிய பகுதிகளில் வாழும் பளியர்களின் வாழ்வியலைக் களமாகக் கொண்டு புதினம் படைக்கப்பட்டுள்ளது. மொக்கநிலைப் பளியக்குடிதான் அகமலை வட்டத்தில் பெரிய பளியக்குடி என்பதால்அதுவே கதையின் மையக் களமாக அமைகிறது. மொக்கநிலைப் பளியக்குடியில் சுமார் நாற்பது குடும்பங்கள் வசித்ததாகப் படைப்பாளர் பதிவு செய்கிறார். மொக்கநிலையைச் சுற்றிலுமுள்ள அகமலை, நவமலை,வெள்ளிமலை, தவளை நாடு ஆகிய வனங்களிலும் பளியக்குடிகள் வசிப்பதாகப் பதிவு செய்கிறார். பளியக்குடியில் என்ன நிகழ்ச்சிகள் நடந்தாலும் ஆட்கள் மூலமாக அனைத்துப் பளியக்குடிகளுக்கும் செய்தி தெரிவிக்கப்படும். பளியர்கள் காலச்சூழலுக்கேற்பக் குடிசைகளை இடம்மாற்றி வனங்களில் இடம்விட்டு இடம்பெயர்ந்து குடிசைகள் அமைத்து வாழ்கின்றனர். தட்பவெப்ப சூழலுக்கேற்பக் குடிசைகளிலும் பொடவுகளிலும் வாழ்கிறார்கள். ***பொடவுக்குள் படுப்பது கருவறைக்குள் படுப்பது மாதிரியான அலாதியானதொரு சுகம், அந்த இருண்மையும் குளிர் காலத்தில் உள்ளிருக்கும் சூடும், வெயில் காலத்தில் உள்ளிருக்கும் குளிரும் விசித்திரமானதாக இருக்கும் (கானகன், பக்.66).*** அவர்கள் பொடவுக்குள் உறங்குவதை மிகவும் விரும்புகின்றனர். ஆதி மனிதன் குகைகளிலே வாழ்ந்ததன் நீட்சியாக ஆதிப் பழங்குடி மக்கள் பருவநிலைக்கேற்பப் பொடவுகளிலே தங்குகிறார்கள்.

வனமும் பளியர்களும் ஒருவரோடு ஒருவர் பிரிக்கவியலாக் கூறுகள். ***இந்தக் காடு அவர்களின் வாழ்வாதாரம் மட்டுமல்ல, அவர்கள் இந்தக் காட்டை நம்பியிருப்பது போலவே இந்தக் காடும் அவர்களை நம்பித் தான் இருக்கிறது. பளியனும் இந்த வனமும் தனி உலகம். இரண்டில் ஒன்று பிரிந்தாலும் இன்னொன்று வெகு காலத்திற்கு ஜீவித்திருக்காது (கானகன், பக்.64).***

பளியர்களை வனத்திலிருந்து வெளியேற்றப் பல முயற்சிகள் நடந்தாலும் அவர்கள் ஏதேனும் ஒரு வழியில் வனத்தோடு தொடர்புப்படுத்திக்கொள்ள விரும்புகின்றனர். அவர்கள் தாயின் கருவில் இருக்கும்போதே வனத்தின் வாசனை அறிந்தவர்கள் என்பதால் வனத்தோடு அவர்கள் தொப்புள்கொடி உறவைப் பேணுகின்றனர்.

கல்வி

அறியாமை இருளை நீக்கி வாழ்வை வளமாக்குவது கல்விச் செல்வம்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை எவை (குறள்.400) என்கிறார் பொய்யாமொழிப்புலவர். விளிம்பு நிலையில் வாழும் பழங்குடி மக்களின் வாழ்வையும் வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்லும் வல்லமை கல்விக்கு மட்டுமே உள்ளது. பளியர் இன மக்களுக்குக் கல்வி பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லை. அரசு அவர்களுக்குக் கல்வி கற்கப் பல வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தாலும்கூடப் பெரும்பான்மை மக்கள் விழிப்புணர்வு இல்லாததால் கல்வி கற்பதைத் தவிர்க்கின்றனர். ***இந்தக் காடுதாங்க எங்க ஆசான், இங்க படிக்க முடியாதையா ஊர் உலகம் எங்களுக்கு சொல்லிக் குடத்திடப் போகுது? வேணாங்க...(கானகன், பக்.63)*** கானகத்தில் கிடைக்கும் வாழ்வியல் மட்டுமே அவர்களுக்கு நிறைவளிக்கக்கூடியது என்றெண்ணுகின்றனர். காலப்போக்கில் அவர்களுள் கணிசமானோர் கல்வி கற்க முன்வருவது வரவேற்கத்தக்கதாகும்.

அடையாள நெருக்கடிகள்

பளியர் இன மக்கள் காலங்காலமாக வனங்களில் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள், விவசாயிகள், பெருவணிகர்கள், பன்னாட்டு நிறுவனங்கள், வனவளங்களைக் கொள்ளையடிப்பதாலும் சூறையாடுவதாலும் பழங்குடி மக்கள் தம் வாழிடத்தை இழக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. பளியர் இன மக்களின் வாழ்வியல் முழுமையான வளர்ச்சி காண முடியாத சூழலில் மலைத் தோட்டங்களிலும், சமவெளிகளிலும் தினக்கூலிகளாகவும் வாரக்கூலிகளாகவும், மாதக்கூலிகளாகவும் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பளியர் இன மக்கள் கானகத்திலிருந்தே தமது வாழ்வாதாரத்தைஈட்டிக்கொள்பவர்கள். இம்மக்களை வனத்தைவிட்டு வெளியேற நிர்பந்திக்கும்பொழுது தங்கள் அடையாளத்தைத் தொலைத்து வாழ்விடம் அற்றவர்களாகவும், தொழில் அற்றவர்களாகவும் கருத்தியல் கலாச்சார மட்டங்களில் ஒடுக்கப்பட்டவர்களாகவும் வாழ நேரிடுகிறது. வனவளச் சுரண்டல்கள் பழங்குடிகள் மீதான ஒருவித வன்முறையே எனலாம். ***காலங் காலமாக இந்தக்காடே கதின்னு வாழ்ந்துட்டோம். காட்டோட மலையை தாண்டனும்னாலே கலக்கமாக இருக்கப்பா (கானகன்,ப.28)*** என்று அவர்கள் கூறுவதி

லிருந்து அவர்களுடைய வாழ்வியல் நெருக்கடிகளை யும் அறிந்துகொள்ள முடிகிறது.

தினை பயிரிட்டும், தேன் எடுத்தும், மீன் பிடித்தும் சுதந்திரமாக வனத்திற்குள் வாழ்ந்தவர்கள் பளியர்கள். வனத்தின் மிகுதியை மட்டுமே தங்கள் வாழ்வாதார மாகக் கொண்டு வனதேவியின் மைந்தர்களாய் வாழ்ந்த பளியர்கள் காலப்போக்கில் கஞ்சாத் தோட் டங்களுக்கு வேலைக்குச் செல்லும் அவல நிலையை யும் படைப்பாசிரியர் பதிவுசெய்துள்ளார்.

சும்மாவே நம்மள இந்தக் காட்ட விட்டுத் துரத்தனும்னு குடியானவங்களும் அரசாங்கமும் துடிச்சிக்கிருக்கு... இந்த நேரத்துல நாம் பயந்துபோயி காட்ட விட்டு வழங்கினம்னா நாம் ஒரு நாளும் திரும்ப காட்டுக்குள்ள வரமுடியாது (கானகன், பக்.31). தனது ஒவ்வொரு நரம்பையும் எலும்பையும் காட்டோடு பிணைத்திருப் பவர்களை அவர்தம் வாழ்விடத்தை விட்டு விரட்டி யடிப்பது ஏற்புடையதன்று. அதன் வேதனையையும் அடையாளச் சிதைவையும் படைப்பாளர் பதிவுசெய் துள்ளார்.

வேட்டையும், வேட்டைக்கருவிகளும்

பளியர் இன மக்கள் மிகவும் சொற்ப அளவிலேயே வேட்டையாடுகின்றனர். அவர்கள் வேட்டையாட நவீன கருவி ஏதும் கிடையாது. பழங்கருவிகளான வில், அம்பு, வேல், கம்பு போன்றவற்றையே பயன்படுத்து கின்றனர். இம்மக்கள் வேட்டையை விரும்பாத போதிலும் மீன் பிடித்தலை மேற்கொள்கின்றனர். குரங்காறு எனும் மலையாற்றில் பளியர்குடிப் பெண் கள் மீன் பிடிக்கச் செல்வதை இப்புதினம்வழி அறிய லாம்.

சடையன் வில் அம்பைப் பயன்படுத்துவதில் தேர்ந்தவ னாக இருக்கிறான். அவனால் இருநூறு அடிக்கு அப்பா லுள்ள இலக்கைக்கூட மிகச் சரியாக வீழ்த்த முடியும். அவன் வேட்டைக் கருவிகளைப் பயன்படுத்தும்போது உடல்வலிமையைக் காட்டிலும் விவேகத்தையே பயன் படுத்தினான். மரத்திலோ, விலங்குகளின் உடலிலோ அவன் எய்த அம்பை அவ்வளவு எளிதாக மற்றவர்கள் வருவி விட முடியாதபடி அம்பு எய்யும் வல்லமை கொண்ட வன். ஆனால் அவன் வேட்டையை விரும்பாதவன், வேட்டையாடப்பட்டு சாகும் உயிரின் ஆத்மா அத்தனை ஜீவராசிகளோடும் சம்பந்தப்பட்டது என்னும் பளியர்குல மக்களின் நம்பிக்கை அவனுள் வேரூன்றி இருந்தததால் அவனால் வேட்டையாடுதலைக் கொண்டாட முடிய வில்லை. இப்புதினத்தின் வாயிலாகப் பளியர் இன மக்கள் வேட்டைத் தொழிலில் தம்மைப் பெரிதாக ஈடுபடுத்திக்கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது.

பளிச்சியும் கண்ணகியும்

தவளைநாட்டுப் பளியக்குடியின் கட்டுப்பாட்டிலுள்ள முப்பதுபளியக்குடிக்கும் குலதெய்வம் பளிச்சியம்மன் தான். கண்ணகியையும் பளிச்சியம்மனையும் இணைத் துப் பளியர் இன மக்களிடம் ஒரு வழிபாட்டு மரபும் பழங்கதையும் உள்ளது. கண்ணகி சேர நாட்டின் அடர் கானகத்தில் இறைவி ஆனதை அறிந்து உயிர்ப் பித்தவர்கள் பளியர்களே என்று கூறப்படுகிறது. பேரி யாற்றங்கரையில் இளங்கோவடிகளுக்கும் சாத்தனா ருக்கும் கண்ணகியின் கதையைச் சொன்னவர்களை பழங்குடிகள் என்று சிலப்பதிகாரம் கூறுவது இங்கு நோக்கத் தக்கது. கண்ணகியை முதலில் தெய்வமாக வணங்கிக் கோவிலைப் பாதுகாத்தவர்களும் பளியர் களே என்பது வரலாறு. கானகன் இவ்வட்டார வர லாற்றை எடுத்துரைக்கிறது. ***கண்ணகியை வணங்க வரும் அத்தனை பேரும் பளிச்சியைத் தாண்டித்தான் போக வேண்டும். எங்கும் ஆதரவின்றி திக்கற்றுப் போன வளை வனமகள் பளிச்சி அரவணைத்துக் கொண்டா ளெனப் பளியர்களின் கதைகள் சொல்கின்றன (கானகன், பக்.25).*** கண்ணகியைப் பளிச்சியின் தத்துப்பிள்ளை யாக இம்மக்கள் கருதுகிறார்கள். சித்திரை மாதத்தில் பளிச்சியம்மனுக்கு வழிபாடு நடத்துகிறார்கள்.

பளிச்சியும் பாட்டாவும்

பளியர்கள் புலியைப் *பாட்டா* என்கின்றனர். தங்கப் பன் புலியைக் கொன்றபோது ஒட்டுமொத்த பளியக் குடியும் பெரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள். அதன்பின் வரப்போகும் அழிவை எண்ணிக் கலக்கமுற்றனர். ***கொல்லப்பட்ட பாட்டாவின் ஆன்மா அந்தக் காட்டின் மரம் செடி கொடிகளென எல்லாற்றின் முன்னால் விழுந்து தன் குட்டிகளை காக்கச்சொல்லி மன்றாடியது. குட்டி களின் பரிதவிப்பைக் காண சகிக்காது நள்ளிரவில் பாட் டாவின் ஆன்மா உறுமுவதை மொத்த பளியக்குடியோடு சேர்ந்து பளிச்சியும் கேட்டாள். ஆயிரம் இடிகள் இறங் கும் பெருஞ்சத்தத்துடன் பளிச்சி உக்கிரத்துடன் ஆட நினைத்தாள், அவளுக்கு எல்லாமே ஒன்றுதான். பளியன் அவளுக்கு எப்படிப் பிள்ளையோ அப்படித்தான் அவன் வளர்க்கும் தினை வயலும் மரங்களும் பிள்ளைகள். ஆனால் பாட்டா அவளின் பாதுகாவலன்! (கானகன், பக்.)*** பளியர் இன மக்களாய் பிறந்தவர்களுக்கு அவர்தம் உடல் ரேகைகளோடும், நரம்புகளோடும் சேர்ந்து பிணைந்த உணர்வு பளிச்சியும் பாட்டாவும் தெய்வங்கள் என்பது. பளிச்சியம்மனும் பாட்டாவும் (புலி) முதன்மைத் தெய்வங்கள் என்பது புலனாகிறது. பாட்டாவின் (புலி) அழிவென்பது ஒட்டுமொத்த வன அழிவின் தொடக்கப்புள்ளியாகக் கருதப்படுகிறது.

திருமணம்

பளியர்களிடம் குழந்தைத் திருமணமுறை வழக்கத் தில் உள்ளது என்பதை, ***செல்லாயிக்கு பதிமூன்று வயது இருக்கும்போதே சடையனுக்குத் திருமணம் செய்து வைக் கப்பட்டாள். வாசியின் காதலி குயிலம்மா பதின்பருவத் திலேயே கருவுருகிறாள். அவன் கருவுற்ற பிறகே அவர்கள் ஒன்றாக வாழ முற்பட்டுத் திருமணம் செய்துகொள்கின் றனர்.*** அவர்களுக்குள்ளாகவே காதல் திருமணம் ஆதரிக்கப்படுகின்றது. வரதட்சணைக்கு இடமில்லை. திருமண மற்றும் பண்டிகையின் போது கறி விருந்து நடைபெறுகிறது.

தொன்மக் கதைகள்

பளியர் இன மக்கள் ஆன்மா மட்டுமன்றி அக்காட்டில் வாழும் எல்லா உயிர்களின் ஆன்மாக்களும் காட்டு மரங்களிலே சேமிக்கப்படுவதாக ஒரு தொன்மம் உண்டு. ஆன்மாக்களுக்கு அழிவில்லை என நம்பும் அவர்கள் அந்த ஆன்மாக்கள் வாழும் மரங்களுக்கும் அழிவு ஏற்படாது என்று நம்புகின்றனர். மரங்களை வெட்டும்சில குடிகளைப் பாட்டா (புலி) பழிவாங்கும் என்று உறுதியாக நம்புகின்றனர்.

மரம் வெட்டுபவர்களை நிலாவிலுள்ள பாம்பு விழுங்கும் என்னும் தொன்மக் கதையையும் தம் பிள்ளைகளுக்குச் சொல்கிறார்கள். ***இந்தக் காட்டின் மரம் ஒவ்வொன்றுக்குமான தாய் நிலாவில் இருக்கிறாள். இந்த மரங்கள் நிலாவின் பிள்ளைகள், இதைக் கொல்கிறவர்களை எல்லாம் அமாவாசை நாளில் நிலாவிலிருக்கும் பாம்பு வெறி கொண்டு விழுங்கிவிடும். என்று பாட்டா சொல்லி இருக்கிறார் (கானகன், ப.67)***. இம்மக்களிடையே வழங்கிவரும் தொன்மங்களும் பழங்கதைகளும் இவர்களை இயற்கையின் பிள்ளைகளாக வாழவே வழிசெய்கின்றன. இயற்கைக்கு எதிராகச் செயல்படாமல் இருப்பதையும் தடுக்கிறது என்பதை அறியலாம்.

நம்பிக்கைகள்

கானகத்தில் இறக்கும் ஒவ்வொரு உயிரின் ஆத்மாவும் பளிச்சியம்மனைச் சென்றடைகிறது என்று பளியர் இன மக்கள் நம்புகின்றனர். வனத்தில் வாழும் எந்த உயிரையும் அவை இறக்கும் தருவாயில் அவர்கள் தொடுவதில்லை.ஏனெனில்அவ்வாறு செய்வது அதன் ஆத்மா பளிச்சியம்மனைச் சென்றடைவதற்கு இடையூறு செய்யும் என்றெண்ணுகின்றனர்.

முதல் தடவையாக புலி மீது கருணை சுரக்க அருகில் சென்றுதொட்டுப்பார்க்க நினைத்துக் கைகளை நீட்டினான் அன்சாரி. துப்பாக்கியால் அவன் கைகளை நிறுத்திய தங்கப்பன் இன்னும் அதோட ஆத்மா பளிச்சியம்மன் கிட்ட போகல, நீ போயி ஆட்கள கூட்டிட்டு வா, நா அங்கேயே இருக்கேன் (கானகன், பக்.10). என்று தங்கப்பன் கூறுவதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

பளியர் இன மக்கள் பட்டாம்பூச்சியை துர் சகுனத்தின் குறியீடாகக் காண்கின்றனர். வருங்காலத்தில் நிகழப்போகும் ஆபத்தின் அடையாளமாகப் பட்டாம்பூச்சிகளைக் காண்கின்றனர்.

பாட்டா பறந்து போ … நீ பறந்து போ.. பாப்பாவுக்கு குடுக்கனும் … பறந்து போ… உன் மேல எல்லாம் பட்டாம் பூச்சி பறக்குது சீக்கிரம் பறந்து போ (கானகன் பக்.23)

வேணாம்…. பட்டாம்பூச்சி…பட்டாம்பூச்சி காட்டுல நெறய பட்டாம்பூச்சி பளிச்சியம்மாவுக்கு புடிக்காது… இங்க நெறய பட்டாம்பூச்சி வருது… என அவன் அரற்றியதைக் கேட்ட எல்லோரது நரம்பிலும் இனம் புரியாத தொர அச்சம் நழுவியோடியது. பட்டாம்பூச்சிகளைக் குறியீடாகக் கொண்டு வனத்திற்கு வரும் அழிவைப் பற்றிப் பளியர் இன மக்கள் அச்சம் கொண்டனர். பளியர் இன மக்கள் கானகத்தோடு இரண்டறக் கலந்தவர்கள். மரங்களை வனத்தில் வாழும் தம் மூதாதையர் என நம்புகின்றனர். அவர்கள் தம்மைக் காட்டைக் காப்பதற்கென்றே காலம்காலமாய் பளிச்சியால் அனுப்பப்பட்டவர்கள் என்று நம்புகின்றனர். கானகம் என்பது அவர்களின் வாழிடம் மட்டுமன்று. வாழ்வோடு இரண்டறக் கலந்தவென்று என்பதை இப்படைப்பின் வாயிலாக அறியலாம்.

மகப்பேறு

பளியர் இனப் பெண்கள் மகப்பேற்றின்போது மருத்துவச்சியின் துணையை நாடுவதில்லை. தாங்களாகவே தனிமையில் குழந்தையைப் பெற்றெடுக்கின்றனர். செல்லாயி பளியக்குடியிலிருந்து சென்று தங்கப்பனுடன் வாழ்ந்தாலும் அவளுடைய பிள்ளையை ஒரு பளியக்குடிப் பெண்ணைப் போலவே தனிமையில் பெற்றெடுக்கிறாள். இந்நம்பிக்கை அவர்களிடம் மிகம் ஆழமாக வேரூன்றியிருப்பதைக் காணலாம். ***தன் குழந்தையை பிரசவிக்கும் பளிச்சி அவளாகவே தான் பிரசவம் பார்த்துக்கொள்ள வேண்டும். மூன்று நாட்களுக்கு யாரும் அவளையும் அவள் பிள்ளையுயம் தொட மாட்டார்கள். தன் குழந்தையின் தொப்புள் கொடி அறுக்கிறவள் அந்தக் குழந்தையை முதலில் காட்டுவது இந்தக் காட்டிற்குத்தான் (கானகன், பக்.67).*** பளியர் இன மக்கள் தாயின் வயிற்றிலிருக்கும்போதே காட்டின் வாசனையை அறிந்தவர்கள என்பதால் குழந்தை தான் உள்ள இடத்தை மனதில் ஆழப் பதித்துக் கொள்ளும். பிரசவத்திற்கு மருத்துவச்சியை நாடாமை என்பது பளியர் இன மக்கள் பண்பாட்டியலின் முக்கிய கூறாகத் திகழ்கிறது.

முடிவுரை

இயற்கையைத் தாயாகக் கருதி, வனத்தைத் தெய்வமாக மனதில் நிறுத்திப் பளியர் இன மக்கள் வாழ்கின்றனர். வனம் காக்கப்பட வேண்டும் என்றால் அவர்களின் பண்பாட்டியல் விழுமியங்கள் காக்கப்பட வேண்டும்.

காட்டில் விளையும் பொருட்களை உண்டு வாழ்ந்த இவர்கள், பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகி வாழிடங்களை இழந்து மலைகளின் அடிவாரங்களிலும், மலை முகடுகளிலும் வாழ்ந்துவருகின்றனர். இவர்கள் குறைந்த நுகர்வுப்பழக்கம் கொண்டவர்கள்.

பளியர் இன மக்கள் பற்றிக் காட்சியகம், ஆய்வகம் போன்றவை உருவாக்கப்பட வேண்டும். அதில் அவர்கள் இழந்த வாழ்க்கை, சிதைந்த அடையாளங்கள், வேட்டைக் கருவிகள், ஆடைகள், அணிகலன்கள், சடங்கு சார்ந்த பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும். இதுவே எதிர்வரும் ஆய்வாளர்களுக்கும், சமூகத்திற்கும் அம்மக்களைப் பற்றிய புரிதலை ஏற்படுத்தும். இயற்கையோடு இயைந்து

வாழக்கூடிய பளியர் இன மக்களது வாழ்வியல் சூழலானது நெருக்கடிக்கு ஆளாகாதவாறு அரசும் அரசு சார்ந்த ஊடகமும் பாதுகாப்பைத் தர முன்வர வேண்டும்.

துணை நூல் பட்டியல்

1.கானகன், லக்ஷ்மி சரவணகுமார், எழுத்து பிரசுரம், சனவரி, 2019, ந.55(7), சென்னை, முதற்பதிப்பு - 2015

2.பண்பாட்டு மானிடவியல், பக்தவத்சல பாரதி, அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம்.

3.திருக்குறள் உரை, புலவர்.வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோயமுத்தூர்.

4.அடித்தள மக்கள் வரலாறு-ஆ.சிவசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.

5.கலித்தொகை (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.

6.பாரதப் பழங்குடிகள், எஸ்.ஆர்.வேங்கடராமன், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை.

7.நமது பழங்குடிகள், ப.ஸ்ரீனிவாசன், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை.

8.தமிழகப் பழங்குடிகள், பக்தவத்சல பாரதி, 2017, அடையாளம் பதிப்பகம், புத்தாக்கம், திருச்சி.

9.பழந்தமிழ் இலக்கியத்தில் விளிம்பு நிலையினர், ந.முருகேச பாண்யடின், விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர்.

References

1. Khanagan, Lakshmi Saravanakumar, Eluthu prasuram, January, 2019, Chennai, First Edition 2015.

2.Panpattumanduaviyal, Bhaktavatsala Bharati, Adaiyalam pathipagam, Budhanantham .

3.Thirukural Urai, Pulavar.V. Sivagnanam, Vijaya pathipagam, Coimbatore.

4. Adithala makkal varalaru – Aa. Sivasubramanian, New Century Book House (B) Ltd., 41-B, CITCO Industrial Estate, Ampathur, Chennai – 600 098

5. Kalithogai (Mullamum Uraiyum), New Century Book House (P) Ltd., Chennai.

6.Bharat Palangudigal, S.R.Venkataraman, Tamil Eluthalar Kutturavu sangam, Chennai.

7. Namathu Palangudigal, Pa. Sreenivasan, Tamilputtakkalayam, Chennai .

8. Tamil Palanguidgal, Bhaktavatsala Bharati, 2017, Adaiyala Pathipagam, Trichy.

9. Palanthamil Ilakiyathil Vilimbu nellaiyinar, Na. Murugesa Pandiyan, Vijaya Pathipagam, Coimbatore.

65ஆம் பக்கத் தொடர்ச்சி

வடசொற் கலந்து எழுதப்பட்ட போக்கினைப் புலப்படுத்துகிறது.

தொகுப்புரை

மொழி, மொழியின் இன்றியமையாமை பற்றித் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. தமிழ்மொழியின் தொன்மை குறித்து இவ்வாய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தமிழும் பிறமொழிகளும் குறித்த செய்திகள் தெளிவு படுத்தப்பட்டுள்ளன. பிறமொழிக் கலப்பு குறித்த செய்திகள் மற்றும் வடமொழி குறித்த செய்திகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களான கலித்தொகை, குறுந்தொகை, பரிபாடல், புறநானூறு ஆகியவற்றில் வடமொழிச்சொற்கள் பயின்றுள்ளது இவ்வாய்வின்வழிக் கண்டறியப்பட்டுள்ளது. காப்பியங்களிலும் வடமொழிச்சொற்கள் பயின்றுள்ளது இவ் ஆய்வுவழித் தெளிவுபடுகிறது. பிற்கால இலக்கியங்களில் வடமொழிச்சொற்கள் பயின்று வந்திருப்பதை சான்றுகள் உணர்த்தியுள்ளன. தமிழ் இலக்கியங்களில் வடமொழிச்சொற்கள் பயின்றுவருவதால் வடமொழிக்கிணையான தமிழ்ச்சொற்களை அறிந்துகொள்ள முடிகிறது. வடமொழி மட்டுமன்றிப் பிறமொழித் தாக்கமும்தமிழ் இலக்கியங்களில் காணப்படுவதால் அதற்கிணையான தமிழ்ச்சொற்களை அகராதியில் தேடும் பொழுது தமிழ்மொழிக்கான பழமையும் சிறப்பும் அறியப்படுகிறது. தமிழ்மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் வேண்டும் என்பதும் பிறமொழிக் கலப்பின்றித் தமிழ்மொழியில் இலக்கியங்கள் இயற்றப்படவேண்டும் எனும் மையக்கருத்தை முன்வைத்து இவ்வாய்வு எழுத்தப்பட்டுள்ளது.

துணைநூற்பட்டியல்

அறவேந்தன். இரா, குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்., சென்னை, முதற்பதிப்பு 2016.

ச.வே. சுப்பிரமணியன், சங்க இலக்கியம் எட்டுத்தொகை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

சீனிவாசன்.ரா.,சிலப்பதிகாரம் மூலமும் திறனாய்வும், சென்னை, முதற்பதிப்பு: 1997.

புலவர் இளங்குமரன். இரா (உ.ஆ), முதன்மைப் பதிப்பாசிரியர்கள், முனைவர் தமிழண்ணல், முனைவர் சுப. அண்ணாமலை, சங்க இலக்கியம், புறநானூறு மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை 2003.

முனைவர் சுந்தர சண்முகனார், சிலம்போ சிலம்பு, வானதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு: 1992.

வேங்கடாசலம் பிள்ளை.ச. மணிமேகலை ஒருநாடகம், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, முதற்பதிப்பு 1946.

வேங்கடசாமி நாட்டார்.ந.மு. (உ.ஆ.) மணிமேகலை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, முதற்பதிப்பு: 1985, மூன்றாம் பதிப்பு 1994.

புலியூர்க் கேசிகன், தொல்காப்பியம் தெளிவுரை, கொற்றவை வெளியீடு, சென்னை, 2022.

ISSN 2320-4842

சிலப்பதிகாரத்தில் பண்பாட்டு மரபுகள்

க. முருகவேல்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சத்யசாய் கலை & அறிவியல் கல்லூரி, பாசார் 606 304 (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

முனைவர் இரா. ஜெய்சங்கர்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (CDOE)
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி

முன்னுரை

பழந்தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டையும் மரபுகளையும் அறிந்துகொள்ள மிகப்பெரிய தளமாகச் சிலப்பதிகாரம் விளங்குகிறது. அது காலத்தால் முற்பட்ட தமிழ்க்காப்பியங்களுள் தலைசிறந்தது; சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர்களையும் அந்நாட்டு மக்களின் பண்பாட்டு மரபுகளையும் மிகச்சிறப்பாக விவரிக்கும் வரலாற்றுக் காப்பியம்; பெண்ணினத்திற்குப் பெருமை சேர்க்கும் காப்பியம். தமிழ் மரபு சார்ந்த ஒரு பண்பாட்டுக் கதையே இதன் அடித்தளம். தமிழ்ப்பண்பாட்டு மரபுகளை அது எங்ஙன் பதிவுசெய்துள்ளது என்பதைப் பகுப்பாய்வுத் திறனாய்வு முறையைப் பின்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஆய்வுச் சுருக்கம்

சிலப்பதிகாரக் கதை அமைப்பிற்கு ஏற்ப இளங்கோவடிகள் தமிழரின் பண்பாட்டு மரபுகளை இயைபுறச் செய்துள்ளார் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை விவரித்துள்ளது. பழந்தமிழரின் இயற்கை வழிபாடு சிலப்பதிகாரத்தில் தொடக்க நிலையில் அமைகிறது. இவ் இயற்கை வழிபாடு பண்பாட்டு மரபாக மாற்றம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. பழந்தமிழரின் நடுகல் வழிபாடு காலப்போக்கில் சிறுதெய்வ வழிபாடாகவும் பத்தினி வழிபாடாகவும் மாற்றம் பெற் றிருப்பதில் தமிழரின் பண்பாட்டு மரபினை அறிந்துகொள்ள முடிகிறது. இளங்கோவடிகள் கண்ணகியைப் பத்தினித் தெய்வமாக்கிக் காப்பியத்தை நிறைவு செய்திருப்பது தமிழின மரபுக்கே உரிய தனிச்சிறப்பாகும்.. பழந்தமிழரின் போர் மரபு கண்ணகி மதுரையை தீயினுக்கு இரையாக்கும் நிகழ்வில் வெளிப்பட்டுள்ளது. ஏழை எளியோர்க்கு உதவி அறச் செயல் புரிவது வாழ்வில் பேரின்பத்தைக் கொடுக்கும். வாழ்வில் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து வாழ்வது அவசியம். தீய நெறியில் வாழ்ந்தால் அறக்கடவுள் அவர்களைக் கண்டிப்பாகத் தண்டிக்கும். மேலும் அடுத்த பிறவி யிலும் கர்மவினைகள் தொடரும் என்பதை இளங்கோவடிகள் தமிழரின் பண்பாட்டு மரபாக்கியுள்ளதைச் சிலப்பதிகா ரம்வழி இக்கட்டுரை விவரிக்கிறது.

பண்பாடு

பண்படு எனும் வினையினடியாகப் பிறந்த பெயரே பண்பாடு. தான் வாழும் சமுதாயத்துடன் ஒருவன் எவ்வாறு ஒத்திசைந்து வாழ்கிறான் என்பதையே பண்பாடு உணர்த்துகின்றது. பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் என்பது கலித்தொகைக் கூற்று. நல்ல பழக்க வழக்கங்கள் நற்பண்பினை உருவாக்கும். ***இலக்கியம் என்பது சமு தாயத்தின் புலப்பாடு (Literatue is the expression of Society) என்று கூறுவர் ஒப்பிலக்கிய அறிஞர் ஹேரி லெவின் (நடராசன், தி.சு., 2005).*** மனிதனின் அகத்தோடு தொடர்புடைய வாழ்க்கை முறைகள், செயல்கள் ஆகியவற்றை முழுமையாகப் பிரதிபலிப்பதே பண்பாடாகும். மனிதனின் பழக்கவழக்கம், நம்பிக்கை, சடங்கு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட மனம் சார்ந்த செயல்பாடுகள் பண்பாட்டுக் கூறுகளாகும். ***பாரம்பரியமாக மக்கள் கையாண்ட கருவிகள், சமூகப் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், ஒழுக்கங்கள், கொள்கைகள் முதலானவற்றின் தொகுப்பே பண்பாடு. பண்பாடு என்பது ஒரு கலை. மேலும் அது ஒரு நீரோட்டம் போன்றது. இதன் இயக்கத்தில் தொடர்ச்சியான மாற்றங்கள் நிகழ்கின்றன (சிற்பி பாலசுப்ரமணியம், 2005).***

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன் (குறள், 995)

பண்பாட்டின் கண்ணாடி புழங்குபொருட்கள். மொழியின்கண் வெளிப்படும் ஒவ்வொரு சொல்லுங்கூட ஒரு பண்பாட்டு வரலாற்றைத் தாங்கி நிற்கிறது (பக்தவத்சலபாரதி, 2002).

அனைத்துப் பண்பாட்டுக் கூறுகளையும் உள்ளடக்கியதுதான் மரபு (Heredity). இது ஒரு குறிப்பிட்ட குழு, இனம், வகை இவற்றின் வழியில் தலைமுறைகள் பல தாண்டித் தொடர்ச்சியாய் வரும் பண்பாடு, மரபு எனப்படும். இப்பின்னணியில் சிலப்பதிகாரத்தில் காணலாகும் பண்பாட்டு மரபுகள் ஆராயப்படுகிறது.

நல்ல நாள் பார்த்தல்

பிள்ளைகளைப் பள்ளியில் சேர்த்தல், திருமணம் செய்தல், வீடு கட்டுதல் போன்ற எந்தவொரு நற்செயல்

தொடங்குமுன் நல்ல நாள், நல்ல நேரம் பார்த்துச் செய்தல் தமிழர்தம் பண்பாட்டு மரபாக இருந்துவரு கிறது. நல்ல நேரம் (முகூர்த்தம்) பார்த்து, மறை ஓதப் பட்டு, தீ வலம் வந்து, மங்கல இசை முழங்க, வெண் கொற்றக்குடை நிழலில் மங்கல நாண் வீதியில் ஊர் வலமாக எடுத்துவரப்பட்டுக் கோவலன் கண்ணகியை திருமணம் செய்துகொண்டான் என்கிறது சிலம்பு:

இருபெரும் குரவரும் ஒரு பெருநாளால்
மண அணி காண மகிழ்ந்தனர் (சிலப். 1:41-42)

இயற்கையை வழிபடுதல்

இயற்கை வழிபாடே பழந்தமிழர் கைக்கொண்டது. அது இன்றளவும் பொங்கல் விழாவாகவும் தமிழர் பண்பாட்டுமரபாகவும் திகழ்ந்துவருகிறது. சங்க காலத் தில் வீரத்தின்அடையாளமான நடுகல் வழிபாடு காலப் போக்கில் சிறுதெய்வ வழிபாடாக மாறியது.

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும் எனச் சிலம்பு இயற்கையை வாழ்த்திப் பாடியுள்ளது. இது இறைவன், அரசனை வாழ்த்திப் பாடுவதிலிருந்து வேறு பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

பத்தினி வழிபாடு

வீரர்களைச் சிறப்பிக்க எடுக்கும் நடுகல் வழிபாடு இளங்கோவடிகள் காலத்தில் பெண்மையைச் சிறப்புச் செய்யும் விழாவாக மாறியதைக் கண்ணகி வழிபாடு உணர்த்தி நிற்கிறது.

கற்புக்கரசியைத் தெய்வமாகப் போற்றும் தனிப்பெருமை இந்த உலகத்தில் நமது தமிழினத்திற்கே உரியது (பஞ்சாங்கம், க. 2002).

சிலப்பதிகாரம் ஏழு பத்தினிப்பெண்டிர் செயல்களைப் பாடியுள்ளதோடு கண்ணகியைப் பத்தினித் தெய்வமா கவும் உயர்த்தியுள்ளது மக்களிடையே நிலவுகிற ஆழ மான நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் காப்பியக் கதையோட்டத்தோடு பிணைந்துள்ளதைக் காட்டுகிறது.

போர் மரபு

பண்டு தமிழர் வீரம், மானம், புகழ் ஆகிய பண்பு களை உயிரினும் மேலாகக் கருதியுள்ளனர். இப்பண்பு களைக் காக்கும் அடிப்படையில் போர் உருவாகின என்பர் ஆய்வாளர்கள். பகைவரது முரசு கவர்தல், பகைவரது காவல்மரம் வெட்டுதல், பகைவர் நிலம் அழித்தல், பகைவரின் வெண்கொற்றக் குடையைக் கைப்பற்றுதல் முதலியவற்றைப் போர் மரபாகப் பண் டைத் தமிழர்கள் பின்பற்றியுள்ளனர். இதனைச் சங்கப் பாடல்கள்வழி அறியலாம்.

இவ்மரபு, சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவன் இமயம்வரை படையெடுத்துச் சென்று அங்கு விற் கொடி பொறித்து, கண்ணகிக்குச் சிலை அமைக்கக் கல்லெடுத்து, கங்கையில் புனித நீராட்டி கனக விசய னைச் சுமந்துவரச்செய்தான் என்பதையும் போரில் எதிர்த்த அரசர்களை வென்று அவர்களின் நிலங் களைக் கழுதையைப் பூட்டி உழுதான் என்பதையும் இளங்கோவடிகள் பதிவு செய்துள்ளார்.

வடதிசை மன்னர் மன் எயில் முருக்கிக்
கவடி வித்திய கழுதை ஏர் உழவன்
குடவர் கோமான் வந்தான் நாளைப்
படுநுகம் பூணாய் பகடே மன்னர்
அடித்தளை நீங்கும் வென்அணி ஆம் எனும்
தொடுப்பு ஏர் உழவர் ஓதைப் பாணியும் (சிலப். 27: 225-230)

சேரன்செங்குட்டுவன் வடநாட்டு மன்னர்களின் கோட் டைகளை அழித்து அங்குக் கழுதை கொண்டு உழு தான் என்பதும், இச்செயல் பகைவரை இகழ்ந்ததன் அறிகுறி என்பதும், அரசனின் பிறந்தநாளின்போது பகையரசர் காலில் பூட்டிய சங்கிலியை அகற்றி விடுதலை அளிப்பான் என்பதும் தெரியவருகின்றன.

பழந்தமிழர்கள் போர்க்களத்தில் சிறந்த போரறத்தை மரபாகப் பின்பற்றியுள்ளனர். போர் தொடங்குமுன்பு பெண்கள், குழந்தைள், வயதில் மூத்தோர், பசுக்கள், பார்ப்பனர்கள் ஆகியோரைப் பாதுகாப்பான இடத்தில் சேர்த்தபின் போர்க்களத்தில் வீரர்கள் மட்டும் போர் செய்துள்ளனர். புறமுதுகிட்டு ஓடுவோரைக் கொல்வ தில்லை. நிராயுத பாணிகளிடம் போர் புரிவதில்லை. இத்தகு சிறந்த மரபு பின்பற்றப்பட்டது. இவ்வாறே கண்ணகிமதுரையைஎரிக்குமுன் தீக்கடவுளிடம் அவள்

பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தோர் பக்கமே சேர்கென்று காய்த்திய (சிலப். 21:53-55) எனக் கூறியது ஒப்பு நோக்கத் தக்கது. இவ்வாறு தமிழரின் பண்பாட்டு மரபைப் பின்பற்றி இளங்கோவடிகள் காவியம் யாத்திருப்பதை அறிய முடிகிறது.

தானம் தருவது பேரின்பம்

செல்வத்துப் பயனே ஈதல் என்பது தமிழ்மரபு. அந்த வகையில் தானதர்மங்களைச் செய்து பேரின்பத்தைப் பெறுவது சிறப்பு என்பதால், எட்டி எனும் பட்டம் பெற்ற புகார் நகர வணிகன் சாயலனும் அவன் மனைவியும் செய்யும் தர்மங்களை இளங்கோவடிகள் சுட்டிக் காட்டியுள்ளார்.

பெற்ற செல்வப் பெரும்பயன் எல்லாம்
தற்காத்து அளித்தோன் தானச் சிறப்பு என (சிலப்.15: 184-185)

கோவலன் வானத்து மழைபோலப் பிறருக்கு உதவக் கூடியவன் என்பதையும் பதிவுசெய்துள்ளார்.

வான வண்கையான் அத்திரி ஏற (சிலப். 6:119)

அரசர்களின் பிறந்தநாள், மணிமேகலையின் பிறந்த நாள் நிகழ்வுகள் உள்ளிட்ட பல சூழல்களில் தானம் செய்து வாழ்வது பேரின்பம் என்பதை இளங்கோ வடிகள் கதைமாந்தர்வழிச் சுட்டியுள்ளார். இருப்பவர்,

இல்லாதவர்களுக்குக் கொடுத்துதவும் பழந்தமிழரின் பண்பாட்டு மரபு சிலம்பில் பின்பற்றப்பட்டுள்ளது.

கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தது என்ற புறநானூற்று அடி ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

பூத வழிபாடு

இயற்கையின் அச்சந்தரும் செயல்களே மனிதனைக் கடவுள் நெறிக்கு இட்டுச் சென்றது என்பர் மானிட வியலார். இயற்கை வழிபாட்டின் அடிப்படையாகத் தோன்றிக் காலப்போக்கில் பல தெய்வ வழிபாடாக மாறியது. பெருந்தெய்வங்களினின்று வேறுபட்டுக் காவல் தெய்வமாகப் பூதம் அமைகிறது. ***இப்பூதங்கள் அங்காடி, நாற்சந்தியாகிய சதுக்கம், கோட்டம், களம் ஆகிய இடங்களில் உறையும் காவற்பூதங்களாகக் காட்டப் படுகின்றன. இப்பூதங்கள் மனிதனுக்குப் பாதுகாப்பாகவும் அவனை நன்னெறியில் உய்விக்கும் சக்தி பெற்று விளங் கியனவாகவும் தென்படக் காண்கிறோம் (காந்தி, க., 2003).***

சிலப்பதிகாரத்தில் காவல் தெய்வங்களாகிய நாளங் காடிப் பூதமும், சதுக்கப்பூதமும், நால்வகை வருணப் பூதங்களும் சுட்டப்படுகின்றன. போலியான தவ வேடத் தில் வாழ்பவர்கள், மறைவாகத் தவறு செய்கிற தீய குணமுடைய பெண்கள், அரசன் கூடவே இருந்து கேடு செய்யும் அமைச்சர்கள், மாற்றான் மனைவியை விரும்பும் மதிகெட்டவர்கள், பொய்சாட்சி சொல்லும் புல்லுருவிகள், புறம்பேசும் அறவிலிகள் ஆகியோரை அடித்துக் கொன்று தின்னும் சதுக்க பூதம் வாழும் மன்றம் புகார் நகரில் இருந்ததை இளங்கோவடிகள் சுட்டிக்காட்டியுள்ளார்.

***தவம் மறைந்து ஒழுகும் தன்னை இலானர்
அவம் மறைந்து ஒழுகும் அலவற் பெண்டிற்
அறை போகு அமைச்சர் பிறர்மனை நயப்போர்
பொய்க் கரியாளர் புறங் கூற்றாளர் என்
கைக்கொள் பாசத்துக் கைப் படுவோர் என
காதம் நான்கும் கடுங்குரல் எடுப்பிப்
பூதம் புடைத்து உணும் பூத சதுக்கமும் (சிலப்.5: 129-135)***

இதன் நோக்கம் மனித சமூகத்தை நல்ல நெறியில் வாழ்விப்பதும், தவறான வழியில் செயல்படுவோரைப் பூதங்களாகிய அறக்கடவுள் நிந்திக்கும் என்பதை வலியுறுத்துவதுமாகும்.

மேலும், அரசன் நீதி தவறினாலும், வழக்காடு மன் றத்தில் தீர்ப்பு வழங்கும் நீதிபதிகள் நடுநிலை இல்லாது ஒருபக்கச் சார்பாகத் தீர்ப்பு வழங்கினாலும், அதை வாய்திறந்து சொல்லாது அழுது கண்ணீர் வடிக்கும் பாவை மன்றம் இருந்ததையும், அதை மக்கள் சிறப் பாக வழிபட்டனர் என்பதையும் சிலப்பதிகாரம் கூறு கிறது.

***நாவொடு நவிலாது நவை நிர் உகுத்து
பாவை நின்று அழும் பாவை மன்றமும் (சிலப்.5: 137)***

இப்பூதங்கள் காவிரிப்பூம்பட்டினத்தின் காவல் தெய் வங்கள்; இவை பெருந்தெய்வங்களுக்கு அடுத்த நிலையில் சிறுதெய்வங்களாக வழிபடப்பட்டன; இவ் வழிபாட்டுமுறை, மக்களைப் பண்படுத்தக்கூடிய, நல்ல வழியில் வாழ வைக்கக்கூடிய பண்பாட்டு மரபுகள் என அறியலாம்.

இவ்வாறு இளங்கோவடிகள் பழந்தமிழரின் வழிபாட்டு மரபுகள், வாய்மொழிப்பாடல் மரபுகள், தொன்மம், புராண மரபுகள் எனப் பல்வேறு பண்பாட்டு மரபுக ளைக்காப்பியத்தின் கதைப்போக்கிற்கு ஏற்பத் தேவை யான இடங்களில் மிகச் சிறப்பாகக் கையாண்டுள்ளார் எனலாம்.

நிறைவுரை

சிலப்பதிகாரத்தில் காணலாகும் பண்பாட்டு மரபுகளை இவ்வாய்வுக் கட்டுரை இனம்கண்டு விளக்கியுள்ளது. இளங்கோவடிகள் பழந்தமிழரின் பண்பாட்டு மரபு களைக் காப்பியக் கதைப்போக்கிற்கேற்ப உரிய இடங் உரியவாறு ஆண்டுள்ளார். இயற்கை வழிபாடு, பத்தினி வழிபாடு, சிறுதெய்வ, பெருந்தெய்வ வழிபாடு ஆகிய வற்றில் சர்வ சமய சமரச நோக்குடையவராக இளங் கோவடிகள் திகழ்கிறார். வீரம், நீதி தவறாத ஆட்சி முறை, தமிழ்ச் சமூகத்தின் பழக்கவழக்கம், நம்பிக் கைகள் ஆகியவற்றின் உயிரோட்டங்களை விவரிக் கும் காப்பியமாகச் சிலம்பு திகழ்கிறது. தமிழரின் நுண் கலை அறிவையும் மரபுகளையும் மாதவிவழிச் சிறப் புற வெளிப்படுத்தியுள்ளது இக்காப்பியம். மூவேந்தர் வீரம், கொடை, தமிழ் உணர்வு ஆகியவற்றின்வழி அக்காலப் பண்பாட்டு மரபுகளை ஆழமாகவும் நுட்பமாகவும் சிலம்பு பதிவுசெய்துள்ளது.

துணை நின்ற நூல்கள்

1. காந்தி, க. (2003) தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

2. சிற்பி பாலசுப்பிரமணியம் (ப.ஆ) (2005) ஆய்வுக் கோவை-3, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், திருச்சி.

3. நடராசன், தி.சு.(2005), நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.

4. பக்தவத்சல பாரதி (2002) மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.

5. பஞ்சாங்கம், க. (2002) சிலப்பதிகாரத் திறனாய்வுகள், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.

6. சிலப்பதிகாரம், மாணிக்கவாசகன், ஞா. (உ.ஆ.) (1998), உமா பதிப்பகம், சென்னை.

7. திருக்குறள், பரிமேலழகர் (உ.ஆ). (1998) திருமகள் நிலையம், சென்னை.

8. புறநானூறு, மாணிக்கவாசகன், ஞா. (உ.ஆ.) (1998), உமா பதிப்பகம், சென்னை.

What is our life? The play of passion
Our mirth? The music of division:
Our mothers' wombs the tiring-houses be,
Where we are dressed for life's short comedy.
- Sir Walter Raleigh

ISSN 2320-4842

ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்

ரா. சத்யா செல்வி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம்
மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்

முனைவர் ம. கீதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல்
மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்

ஆய்வுச்சுருக்கம்

இக்காலத்தில் தமிழ்நாட்டில் முற்போக்குச் சிந்தனையாளர்களுள் பல பெண் படைப்பாளர்கள் மிளிர்கின்றனர். பெண்ணியப் படைப்புகளைத் தமிழில் சிறப்பாக வழங்கிவரும் முன்னணி எழுத்தாளர்களுள் ஒருவரான ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகள் பெண்கள் வாழ்வியல் சூழலில் அன்றாடம் சந்திக்கும் உடல்சார் சீண்டல்களையும், உளவியல் பாதிப்புகளையும், பணியிடச்சூழலின் நெருக்கடிகளையும், கல்வியுரிமை முடக்கப்படுதலையும், மேலும் பல இன்னல்களையும் பதிவுசெய்கின்றன. பெண்களுக்கு எவையெல்லாம் அடிமை விலங்குகளாக அமைந்தன என்பதைக் குடும்பம், சமூகம், வேலைத்தளம், மதம், அரசியல், ஊடகம் எனப் பல தளங்களில் உற்று நோக்கி பெண் அடிமை விலங்கை உடைக்கும் நிலையைக் காண முடிகின்றது. இவரின் பல கதைகள் பெண் விடுதலையை, பண்பாட்டுக் கூறுகளோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் எழுத்தாளராக இனம்காணப்படுகின்றார். ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் இடம் பெறும் பெண்ணியச் சிந்தனைகளையும் அவருடைய பெண்ணியப் பார்வையையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

திறவுச்சொற்கள்: *பகுத்தறிவு-பெண்ணியம்-தகனம்-முகமூடி-நீதிபதி-விடுதலை-போராட்டம்-சமானம்-சூழல்-சமூகம்.*

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பெண்ணியம் என்ற கருத்தாக்கம் மேலை நாடுகளில் செல்வாக்குறத் தொடங்கியது. பெண்ணியம், சமுதாயத்தின் அரசியல், பகுத்தறிவு, சமத்துவம் பேசும் இயக்கமாகச் செயல்படத் தொடங்கியதால் உலகின் பல நாடுகளிலும் இக்கருத்தாக்கம் வலுப்பெறலாயிற்று. இது, கருத்தியல், கலாச்சார மட்டங்களில் பல மாறுதல்களை ஏற்படுத்தியதோடு இலக்கியத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. நவீன பெண் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவரான ஆண்டாள் பிரியதர்ஷினியின் சிறுகதைகள் வட்டாரச் சூழ்நிலைகள் பற்றியவையாகும். காலவோட்டத்திற்கு ஏற்றவாறு பெண்ணியச் சிந்தனைகளைப் பேசுபவையாகவும் அவை உள. அவற்றில் இடம்பெறும் குடும்பம், சமுதாய உறவுகளால் பெண்களுக்கு ஏற்படும் இன்னல்களையும் அவற்றால் பெண்கள் எதிர்கொள்ளும் போராட்டங்களையும், அவற்றுக்கான தீர்வுகளையும் இவ்வாய்வு முன்வைக்கிறது.

பெண்ணியம் - சொற்பொருள் விளக்கம்

பெண்ணியம் என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான Feminism, பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள (Having the qualities of female) எனப் பொருள்படும் Femina என்ற இலத்தின் சொல்லிலிருந்து வந்ததாகும். இருபதாம் நூற்றாண்டில் சமுதாயத்தின் சரிபாதி இனமாகத் திகழும் பெண்கள் பற்றியும் அவர்தம் பிரச்சினைகள் பற்றியும் சிந்திக்கத் தொடங்கியபோது பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்படலாயிற்று. பெண்களின் நலன், சுதந்திரம் பற்றிய சிந்தனைகள் பெண்ணியச் சிந்தனைகள் எனப்பட்டன. பெண்ணியம் என்பது மனித குலத்தின் நிலைமாற்றத்திற்கு வித்தாக விளங்கும் ஒரு கோட்பாடாகும். இது பல்வேறு அறிஞர்களால் பல பரிமாணங்களில் அறியப்பட்டுவருகின்றது.

பெண்ணியம் என்ற கோட்பாட்டைச் சரியான இலக்கில் ஆராய்ந்தால் ஆணாதிக்கச் சமுதாயச் சீர்கேடுகளை எதிர்ப்பது மட்டுமே பெண்ணியத்தின் நோக்கமல்ல, மாறாக பெண்களின் உள்ளார்ந்த உணர்வுகளை வெளிப்படுத்தி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம் என்ற கருத்தை வலியுறுத்துவதே அதன் அடிப்படை நோக்கம் என்பது புலப்படுகிறது. சுருங்கச் சொல்லின் பெண்ணியம் என்பது சமுதாயத்தின் சீர்கேடுகளான இலைகளைப் பறிக்காமல் வேர்களை அடையாளம் காட்ட வேண்டும் என்ற நோக்கில் உருவான ஒரு கருத்தாழமிக்க உணர்வாகும் (க.விஜயா, பெண் நாவலாசிரியர்களின் பார்வையில் பெண்ணியம், ப. 169). பெண் மரபுசார்ந்த தடைகளைக் கட்டுடைத்துத் தன் இருத்தலையும் தனது வெளியையும் பற்றிப் பேசும் இடமே பெண்ணியம் எனலாம்.

பெமினிசம் என்ற சொல்லுக்குத் தமிழில் பெண்ணியம், பெண்ணிலைவாதம், பெண்ணிலை ஏற்பு, மகளிரியல், பெண்ணியக் கொள்கை என்ற பல சொற்கள் வழங்கப்படுகின்றன. இவற்றுள் பெண்நிலைவாதம் என்ற சொல் பொருத்தமாக உள்ளது. இருந்தாலும் சமூக நோக்கில் பெரிதும் பயன்படும் சொல்லாகப் பெண்ணியம் என்ற சொல்லையே பயன்படுத்துகின்றனர் (இரா.பிரேமா., பெண்ணிய அணுகுமுறைகள், ப . 18) என்று இரா.பிரேமா கூறுகின்றார். பெண்நிலைவாதங்களும் பெண்ணியச் சிந்தனைகளும் பெண்களைப் படைப்பாளர்களாக உருவாக்கம் செய்ய

ISSN 2320-4842

வழிவகுக்கின்றன.

பெண்களின் வாழ்வு ஒரு கட்டுக்குள் அடங்கி அவளின் சிக்கல்கள் பின்தள்ளப்பட்டபோது சமூக, பொருளாதாரப் பண்பாட்டு உரிமைக்காகப் போராடுதலையும் அதிலிருந்து விடுதலையையும் இருத்தலையும் கூறலே பெண்ணியம். (தமிழரசி.மு.ப., இருபதாம் நூற்றாண்டுப் பெண் கவிஞர் கள்,ப.44) பெண்ணியம் என்ற கருத்தாக்கம் பெண் களை நவீனமயமாக்கும் கருத்தியலின் அடையாளம். பெமினிசம் என்பதற்குப் ***பெண் உரிமை ஏற்புக் கோட் பாடு, பெண்ணுரிமை ஆதரவு (Madras university English, Tamil dictionary, p . 379)*** என்று சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலத் தமிழ்ச் சொற்களஞ்சியம் விளக்கம் தருகிறது. பெண்ணியம் என்பதைப் பெண் கள் தமது சிந்தனைகளை வெளிப்படையாக எடுத்து ரைக்கும் களம் எனலாம்.

ஆண்டாள் பிரியதர்ஷினியின் பெண்ணியப் பார்வை

ஆண்டாள் பிரியதர்ஷினியின் எழுத்துக்கள் தொடக் கத்தில் இலக்கியப் பின்னணியோடு அமைந்திருந்தன. திறனாய்வாளர்களால் சற்று விலக்கி வைக்கப்பட்ட நிலையில் பெண்ணியத்தோடு இணைந்த இவரது எழுத் துக்கள் எழுதப்பட்டபோது இவரின் படைப்புகள் அனை வர் கவனத்தையும் பெற்றன. பெண்ணியக் கவிஞராக வும் பெண்ணிய எழுத்தாளராகவும் ஒரே நேரத்தில் இவர் தன்னை வளர்த்துக்கொண்டார்.

இவருடைய புதினங்களில் பெண்களைப் பற்றிய நான்கு விதமான பார்வை காணப்படுகின்றது. அவையாவன, தாய்மை, ஆணாதிக்கச் சிந்தனை, பணிச்சுமை, பொருளா தாரச் சிக்கல்கள் (சங்கீதா, ஆண்டாள் பிரியதர்ஷினி நாவல்களில் பெண்ணியம், ப. 208). இவர் படைப்பு களில் பெரும்பான்மை பெண் விடுதலை, பெண் முன்னேற்றம், பெண்களின் சிக்கல்கள் மற்றும் அதனை போக்கும் தீர்வுகளும் என்ற நிலையில் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

தாழ்த்தப்பட்ட பெண்கள் தெருக்களைச் சுத்தப்படுத்தும் தொழிலாளர்களாகவும் மயானத்தில் பிணம் எரிக்கும் வெட்டியான் தொழிலாளர்களாகவும் வேலை செய்கின்ற னர். குடிசையில் வாழ்தல், சாக்கடைகள் மூடி போடாத தால் இறப்புகள் ஏற்படல், மழைபெய்து குடிசையை அடித் துச் செல்லுதல், சத்திரத்தில் தங்குதல், கிடைத்த உணவு களை உண்ணுதல் போன்ற நிகழ்வுகளையும், இதனை அரசியலில் இருப்பவர்கள் கண்டுகொள்ளாத தன்மையை யும் தகனம் நாவல் வெளிப்படுத்துகிறது. (வெ. முத்துக் களஞ்சியம், தகனம் நாவலில் தலித் பெண்ணியம், ப.84) என்று தகனம் புதினத்தில் ஆண்டாள் பிரியதர்ஷினி யின் பெண்ணியப் பார்வையை முத்துக்களஞ்சியம் குறிப்பிடுகின்றார். இவரின் சில கதைகளை வாசிக் கும்போது இவரைத் தீவிரப் பெண்ணியவாதியோ என வும், சில கதைகளில் மிதவாதப் பெண்ணியவாதியோ எனவும் வியப்பு உண்டாகிறது. இவர் பெண்ணியக் கருத்துக்களைச் சுற்றி வளைத்துப் பேசாமல் ஆணித்தர மாக எடுத்துரைப்பதைக் காணமுடிகின்றது.

ஆணும் பெண்ணும் இணைந்து ஒன்றுபட்டு வாழ்வதே திருமணம் என்ற உறவாகும். இத்தகைய திருமண வாழ் வில் மனைவிக்கும் உடல்நிலை சரியில்லாத பொழுதும் குழந்தை பிறந்தமையால் மனைவிக்கு அழகில்லை என்றும் குழந்தைபேறு இல்லாமையாலும் கணவன் மனைவியை விட்டு வேறு பெண்ணைத்தேடிச் செல்வதை ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள் தம் கதைகளில் விளக்கியுள்ளார். (ஜெயராணி, ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனைகள், ப.177). இக்காலச் சமூகத்தில் ஒரு நிலையிலிருந்து தன்னை மற்றொரு நிலைக்கு நகர்த்திச் செல்ல பெண்கள் அரும்பாடுபட வேண்டி யுள்ளது என்பதை ஒரு போராளியின் ஆவேசத்துடன் தன் எழுத்துக்களில் வெளிப்படுத்துகின்றார். எழுத்தாற் றல், சமூக உணர்வு, சிந்தனைத்திறன், மனிதாபிமானம், பெண்ணியம், சமவுரிமை ஆகிய கருத்துக்கள் அவரது படைப்புகளில் மிளிர்வதைக் காணலாம்.

ஒடுக்கப்படும் படைப்பாளிகள்

ஆண்டாள் பிரியதர்ஷினியின் வெளி எனும் சிறுகதை கவிஞராகத் துடிக்கும் ஒரு குடும்பப் பெண்ணின் நெருக்கடிகளை எடுத்துக்காட்டுகின்றது. ஒரு பெண் தான் கவிஞராக வேண்டும் என்று தன் படைப்பாக் கத் திறனை வெளிப்படுத்த முயலும் முனைப்பே குடும்பத்திற்கு எதிரான ஒரு முடிவாகக் கொள்ளப் படுகிறது. இடையறாது செய்யும் வீட்டு அலுவல்கள், வீட்டில் உள்ளவர்களின் தேவைகள், இடையூறுகள், வாக்குவாதங்கள், அவமானங்கள் முதலியவற்றிற்கு இடையே ஒரு பெண் தம் படைப்புகளை எழுத, சிந் திக்க ஒரு வெளியைத் தேடுவதே மாபெரும் சவாலான பணியாக உள்ளது. இத்தகைய சவாலான சூழலை பாரதி போன்றோர் மட்டுமல்லாமல் தன் வாழ்வில் வெற்றிபெற நினைக்கும் பல குடும்பப் பெண்கள் சந்திக்கின்றனர்.

கக்கூஸ்ல உக்காந்து எழுதறாடா உம் பொண்டாட்டி, நாராசம்..த்தூ..பொம்பளையா இவ? பெரிய ஔவை யார்னு நினைப்பு... அக்கினி வார்த்தை மழை அடிக்கடி பெய்தது. நான் உட்கார, எனக்கே எனக்கென்று ஓர் இடம், எனக்கேயான தனிமை, அத்துமீறல் இல்லாத வெளி, ஆராவாரம் இல்லாத கருப்பை ஏகாந்தம், உள்ளுக்குள் கனன்று ஓடும் கவிதையைக் கவி மையப்படுத்தக் கையகல இடம் வேண்டும்.(ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள், ப.99) குடும்பத்தினரின் ஒத்துழைப்பில்லாமல் வீட்டு வேலைகளையே சிரம் மேற்கொண்ட பணியாகக் கொண்டு தம் குறிக்கோளில் வெற்றிபெற இயலாமல் தம் சாதனைக்கான வெளியைத் தேடும் பல குடும்பப் பெண்கள் நம் சமூகத்தில் உள்ளனர்.

சரஸ்வதியும்கூட ஞானம் அளிக்கும் தொழிலை வெண் தாமரையில் தனியே அமர்ந்தே செய்கிறாள். சரஸ்வதி யின் கவிதை மனம், தொழில்களம் இரண்டுக்குமான தனிமையைக் காப்பாற்ற வேண்டுமென்ற குறியீடாகத்தான் ஒற்றைத் தாமரையைப் பார்க்கிறேன். தாமரையில் அவள் மட்டும்தான் அமர்ந்திருப்பாள். மற்றவர் ஒண்ட இடம் கொடுத்தால் சரஸ்வதியின் ஞான வினையாக்கம் தடைப்

ISSN 2320-4842

படும். ஞானத்தனிமை இடர்ப்படும். ஞானச்சுதந்திரம் அறுபடும். கணவன்கூட அந்நியன்தான். அந்தச் சமயத் தில் இடைவிடாத முழுமுனைப்பான காரியமாற்ற அவ ளுக்குத் தாமரைப்பூ. பெண் விடுதலைக் குறியீடு சரஸ் வதி. தன் தேவையை உரக்கச் சொல்லி நிகழ்த்திக்காட்டி யிருக்கும் முதல் பெண்ணியவாதி. (ஆண்டாள் பிரியதர் ஷினி சிறுகதைகள், வெளி, ப. 102)

சரஸ்வதியைப்போலவே தம் துறையிலும் சமூகத்திலும் சாதிக்கத் துடிக்கும் பெண்கள் தன் வெளி, தன் சுயம் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கி றார். ஒவ்வொரு பெண்ணும் கம்பீரமாகத் தனக்கான வெளியை சரஸ்வதியின் ஒற்றைத் தாமரையைப்போல உருவாக்க வேண்டும். அதனை செய்வதற்கான துணி வும் தொலைநோக்குப் பார்வையும் பெண்களுக்கு வேண்டும் என்று படைப்பாளர் குறிப்பிடுகின்றார்.

பெண் என்பதன் கற்பிதப் புனைவுகளைத் தன்னுள்ளிலி ருந்து வெற்றிகொள்பவர் எவரோ அவரே உன்னதமான பெண்ணியப் படைப்பாளர் ஆகிறார். (The great feminist writer is she who corgners the romantic in herself. (தி. கமலி பெண்ணிய படைப்பிலக்கியம், ப . 28) என்று ஐடா வெர்ஸென் குறிப்பிடுகின்றார். எனவே ஒரு பெண் படைப்பாளராக உருவாவதே உன்னத மானது என அறிய முடிகிறது. வெளி எனும் சிறுகதை மூலம் பாரதி ஒரு கவிதாயினியாக உருவாக அவள் ஏற்படுத்திக்கொண்ட பாதை பாராட்டிற்குரியது. அவள் கை வளையலை விற்று, தன் சிந்தனைக்கான களத்தை ஏற்படுத்திக்கொண்டது அவளது தொலைநோக்குப் பார்வையை விவரிக்கின்றது.

மனிதன் தன் வாழ்க்கையில் பல்வேறு குழுக்களில் பங் கேற்றுச் செயல்படுகின்றான் அவற்றுள் முதன்மையானது குடும்பம். குடும்பம் என்னும் நிறுவனம் ஆணும் பெண் ணும் கூடி வாழ்வதாகும். குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் அகப்புறச் சிக்கல்களும் போராட்டங்களும் மனித வாழ் வைச்சீர்குலைத்துவிடுகின்றன. பெண்கள் குடும்ப அமைப் பில் எத்தகைய பங்குவகிக்கின்றனர், ஆண்களால் ஏற் படும் இன்னல்களை எவ்வாறு பொறுத்துக்கொள்கின்றனர் போன்றவற்றை வெளிப்படுத்துவன இவரின் படைப்புகள். (கே.பி.கனிமொழி, கவிஞர் ஆண்டாள் பிரிய்தர்ஷினி யின் கவியும் கருவும், ப. 33) என்று கனிமொழி குறிப்பிடுவதன் மூலம் குடும்பப் பெண்களின் வாழ்வி யல் நெருக்கடிகளை ஆண்டாள் பிரியதர்ஷினி எடுத் துக்காட்டுவதை அறிந்துகொள்ள முடிகின்றது.

சிறார் பாலியல் வன்கொடுமை

ஆண்டாள் பிரியதர்ஷினியின் வலி எனும் சிறுகதை யில் பதின்பருவச் சிறுமிக்கு நடக்கும் பாலியல் வன் கொடுமை கூறப்பட்டுள்ளது. குழந்தைத்தனம் மாறாத சிறுமியிடம் அத்துமீறிய காமுகனை உற்றார் உறவினர் களுக்கு அஞ்சி தண்டிக்காமல் போகும் அவலநிலை பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர் முகமூடியில் உலவும் இந்தக் கிராதகனுக்கு மரண தண்டனைகூட உச்சபட்ச தீர்பாகுமா? அந்தச் சிறுமி துள்ளத் துடிக்க, வலியிலும் வேதனையிலும் அவஸ்தை யிலும் ரணத்திலும் அரற்றி, அலறிக் குருதி சொட்டக் கசக்கப்பட்ட கோரமும் கண்ணீரும் இவனும் அனுபவிக்க வேண்டும். இறப்பை நோக்கிச் சுய உணர்வோடு இழுத் துச் செல்லப்பட வேண்டும். (ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள், ப. 99).

உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் சிறுமிக்கு நிகழ்ந்த மனிதநேயமற்ற குரூரமான நிகழ்வை இப்படி ஆண்டாள் பிரியதர்ஷினி பதிவுசெய்கின்றார்.

It involves a spectrum of physical, sexual and psychological acts of control, threat, agress, abous, and assualt. With far reaching consequences for their physical and mental health, the health care providers are to some extent involved to this kind of situation.(alpesh Gandhi,punit bhojani,Analysis of survey on violence against women and early marriage ,p.77) என்னும் மருத்துவ ஆய்வறிக்கைகள் இதுபோன்ற பாலியல் வன்கொடுமைகள் பாதிக்கப்பட்டவருக்கு உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக தெரிவிக்கின்றன. பெண் ணைக் காமப்பொருளாகப் பார்க்கும் நிலை இன்றும் உள்ளது. *பெண்கள் என்றால் ஆணின் சுகத்துக்காகவும், அவனுக்குப் பணியாற்றத்தான் கடவுள் படைத்தான் என்ற நிலையைக் காண முடிகின்றது. அதனால்தான் இன்று பாலியல் வன்கொடுமைகள் சிறுமியர்களையும் விட்டுவைக் காமல் துன்புறுத்தும் அவலம் தொடர்கின்றது. (சண்முக வடிவு, ஆண்டாள் பிரியதர்ஷினி கவிதைகளில் சமூகப் பதிவுகள், ப. 56)* என்று ஆய்வாளர் குறிப்பிடுகிறார். பாலியல் வன்கொடுமைகளை ஆண்டாள் பிரியதர் ஷினி தன் கவிதைகளிலும் பதிவு செய்துள்ளார்.

கழுத்துக்குக் கீழ்தான்
பெண்ணின் பயன்பாடா?
ஆம் எனில்
மயக்கத்துக்கு
முண்டங்கள் போதுமோ..? (ஆண்டாள் பிரியதர்ஷினி, சரஸ்வதியின் ஆயுத எழுத்து, குமரன் பதிப்பகம், ப. 20) என்று கீழான காமுகர்களை நோக்கிக் கேள்வி எழுப்பும் கவிதையைப் படைத்துள்ளார். பெண்களுக் கும் சிறுமியர்களுக்கும் ஏற்படும் இதுபோன்ற நிகழ்வு களை எதிர்த்துப் போராடப் பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் முன்வர வேண்டும்.

தொகுப்புரை

ஆண்டாள் பிரியதர்ஷினியின் படைப்புகள் அனைத் தும் பெண் விடுதலை, பெண்ணிய உரிமைகள் பற்றி அதி தீவிரமாக எழுதியுள்ளதோடு சில ஆண் குற்ற வாளிகளுக்குத் தம் படைப்புகளில் தண்டனைகளை யும் வழங்கியுள்ளார். பணிச்சூழல், குடும்பம், பள்ளி, சமூகம் இவற்றில் பெண்கள் முன்னேறவும் தன்னைக் காத்துக்கொள்ளவும் முன்னெடுக்கும் ஒவ்வொரு முனைப்பும் பெரும்போராட்டத்திற்குப் பிறகே சாத்தி யமாகின்றது. மனித சமுதாயத்தில் செம்பாதி மக்கள் தொகை கொண்ட பெண்களின் நலனுக்காகக் குரல்

தொடர்ச்சி: பக். 90

ISSN 2320-4842

Contesting the Hegemonic Narratives on Women's Agency: A Reading of Mohja Kahf's *The Girl in the Tangerine Scarf*

Dr. Faisal P
Associate Professor of English, PTM Govt. College, Perinthalmanna, Kerala

Literary writings in the post 9/11 scenario, written predominantly by transnational women writers, contest the dominant narratives on Muslim women. For instance, *The Girl in the Tangerine Scarf* by Mohja Kahf is a novel that challenges the dominant discourses propagated by the Islamophobic narratives. This novel feature Muslim women characters who challenge the Orientalist stereotypical representations of a victimised Muslim womanhood on the one hand and the orthodox notions of Muslim womanhood idealised by the conservative Muslim community on the other and offer counter-narratives. The novel often cuts across the double bind representations of the Muslim women by depicting Muslim women characters fighting hegemonies of both kinds and exercising a broad spectrum of agencies.

The Girl in the Tangerine Scarf by Mohja Kahf revolves around the coming of age story of Khadra Shamy, who was born in a strict Muslim family consisting of her parents and brother who migrated from Syria to Indianapolis in the 70s. Her parents, devout practising Muslims, are part of a "Daawa Center" whose mission is to propagate the "true religion." Growing up in the fictional town of Simmonsville, Indiana, which welcomed her family by crash of glass, beer bottles and "a pile of gold shards at their doorsteps" (Kahf, "The Girl" 6). She manages to find her place in society through negotiations with her host community as well as her own religious texts. Khadra is always in conflict on various issues taught to her by her family regarding the position of women in society. Besides, she finds herself a constant target of resentment against Islam and Muslims while living among the people of the host country. Fed up with both, she journeys from Indiana to Saudi Arabia to Syria to Philadelphia back to Indiana which prompts her to look at Islam from a broader perspective and reread the religious texts in the light of modern contexts that helps her reinvent her identity and self-perception. She experiments with her religion, defies the norms of her own society and flouts the repressive cultural codes of the community before finally arriving at her interpretation of a more accommodative and more inclusive religion. The novel undermines many of the Western stereotypes on Islam as well as Muslim women and presents a religion of Islam that embraces multiple views and promotes tolerance. The novel can belong to the category of works which Nouri Gana refers to as "remarkably counter -narrative, reactionary, and corrective in their overall propensity" (1577).

The Girl in the Tangerine Scarf by Mohja Kahf, presents a different kind of Muslim identity which reverses the dominant trend of Muslim woman representations in fiction. The protagonists as well as other minor Muslim characters are powerful enough to challenge the debilitating forces around them and capable of demystifying the varied myths about Islam and Muslims. Growing up into a devout Muslim woman after negotiating with her religion and the values of the host community, the protagonist of the novel, Khadra, draws her strength from her religion and faith. In the process of defining her identity, she oscillates between her stances and undergoes conflicting experiences. She marries and divorces, conceives and aborts, veils and unveils in her adult life. While doing all these, she draws her strength from her own religion and scriptures. Taher, her uncle had taught her the critical roles played by the woman leaders in early Islam. Besides, her growth into adulthood takes place in Syria mentored by her grandmother Teta, a strong and revolutionary woman. All these contribute to the formation of Khadra's Islamic identity which is counter traditional on the one hand and accommodative on the other. As Koegeler-Abdi puts it, "[t] hroughout the novel, Kahf posits a particularized, fluid Islam as an integral part of Khadra's Arab and American subjectivities. Her spiritual journey spirals back and forth between Eastern and Western interpretations of Islam, input from her local family, university, Muslim feminist sources as well as zealous, revolutionary forms of Islam and finally secularism" (18). Like the woman clad in a bright headscarf, a pair of jeans and a black top on the book's cover image, the novel seeks to present the emergence of a new Muslim woman who enjoys the multiple privileges of life. Usually, the cover images of many "airport novels", restrict the Muslim women to "stereotypes of the sexually mysterious woman with titles and common marketing themes such as exposing the oppression of women and the struggle for freedom, together with an obsession with the veil" (Clyne 29). For Zine, *The Girl in the Tangerine Scarf* is a novel "that decolonises the epistemological spaces in which one comes to know of Islam and Muslims, and reclaim … the space to name [her] own identities and realities" (quoted in Sulaiman et al. 56).

Through her novel, Mohja Kahf presents a Muslim woman protagonist, Khadra, who critically negotiates her faith by contesting some of the cultural practices held sacrosanct in the religion, besides challenging the prejudiced approaches of the host country towards Muslim women in general**.** Unlike the traditional harem women presented in the mainstream media, Khadra wears jeans and the veil and rides bikes through the streets of Indiana. Without seeking the approval of her family or her community, she veils and unveils and finally ends up following veiling.

Further, with the help of *Ijtihad* which is usually practised by the male clerics of the community, she decides to abort when she is divorced from her husband Juma, a very conservative Muslim. Besides, she continues her education despite objections from her family. She even questioned the hypocritical stands of her family on many occasions.

The other Muslim women characters in the novel who break the pertinent stereotypes of Muslim womanhood include Khadra's mother Ebtehaj. In fact, the novelist portrays Ebtehaj, who dreams of becoming a doctor but sacrifices it for the sake of her family and her missionary work at the Da'wa Centre, as a formidable woman; she has a say in her family and is respected by the family members including her husband. Teta, the grandmother of Khadra is a modern Muslim woman. Despite criticisms from her neighbours and other members in the community, she does not shy away from going ahead with her career. Another character Zuhura, who is murdered by the racists, was also articulate and assertive. She was an active member of African Student Association in her University and fought for the rights of Muslims. Hanifa, the sister of Hakim is the first Muslim woman to participate in a car racing tournament.

The veil/the headscarf /hijab/purdah—the varying dress codes adopted by many Muslim women across the globe in accordance with varying local practices—have always been a contentious issue in the discourse of Islam. The liberal-secular positions on the headscarf preoccupy themselves with the supposedly patriarchal dimensions underlying the practice. Muslim women adhering to such Islamic norms are often seen by the liberals as, to use the words of Saba Mahmood, "pawns in a grand patriarchal plan."(*Politics of Piety* 75). Mahmood also points out that it is women's clothing, not men's, which is taken to be a sign of social coercion (75). Catherine Bullock states that the "hijab is linked to assertions about women's inferiority within Islam" (13). The "veil", according to Deborah Scroggins, is assumed to be a "blatant badge of female oppression," (3) forced on unwilling women by various methods – bribery (Jan Goodwin 262) or threats of and actual violence (Deborah 3). However, many women in Muslim countries wear hijab willingly and with conviction. The liberal discourses totally sideline the pietist aspects of the practice as well while for a majority among those who observe it, it is an important Islamic injunction in terms of female modesty and piety (Mahmood 2005). Criticising the practice of attacking the veil by the mainstream media and thinkers without considering the diversity of cultural and social backgrounds of Muslim women across the world, Abu Lughoud in her work titled *Do Muslim Women Need Saving?* (2013) states,

> Is it not a gross violation of women's own understandings of what they are doing to simply denounce the burqa as a medieval imposition? One cannot reduce the diverse situations and attitudes of millions of Muslim women to a single item of clothing. And we should not underestimate the ways that veiling has entered political contests across the world (40).

The first and foremost thing that Mohja Kahf attempts to challenge in her *The Girl in the Tangerine Scarf* is the different notions associated with the question of veil. Khadra, the protagonist of the novel undergoes different shifts in her attitude to the veil before she finally chooses veiling. Instead of blindly endorsing the veil, Kahf destabilises the dominant binaristic way of looking at the veil invariably as either a tool of suppression or a means of emancipation. In the novel, Kahf seeks to make a critique of both the liberal secular notions as well as notions of the practitioners of strict religious codes. She presents the veil as a dress code that represents different shades of meaning. In the novel, the veil becomes a shifting symbol of varied things such as idealism, revolution, freedom and identity. Kahf's protagonist Khadra finds liberation in experimenting between veiling and unveiling. Her unveiling is not to deny the teachings of the Quran but to look at veiling from a broader and fresh perspective, though. One cannot see a "Muslim woman looking inscrutable and oppressed in a voluminous veil" (Kahf, *The Girl* 48) when she describes her first experience of wearing the hijab.

> The sensation of being hijabed was a thrill. Khadra has acquired vestments of a higher order. Hijab was a crown on her head. She went forth lightly and went forth heavily into the world, carrying the weight of a new grace. [. . .] hijab soon grew to feel as natural to her as a second skin, without which if she ventured into the outside world she felt naked. (Kahf , *The Girl* 112-113)

In the beginning of the novel, Kahf presents two extreme polarities in the spectrum of approaches to veil. On the one hand, it stands for oppression and on the other it represents a signifier of idealism and liberation. For instance, for Aunt Khadija "covering up is a strong thing"(25).While trying Khadra's scarf for prayer, she asks Khadra to imagine herself without the veil as standing naked in front of a bunch of people as if she were back in slavery times in an auction table. Similarly, Khadra feels a special fondness for being in "the forest of women in Hijab, their Khimars and Saris and jilbababs and thobes and deppattas fluttering and sweeping the floor and reaching out to everything" (55). On the other hand, the boss of the magazine *Alternative America***,** considering her natural kinship with the veil as a Muslim**,** asks Khadra to make some stories on the repressive experiences of the veil-clad women. Likewise, the extreme form of prejudice on the veil is shown through the experience of Zuhura, an African American Muslim who is killed by the members of the Ku Klux Klan. Zuhra, in fact, was a strong, independent and free -thinking woman who even questioned some of the practices of her own community. "Zuhra was not accustomed to being brushed aside. [. . .]. She was likely to question you, man or woman, even if you had an air of authority, and she did so with an attitude that assumed her objections would be addressed" (43). Her dead body is found along with the shredding of the veil after being raped which shows that it was an attack on veiling apart

from being a racist crime. Kahf shows that this provoked Khadra to think more about the veil and her identity. Khadra herself encounters forced unveiling when a bunch of boys attacks her and take off her veil at school. Khadra insists on holding on to her torn pieces of the veil and covers her head with them as a token of her challenge and rebellion: "She didn't want to give anyone in this building [of the school] the satisfaction of seeing her bareheaded" (125). Khadra's acceptance of the real meaning of veiling happened after a number of experiments with it and her shifts to different positions. While in Syria visiting her relatives, Khadra's outlook towards hijab undergoes a shift and she unveils herself for the first time in public. But, it is not done in the radical feminist spirit to rebel against the codes of Islamic rules or as a denial of the teachings of Islam but she does it to let the love of God penetrate into her head and hair in the form of sunshine and to prove that there is no barrier between her and her God.

> Khadra paused … The scarf was slipping off. The chiffon fell across her shoulders. She closed her eyes and let the sunshine through the thin skin of her eyelids, warm her body to the very core of her. She opened her eyes, and she knew deep in the place of yaqin that this was all right, a blessing on her shoulders. Alhamdu, alhamdulillah. The sunlight on her head was a gift from God. Gratitude filled her. … Here was an exposure, her soul an unmarked sheet shadowing into distinct shapes under the fluids. Fresh film. Herself, developing (309).

For Khadra, this was an enlightening experience. She tells about this, "How veiling and unveiling are part of the same process, the same cycle, how both are necessary; how both light and dark are connected moments in the development of the soul in its darkroom" (309).

Earlier, when she wore the black veil during her teenage, it amounted to a revolutionary response to the "traditional Islamic scholarship, with its tedious, plodding chapters on categories of water purity and how to determine the exact end of menses" (150). At the time of wearing the black scarf, she and her friends were in solidarity with the Iranian revolution and the ideas of martyrdom. It seems that Khadra wants to be like this "one scarf-wearing woman" who took, with other men, some American hostages during the revolution (119). Khadra's black veil, in this period, is an expression for her anti-imperial stance. Later, when she visited Mecca for Hajj, she is shocked to find a different version of Islam there and shifts from black hijab to white hijab. It was following her acceptance of the proposal for marriage from a Kuwaiti man which indicated the end of a "neoclassical phase" (195). Towards the end of the novel, her scarf is tangerine as mentioned in the title of the novel. The tangerine scarf is given to Khadra by her father's aunt, Teta, and hence symbolising her wish for going back to her own roots. Teta is a strong influence in shaping her broader attitude towards her religion including veiling. Her meeting with a poet is an important event in her life. It teaches her the importance of not veiling her face and expression. He insists "veiling is important, definitely" (302) in spite of the revealing nature of her veil. Despite her rhythmic shifting between veiling and unveiling, she finally cannot help preferring veiling, "[s]he was beginning to see that, of the covered and uncovered modes, she preferred the covered" (373). Surprisingly, Khadra confesses that her experimental journey with veil finally makes her closer to God. As Areen Khalefah states, the veil, in the case of Khadra, stands for "idealism, freedom and revolution, political issues and eventually for love" (159). Similar views that stress on Khadra's veiling as a spiritual act rather than a ritualistic act is shared by other critics also. Analysing Khadra's veiling, Sulaiman and Suraiya write:

> For Khadra, if veiling becomes a barrier between her and other human beings, then it is not the purpose of the veil. If veiling is meant for modesty, it is then more important for one to keep her modesty, and the veil becomes an extra piece of cloth that identifies her as a Muslim who upholds modesty. Additionally, if a veil is a tool to express one's identity, then unveiling becomes a process of giving up to the hegemonic thought of the West, which always defines the Muslim veil as a symbol of oppression. In this sense, veiling becomes a tool of dissidence, and Khadra chooses to keep herself veiled (Sulaiman et al.62)

Muslim Women's Agency: Challenging the Liberal Secular Understandings

The novels under discussion here dismantle the notions of the secular liberal discourses on the subjectivity and agency of the religiously observant Muslim women. Liberal definitions of agency foreground individual autonomy, willed action and the potential to create a change (Asad 1993). The notion of agency in this framework only captures those actions that result in the resistance/subversion of norms. The practising Muslim women as well as the Muslim women activists are always found by liberals as passive victims and "pawns in a grand patriarchal plan" (Mahmood 75). Hence, the liberal secular discourses ascribe agency only for those Muslim women who have either completely renounced their religion or in a perpetual fight with the religious principles. These novels arguably present that submission and docility are also means by which one can enact agency and pious Muslim women's agency spring from them. Critical insights in this direction by writers like Saba Mahmood deserve a mention here.

Making an ethnographic engagement with urban piety movement/mosque movement in Egypt, Saba Mahmood, a postcolonial feminist cultural anthropologist, in her book *Politics of Piety: The Islamic Revival and the Feminist Subject* (2005) elaborates on the agency of pious Muslim women. In studying the pious Muslim women of the mosque movement, Mahmood abandons the liberal notion of agency as she came to realize that she cannot adequately understand them from a liberal-secular position. Thus, she employs a different notion of the agency which is deeply indebted to Talal

Asad, her anthropologist mentor, who says, "[i]t is essential … to consider how, by whom, and in what context the concept of agency is defined and used…. . (Asad 99). For her notion of agency, Mahmood is also indebted to the conceptions of power and subject formation put forth by the poststructuralist thinkers like Michel Foucault- whom Talal Asad draws on- and Judith Butler, who both rejected, in general, the liberal humanist notions of subjectivity and agency. Foucault's conceptions of subject and subjectivity have at their heart what he calls the 'paradox of subjectivation': the very operations of power that secure a subject's subordination is also the means by which she becomes a self-conscious identity and agent (quoted in Mahmood 18). In other words, those capacities that define a person's agency are not something that remain uninfluenced by any power relations but rather are the very products of these operations of power. Mahmood writes, "[s]uch a conceptualization of power and subject formation also encourages us to understand agency not simply as a synonym for resistance to relations of domination, but as a capacity for action that specific relations of subordination create and enable" (Mahmood 17-8). Central to the pedagogical programme of the mosque movement are the repeated bodily performances and practices like praying, fasting and donning the hijab that equip them with virtues like the love of God, humility, modesty and presents them with agential capacities. Mahmood cites the example of a pianist whose docility of the body or teachability is a primary requirement of her mastering the art (Mahmood 29).

Khadra draws strength from her faith after negotiating with religion and the values of the host community. In the process of defining her identity, she oscillates between her stances and undergoes conflicting experiences. She gets married and later decides to divorce, conceives and aborts, and alternates between veiling and unveiling in her adult life. While doing all these, she strengthens herself with her own religion and scriptures. Taher, her uncle had taught her the critical roles played by the woman leaders in early Islam. Khadra's agency is revealed in her fight inspired by Islam against her own community as well as the host community. She decides to divorce her orthodox husband when he is against her continuing education. It is Islam which inspires her when Khadra speaks against the traditional gender role of a homemaker: "The Prophet never asked his wives to do anything in the house for him" Khadra snapped. (241). Similarly, when she is prevented from entering into the mosque for her morning prayer in Saudi Arabia, she tells her parents:

> Women have always gone to the mosque. It's part of Islam. […] What about Aisha? What about how Omar wished his wife would not go to the mosque for fajr but he couldn't stop her because he knew it was her right? What about the Prophet saying 'You must never prevent the female servant of God from attending the houses of God?' I told the matawwa that hadith and he laughed—he laughed at me, and said 'listen to this woman quoting scriptures at us!' (168).

On the whole, fictional representations on Muslim women in the post 9/11 offer varied trends. Marking a departure from the dominant narratives, counter-narratives like Mohja Kahf*'s The Girl in the Tangerine Scarf* challenge the dominant perceptions of Muslim women and offer a subversive narrative. In this work, Muslim women are no more in the victim/escapee frame, nor are they waiting for the 'saving' from 'Muslim men' by the 'white men'. Instead, they perceive their identity from a largely liberative perspective and approach veil as emancipator that help them exercise their agency in different contexts of life.

Works Cited

Abu Lughod, Lila. "Do Muslim Women Really Need Saving? Anthropological Reflections on Cultural Relativism and its Others", *American Anthropologist*, vol.104, no.3, 2002 pp. 783-790.

Asad, Talal. *Formations of the Secular: Christianity, Islam, Modernity*. Stanford University Press, 2003.

Bullock, Katherine. *Rethinking Muslim Women and the Veil: Challenging Historical & Modern Stereotypes*. IIIT, 2002.

Clyne, Irene Donohoue. "Muslim Women: Some Western Fictions." *Muslim Women in the United Kingdom and Beyond –Experiences and Images.* Boston: Brill, 2003, pp. 19-38.

Dabashi, Hamid. "Native Informers and the Making of the American Empire." *Al-Ahram Weekly* 797, 1 June 2006, pp.1-7.www.meforum.org/campus-watch/10542/native-informers-and-the-making-of-the-american

Foucault, Michel. "Language, Counter-Memory, Practice: Selected Essays and Interviews." Eds. Donald F. Bouchard. Trans.Donald F. Bouchard and Sherry Simon. Ithaca: Cornell University Press, 1977.

Gana, Nouri. "Introduction: Race, Islam, and the Task of Muslim and Arab American Writing." *PMLA*, vol. 123, no.5, 2008, pp.1573-1580.

Kahf, Mohja. *Western Representations of the Muslim Woman: From Termagant to Odalisque*. University of Texas Press, 1999.

---.*The Girl in the Tangerine Scarf: A Novel*. Public Affairs, 2006.

Khalifa, Mahmoud. *Muslim Women Write Back: Hybridity Islam and the Quest for Identity.*Ph.D. Dissertation, 2011, University of Cairo.www.academia.edu/5784172/

Koegeler-Abdi, Martina. "Muslim Feminist Agency and Arab American Literature: A Case Study of Mohja Kahf's *The Girl in the Tangerine Scarf*." *Gender Forum*, No. 65. 2017.

Mahmood, Saba. "Politics of Piety: the Islamic Revival and the Subject of Feminism.", 2004.

Scroggins, Deborah. "Women of the Veil: Islamic Militants Pushing Women Back to an Age of Official Servitude." *The Atlanta Journal/The Atlanta Constitution* 28, June 1992, p.3

Sulaiman, Suraiya, et al. "Negotiating Muslim Women's Rights and Identity in American Diaspora Space: An Islamic Feminist Study of Kahf's *The Girl in the Tangerine Scarf*." *Kemanusiaan: The Asian Journal of Humanities*, vol.25, no.1, 2018.

Zine, Jasmin. "Muslim Women and the Politics of Representation." *American Journal of Islamic Social Science*, vol. 19 no.4, 2002, pp.1-22.

ISSN 2320-4842

ஆ. பழநியின் களம் கண்ட கவிதைகளில் இயற்கை

ரா. ரம்யா
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர் (பதிவெண் : R 20162512)
தமிழ்உயராய்வு மையம், அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி 630 003
முனைவர் ப. சு. செல்வமீனா
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி

ஆய்வுச் சுருக்கம்

இயற்கையோடுஇயைந்த மனித வாழ்வைப் படைப்பாளர்கள் தம் படைப்புகளில் இயற்கையோடு இணைத்தே பாடும் முறையைப் பின்பற்றிவருகின்றனர். மார்க்சிய கருத்துகளில் நுண்மாண்நுழைபுலம் பெற்றுத் திகழ்ந்த பாவலர் ஆ. பழநியின் ***களம் கண்ட கவிதைகள்*** எனும் கவிதைத் தொகுப்பில் இயற்கை இடம்பெற்றுள்ள விதத்தை விளக்குவதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

முன்னுரை

சங்க காலத்தில் காதலையும் வீரத்தையும் இருகண்கள் எனப் போற்றியது போல இயற்கையோடு ஒன்றியே மனிதன் வாழ்ந்தான். இலக்கியங்கள் இயற்கையின் பின்னணியில் எழுந்தவையே. அப்பின்னணியில் மனித வாழ்வு செம்மையுறச் சித்திரிக்கப்படுகிறது. சங்ககால இலக்கியங்கள்முதல் இக்கால இலக்கியங்கள்வரை பெரும் பாலும் இயற்கையோடு இணைந்து வாழ்வு கண்ட மக்களைப் பற்றியே பாடப்பட்டுள்ளன. இயற்கைக் காட்சி கள் கண்களுக்கு மட்டுமன்றிக் கருத்துக்கும் நலம் சேர்ப்பனவாகும். அவ்வகையில் படைப்பாளன் தன் சிந் தனையில் தோன்றும் காட்சிகளைப் படிப்போர் மனக்கண் முன்பே கொண்டுவர கற்பனையும் வருணனையும் கையாளுகின்றான். இவற்றிற்கு இயற்கையே முதன்மையாகத் திகழ்கிறது. அவ்வகையில் காரைக்குடியினைச் சொந்த ஊராகக் கொண்ட ஆ.பழநி பல இலக்கியங்கள் படைத்திருந்தாலும், அவர் இயற்றிய களம் கண்ட கவிதைகள் என்னும் கவிதை நூலின்வழி இயற்கையினை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இயற்கை

இயற்கை (Nature) என்பது இயல்பாக இருக்கும் தோற்றப்பாடு என்னும் பொருள் கொண்டது. இயல்பாகத் தோன்றி மறையும் பொருட்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் காலம், இயங்கும் இடம் ஆகியவை அனைத்தையும் இணைத்து இயற்கை என்கிறோம். மேலும் தமிழ்ச் சிந்தனை மரபின் இயற்கையும் செயற் கையும் புரிந்து விளக்கியதில் தொல்காப்பியம் முதலிடம் பெறுகிறது.

இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்[1] என்பதில் இயற்கையான தாவரங்கள், விலங்குகள், பிற உயிரி னங்கள், மலை, ஆறு போன்ற ஒவ்வொன்றும் தனித்த பண்புகளைக் கொண்டவை. இப்பண்புகள் இயல்பா னவை. நீரின் இயல்பு குளிச்சி, நிலத்தின் இயல்பு வளமை, அதாவது நிலம் ஏதேனும் சில உயிரினங்களை உற்பத்தி செய்துகொண்டே இருக்கும். சூரியன் இயல்பு வெண்மை இவ்வாறு ஒவ்வொரு இயற்கைப் பொரு ளுக்கும் மனிதர்களால் உண்டாக்கப்படாத இயல்பான பண்புகள் உண்டு என்கிறது தொல்காப்பியம். மேலும், இயற்கை என்ற சொல்லிற்கு, சுபாவம்; வழக்கம்; இலக்கணம்; கொள்கை; nature; custono; distinguishing; conviction[2] என்று பல பொருள்களை அகராதி குறிப்பிடுகின்றது. ***இயற்கை, மனித வாழ்க்கை என்ற இரண்டும் இல்லையெனில் இலக்கியம் என்ற ஒன்று இல்லை எனலாம் மனிதனுக்கு உயிர்ப்பு உள்ளது போல் இயற்கைக்கும் ஒரு வகையான உயிர் வாழ்வு உண்டென்று சொல்லப்படுகிறது.***[3]

திருக்குறள் என் காதலி- கவிதையில் இயற்கை

திருக்குறளைக் காதலியாக உருவகித்து ஆசிரியர் பாடியுள்ள பாடல் படிப்போருக்கு இன்பம் தரக்கூடியது. வள்ளுவனின் குறள் இன்றும் நற்சிந்தனைகளை விளைவிப்பதால் அவை காலத்தை வென்ற அறிவுப் பூக் கள், உலகத்திற்குச் சிந்தனை வளர்க்கும் மரங்கள், அறிவுடையோர் பழகக்கூடிய பூமலர்ந்த சுனைகள் என இயற்கையைக் கொண்டு வருணித்துள்ளார். அவர் திருக்குறள் என்னும் காதலியின் முகமானது சூரியன் தோன்றும் விண்ணினைப்போல ஒளி வீசுகிறது. அவளைக் காணும்போது ஆசையானது மண்ணிலிருக்கும் ஊற்றினைப்போலப் பெருக்கெடுக்கிறது என்பதனை,

ஓங்கும் மலைமேல் ஒளியேற்றி வைத்தாற்போல்
நீங்காமல் எங்கும் நிறைந்திருக்க[4] என்று கூறி குறளின் சிறப்பினை இயற்கைவழிக் சுட்டுகிறார் ஆசிரியர்.

வாழை - கவிதையில் இயற்கை

வாழை நம் வீட்டுக் கொல்லையில் வளரும் தாவரம் மட்டுமன்றி மனித வாழ்வில் தொன்றுதொட்டு இணைந்திருக்கும் தாவரமுமாகும். இது கடவுள் வழிபாட்டில் முக்கிய இடம் பெறுகிறது. வாழை தனது தொன்மையினை, 'நான் கரும்பினைப்போல வெளிநாட்டிலிருந்து வந்து இங்கே குடியேறிய வந்தேறி இல்லை, நான் மண்ணின் மைந்தன்' என்று கூறுவதனை,

நீரில் முன்தோன்றும் உயிர்கள்தம்முள்
முறைமுறை வளர்ந்து பெற்ற
சொந்தத்தை உடையேன்[5] எனச் சுட்டுகிறார் ஆசிரியர். இவை உணவாகவும், உணவு படைக்கும் இலையாகவும், ஒவ்வொரு உறுப்பும் பயன்தரக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இவ்வுலகில் தாவரங்கள் அனைத்திற்கும் பருவமுண்டு. ஆனால் வாழை எப்பருவத்திலும் ஈன்றிடும். இது சிறுமலை, செவ்வாழை, பேயன், பச்சை நாடான், பூவன், நேந்திரம் எனப் பலவகையைக் கொண்டது. வாழை, இலை முதல் கிழங்கு ஈறாக அனைத்தையும் கொடுத்தும் இறுதியில் தன் குலையினையும் அறுக்கின்றார்களே என வருந்தி,

இலைமுதற் கிழங்கீ றாக
எத்தனைப் பொருள்கொ டுத்தேன்,
விலைமுதற் பொருளாய் மாறி
வேண்டிய நலங்கள் சேர்த்தேன்
கலைதெளி மாந்தர் நன்றி
சிறிதேனும் காட்டா ராயென்
குலையினை அறுக்கின்றா ரே
கொடுமையை என்ன சொல்வேன்[6]

மனிதர்கள் செய்யக்கூடிய நன்றியற்ற செயலை இயற்கைவழிப் புலப்படுத்துகிறார் ஆ.பழநி.

பாரதி பாடிய தெய்வம், சிவன் கவிதையில் இயற்கை

பாரதி பாடிய தெய்வம், சிவன் என்னும் தலைப்பின் கீழ் அமைந்துள்ள கவிதையில் ஆசிரியர் சிவனைப் பேட்டி காண்பதும், பாரதியார் அதற்குத் துணைநிற்பதும் நல்ல கற்பனை, சிவனே இயற்கை, இயற்கையே சிவன் என்பது பொருள் பொதிந்த விளக்கம்.

ஒரு பாதி சிவப்பாக மறுபாதி கருப்பாக
உருவாகி அவன் நிற்கும் உண்மை அறிவாயா?
சுற்றிவரும் பூமிமேல் ஞாயிற்றின் ஒளி படுங்கால்
உற்றுநீ நோக்கின் ஒருபாதி ஒளியாக
எஞ்சிய பாதி இருளாகக் கண்டிடுவாய்[7] என்னும் அடிகளில் நிலவும், ஞாயிறும், மாறிமாறித் தோன்றும் உண்மையை இயற்கையை நன்றாக அறிந்தவர்கள் மட்டுமே அறிவர். இயற்கையின் பங்களிப்பைத் தம் பாடல்களில் மக்களின் வாழ்வியலில் தொடர்புடைய விலங்கினங்களோடு ஆசிரியர் குறிப்பிட்டுள்ளதை,

புலித்தோல் உடுத்துப் பொலிவான் எனத்தேடின்
புலித்தோலின் வண்ணம் பொலியும் உடையுடுத்து[8] என்ற அடிகள் சுட்டுகின்றன. சிவபெருமான் உடுத்தும் ஆடை புலித்தோலால் ஆனது என்றும், பாரதியார் சிவன் தன்கண்முன் தோன்றினால் கார்காலம் கண்ட மயில் போல இன்புறுவேன் என்று விலங்கினையும் பறவையினையும் சுட்டியுள்ளார் ஆசிரியர் ஆ.பழநி.

பாரியும் பறம்புமலையும் கவிதையில் இயற்கை

இயற்கை வளம் நிறைந்தது பறம்புமலை; இம்மலையைத் தலைமை இடமாய்க் கொண்டு ஆட்சி செய்த குறுநில மன்னன் பாரி; வள்ளல்கள் எல்லோரையும் விட உயர்ந்தவனாக அவனைத் தமிழ்ச் சான்றோர் போற்றுவர். அதற்குக் காரணம் அப்பெரும் மன்னன் படர்வதற்கு வழியின்றித் தவித்த முல்லைக் கொடிக்குத் தான் ஊர்ந்து வந்த தேரினை வழங்கியதே. இதனைக் *கொடைமடம்* என்கிறது புறநானூறு.

முல்லையைக் கொடியெனச் சங்க நூல்கள் கூற, செடி நூலில் தவழும் செடி (climbing shrub) என்கிறது.[9] முல்லையை ஓர் உயிராக எண்ணிப் பாரி வள்ளல் தனது தேரினை அளித்ததை,

கபிலன் பாட்டிற்கு
யாரளித்த திக்கொடைதான் எனவழியில் கேட்பார்க்கு
நறுமுல்லைக்குத்
தேரளித்த பாரி வள்ளல் செய்தளித்தான் எனச்சொல்
லும் சீர்த்தி மிக்கான்[10] என்ற கவிதை வழி புலப்படுத்துகிறார் ஆசிரியர். பசியோடு உதவிகேட்டு வருபவர்களுக்கு,

ஒரு நிழலும் இல்லாத
நெடுவழியில் வருபவருக்கு உதவும் நீழற்
பெருமரத்தைத் தனிமரத்தைப் பெருவேந்தர்கள் கொன்றார்கள்[11] என மூவேந்தர்களின் கொடைச் சிறப்பை மரத்தின் நிழலுடன் ஒப்பிடுகிறார் ஆசிரியர்.

கருப்புப்பணம் கவிதையில் இயற்கை

வருமானத்திற்கு அதிகமாகப் பணம் சேர்த்து வரி செலுத்தாமல் மறைக்கப்படும் பணமே கருப்புப் பணமாகும். இந்தக் கருப்புப் பணமே தான் தோன்றிய வரலாற்றை எடுத்துரைப்பது போலவும் அதற்கு நிலம், மண், ஒளி, இருட்டு போன்ற இயற்கையைக் கையாண்டுள்ளார்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை[12] என வள்ளுவர் பொறுமைக்கு உதாரணமாக குறிப்பிட்ட நிலத்தின் வழியே தோன்றியது கருப்புப்பணம் என்றும், பணத்தின் பயன் அளவறியது. மனித வாழ்வில் தொடக்கம் முதல் இறுதிவரை கண்ணனின் அவதாரங்கள் போல பல்வேறு பரிணாமங்களில் கருப்புப் பணம் தொடர்வதை,

மண்ணினுட் கிடப்பேன் ஓங்கும்
மாளிகைச் சுவராய் நின்பேன்
பொன்னினுள் கரப்பேன் வைரப்
புதையலாம் மறைவேன்[13] என இயற்கையோடு எடுத்துரைக்கின்றார்.

வள்ளல் அழகப்பர் கவிதையில் இயற்கை

தமிழ் இலக்கிய உலகில் வள்ளல்கள் பலர் தோன்றி காட்சியளிக்கின்றனர். இவ்வுலகில் பணம் சேர்க்கின்ற

வழியே பலருக்குத் தெரியும், சேர்த்த பணத்தை எல்லோருக்கும் பகுத்து வழங்குகிற மறுவழி ஒருவருக்கும் தெரியாது. ஆனால் இருவழியும் தெரிந்து தெளிந்தவர் வள்ளல் அழகப்பர் ஆவார். அவர் விலங்குகள் நடமாடும் காடுகள் நிறைந்த பகுதியில் நிலவளங்களும், நீர்வளங்களும், நிலத்தடி கனிம வளங்களும் நிறைந்திருந்தாலும் மனித வளமில்லாத இடத்தைக் கல்விக் கூடாரமாகி என்றும் அழியாதப் புகழுடன் திகழ்பவர். வள்ளல் அழகப்பரை ஒரு முழு நிலவுடன் ஒப்பிட்டுக் கூறுவதை,

நின்ற பொருள் தேய்பிறையா
நீள்புகழோ வளர்பிறையா
நிறைந்ததாய் அன்றே!
இன்று முழு நிலவின் நாள்
வானத்தில் மட்டுமில்லை
வையத் தும்தான்[14] என்னும் கவிதை சுட்டுகிறது. அழகப்பரின் பொருள் தேய்ந்து போயினும் புகழ் வளர்பிறையாய் நிறைந்து நிற்கும் தன்மையது.

முடிவுரை

ஆ. பழநி தனது களம்கண்ட கவிதைகள் என்னும் கவிதைத் தொகுப்பில் திருக்குறளைத் தனது காதலியாகக் கொண்டு விண்ணோடும் மண்ணோடும் ஒப்பிடுவதனையும், வாழை தன் சிறப்பைத் தானே கூறி மனிதர்களின் நன்றியுணர்வின்மையைக் கூறுவதனையும், சிவனே நிலவும் ஞாயிறாகவும் விளங்குவதையும், கொடைக்கு மரத்தின் நிழலினையும், கருப்புப்பணம் மண்ணிலே தோன்றிவருவதையும், வள்ளல் அழகப்பரின் புகழ் வளர்பிறையாய் நிலைத்து நிற்கக் கூடியது என்பதையும் விளக்கியுள்ளார்.

தொகுப்புரை

பண்டைத் தமிழரால் காதலும் வீரமும் போற்றப் பட்டதுபோல இயற்கையும் போற்றப்பட்டது. சங்க காலம் முதல் தற்காலம் வரை புலவர்கள் இயற்கைக் கூறுகளை இணைத்தே படைப்புகளைப் படைத்து வருகின்றனர். இக்கட்டுரையின்வழி,

- திருக்குறள் என்னும் காதலி அறிவுப்பூ, சிந்தனை வளர்க்கும் மரம், அறிவுடையோர் பழகும் பூ மலர்ந்த சுனை என்றதோடு திருக்குறளாகிய காதலியின் முகம் ஞாயிறு தோன்றும் வானம்போல ஒளி பொருந்தியது.
- வாழை தான் கரும்புப்போல வந்தேறி அல்ல மண்ணின் மைந்தன், ஒவ்வோர் உறுப்பும் பயன் தரக்கூடியது மனிதர் போல் நன்றியுணர்வற்று இருப்பத்தில்லை.
- சிவனாகிய இறையை நிலவாகவும், ஞாயிறாகவும் உவமித்தது.
- பாரி வள்ளலின் கொடைச்சிறப்பு மரத்தின் நிழலுக்கு ஒப்பானது
- கருப்புப் பணம் மண்ணிலே தோன்றிச் சுவராய், பொன்னாய், வைரப்புதையலாய்ப் பல தன்மை கொண்டது.
- வள்ளல் அழகப்பரின் செல்வம் தேய்ந்துபோயினும் அவரது புகழ் வளர்பிறையாய் வளரக் கூடியது.

என்னும் முடிவுகள் பெறப்படுகின்றன.

பாவலர் ஆ.பழநி தன் *களம் கண்ட கவிதைகள்* என்னும் கவிதை நூலில் இயற்கையோடு இயைந்தே தாம் கூறவேண்டிய கருத்தியலைப் பதிவு செய்துள்ளார். இந்நூல் அனைவருக்கும் படித்து இன்புறத் தக்கது.

சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம், நூ.19
2. நர்மதாவின் தமிழ் அகராதி, ப.114.
3. சு.பாலச்சந்திரன், இலக்கியத் திறனாய்வு, ப.71
4. ஆ,பழநி, களம் கண்ட கவிதைகள், ப.6.
5. மேலது ப.18.
6. மேலது ப.23.
7. மேலது ப.31.
8. மேலது ப.29.
9. பி.எல்.சாமி, சங்க இலக்கியத்தில் செடி கொடிவிளக்கம், ப. 80.
10. ஆ,பழநி, களம் கண்ட கவிதைகள், ப.78.
11. மேலது ப.82.
12. குறள், 151
13. ஆ,பழநி, களம் கண்ட கவிதைகள், ப.50.
14. மேலது ப.95.

துணைநூற் பட்டியல்

1. இளம்பூரணர் (உ.ஆ), தொல்காப்பியம், எழுத்ததிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1982.

2. சாமி பி.எல்., சங்க இலக்கியத்தில் செடிகொடி விளக்கம், கழக வெளியீடு, சென்னை, 1967.

3. பழநி, ஆ ., களம் கண்ட கவிதைகள், எழில் வெளியீட்டகம், காரைக்குடி, 1993.

4. பாலச்சந்திரன், சு., இலக்கியத் திறனாய்வு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், மதுரை, 2009.

5. மாணிக்கவாசகர் (உ.ஆ.), திருக்குறள், உமா பதிப்பகம், சென்னை.

6. நர்மதாவின் தமிழ் அகராதி, நர்மதா பதிப்பகம், சென்னை.

Life is a privilege. Its youthful days
Shine with the radiance of continuous Mays.
To live, to breathe, to wonder and desire,
To feed with dreams the heart's perpetual fire;

- Ella Wheeler Wilcox

ISSN 2320-4842

குமரகுருபரரின் சாத்திர சிந்தனைகள்

முனைவர் வா. பாக்யலெஷ்மி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் கலைக்கல்லூரி, திருப்பனந்தாள்

திருவைகுண்டத்தில் தோன்றித் திருச்செந்தூர் முருகன் அருளால் பாடும் ஆற்றல் பெற்ற குமரகுருபரர் தமிழையும் சாத்திரத்தையும் தமது இரு கண்களாகப் போற்றியதோடு சாத்திரத்தின்மீது அளவற்ற பக்தியும் கொண்டிருந்தார் என்பதற்கு அகச்சான்றாக,

ஓரம்வே தாந்தமென் நுச்சியிற் பழுத்த
ஆரா வின்ட வருக்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர்; சிலரே...
அன்னவர்; கமல பொன்னடி விளக்கியத்
தீம்புன லமுத மார்ந்தன னதனால்
வேம்பெனக் கொண்டன் விண்ணவ ரமுதே (பண்டார மும்மணிக் கோவை: 11:31:39) எனும் பாடல் அமைகிறது. இதில் உயிர்த் தொகுதிகள் எல்லாம் உய்யும் பொருட்டுப் பரம்பொருளான இறைவன் வேதங்களைப் படைத் தான் அவ்வேதங்களின் சாரமான சித்தாந்தத்தை உணர்ந்தாரின் திருவடிகளை ஆட்டிய நீரை உண்ணுவனே யன்றி விண்ணவர் அமுதம் எனக்கு வீணே எனக் கூறும் பகுதியில் அவரது சாத்திரப் பற்றை உணரலாம்.

திரிகரணம்

ஆதியும் அந்தமுமற்ற முழுமுதல் இறைவன் (சிவம்) இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி ஆகிய திரிகரணங்க ளால் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம் ஆகியனவற்றை நிகழ்த்துகிறான். மலமாம் திரையினாலே பசுக்களுக்குப் பதியாம் தன்னை மறைத்தலும் மலபரிபாகம் பெற்ற உயிர்களுக்கு வீடின்பத்தை அருளலும் இறைவன் செயலே என்பதை,

இலகுயே ரிச்சா ஞானக் கிhpயையுட் கரண மாக
அலகிலா வுயிர்ப்பு லன்கட் கறிவினை யாக்கி யைந்து
நலமிகு தொழில்க ளோடு நாடக நடிப்பன் நாதன் என்னும் சிவஞான சித்தியார் (சுப 237) கருத்தையே அடிகளார்,
அண்ட முரவாகி யங்கஞ் சாராசரமாய்க்
கண்ட சக்தி மூன்றுட் கரணமாயத் - தொண்டுபடும்
ஆவிப் புலனுக் கறிவளிப்ப வைந்தொழிலும்
ஏவித் தனி நடத்து மெங்கோ... எனக் கூறுகிறார்.
ஏகன் அநேகன்

ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் உய்வார்கள்
உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
.... தில்லை சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்து விளையாடி... என மணிவாசகப் பெருமான் இறைவனின் விளையாட்டைப் பாவை நோன்பில் விவரிக்கிறார்.

இக்கருத்தையே உலகியல் ஜாலங்களில் ஒன்றான இந்திரஜாலத்தோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார் குமரகுருபரர். இந்திரஜாலம் என்பது ஒரு வித்தை. அதைக் காட்டுபவன் அவ்வித்தையில் மற்றவர்களை மயங்கச் செய் வானேயன்றித் தான் அதில் ஒன்றிட மாட்டான். ஆனால் வித்தையைப் பார்ப்பவர்களுக்கு அவனும் அவ் வித்தையில் ஒன்றி நிற்பது போலத் தெரியும். அதுபோல இறைவனும் அனைத்து உயிர்களையும் படைத்துக் காத்துக் கரந்து விளையாடினும் தான் அத்தொழில்களில் ஒன்றாது புரிவோன் யாவரையும் தான் மயங்கும் *தந்திரத்தில் சாராது சார்வதுபோல்* நிற்கும் நிலை என்கிறார் குமரகுருபரர். இதனையே சிவஞான சித்தியார் இதனைக் கீழ்க்காணும் பாடல் விளக்குகிறது.

அழிப்பு இளைப்பாற்றல் ஆக்கம் அவ்வவர்; கன்மமெல்லாம்
கழித்திடம் நுகரச் செய்தல் காப்பது கன்ம ஒப்பில்
தெழித்திடல் மலங்கள் எல்லாம் மறைப் (பு) அருள்செய்தி தானும்,
பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடின் அருளே எல்லாம் (சிவஞான சித்தியார் - சுபக்கம் 39)

அப்படி இந்திரசாலம் காட்டுவதுபோல இறைவன் மூலப் பொருளாகிய கரு ஏதுமின்றி அனைத்துப் பொருள் களுக்கும் உயிர்களுக்கும் தானே கருப்பொருளாய் விளங்குகிறான். உயிர்கள் தம் வினைக்கேற்ப உடம்பு எடுப்பதுபோலல்லாமல் அருளே திருவுருவாய் உயிர் கள்செயல்படுவதற்கென மனம், மொழி, மெய் எனும் முக்கருவிகள் அமைந்துள்ளதுபோல் தனக்கு அமைந் துள்ள இச்சை, அறிவு, இயற்றல் ஆகிய மூன்று ஆற் றல்களால் இலயம் (ஒடுக்கம்), போகம் (நுகர்தல்), அதிகாரம் (செயல்பாடு) என்ற மூவகைச் செயல் களைச்செய்யும் பொருளாய்த் தனித்த ஒப்பற்ற வடிவி லிருந்து உருவம், அருவம், அருவுருவம் ஆகிய மூவடிவங்களைக் கொண்டு உயிர்களின் பக்குவ நிலைக்கேற்ப திருவருளை வழங்குகின்றான் என்று விளக்குகிறது கந்தர்கலிவெண்பா.

பதி, பசு, பாசம்

சுடர்விட்டு எங்கள் சோதி (திருஞானசம்பந்தர்)
சொல்லுக விளக்கது சோதியுள்ளது
அண்டத்து அப்பால் நின்ற பேரொளி (அப்பர்)
தீ எழநிழன்ற சுந்தரச் சோதியாய் (சுந்தரமூர்த்தி)
ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதியை (மாணிக்கவாசகர்)

சமயக்குரவர்களும் இறைவனின் ஒளி வடிவத்தை தோத்திரத்தில் புகழ்கின்றனர் பதியாகிய இறைவன் ஒளி வடிவமாக உள்ளான் என்பதை, சைவ சித் தாந்த சாத்திரமும் உயிர்த்துணை-ஆட்கொள்ளல் அங்கிங்கெனாதபடி எங்குமுள்ள எவ்வுயிர்களிலும் உயிர்க்குயிராய் விளங்குகிற இறைவன் உயிர்களுக் குத் துணையாக உள்ளான்.

தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவானை (தசம்பந்தர்)
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய் (அப்பர்)

அடியார்களுக்கு எப்படி உயிர்த்துணையாக அருளி யுள்ளான் என்பதைப் பெரியபுராணம் முதலிய அடி யார் வரலாறுகளில் காணலாம்.

அரனடிக் கன்பர செய்யும் பாவமும் அறமதாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவமாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி
நரனிற் பாலன் செய்த பாதகம் நன்மையாதோர்
(சிவஞான சித்தியார் சுபக்கம் 119 இரண்டாம் சூத்திரம் 29)

ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மலங்களும் உடைய சகலருக்கு இறைவன் குருவாக வந்து ஆட் கொள்கிறான். ஆணவ மலமுடைய விஞ்ஞானகலர்க்கு அவர்தம் உள்ளத்தே இருந்து மெய்யுணர்வைத் தந்து அதன் பயனாகப் பேரின்பத்தையும் வாரி வழங்கியருளி ஆட்கொள்கிறான் என அழகாக, விரிவாக அடிகள் எடுத்துரைக்கிறார். மும்மலங்களையும் தளை அல்லது பாசம்என்பர். ஆணவ மலம் தொன்மையானது, உயி ரின் அறிவை மறைப்பது,உயிரினின்றும் எஞ்ஞான் றும் நீங்காதது. அதனை அடிகள் இருள்மலம் (11), ஆணவமான படலம் (26), விடுத்தகலாப் பாச இருள் (45), மூத்த கரும மலம் (32) எனக் குறிக்கின்றார்

குமரகுருபரர் பாடல்கள் அனைத்தும் சாத்திரக் கருத்து மிக்கவை. அவை விரிப்பின் பெருகும் என்றஞ்சிக் குமர குருபரரின் பாடல்களில் இடம்பெறும் சாத்திரக் கருத்துக்கள் மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாக விளக்கப்பட்டன.

துணைநின்ற நூல்கள்

பண்டார மும்மணிக்கோவை-குமரகுருபரர்-காசிமடம்

கந்தர்கலிவெண்பா-குமரகுருபரர் - காசிமடம்

சிவஞான சித்தியார் - அருணந்தி சிவாச்சாரியர்

திருவெம்பாவை - மாணிக்கவாசகர்

திருஞானசம்பந்தர் தேவாரம் - இரண்டாம் திருமுறை

23ஆம் பக்கத் தொடர்ச்சி

வீரர்கள் தம் வாயில் புகுந்த வேர்களைப் பிரித் தெடுக்க நிலத்தில் சாய்ந்து கிடக்கின்றனர். வேல் பாய்ந்ததால் பாதிக்கப்பட்ட வீரர்களின் நிலையை கலிங்கத்துப்பரணி வாயிலாக அறியமுடிகிறது. சில வீரர்கள் கூர்மையான வேல் உடம்பில் தைக்கப் பெற்றும் விழாது நின்றார்கள் என்பதை,

வெயில் தாரைவேல் சூழவும் தைக்க
மண்மேல் விழாவீரர் வேழம்பர் தம் (கலிங். 489)

என்ற பாடல் மூலம் அறியமுடிகிறது. போர்க் களத் தில் கூர்மையான வேல் தைத்தும் விழாது மண் ணில் நின்ற வீரர்களின் வீரத் தன்மையை அறிய முடிகிறது.

முடிவுரை

போர்க்கருவிகளே போரில் வெற்றிபெறப் பேருதவி புரிகின்றன. வீரனுக்கு அவன் ஏந்தும் ஆயுதத்தோடு சேர்ந்து சிறப்புப் பெறுகிறான். கலிங்கப்போரில் பல ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. வேல் ஆயுதம், வேலின் வகைகள், கலிங்கத்துப்பரணியில் வேல் பயன்படுத்தப்பட்ட முறை ஆகியவை இக்கட்டுரையில் விளக்கப்பட்டன.

துணைநூற்பட்டியல்

அறவேந்தன். இரா, நித்தியா அறவேந்தன், திருமுருகாற்றுப் படை மூலமும் பரிமேலழகர் உரையும், பரிசல் வெளியீடு, சென்னை.

இளம்பூரணர் (உ.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி தென்னிந்தி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

இராமசுப்பிரமணியம். வ.த, புறநானூறு மூலமும், தெளிவுரையும், திருமகள் நிலையம், சென்னை. மு.ப. 2000.

கோவிந்தராசன். மு, புறநானூற்றுப் பெட்டகம், தேன்மொழி பதிப்பகம், சென்னை. மு.ப : 1980

முத்துசிவன். ஆ, கலிங்கத்துப்பரணி மூலமும் உரையும், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2002.

ISSN 2320-4842

'காயம்' நாவலில் புலப்படும் பாத்திரப் பண்புகள்

ப. கௌரி
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்) (Ref.No:29431/Ph.D.K8/Tamil/P.T./June 2019(3–5)Confirm., dt: 03.08.2021), தமிழ்த்துறை உயராய்வு மையம்
குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த), தஞ்சாவூர் 613 007
(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)
நெறியாளர்: **முனைவர் தெ.வாசுகி**
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், அ.து.ம.மகளிர் கல்லூரி (த), நாகப்பட்டினம் 611 001
(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)
இணை நெறியாளர்: **முனைவர் சீ.வைஜெயந்திமாலா**
இணைப் பேராசிரியர்–துறைத் தலைவர், தமிழ்த்துறை உயராய்வு மையம்
குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த), தஞ்சாவூர் 613 007
(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச்சுருக்கம்

தமிழில் நாவல் தோன்றிய காலத்திலேயே குறிப்பிட்ட இனம், வட்டாரம் சார்ந்து படைக்கிற போக்கும் தோன்றிவிட்டது. கடந்த இரு நூற்றாண்டுகளில் உலக அளவில் சமூக, பொருளாதார, அரசியல், வரலாறு ஆகிய பின்னணிகளில் பெண் ணியம் பற்றிய சிந்தனைகள் மிகுதியும் வெளிப்பட்டுள்ளன. இவற்றை மேலை நாட்டு நூல்களின் பார்வைகளிலிருந்தும் தமிழ் நூல்களின் வழியேயும் அறியலாம். கணவனைத் தெய்வமாகக் கருதுவதும், பெண்ணுக்கே பெருமை தருவதும், பெண்களுக்கே கற்பு உரியது என்று இயங்கிய சங்கப் பார்வையும், சிறந்த கணவனைப் பெற்றால் மனைவி தெய்வ வாழ்க்கை யுடையவளாவாள் என்ற திருக்குறள் சிந்தனைகளும் எண்ணிப் பார்க்கக்கூடியவை. கணவனே கண்கண்ட தெய்வமாய்க் கருதப்பட்டுவந்துள்ள மரபு சார்ந்த பெண்ணியம் அறியச்செய்யும். இவ்வகையில் 'காயம்' நாவலில் மேற் குறித்த கருத்தாக்கங்களைத் தம் நெஞ்சில் ஏற்றி வைத்திருந்த வசந்தி எனும் பாத்திரம் சமுதாயத்தில் எதிர்கொண்ட நிலைகளைச் சோமன் எனும் பாத்திரம் பயன்படுத்திக்கொண்ட சூழ்நிலைக் காரணங்கள் பற்றி இவ்ஆய்வுக் கட்டுரை சுருக்கமாகப் பேசுகிறது.

கருவிச்சொற்கள் (Keywords): அழகியல், கௌரி, சோமன், தீப்பண்புகள், நற்பண்புகள், வசந்தி.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

தமிழில் *நாவல்* தொடர்கதை வடிவம். தொடர்கதையாயினும் அளவில் சிறிதும் பெரிதுமாக வெளிவந்து சமூக நடப்பைக் காலத்திற்கேற்ப வடிவமைத்துச் செல்வது இதன் பணி. நாவல் உருவாவதற்கு முன் தோன்றிய தமிழ் இலக்கிய வடிவங்கள் வாசகனை உடனடியாகத் தெளிவுபெறச் செய்யாது. சற்று தாமதமாக உணர்த்தும் பண்பு கொண்டிருந்தது. காலப்போக்கில் எளிய உரை வடிவும் இலக்கிய உற்பத்திக்கு உதவும் என்பதை மேலை நாட்டு இலக்கியங்கள் நமக்கு உணர்த்தவே முதற்கண் அவர்கள் வைத்த *நாவல்* என்ற பெயரிலேயே கதையாக்கம் செய்தனர். பிற்காலத்தில் இது தமிழ் இலக்கிய வகைமைக்குப் (Genre) புதுமை என உயர்ந்தோர் *புதினம்* என் றனர். இக்காலத்தில் எழுத்தாளர் சிலர் இதனைச் சிக்கலானது - எழுத்தாளனுக்கும் வாசகனுக்குமே நாவல் கருவாக்கம் சிக்கலானது எனக் கூறினர். ***நாவல் ஒரு சிக்கலான வடிவம். ஒரு எழுத்தாளனுக்குப் புதியதாக ஒரு நாவல் எழுதுவதைக் காட்டிலும் சிக்கலானது எதுவும் இல்லை... சர்ரியலிஸ்டான ஆந்த்ரேபிரதானின் எதிரிகள் பட்டிய லில் நாவல் என்ற வடிவமும் இடம்பெற்றிருந்தது. வி.எஸ்.நைபால் நாவல் செத்துவிட்டது என்று அறிவித்துப் பல காலம் ஆகிவிட்டது (ப.1)*** எனக் கூறுவதாக எம்.ஜி.சுரேஷ், 'சிலந்தி' நாவலின் தொடக்க உரையில் சுட்டுகிறார்.

இது ஓர் உண்மை நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நாவலாகப் புனையும்போது இதனை ஆக்கிய படைப்பாளர்க்கும் பல சிக்கல்கள் எழுந்துள்ளன. அவற்றைப் போக்குவதற்காக வருணனை போன்ற சில இலக்கிய உத்திகளையும் படைக்க வேண்டியிருந்துள்ளது. துன்பமான பல சிக்கல்கள் இருப்பினும் 'காயம்' என்று கிட்டத்தட்ட எளிய தலைப்பையும் ஆசிரியர் தேர்ந்துகொண்டுள்ளார்.

இத்தகைய சூழலிலும் வாழ்வியல் போக்குகளைப் பதிவுசெய்தல் நாவல் சிறப்பிற்கு அடிப்படை. இதனை, ஆ.சிவசுப்பிரமணியன் 'இனவரைவியலும் தமிழ் நாவலும்' என்ற நூலில் பதிவுசெய்கிறார். ***ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழலில் வாழும் மனிதர்களின் வாழ்வியல் பிரச்சினைகளையும் உளவியல் பிரச்சினைகளையும் மையமாகக்***

கொண்டெழுதும் நோக்கில் நாவலானது அம்மனிதர்களி னதும் சமூகத்தினதும் பண்பாடு, பழக்கவழக்கங்கள், சமய வாழ்வு மற்றும் வாழ்வியல் அம்சங்களை முழுமையாகப் பிரதிபலிப்பது அவசியமாகும். அப்பொழுதுதான் அந்நாவ லைப் படிக்கும் வாசகன் அதில் இடம்பெறும் சமூகச் சூழ லோடு ஒன்றிவிட முடியும். அத்துடன் அந்நாவலில் இடம் பெறும் பாத்திரங்கள் அவை சித்திரிக்கப்படும் காலச்சூழ லோடு பொருந்தி நிற்கும் (ப.7) எனப் படைப்பாளிக் குப் பாடம் நடத்துவது போன்று சிக்கலை விளக்குகி றார். இவற்றையும் கணக்கில் கொண்டு, தி.வெ.ரா. 'காயம்' நாவலைப் புனைந்துள்ளார். கிடைத்துள்ள தரவுகளடிப்படையில் ஆய்வுக்கட்டுரை வரையறைக் குட்படுத்திப் பின்வரும் இரண்டு பகுதிகளாகப் பகுத் துக்கொண்டு விளக்கப்படுகிறது.

காயம் - நாவல் உள்ளடக்கம்

பாத்திரங்களின் பண்பியல் கொள்கைகள்

1. காயம் - நாவல் உள்ளடக்கம்

ஒவ்வொரு பகுதியிலும் மனித உணர்வுகளை வாசகர் உள்ளத்தைத் தொடுமாறு *காயம்* பதிவுசெய்துள்ளது. இது ஒரு குடும்பத்து உறுப்பினர்கள் சமூகச் சூழலில் சிக்கி, அதிலிருந்து மீண்டு வருவதை அடிப்படையா கக் கொண்டது கதை. கதையின் தலைமைப் பாத்தி ரங்கள் அண்ணாமலையும் வசந்தியும் ஆவர். அண்ணா மலை வசதிமிக்க குடும்பத்தைச் சேர்ந்த இளைஞன். வசந்தி பிராமணப் பெண். அவள் கோயிலில் பாடிக் கொண்டிருக்கும்போது அண்ணாமலை பார்க்கிறான். அவள் அழகு அவனை மிகவும் கவர்ந்துவிடுகிறது. அவளை மணந்துகொள்ள முடிவு செய்கிறான். தன் முடிவைமுதலில் தன் தாய் பார்வதியிடமும் பின்னர் தந்தையிடம் தெரிவிக்கிறான். வசந்தி பிராமணப் பெண். அவளைத் தரமாட்டார்கள் என்று சொல்லியும் அவன் அமைதிகொள்ளவில்லை.பின்னர் வசந்தியின் தந்தை யிடம் கூறி மறுப்புக்குப்பின் ஒத்துக்கொள்கிறார். மண ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. திருமண மண்டபம் நிறைகிறது. மணப்பெண் வசந்தி அண்ணாமலையின் அறைக்கு வருகிறாள். தான் முன்பே சோமன் என்ற வாலிபனைக் காதலிப்பதாகவும் பிடிவாதம் செய்ததால் ஒத்துக்கொண்டதாகவும் வசந்தி கூற, சிறிது நேர யோசனைக்குப்பின் அண்ணாமலை சோமனை மண மகன் ஆடை உடுத்தச்செய்து அவர்கள் இருவருக் கும் திருமணம் செய்துவைக்கிறான் அண்ணாமலை.

அண்ணாமலை மனத்தைத் தேற்றிக்கொண்டு திரும்பு கிறான். சோமனும் வசந்தியும் சென்னை செல்கின்ற னர். சோமன் அவளை வேலைக்காக பம்பாய் அழைக் கிறான். அவளும் அவனை நம்பிச் செல்கிறாள். அங்குப் பாலியல் தொழில் செய்யும் கௌரி என்ற பெண்ணிடம் ஒரு லட்சம் ரூபாய்க்கு வசந்தியை விற்று விட்டு அவளுக்குத் தெரியாமல் ஊர் திரும்புகிறான். வசந்தியால் அங்கிருந்து தப்ப இயலவில்லை. அவ ளும் அத்தொழிலுக்கு ஆளாகிறாள். வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே என்று வருந்தியே வாழ்க்கையைக் கழிக்கிறாள்.

ஒருநாள் எதிர்பாரா நிலையில் வசந்தி தங்கியிருந்த விடுதிக்குச் சோமன் வருகிறான். வசந்தி தோழிகளி டம் கூறி, அவனுக்கு ஓர் அறை ஏற்பாடு செய்யச் சொல்கிறாள். இரவு நடுநிசியில் அந்த அறைக்குத் தன்னை அலங்கரித்துக்கொண்டு வசந்தி அவன் அருகே சென்றவள் அவன் முகத்தை நிமிர்த்திப் பார்த்தாள்.

சோமன்... என்னை ஞாபகமிருக்கா? ... வசந்தி சத்த மாகக் கேட்டாள். சோமன் தடுமாறினான் ...
நீ யாரு ... ஒண்ணும் புரியல்லியே ... அந்தப் பொண்ணு எங்கே ... நீ ... நீ யாரு... தெரியல்லையா ... என்னைத் தெரியல்லையடா பாவி ... ஸ்ரீரங்கம் நரசிம்ம பட்டரோட ஒரே பொண்ணு வசந்தி.
அய்யோ ... வசந்தி ... தயவு செஞ்சு என்னை அடிக்காதே ...
உன்னைப் பெத்தவளும் ஒரு பொம்பளைதாண்டா' ... எப்படிடா உனக்கு இந்தக் கொடுமையைச் செய்ய மனசு வந்துச்சு ...
வசந்தி ... என்னை ஒண்ணும் பண்ணிடாதே ... கட்டிலிலிருந்து எழ முயன்றான். முடியவில்லை. மறுகணம் -ட்டேய் ... சோமன் ... அழிஞ்சு போடா மிருகமே ... (தி.வெ.ரா., ப.120)

அண்ணாமலையைச் சந்தித்து வசந்தி மன்னிப்புக் கேட் கிறாள். அண்ணாமலை அவளைக் குறைகூறாமல் மன்னிக்கிறான். வசந்தி சிறை செல்கிறாள். சிறையில் சில பணிகளைக் கவனித்துக்கொண்டு அவள் வாழ லாம் என அண்ணாமலை உறுதியளிக்கிறான்.

2. பாத்திரங்களின் பண்பியல் கொள்கைகள்

காயம் நாவலின் கதைமாந்தர்கள்: 1. அண்ணாமலை, 2.அண்ணாமலையின் தந்தை வேதாசலம், 3. தாயார் பார்வதி, 4. வசந்தி, 5. பெண்களை விலைக்கு வாங் கிப் பாலியல் தொழில் நடத்தும் கௌரி, 6. சோமன், 7. வசந்தியின் தந்தையார் நரசிம்மபட்டர், 8. வசந்தி யின் தோழியர். இப்பாத்திரங்களை இருவகையினரா கப் பிரிக்கலாம்: 1. ஆசிரியர் சமூகத்திற்குக் கூற வந்த கருத்தின் அடிப்படையில் நற்குணமுடையோர், 2. அவர்களுக்கு எதிர்நிலையிலுள்ள தீக்குணமுடை யோர். ஆண்களிலும் பெண்களிலும் இவ்விருகுணம் உடையோரையும் காணமுடிகிறது.

நற்பண்பும் அழகியல் சிந்தனைகளும்

அண்ணாமலை

அண்ணாமலை இக்காலகட்டத்தில் காணற்கரிய பாத் திரமாகப் படைக்கப்பட்டுள்ளான். அவன் தோற்றம் கண்டு நரசிம்மப்பட்டருடன் ஆச்சாரியர் ஒருவர், ***ஆஹா ... மாப்பிள்ளைப் பையன்னா இப்படியல்லவோ இருக்கணும்...என்ன உயரம் . . . என்ன நிறம் ... என்ன அழகு . . . (ப.45)*** எனத் தொடர்ந்தார்.

சோமனும் வசந்தியும் சென்னை புறப்படும்போது அண்ணாமலை, தன் திருமணம் நடக்காததை மறந்து அவர்களுக்குக் கூறும் அறிவுரை வியக்கத்தக்கது.

நல்லது சோமன், உங்களை நம்பி வசந்தி வந்திருக்காங்க. தனக்குக் கெடைக்க இருந்த வசதியான வாழ்க்கையைவிட, தான் விரும்புற காதலன்தான் பெரிசின்னு வந்திருக் காங்க. முழுக்க உங்களை நம்பி அந்தப் பொண்ணு வர்றாங்க. அவுங்கள நல்ல முறையில் நீங்க வாழ வைக் கணும். எந்தக் குறையும் வசந்திக்கு இல்லாமப் பாத்து கிங்க... தன்னை நம்பி வந்த பொண்ணை எவன் கடைசி வரை கண்ணியமா வாழவைக்கிறானோ அவன்தான் ஆம்பளை...புரியுதா... (ப.64) என்று கூறி அவர்களை அண்ணாமலை வழியனுப்பி வைக்கிறான். அண்ணா மலையை வசந்தியும் சோமனும் அவனைப் புகழ் கின்றனர்.

தயவு செஞ்சு ரெண்டு பேரும் என்னைப் புகழ்ந்து பேச றதை விட்டுவிட்டு வாழ்க்கையிலே முன்னுக்கு வரப் பாருங்க...அவர்கள் செலவுக்காகப் பத்தாயிரம் ரூபாய் பணமும் அண்ணாமலை கொடுத்தனுப்புகிறான்(ப.65).

இதுபோன்றே பாத்திரங்களின் தோற்ற அழகும், நற் பண்புகளும் நாவல் முழுவதும் பரவிக்கிடக்கின்றன. இதனை ஒரு கொள்கையாகவே ஆசிரியர் கொண் டிருந்தார் எனலாம்.

அண்ணாமலைக்கு வசந்தி கிடைக்காதபோதும் அத் திருமணத்தை அவனே நடத்திவைத்ததை ஆசிரியர், ***இதோ அண்ணாமலையே மங்கல நாணினை புன்சிரிப் புப் பூத்த முகத்துடன் சோமனிடம் எடுத்துக்கொடுத்தான். அவன் வசந்தி கழுத்தில் மூன்று முடிச்சுக்களைப் போட்டான் (ப.62)*** என்கிறார். இவையாவும் அண்ணாமலையின் உயர் பண்பு சார்ந்தவை.

கல்வியறிவுடையவள், நாகரிகமானவள், நயம் தெரிந்த வள், உயர்ந்த குடும்பத்தில் வளர்ந்தவள், அவளுக்குப் பிரெஞ்சுப் படிக்கத் தெரியும். சில நேரங்களில் கொஞ்சம் அதிகமாய்க் குடித்துவிடுவாள். ஆனால் ஒருபோதும் நிதானம் தவறியதில்லை. ரொம்ப நல்ல பெண் (ரா. கிருஷ்ணையர், ப.127) என்று *புத்துயிர்ப்பு* நாவலில் நல்ல பண்புள்ள பாத்திரம் குறிக்கப்படுகிறது. இது தமிழ்ப் பாத்திரங்களுடன் ஒப்பிடத்தக்கது.

வசந்தி

காயம் நாவலின் கதைத்தலைவி வசந்தி அழகும் இளமையும் இணைந்த இனியவளாகப் படைக்கப்பட் டுள்ளாள். ஆசிரியர் பல இடங்களில் இவளின் தோற் றப் பொலிவைக் கதையோடு இணைத்துக் கூறியுள் ளார். இவள் சமூகம் சார்ந்த பண்புக்கேற்பப் படைக்கப் பட்டுள்ளாள். ***ஸ்ரீரங்கத்து அய்யங்கார் பொண்ணு...பேரு வசந்தி...பாலாடை மாதிரி கலரு... கருமேகம் கவிழ்ந்து படுத்த மாதிரி அடர்த்தியான கூந்தல்...சங்குக் கழுத்து ... அவளோட கையழகுக்கும், காலழகுக்கும் கனகாபிஷேகமே நடத்தலாம்...அது மட்டுமில்லே... கௌளரி அக்கா...அவளை உரிச்சுப் பாத்தாப் பௌர்ணமி நிலா கூடப் பொறாமைப் படும்...இந்த அழகு நமக்கு இல்லியேன்னு (ப.93)*** என்று வசந்தியின் கணவன் சோமன் தன் மனைவி அழகு பற்றிக் கூறிக் கௌளரியிடம் விலை பேசுகிறான். இவ் வாறே, உருவ அழகு சில பாத்திரங்களுக்குக் கூறப் படுகிறது.

வசந்தி சோமனைக் காதலிக்கிறாள். அவள் தந்தை அண்ணாமலைக்குத் திருமணம் பேசி முடிக்கிறார். ***வசந்தி அதனை ஏற்கவில்லை. வசந்தியின் தந்தை அவளைக் கடுமையாகத் தாக்கிப் பேசுகிறார். வசந்தியின் மனத்துய ரம் வெளிப்படுத்தப்படுகிறது (ப. 42).***

வசந்தியை மணந்துகொண்ட சோமன் அவளைப் பம் பாயில் கௌளரியிடம் விற்றுவிட்டு அவளுக்குத் தெரி யாமல் வெளியேறி விடுகிறான். கௌளரி வசந்தியை அடைத்துவைக்கிறாள். இப்போதும் வசந்தியின் துயரம் வெளிப்படுகிறது. ***இன்றிலிருந்து வசந்தி விலைமகளாகப் பல பேருக்கு மனைவியாகனும் (ப.107)*** என்ற கௌளரி யின் சொற்கள் வசந்தியைத் துளைத்தெடுக்கின்றன. அவளிடம் ஆண்கள் வந்துபோகின்றனர். இதுவே வாழ்க்கையாக மாறுகிறது. பணம் சேர்கிறது. சோமன் மீது சினமுற்று, சமயத்தை எதிர்நோக்கியுள்ளாள்.

அண்ணாமலையின் நற்குணத்தை எண்ணி வியக்கி றாள். அவன் உயர்பண்பு ஆடவர் சமூகத்திற்கு எடுத் துக்காட்டாக இருக்குமாறும் அரிய இளைஞனாகப் படைக்கப்பட்டுள்ளான். அதற்கு வசந்தியின் கூற்றுக் கள் பல இடங்களில் சான்றுகளாக அமைகின்றன.

வசந்தியின் தாழ்விலும் உயர் பண்புகள்

கௌளரியின் ஆணைப்படி தம் உடலை விற்கும் பெண்களின் கூட்டத்திற்கு வசந்தி தலைவியாகிறாள். மாதந்தோறும் அவர்களுக்குரிய ஊதியம் கிடைக்கு மாறு செய்கிறாள். ஓய்வூதியம் தரப்படுகிறது. இத் தொழிலில் ஈடுபடும் அனைத்துப் பெண்களின்வழிப் பிறரையும் இத்தொழிலிருந்து காப்பாற்றுகிறாள். இப் பொழுது அனைத்துப் பொறுப்புகளும் வசந்தியின் கையில் மாறுகிறது. கௌளரி போன்றவர்கள் இல்லா மல் செய்யவும் இத்தகு பெண்களின் வறுமை போக்க வும் பாடுபடுகிறாள்.

சோமன் வசந்தியின் விடுதிக்கு வருவதும் அவள் பேசியதும், கொலை செய்ததும் சமூக எடுத்துக்காட் டுகளாக நிற்கின்றன.

***கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர் (குறள்.550)*** என்ற நீதி யின்படி வசந்தி நடந்துகொண்டாள் என மதிப்பிடு வது பொருத்தமாகும். சமூகத் தீங்கைக் களைவதே இப்பாத்திரப் படைப்பின் நோக்கம். நிலத்து விளைந்த பயிரில் ஒட்டியுள்ள களையைப் போக்குவது உழவன் கடமை என்பதுபோலப் பெண்களுக்குக் கடுமையான தீங்கு செய்து அவர்களை அழிப்போரை அழித்தே ஆக வேண்டும் என்பதற்கு வசந்தி எடுத்துக்காட்டு.

இவையாவும் முடிந்தன. அண்ணாமலையை நேரில் மன்னிப்புக் கேட்கிறாள் வசந்தி (ப.88). அப்போது, ***என் ஒவ்வொரு பிறவியிலும் உங்கள் பாதத்தை என் கண்ணீராலே கழுவனும். அப்போதான் நான் நெஞ்ச பாவம் போகும். தெய்வச் சந்நிதியிலே போய் நான் அழ***

வேண்டியதில்லை. ஏன்னா... அந்தத் தெய்வமே என் னைத் தேடி வந்திருக்கு. இனி என்னோட பாவம் மன் னிக்கப்படும் ... (ப.88).

இது நடைமுறையில் காணற்கரிய நிகழ்வாகப் புனை யப்பட்டுள்ளது. இத்தகைய ஆண்களும் பெண்களும் உணர்ந்து வாழக்கூடிய வழிமுறையாகும் இது.

தீப்பண்புகள்

காயம் நாவலில் சில பாத்திரங்கள் தீப்பண்புடையன. சமூகத்தில் தீய சக்திகள் இயலாதவர்களையும் எளி யோரையும் வாட்டிவதைப்பதை உணர்த்துவதாக இப் பாத்திரப் புனைவு உள்ளது. பெண்களை விலைக்கு வாங்கி, ஏழைப் பெண்களை ஏமாற்றிப் பாலியல் தொழில் செய்து பிழைத்துவருகிறாள் கௌரி. இவளின் இத்தீயபோக்கினால் நல்ல பெண்கள் சிலரும் கெட்டு விடுகின்றனர். அவர்கள் வாழ்ந்த இல்லற வாழ்க்கை யும்நாசமாகிறது. அவர்களுள் ஒருத்தி வசந்தி. அவள் கணவன் சோமன் கௌரியிடம் வசந்தியை விற்று விடுகிறான். வசந்திக்குத் தெரியாமல் அவன் வெளி யேறிவிடுகிறான். கௌரி அவளை நடத்திய முறையை ஆசிரியர் புலப்படுத்தும் சில தருணங்கள் குறிக்கத் தக்கவை.

வசந்தி வெளியேற வேண்டும் என்று கௌரியிடம் கேட்டபோது கௌரி வெளியிட்ட கடுஞ்சொற்களை ஆசிரியர் இப்படிப்பட்ட மக்களையும் கொண்டதாக இச்சமூகம் இருக்கிறதே என்று எண்ணி, எதார்த்த நிலையில் கௌரியின் கூற்றை வெளிப்படுத்துகிறார். ***என்னடி புரியல நான் உனக்கு விஞ்ஞான பாடமா நடத்த முடியும்*** என்று சொன்னவள், ***ஆமாங்கண்ணு... நீ காத லிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டியே சோமன், அவன் அப்பன், ஆயி இல்லாத அனாதைப் பயல். எப்படியோ எச்சிலை பொறுக்கித்தின்னு, பிக்பாக்கெட் அடிச்சு, கள்ளச் சாராயம் வித்து உன்னை மாதிரிப் பொண்ணுங்கள ஏமாத் திக் கூட்டிக்கிட்டு வந்து, என்ன மாதிரிப் புரோக்கர் கிட்டே வித்து இன்னைக்கு அவனும் ஒரு ஆளாயிட்டான். இது பாம்பே. நீ இருக்கிறது ரெட் லைட் ஏரியா. உனக்கு எஜமானி நான். என்னை மீறி நீ எங்கேயும் போக முடி யாது. ரௌடிகள் முதல் போலீஸ் வரைக்கும் எனக்குப் பழக்கம். புரியுதாடா செல்லக்குட்டி. ஒரு லட்சம் ரூபாய்க் குச் சோமன் உன்னை வித்துப் போட்டு ஓடிப் போயிட் டான். இனிமே நீ ஆக வேண்டியதைப் பாரு (ப.106)*** என்றாள். நடுநடுங்கிப்போன வசந்தி மனதுக்குள் குமுறி னாள். இறுதியில் ***வெறி கொண்டவள்போல் எழுந்து வசந்தியின் கழுத்தில்கிடந்த தாலியைப் பிடுங்கி எடுத்தாள் (ப.108).*** இவ்வாறு கதையின் பல இடங்களில் கௌரி யின் வன்மச் செயல்கள் குறிப்பிடப்படுகின்றன.

கௌரியின் அதிகாரத்தில் சிக்கிக்கொண்ட பெண்கள் இவ்வாறே ஒவ்வொரு வகையில் சீரழிந்தனர். அவர்கள் பெருங்கூட்டமாக இருந்தனர். அவர்களின் பாலியல் தொழில் வரும் வருமானத்தில் பெரும் பணக்காரி யாகவும் கௌரி மாறினாள்.

சோமன்

சோமன் வசந்தியைக் காதலிப்பதாகப் பொய் சொல் லிக் கல்யாணம் செய்துகொள்கிறான். அவனைப் பற்றி ஆசிரியர், ***பெண்களிடம் கவர்ச்சியாகப் பேசித் தன் வலையில் விழவைத்து, தன் இச்சை முடிந்ததும் பம்பாய்த் தரகர்களிடம் விற்று விடுவான். இவனுடைய நல்ல நேரம், இன்னும் காவல்துறையில் பிடிபடவில்லை, இந்த முறை வசந்தி வசமாக மாட்டிக்கொண்டாள் (ப. 96)*** என்கிறார். சோமன் வசந்தியைப் பம்பாய்க்கு அழைத்து வந்தது பற்றி ஐயப்பட்டுக் கேட்கும்போது, அவளைஏமாற்றும் முறையில் தந்திரமாகவும் சோமன் பேசுகிறான். ***வசந்திக் கண்ணு...அது ஒண்ணும் இல்லேடா... நமக்குக்கல்யாணம்ஆனதை முன்னிட்டு என் ஃபிரண்ட்ஸ் குடிக்கணும்ன்னு கேட்டாங்க...அதுதான் கொஞ்சம் போட் டுக்கிட்டேன்... இனிமேல் அதைத் தொடவே மாட்டேன் ... உன் மேலே சத்தியம்... இரு இப்பவே போயிக் குளிச்சிட்டு வர்றேன் (ப.97)*** என்று அவன் செய்கை எல்லாவற்றையும் மறைத்துக் கூறுகிறான். அவ்வாறு கூற, அதை வசந்தி நம்பினாள். பொய்யான தீய எண்ணத்துடன் சோமன் வசந்தியுடன் கட்டிலில் படுத் திருந்தான். அவர்கள் படுக்கையை ஆசிரியர், ***கட்டி லுக்கு மேலே ஓர் ஓவியம். அதில் - ஒரு வெறிபிடித்த ஓநாய் வெள்ளாட்டுக் குட்டி ஒன்றின் கழுத்தைக் கடித் துக் கொண்டிருந்தது (ப.98)*** என்று எழுதுகின்றார். இவ்வாறு வசந்தியை ஏமாற்றிய இடங்களிலும் கௌரி யிடம்பணம் பேசிய இடங்களிலும் சோமனின் இயல்பு கள் எதார்த்த (realistic) நிலையில் கூறப்பட்டுள்ளன. சமூகத்தில் நடப்பவற்றைப் பார்த்தபடியே ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

எதையும் சாராது அனுபவம் சார்ந்து படைப்பது பற்றி, ***படைப்பாளனோ படைப்போ அவன் சார்ந்திருக்கிற அமைப் பை, கொள்கையை மட்டும் வைத்து அந்தஸ்து பெறுவது இல்லை. மாறாக எந்த ஒரு படைப்பும் அதன் சுய வீரி யத்திலேயே கம்பீரம் கொள்கிறது. பாராட்டுப் பெறுகிறது. இது புரியாததனால்தான் இவர்கள் இலக்கியங்களில் வரும் கதாபாத்திரங்கள்எந்தவித ஆபாசங்களும் அற்ற மரப்பாச் சிப் பொம்மைகளாய் வர்க்கப் பஜனை தாசர்களாய் இருந்துவருகிறார்கள் (சோ.தர்மன், சோ.தர்மன் கதைகள், ப.21)*** என்கிறார் சோ.தர்மன். இக்கருத்துக்குத் தக அமைந்துள்ளது *காயம்*.

முடிவுரை

நாவலாயினும் சிறுகதையாயினும் கதை சொல்லும் திறன் மிகவும் முக்கியமானது. வாசகனை ஈர்க்கும் சூக்குமம், கதை சொல்லியின் வாக்குச் சாதுரியம் முக்கியம். அவ்வகையில் *காயம்* நாவல் பாத்திரங்க ளான சோமன், வசந்தி, கௌரி ஆகியோர் பண்பு கள் பற்றி ஆராய்ந்ததில் பின்வரும் முடிவுகள் பெறப் படுகின்றன:

சோமன் இயல்பிலேயே தான் வாழும் சூழ்நிலையில் செயல்படுகிறான். அவனுக்குப் பணமே பிரதானம்.

வசந்தி ஒரு பழமைவாத (Orthodox) குடும்பத்தில் பிறந்து, தன் சுய விருப்பத்தினை முன்னிலைப்படுத் தியதாலும் பெற்றோர் சொல் கேட்காததாலும் கொடுந்

துயரத்திற்காளாகிறாள். இது ***மூத்தோர் சொல் வார்த்தை அமுதம்*** என்ற முதுமொழிக்குப் பொருந்துகிறது.

வஞ்சகம் வாழ்வைக் கெடுக்கும் என்ற பழமொழிக்கு இலக்கியமாகக் கௌரி படைக்கப்பட்டுள்ளாள். *காயம்* நாவல் சமூகச் சீர்கேடுகளை யதார்த்த முறை யில் வெளிப்படுத்துகிறது.

வசந்தியை உண்மையாக நேசித்த அண்ணாமலை பாத்திரப் பண்பு சமூகத்திற்குத் தேவை என்பது இப் பாத்திரத்தின் யதார்த்தநிலையால் உணர்த்தப்படுகிறது.

துணைநின்ற நூல்கள்

இராசேந்திரன், தி.வெ. *காயம் (ஓர் உண்மைக் காதலின் உணர்ச்சிப் போராட்டம்).* சென்னை: பாவை பப்ளிகேஷன்ஸ், முதற்பதிப்பு, 2005.

கிருஷ்ணையர், ரா. (மொ.ஆ.). லியோ டால்ஸ்டாய், *புத்துயிர்ப்பு* (நாவல்). மாஸ்கோ: முன்னேற்றப் பதிப்பகம், 1979.

சிவசுப்பிரமணியன், ஆ. *இனவரைவியலும் தமிழ் நாவலும்.* சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2014.

சுரேஷ், எம்.ஜி. *சிலந்தி (ஒரு தோற்றநிலை மெய்மை நாவல்).* சென்னை: புதுப்புனல், 2001.

தர்மன், சோ. "முன்னுரை - என்னுடைய கதைகளின் கதை", *சோ.தர்மன் கதைகள்.* சென்னை: மருதா, 2001.

ராமகிருஷ்ணன், எஸ். "முன்னுரை". ப.v. *இடக்கை.* சென்னை: தேசாந்திரி பதிப்பகம், 2019.

ஜெயக்குமார், சி. (ப.ஆ.). *திருக்குறள் மூலமும் உரையும் (பரிமேலழகர் உரை).* சென்னை: அருணா பப்ளிகேஷன்ஸ், 2020.

76ஆம் பக்கத் தொடர்ச்சி

கொடுக்கப்பெண்களோடுஆண்களும் முன்வர வேண் டும் என்பதைத் தம் படைப்புக்களில் வெளிப்படுத்தி யுள்ளார்.

துணைநூற்பட்டியல்

1. கா.விஜயா. பெண் நாவலாசிரியர்களின் பார்வையில் பெண்ணியம். செம்மொழி தமிழில் மகளிர் மாட்சி, மெய்யப் பன் பதிப்பகம், பதிப்பு 2007, புதுத்தெரு சிதம்பரம் 608001. ப :169.

2. இரா.பிரேமா, பெண்ணிய அணுகுமுறைகள், ப :18.

3. தமிழரசி மு.ப., இருபதாம் நூற்றாண்டு பெண் கவிஞர்கள், ப : 44

4. Madras University English Tamil dictionary, p. 379

5. சங்கீதா, ஆண்டாள் பிரியதர்ஷினி நாவல்களில் பெண்ணியம், ஆய்வியல் நிறைஞர், மலர் 2, இதழ் 3, ஜனவரி - 2018, issn : 2454 - 3993, சன்லாக்ஸ் பன்னாட்டு தமிழில் ஆய்விதழ், ப : 208.

6. வெ. முத்துக்களஞ்சியம், தகனம் நாவலில் தலித் பெண்ணியம், சர்வதேச தமிழ் ஆய்வில், Doi : 10.34256/ irjtsll3, vol :3, issue - spl.1.year -2021. Issn : 2582 - 1113. ப :84.

7. ஜெயராணி, ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனைகள், முனைவர் பட்ட ஆய்வேடு, ஜூலை 2017, நெறியாளர் விஜய சாமுண்டீஸ்வரி, கோயமுத்தூர், ப : 117.

8. ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள் வெளி, ப : 99, வெளி, ப : 102.

9. முனைவர். தி.கமலி, பெண்ணிய படைப்பிலக்கியம், பதிப்பு 2006 உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

10. முனைவர் கே.பி.கனிமொழி. கவிஞர் ஆண்டாள் பிரிய தர்ஷினியின் கவியும் கருவும். ப. 33) E -ISSN -2581-7140, VOL 2: ISSUE 1, JULY -2019. International journal of tamil language and literary studies. தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விழ்)

11. Alpiesh gandhi, punit bhojani Analysis of survey on violence against women and early marriage 583. springer.https :// doi.org/ 10.1097/ 51322-021-01578-8

12. சண்முகவடிவு, ஆண்டாள் பிரியதர்ஷினி கவிதைகளில் சமூகப் பதிவுகள். Issn : 2454 - 1990, முத்துக் கமலம் ஆய்வில் பதிப்பு ஆகஸ்ட் 2023, vol : 1, issue -2)

13. ஆண்டாள் பிரியதர்ஷினி, சரஸ்வதியின் ஆயுத எழுத்து, குமரன் பதிப்பகம், ப. 20.

*Here,
in the room of my life
the objects keep changing.
Ashtrays to cry into,
the suffering brother of the wood walls,
the forty-eight keys of the typewriter
each an eyeball that is never shut*

- Anne Sexton

*A voice said, Look me in the stars
And tell me truly, men of earth,
If all the soul-and-body scars
Were not too much to pay for birth.*

- Robert Frost

*And the person you're with,
In that moment you share,
Give them all of your focus;
Be totally there.*

- Pat A. Fleming

*If you can keep your head when all about you
Are losing theirs and blaming it on you,
If you can trust yourself when all men doubt you,
But make allowance for their doubting too;*

- Rudyard Kipling

ISSN 2320-4842

தெய்வச்சிலையாரின் உரைத்திறன்

முனைவர் சீ. மகேசுவரி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை–உயராய்வு மையம்,
தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி, தஞ்சாவூர் 613 002
(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச் சுருக்கம்

செம்மொழித் தமிழ் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த சான்றோர்களுள் உரையாசிரியர்கள் குறிக்கத்தக்கோர் ஆவர். அவர்களின் தொண்டு தனித்துவம் நிறைந்தது. தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதியவர்களுள் தெய்வச் சிலையாருக்குத் தனி இடம் உண்டு. தெய்வச்சிலையாரின் உரைத்திறனைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கம்.

கருவிச்சொற்கள் (Keywords): உரைத்திறன், உரையாசிரியர்கள், தொல்காப்பியம், பாகுபாடு, புணரியல், வினைச்சொல்.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

பதிப்பு வரலாறு

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குத் தெய்வச்சிலையார் எழுதிய உரையை முதன்முதலில் பதிப்பித்து வெளியிட்ட பெருமை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தையே சாரும். கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளைக்கு முதலில் ஒரு ஏடு கிடைத்தது. அந்த ஏட்டின் இறுதியில் *ஆத்திரேய கோத்* எனும் செய்தி இருந்ததால் அதனை ஆத்திரேய கோத்திரத்துப் பேராசிரியர் உரை என்று பதிப்பித்தனர். பின்னர் உ.வே.சாமிநாதையரிடம் இவ் வுரையேடு ஒன்று இருப்பதை அறிந்து, அதனைப் பெற்றார். பின் அந்த ஏட்டிலுள்ள செய்திகளைக் கண்டு, அவற்றிலுள்ள வேறுபாடுகளையெல்லாம் நன்கு ஆராய்ந்து சிலவற்றைப் பிற்சேர்க்கையாக இணைத்து இது தெய்வச்சிலையார் உரைதான் என வெளியிட்ட பெருமை கரந்தைத் தமிழ்ச்சங்கத்திற்கே உரிய சிறப்பாகும்.

கவியரசு வேங்கடாசலம்பிள்ளை

இதன்கண் பல்வகையான பிழைகளும் மலிந்திருத்தல் கூடுமென யான் உணரேனல்லேன்; உணர்ந்தஞ்சேனல்லேன்; அஞ்சி அஞ்சியும் அச்சிட்டது ஒன்றே ஒன்றைக் கருதியதாகும்; அஃதாவது இதில் என் மனமாரச் செய்த ஆக்கல், அழித்தல், திரித்தல் முதலாய செய்கைகள் இலவாகலின், நாளும் நாளும் பட்டொழிந்துவரும் இவ்வேட்டின் ஒரு நேர்பிரதியாக இது நின்று. பிற்காலத்து அச்சிடும் பெரியார்கட்கு ஒருவாறு உதவி செய்யும் என்று எண்ணியதொன்றே யாகும். ஒரு பெரிய நூலை அச்சிட்டதொரு பிழையினை இது பற்றியேனும் தமிழுலகம் பொறுத்திடுவதாக என்று தம் பதிப்புரையில் விரிவாக விளக்கியுள்ளார்.

சொற்பொருள் விளக்கம்

தெய்வச்சிலையார் என்பது திருமாலுக்குரிய பல பெயர்களில் ஒன்றாகும். இதனை,

பவ்வத் திரை உலவு புல்லாணி கைதொழுவேன்
தெய்வச் சிலையார்க்கு எஞ்சிந்தை தோல் செப்புமினே என்று திருமங்கையாழ்வார் திருப்புல்லாணியில் வீற்றிருக்கும் திருமாலைக் குறிக்கிறார். தெய்வச்சிலையார் என்பது இடைக்காலத்தில் மக்கள் பெயராக வழங்கியது. தேவச்சிலையான் என்று கல்வெட்டுகளில் அப்பெயர் வருகின்றது. ***தெய்வச்சிலையார் விறலிவிடுதூது, தெய்வச்சிலைப் பெருமாள் வாகனமாலை, தெய்வச்சிலையான் திருப்புகழ், தெய்வச்சிலையான் வண்ண விருத்தம் ஆகியவை திருமாலைப் பற்றிய நூல்களாகும்*** என்று விளக்கம் அளிக்கிறார் மு.வை.அரவிந்தன் (ப.226).

உரைத்திறன்

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரைகண்ட சான்றோர்களில் தெய்வச்சிலையாரும் ஒருவர். இவர் உரை நுட்பமும் எளிமையும் நிறைந்தவை. சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்ற முறையில் ஆசிரியர் ஒவ்வோர் இயலின் இறுதியிலும் உரையினது அளவை (எழுத்துக்களால்) குறிப்பிடுகின்றார். கிளவியாக்கத்தின் இறுதியில், இவ்வோத்தினுள் சூத்திரமும் உள்பட்ட உரையினது அளவு கிரந்த வகையான் ஐந்நூற்று நாற்பது என்னும் வேற்றுமையியலின் இறுதியில் முந்நூற்று முப்பது என்றும் அளவு கூறுகின்றார்.

சொல்லதிகாரத்திற்கு உரையெழுதிய தெய்வச்சிலையார் தம் உரையில் மற்ற உரையாசிரியர்களையோ, பிறர்

கருத்தையோ குறிப்பிடவில்லை என்பதை,

மன்னாப் பொருளும் அன்ன இயற்பே (நூ.32) என்னும் நூற்பா மூலம் உணரலாம். மன்னாப் பொருள் என்பது இல்லாத பொருளைக் குறிப்பதாக இளம்பூரணர் குறிப்பிடுகின்றார். ஆனால் தெய்வச்சிலையார் மன்னாப்பொருள் என்பதற்குப் பொருந்தும் பொருள், பொருந்தாப் பொருள் என்று உரை எழுதியுள்ளார். இதனால் இளம்பூரணர் கூறிய விளக்கத்திற்கு மாறாக உரை எழுதினாலும், அதில் ஆசிரியர் பெயரையோ, கருத்தையோ சொல்லி மறுக்காமல் தன் கருத்தை மட்டுமே கூறியிருப்பது சிறப்பாகும்.

*பெண்மை அடுத்த மக என் கிளவிக்கு விளக்கம் எழுது கையில் விளையாடு பருவத்தில் பெண் மகளைப் பெண் மகள் என்றல் பண்டையோர் வழக்கு **(நூ.159)*** என்கிறார். சேனாவரையர்இச்சொல் வழங்குமிடத்தைக் குறிப்பிடுகின்றார். தெய்வச்சிலையார் காலத்தில் அச்சொல் வழக்கில் இல்லாததால் இவ்வாறு கூறுகின்றார். இதனால் சேனாவரையர்க்கும் தெய்வச்சிரையார்க்கும் உள்ள கால இடைவெளியை அறிந்துகொள்ளலாம். எச்சப்பெயர் என்பது பெயரெச்சம் என மொழி மாறி நின்றது (நூ.201) என்பதும் இவரது கருத்தாகும்.

சாலும் என்ற சொல்லை இவர் போதும் என்று பொருளுரைக்கின்றார். *யானும் என் எஃகமும் சாலும், நீயும் நின்படைக்கலமும் சாறீர், அவனும் அவன் படைக்கலமும் சாலும் **(நூ.41)*** என எடுத்துக்காட்டுகின்றார்.

*செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் **(நூ.2)*** என்ற சூத்திரத்திற்கு இவர் கூறும் விளக்கம் புதுமையானது. அதாவது *செப்பு நான்கு வகைப்படும். அவை துணிந்து கூறல், கூறிவிட்டு மொழிதல், வினாவி விடுத்தல், வாய் வாளாதிருத்தல் என்பதாகும். இதில்,*

துணிந்து கூறல் - தோன்றியது கெடுமோ என்ற வழி, கெடும் எனவும்,

கூறிவிட்டு மொழிதல் - செத்தவன் பிறப்பானோ என்ற வழி, பற்றறத் துறந்தானே பிறனோ எனவம்,

வினாவி விடுத்தல் - முட்டை மூத்ததோ பனை மூத்ததோ என்ற வழி எம் முட்டைக்கு எப்பனை எனவும்,

வாய் வாளாமை - ஆகாயப்பூ நன்றோ தீதோ என்றார்க்கு உரையாடாமை எனவும் விளக்கம் தருகின்றார்.

*வேற்றுமை என்பது பொருள்களை வேறுபடுத்தினமையால் பெற்ற பெயர் என்னை வேறுபடுத்தியவாறு எனின், ஒரு பொருளை ஒருகால் வினை முதலாக்கியும், ஒருகால் செயப்படுப் பொருள் ஆக்கியும், ஒருகால் கருவியாக்கியும், ஒருகால் ஏற்பது ஆக்கியும், ஒருகால் நீங்க நிற்பது ஆக்கியும், ஒருகால் உடையது ஆக்கியும், ஒருகால் இடம் ஆக்கியும் இவ்வாறு வேறுபடுத்தது என்க **(நூ.60)*** எனத் தெளிவுபடுத்துகின்றார்.

எடுத்துக்காட்டுகளில் புதுமை

இவர் பல இனிய எடுததுக்காட்டுக்களைத் தம் உரையில் மிகப் பொருத்தமாகக் கையாண்டுள்ளார். முத்தொள்ளாயிரம் பாடல்களைப் போன்று நயமான பல வெண்பாக்கள் இவர் உரையில் இடம்பெற்றுள்ளன.

வேற்றுமை மயங்கியலில் (நூ.20),

காதலியைக் கொண்டு கவுந்தியொடு கூடி
மாதிரிக்குக் காட்டி மனையின் அகன்றுபோய்க்
கோதில் இறைவனது கூடற்கண் கோவலன் சென்று
ஏதம் உறுதல் வினை என்று சிலப்பதிகாரக் கதை நிகழ்ச்சியை மிகச் சுருக்கமாகக் கூறும் வெண்பா ஒன்றே இவர் உரைச்சிறப்பிற்குச் சிகரமாகும்.

எச்சவியலில், 16 ஆம் நூற்பா உரையில், ***உலகம் உவப்ப*** என்று தொடங்கும் திருமுருகாற்றுப்படையின் முதல் ஆறு அடிகளுக்குச் சிறந்த முறையில் உரை எழுதியுள்ளார்.

எளிய நடை

மற்ற உரையாசிரியர்களின் நடையைவிட இவரது உரைநடை அனைவரும் புரிந்துகொள்ளுமளவிற்கு எளிமையானதாகவும், உயிரோட்டம் உள்ளதாகவும் அமைந்திருப்பது மற்றொரு சிறப்பாகும்.

காலம் என்பது முன்னும் பின்னும் நடுவும் ஆகி என்றும் உள்ளதோர் பொருள், உலகம் என்பது மேலும் கீழும் நடுவும் ஆகி, எல்லா உயிர்க்கும் தோன்றுதற்கு இடமாகிய பொருள். உயிர் என்பது சீவன். உடம்பு என்பது மனம் புத்திஆங்காரமும் பூத தன்மாத்திரையுமாகி வினையினாற் கட்டப்பட்டு எல்லாப் பிறப்பிற்கும் உள்ளாகி நிற்பதோர் நுண்ணிய உடம்பு. இதனை மூலப்படுத்தி எனினும் ஆம். பால்வரை தெய்வம் ஏன்பது ஆணும் பெண்ணும் அலியும் ஆகி நிலைமையை வரைந்து நிற்கும் பரம்பொருள். வினை என்பது ஊழ். பூதம் என்பது நிலம் நீர் தீ வளி ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதம். ஞாயிறு என்பது தீத்திரளாய் உலகிற்கு அருள் செய்வது. சொல் என்பது எழுத்தினான் இயன்று பொருள் உணர்த்துவது. அச்சொல்லின் இயன்ற மந்திரம் விடம் முதலாயின தீர்த்தலின் தெய்வம் ஆயிற்று (நூ.55) என்பது இவரது எளிய நடைக்குச் சிறந்த சான்றாகும்.

நாகரிகமும் பண்பாடும்

தெய்வச்சிலையார் காலத்தில் அறச்சாலை இயற்றுதல், குளம் அமைத்தல் போன்ற அறச்செயல்கள் நடைபெற்றன என்பதை ***யாற்றினது கரைக்கண் நின்ற மரத்தை அறச்சாலை இயற்றுதற்கு ஊரினின்றும் வந்து மழுவினாலே வெட்டினான் சாத்தன் (நூ.62), காவோடு அறக் குளம் தொட்டான் (நூ.71)*** என்ற எடுததுக்காட்டுக்களால் அறிநது கொள்ளலாம்.

நெல்லாதல், காரணமாதல் ஒருவன் கொடுப்பக் கொண்ட வழி, இன்றைக்குச் சோறு பெற்றேன் என்றும்; அவ்வழிச் சோற்றுக்குக் காரணமாகிய நெல்லும் காணமும் (காசு) சோறு என ஆகு பெயராயின (110) என்று இவர் கூறுவது அவர் காலத்தில் கூலியாக நெலலும் காசும் தரும் வழக்கம் இருந்ததையும் அறிய முடிகிறது.

இவ்வூரார் எல்லாம் கல்வியுடையார் (நூ.150) என்பதால் கற்றோர் நிரம்பிய ஊர்கள் அக்காலத்தில் பல இருந்ததை அறிந்துகொள்ள முடிகிறது.

இவர் உரையில் நிறைய நெசவுத்தொழில் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன என்பதனை, ***நெய்தான் என்ற வழி, நெய்யப்பட்ட பொருளும், நெய்வதாகிய தொழிலும், நெய்தற்குக் கருவியும், நெய்தற்குக் காலமும், நெய்தற்கு இடமும், நெய்தற்கு கருத்தாவும், அதனைக் கொள்வானும்*** என்பதன்வழி அறிந்துகொள்ளலாம்.

வரலாற்றுச் செய்தி

தெய்வச்சிலையார் உரைவழி அரிய செய்தி ஒன்று கிடைக்கின்றது. அதாவது கல்வெட்டுகள் குறிக்கும் கொல்லம் ஆண்டு பற்றித் தெரிந்துகொள்ள இவரது உரை உதவுகின்றது.

இடைக்காலத்தில் சேர நாட்டின் ஒரு பகுதியான (பழைய) கொல்லம் கடல்கோளால் அழிந்தது. பிறகு கடலின் பெயர்ச்சியால் புதிய நிலப்பகுதி தோன்றியது. புது நிலப்பகுதிக்கு மக்கள் கொல்லம் என்றே பெய ரிட்டனர். புதிய சொல்லம் பகுதியில் மக்கள் குடியே றிய காலம் முதல் கொல்லம் ஆண்டு கணக்கிடப் பட்டுவருகின்றது. இதனை,

கூபகமும் கொல்லமும் கடல் கொள்ளப்
படுதலின் குமரியாற்றிற்கு வடகரைக்கண்
அப்பெயரானே கொல்லம் எனக் குடியேற்றினர் என்ப தால் கல்வெட்டுக்கள் குறிக்கும் கொல்லம் ஆண்டு பற்றிய நிகழ்வைத் தெளிவுபடுத்துகிறார்.

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம் என்பதற்கு இவர் தந்துள்ள விளக்கம் இன்றைய மொழியியல் அறிஞர் களைப் பெரிதும் மகிழ்விக்கின்றது. உரையாசிரியர் களில் சிலர் சோழ நாடே செந்தமிழ் நிலம் என்பர்; வேறு சிலர் பாண்டிய நாடே என்பர். ஆனால் தெய் வச்சிலையார் வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம் முழுவதும் செந்தமிழ் வழங் கும் நிலம் என்று கூறிப் பெருமைப்படுத்துகின்றார்.

முடிவுரை

இங்ஙனம், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு தெய்வச்சி லையாரின் உரை உற்ற துணையாகச் சிறப்புற்றிருப்ப தையும், உரை எழுதும்போது செறிவும், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையும், சொற்களை ஆராய்ந்து எடுத்து எளிமையாகப் பயிலும் வகையில் அமைத்துள்ள திறனும் பலரும் போற்றத்தக்கது.

துணைநூற் பட்டியல்

அரவிந்தன், மு.வை. *உரையாசிரியர்கள்.* சென்னை: பாரி நிலையம், 1992.

அருணாசலம், மு. *தமிழிலக்கிய வரலாறு 11ஆம் நூற்றாண்டு.* மாயூரம்: கற்பகா புத்தக நிலையம், 1971.

ஆரோக்கியநாதன், எஸ். தொல்காப்பிய மொழியியல். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2009.

இளம்பூரணர். *தொல்காப்பியம் எழுத்து, சொல். பொருள் மூலமும் உரையும்.* சென்னை: சாரதா பதிப்பகம், 2010.

சிவலிங்கனார், ஆ. *தொல்காப்பியம்-சொல்லதிகாரம் இடையி யல்(உரைவளம்).* சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1986.

சோமசுந்தரம் பிள்ளை, ம.நா. "தெய்வச்சிலையார் உரை", *தமிழ்ப்பொழில்,* துணர் 5, மலர் 6, 1929, ப.231.

தேவநேயப்பாவாணர், ஞா. *தமிழ் இலக்கிய வரலாறு.* சென்னை: ஸ்ரீசெண்பகா பதிப்பகம்.

பழனியப்பன், வி. *புலமைமிகு தெய்வச்சிலையார்.* சிதம்பரம்: சிந்து பதிப்பகம், 2002.

பாலசுந்தரம், சு. *இருபதாம் நூற்றாண்டிற்கான தமிழிலக்கணம்-சொற்படலம்.* தஞ்சாவூர்: தாமரை வெளியீட்டகம்.

முத்துச்சண்முகன் மற்றும் வீராசாமி, தா.வே. (ப.ஆ.). "முன்னுரை", *தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணை யியல் உரைவளம்* மு.அருணாசலம்பிள்ளை (ஆய்வுரை), (இளம்பூரணர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலை யார்). மதுரை: மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை வெளியீடு, 1975:iii-vi.

வேங்கடாசலம், அரங்க. "பதிப்புரை" (பக்.7-8), *தொல்காப்பியம் சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை.*

58ஆம் பக்கத் தொடர்ச்சி

நிலைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மனித வாழ்க் கைக்கான ஒழுங்கு நெறிகள் விளக்கப்பட்டுள்ளன.

லிபிடர் எனும் பாலியல் உணர்வு சங்க அகப் பாடல் முழுக்கக் காணப்படினும் அது முறைப்படுத்தப்பட்ட பாலியல் உணர்வாகவே அமைந்துள்ளது. உயர்ந்த வாழ்வியலைப் பரிந்துரைப்பதாகச் சங்க அகப்பாடல் கள் அமைந்துள. நற்றிணையின் பெரும்பகுதி இணை விழைவு விழுமியங்களைக் காட்சிப்படுத்துகிறது.

தலைவன், தலைவியின் மாண்புகளும் மேம்பாடு டையதாக நற்றிணை விளக்குகிறது. புறவிழுமி யங்களிலும் அரசன் தன் நாட்டு வளத்தைச் செழிப் புடன் காத்து வந்ததற்கான சான்றுகள் நற்றிணையில் உள்ளன.

நெறித்துணை நூல்கள்

சங்கச் செவ்வியல் பனுவல்களில் அகமரபு-லோ. ஜெயலட்சுமி

Libido -A collection of Erotic poetry -FM. George

மகடூஉ முன்னிலை (பெண் புலவர் களஞ்சியம் ஆதிமந்தி முதல் ஆண்டாள் வரை)-தாயம்மாள் அறவாணன்

தமிழ்க் காதல் - வ.சுப. மாணிக்கம்

பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக் கமும் - ராஜ் கௌதமன்

தொல்காப்பியம் பொருளதிகாரம் (அகத்திணையியல்) - இளம்பூரணம் உரை

கோவிலூர் மடாலய ஆதினம் நற்றிணை மூலமும் உரையும்.

ISSN 2320-4842

திரிகடுகம் காட்டும் பெண்மை

கோ. கமலா

பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர் (Ref.No. 16451/Ph.D.K8/Tamil/Part Time/November 2018/Confirm/Dt: 01.03.2022)

நெறியாளர்: **முனைவர் க. செந்தில் ராஜா**

உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி)

பெரம்பலூர் 621 220 (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச் சுருக்கம்

சங்கமருவிய காலத்தில் எழுந்த பதினெண்கீழ்க்கணக்கில் உள்ளடங்கிய திரிகடுகம், பெண்களின் இயல்புகள், வகைகள், விருந்தோம்பல் பண்பு, அடிமையாக்கப்படுதல், முரண்பட்ட கருத்துக்கள், பெண்ணுக்குப் பயனற்றவை ஆகியவற்றைப் பதிவுசெய்துள்ளது. இக்கட்டுரையில் திரிகடுகம் காட்டும் பெண்மை பற்றிய கருத்துக்கள் ஆராயப்படுகின்றன.

கருவிச்சொற்கள் (Keywords): திரிகடுகம், பயனற்றப் பொருள், பெண் அடிமை, பெண் இயல்பு, பெண் வகைகள், பெண்ணும் விருந்தோம்பல் பண்பும், முரண்.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

கடுக்கும் சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்றும் உடல்நோய் தீர்க்கும் மருந்துப் பொருள்கள். திரிகடுகம் நூலின் ஒவ்வொரு பாடலிலும் அமைந்துள்ள மக்களுக்கு நலன் தரும் மூன்று பொருள்கள் மக்களின் உள நோயைப் போக்கி உண்மையான மகிழ்வைத் தரும். இத்தகு சிறப்புமிக்க திரிகடுகம் காட்டும் பெண்மை பற்றிய பதிவுகள் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

ஆய்வு நோக்கம்

அடிமை நிலையிலிருந்து விடுபட்டு இன்றைய சூழலில் பெண்கள் அறச்செயல்களை மேற்கொள்ளத் திரிகடுகம் சுட்டும் நெறிகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திரிகடுகம்

திரிகடுகம் = திரி+கடுகம். திரி=மூன்று, கடுகம்=உறைப்பு, கார்ப்பு. திரிகடுகம் என்பதற்குச் சுக்குத் திப்பிலி மிளகு எனப் பிங்கல நிகண்டு கூறுகிறது (நூ.352). ஆக இம்மூன்றும் சேர்ந்த மருந்துக்குத் திரிகடுகம் என்று பொருள். இந்நூலின் ஆசிரியர் திருநெல்வேலியைச் சார்ந்த *திருத்து* என்னும் ஊரினரான நல்லாதனார். திரிகடுகம் மும்மூன்று ஒழுக்கமுறைகளை ஒன்று சேர்த்து ஒவ்வொரு வெண்பாவில் அமைத்து நூறு வெண்பாக்கள் கொண்டதாகப் பாடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலும் மும்மூன்று உறுதிப் பொருட்களை மக்களுக்கு உரைத்து உள்ளத்து இருளைக் கடிந்து இம்மை, மறுமை இன்பங்களைத் தருவதாக அமைந்துள்ளது.

பெண் இயல்பு

பெண்மை என்ற பதத்திற்குப் ***பொதுவாகப் பெண்களிடம் இயல்பாக இருப்பதாக நம்பப்படும் (மென்மை, நளினம் போன்ற) இயல்புகள் என்றும் ஆங்கிலத்தில் Feminity, Womanliness, Womanhood என்றும் பொருள் குறிப்பிடப்படுகிறது (எஸ்.ராமகிருஷ்ணன், ப.1010).*** பெண் மெல்லிய சொல், அழகான தோள்களை உடையவள் எனத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பெண்ணுக்கு அணிகலன் நாணம் உடைமை என்பதை,

கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம் காமுற்ற
பெண்ணுக் கணிகலம் நாணுடைமை (திரி.52:1-2) என்கிறார் நல்லாதனார். கண்களுக்கு கண்ணோட்டமும், பெண்ணுக்கு நாணமும் சிறப்பானது. தொல்காப்பியர் நாணுடைமையை,

அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்குரிய என்ப (தொல்.பொருள்.கற்பு., நூ.8) என்று அச்சம், நாணம், மடன் ஆகியன பெண்ணுக்குரிய மூன்று இயல்புகளைக் குறிப்பிடுகிறார். பெண்ணுக்குரிய நாணம் அமைந்தவள் தன் கணவனது குறிப்பின்வழி நடப்பது சிறப்பாக எண்ணப்படுகிறது.

கீழ்க்கணக்கு அறநூல்களின் வரிசையில் அழகு பெற் றிலங்குவது நான்மணிக்கடிகை. இதனை இயற்றியது விளம்பிநாகனார். இவர் பாடலொன்றில்,

. . .   . பேணிய
நாணின் வரைநிற்பர், நற்பெண்டிர் (90) என்ற தொடர் நன்மகளிர் விரும்பப்பட்ட நாணத்தின் எல்லையில் நிற்பர் (ப.86) எனக் குறிப்பிடுகின்றது. இதனையே க.ப.அறவாணன், ***3. நல்ல பெண்களிடத்து நாணம் குடியிருக்கும்***(ப.297) என்று தெளிவுரையில் கூறுவர்.

பெண் வகைகள்

கற்புடைய பெண், பரத்தைப் பெண் எனப் பெண்ணை இருவகைப்படுத்துகிறது திரிகடுகம்.

கற்புடைய பெண்

நற்குண செய்கைகள் உள்ள பெண்ணை மணம் செய்வது ஆணுக்கு நலத்தைக் கொடுக்கும். அதாவது பெண்களுள் குற்றமற்ற சிறப்புடைய கற்புடையாளை மனைவியாகப் பெறுதல் பெருமைக்குரியது என்பதை,

அருந்ததிக் கற்பினார் தோளும் (திரி.1:1)
பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும் (திரி.16:2)
என்ற அடிகளால் அறியலாம். பெண்களுள் சிறப்பானவரை மணம்செய்வது துன்பம் நீக்கி இன்பம் தரும். இதனை,

கற்புங் காமமும் நற்பா லொழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின் (தொல். பொருள்.150:1-2) என்று தொல்காப்பியம் உணர்த்துகிறது. பெண்ணுக்குக் கற்பு, காமம் போன்றன சிறந்த ஒழுக்கங்கள். ***ஒழுக்கத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தும்போதும் நீதி நூலாசான்கள் பெண்ணுக்குச் சொல்லப்பட்ட ஒரேயொரு 'கற்பு' என்னும் ஒழுக்கத்தோடு ஒப்பிட்டுக் காட்டுவது வழக்கம் (ராஜ்கௌதமன், ப.266).*** கற்புடையபெண்கள் இல்லறத்திலும் சமூகத்திலும் நன்மதிப்பைப் பெற்றுப் போற்றுதலுக்குரியவராகின்றனர்.

பரத்தைப்பெண்

பொய்யாகப் பொருளுக்காக அன்பு செய்யும் பெண் பரத்தைப் பெண் ஆவாள். பொருளை விரும்பி நிற்கும் பரத்தைப் பெண்ணை விரும்பிக் கலத்தல் என்பது இழிவானது என்பதை, ***புலைமயக்கம் வேண்டிப் பொருட்பெண்டீர்த் தோய்தல் (திரி.39:1); பரந்தொழுகும் பெண்பாலைப் பாசமென் பானும் (திரி.73:2); தோள் வழங்கி வாழும் துறைபோல் கணிகையும் (திரி.81:1)*** என்ற அடிகளால் அறியலாம். பலரிடத்திலும் சென்று நடக்கின்ற பரத்தைப் பெண் அன்புடையவள் எனக் கருதுவது தவறானது. இத்தகு பெண் தன் மனம் செலுத்திப் பொருள் வருவாயினை குறைவுபடாது சேர்க்கக் கூடியவள். பலருக்கும் பொதுவாக நின்று தனது தோளைக் கொடுக்கும் பரத்தையரைப்,

பல்லிருங் கூந்தல் மகளிர் ஒல்லா
முயக்கிடைக் குழைக வென் தாரே (பா.73:13-14)
என்னும் புறநானூற்றுப் பாடல்வழி அறியமுடிகிறது. மாலைக் காலத்தில் தம்மை அலங்கரித்துக்கொண்டு, பொய் பல பேசி இன்பம் கருதி வந்தோர் செல்வத்தை முற்றக் கவர்ந்துகொள்ளும் தன்மையுடையவள் என்பது தெரிகிறது. இத்தன்மையோர், விலை நலப்பெண்டிர், காமக்கிழத்தி, இற்பரத்தை, சேரிப் பரத்தை, நயப்புப் பரத்தை, பொதுமகளிர், விலைமகளிர், வேசியர், பொருட்பெண்டிர் எனப் பல்வேறு பெயர்களில் வழங்கப்படுவதை அறியமுடிகிறது. இது பற்றிச் சங்க இலக்கிய வாழ்வியல் நூல், ***அக இலக்கியங்களில் தவிர்க்க இயலா மாந்தர்போலப் பரத்தைப் பெண் உலவுகிறாள். மருதத்திணைப் பாடல்களில் தலைவியின் ஊடலுக்குக் காரணமாகப் பரத்தையே பெரிதும் தோன்றுகிறாள் (ப.33)*** என்கின்றது. இக்கூற்று சங்க இலக்கியம், சங்கம் மருவிய இலக்கியங்களில் பரத்தைப் பெண் தலைவன் தலைவியின் ஊடலுக்குக் காரணமாக அமைகிறாள் எனச் சுட்டப்படுகிறது.

பெண்ணும் விருந்தோம்பல் பண்பும்

தீருக்குறள், *விருந்தோம்பல்* அதிகாரத்திற்குக் கா.சு. பிள்ளை, ***விருந்தினரைப் பேணுதல், விருந்து என்பது புதிதாய்வந்தவரைக் குறிக்கும். உதவி நாடி வரும் விருந்தினர் நெடுநாட்குமுன் அறிமுகமான காரணத்தால் வருபவரும், முன்பழக்கஞ் சிறிதுமில்லாது வருபவருமென இரு வகைப்படுவர் (ப.32)*** என்று விளக்கிக் காட்டுகிறார். இவ்விருந்தோம்பல் பெண்ணுக்குரிய சிறப்பான பண்பாக இல்லறத்தில் போற்றப்படுகிறது. விருந்தினருக்கு உணவு கொடுக்க அஞ்சுகிற பெண் சிறப்பானவளாக இருக்கமாட்டாள் என இலக்கியங்கள் காட்டுகின்றன.

நன்மையான விருந்தினரைப் பாதுகாப்பதால் பெண் கணவனுக்கு நட்பு உடையவளாகிறாள். நாள்தோறும் இல்லறத்தைக் குற்றமில்லாது காப்பதால் பெற்ற தாயாகிறாள்; தன் குடும்பத்திற்குரிய மக்களைப் பெறுவதால் சிறந்த மனைவியாகிறாள். விருந்தோம்பல், இல்லறம் போற்றல், மக்களைப் பெறுதல், ஆகியன பெண்ணுக்குரிய கடமைகள் என்பதை,

நல்விருந் தோம்பலின் நட்டாளம் வைகலும்
இல்புறஞ் செய்தலின் ஈன்றதாய் - தொல்குடியின்
மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன் (திரி.64) என்ற பாடலால் அறியலாம்.விருந்தோம்பல் பண்பு, பெண்ணின் குண நலம், பிறருக்குதவும் மனப்பான்மை போன்றவற்றை வெளிப்படுத்துவதாக அமைகிறது. இதனை,

அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியற் குறுமகள் உறைவின் ஊரே (பா.142:9-11)
நன்மனை நளிவிருந்து அயரும்
கைதூ வின்மையின் எய்தும் ஆறே (பா.280:9-10)
என்ற நற்றிணைப் பாடல்கள் விளக்குகின்றன. தலைமைப் பண்புடையவளாகத் திகழும் குடும்பப்பெண் மற்றவர்களை நன்கு உபசரிப்பவளாகத் தன் வாழ்வியலை அமைத்துக்கொண்டமையை அறிய முடிகிறது. தம் வீட்டிற்கு இரவு நேரத்தில் விருந்தினர் வரினும் அதற்காகக் கொஞ்சம்கூட முகம் சுளிக்காமல் வந்த விருந்தினருக்கு உணவு படைப்பதை மகிழ்வாகக் கருதினர். பலருக்கும் உணவு அளிப்பதன் மூலம் பெண்ணுக்குக் கணவனோடு ஏற்பட்ட தேவையற்ற பிணக்கு களையப்படுகிறது. விருந்தோம்பல் பெண்

ISSN 2320-4842

ணின் இல்லற வாழ்வில் மனநிறைவைத் தருவதாக தமிழ் இலக்கியங்கள் மக்களை நெறிப்படுத்துகின்றன.

பெண் அடிமை

மனவுறுதிடைய பெண்ணைக் கோலால் அடித்துத் துன்புறுத்துதல், தமக்கு மணஞ்செய்து கொடுக்காத பெண்ணை விரும்புதல் போன்றன பெண்ணடிமைச் செயல்களாகக் கூறப்படுகின்றன. பெண்ணைக் காவாமல் கணவன் இகழ்ந்து பேசுவதும் பெண்ணை அடிமையாக்கும் செயல் என்பதை,

ஏவாது மாற்றும் இளங்கிளையும் காவாது
வைதெள்ளிச் சொல்லுந் தலைமகனும் (திரி.49:1-2)
கல்லார்க் கினனாய் ஒழுகலும் காழ்கொண்ட
இல்லாளைக் கோலாற் புடைத்தலும் (திரி.3:1-2) என்ற பாடல்வழி அறியமுடிகிறது. அறிவுடைய பெண்ணாக காணப்பட்டாலும் அடிமை நிலைக்கு ஆட்படுத்தப் பட்டதை, ***பெண்களின் மதிநுட்பமும் திறனும் தரம் குறைந்தவையாகக் கருதப்பட்டன. பெண் ஆணால் நெறிப் படுத்தப்பட்டு வழிகாட்டப்பட வேண்டியவள் என்றும் கருதப் பட்டது(ப.29)*** என்கிறார் சி.செல்வகுமார். இவ்வாறான பெண்மை தரம் தாழ்த்தப்பட்டு அடிமை நிலைக்குச் சென்று, பின்னர் அழிவு சக்தியாகக் கருதப்பட்டது என்பதை அறியமுடிகிறது.

முரண்

பெருமைக் குணத்தை விரும்பாது கணவன் குறைகளை வெளிப்படுத்தித் தருமத்தினின்றும் நீங்கும் பெண், சினத்தால் கணவன், எதிர் நின்று பேசும் பெண், பிறரோடு வழக்குத் தொடுத்து பெண்கள் மன்றேறுதல் போன்றன பெண்களிடத்தில் காணப்படும் முரண்களாகத் தெரிகின்றன. இதனை, ***வேண்டாது விட்டொழிந்த பெண்பாலும் (திரி.55:2); எதிர்நிற்கும் பெண்ணும் இயல்பில் தொழும்பும் (திரி.67:1); பெண்டிர் தொடுத்தாண் டவைப்போர் புகலும் (திரி.71:2)*** என்ற தொடர்களில் நல்லாதனார் குறிப்பிடுகிறார். இன்றைக்குப் பெண் கணவனை எதிர்த்து நின்று வழக்குத் தொடுத்து நீதிமன்றம் புகுதல் என்பது பழைமைக்கு முரண்பட்ட செய்தியாக அறியமுடிகின்றது. கணவனின் குறைபாடுகளைக் கற்பது கடமை என்பதை, ***மணமான பெண்ணுக்கு அதாவது ஓர் ஆணுக்கு முற்றும் உடைமையாகிவிட்ட மனைவிக்கு கணவனது குறைபாடுகளைக் கற்பது கடமையாகிறது (ப.348)*** என்கிறார் ராஜ் கௌதமன். பெண் தன் நிலையிலிருந்து மாறுபடும் நிலைக்கு, ஆண்களின் அடிமைத்தனப் போக்குக் காரணமாக அமைகின்றது.

பயனற்ற பொருள்

குருடனுடைய மனைவியின் அழகு, கணவன் இல்லாதவளின் மாதவிடாய், கற்புடைய பெண் பூத்து நீராடிய பின்னும் கணவன் மருவாத நிலை ஆகியன பெண்ணுக்குப் பயனற்றவையாகச் சமூகத்தில் கருதப் படுகின்றன. இதனைக், ***குருடன் மனையாள் அழகும் இருள்தீர (திரி.53:1); கொழுநனை இல்லாள் கறையும் (திரி.66:1); கற்புடையாள் பூப்பின்கண் சாராத் தலைமகனும் (திரி.17:2)*** என்ற அடிகளால் அறியமுடிகின்றது. இவற்றில் பெண்ணுக்குரிய இயற்கைத் தன்மைகள் இருந்தும் அவை பயனற்றவை எனத் திரிகடுகம் பதிவுசெய்துள்ளது.

முடிவுரை

பெண்ணுக்கு நாணம் அவசியம் என்று திரிகடுகம் வலியுறுத்துகிறது. நாணமுள்ள பெண் தன் கணவன் குறிப்பறிந்து நடப்பவளாகக் குறிப்பிடப்படுகிறது. கற்புடைய பெண், பரத்தைப் பெண் எனப் பெண்ணை இருவகையாகத் திரிகடுகம் காட்டுகிறது. பொருளுக்காக அன்பு செய்யும் பெண்ணை விரும்பிக் கலத்தல் இழிந்தது என்கிறது அது. விருந்தோம்பலில், அறவழி நின்று பணிசெய்யும்பொழுது இல்லறத்திற்கும் கணவனுக்கும் நன்மை பயக்கும் என்று உணர்த்துகிறது. பெண்ணைக் காவாது அவளைத் துன்புறுத்தல், விருப்பம் இல்லாத பெண்ணை மணக்க விரும்புவதுபோன்றவை பெண்ணடிமைச் செயலாகக் கருதப் படுகின்றன. கணவன் எதிர்நின்று பேசுவது, கணவன் குறைகளை வெளிப்படுத்துவது, பிறருடன் வழக்குத் தொடுத்து மன்றம் ஏறுதல் முதலியன பெண்களின் முரண் செயல்களாகத் திரிகடுகம் குறிப்பிடுகிறது.

துணைநூற் பட்டியல்

அறவாணன், க.ப. *அற இலக்கியக் களஞ்சியம்.* சென்னை: தமிழ்க் கோட்டம், 2 ஆம் பதிப்பு, 2011.

இலம்போதரன், சு. (ப.ஆ.). *பிங்கல நிகண்டு.* சென்னை: வசந்தா பதிப்பகம், 2000.

கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ.), *தொல்காப்பியம்- பொருளதிகாரம் (இளம். உரை.).* சென்னை: சாரதா பதிப்பகம், 6ம் பதிப்பு, 2008.

கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ.). *திரிகடுகம் மூலமும் உரையும்.* சென்னை: சாரதா பதிப்பகம், 6 ஆம் பதிப்பு, 2012.

கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ.). *நான்மணிக்கடிகை மூலமும் உரையும்.* சென்னை: சாரதா பதிப்பகம், 5 ஆம் பதிப்பு, 2012.

சுப்பிரமணியம் பிள்ளை, கா. *திருக்குறள் மூலமும் உரையும்.* சென்னை: பூம்புகார் பதிப்பகம், 2012.

செல்வக்குமார், சி. *தமிழ் இலக்கியப் பிரதிகளில் பெண்ணிய நோக்கு.* சென்னை: அன்றில் பதிப்பகம், முதற்பதிப்பு, 2008.

நிர்மலா மோகன், சுந்தரி சிவக்கண்ணன் (தொ.ஆ.). *சங்க இலக்கிய வாழ்வியல்.* சென்னை: தாமரை பதிப்பகம், முதற்பதிப்பு, 2013.

பசுபதி, ம.வே. (ப.ஆ.). *செம்மொழித் தமிழ் (நற்றிணை.* பக்.184-303). தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, 2010.

மாணிக்கவாசகன், ஞா. (உ.ஆ.). *புறநானூறு.* சென்னை: உமா பதிப்பகம், ஏழாம் பதிப்பு, 2014.

ராமகிருஷ்ணன், எஸ். (ப.ஆ.). *க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்).* சென்னை: க்ரியா, விரிவாக்கி திருத்திய புதிய பதிப்பு, 2018.

ராஜ்கௌதமன். *தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும்.* சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், முதற்பதிப்பு, 2018.

ISSN 2320-4842

பல்லவர்காலச் செப்பேடுகளில் தானங்கள்

முனைவர் த. கண்ணகி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை–உயராய்வு மையம்,
தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி, தஞ்சாவூர் 613 002
(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச் சுருக்கம்

கல்வெட்டுகளும் செப்பேடுகளும் இந்திய வரலாற்றில் காலத்தைக் காட்டும் கண்ணாடிகள். செப்பேடுகள் நிலக் கொடையையும், தானங்களையும், கோயில் திருப்பணிகளையும் குறிப்பிடுவனவாக இருந்தாலும் போர்களைப் பற்றிய விவரங்களும் அதில் காணப்படுகின்றன. சைவ, வைணவ பக்தி இலக்கியங்கள் தழைத்ததும் பல்லவர்காலம்தான். அவ்வகையில் அதிகச் செப்பேடுகள் வெளியிட்ட பெருமைக்குரியவர்கள் பல்லவர்கள். அவர்கள் விட்டுச் சென்ற செப்பேடுகள் வழியாக அறியப்படும் பல்வேறுபட்ட தானங்களைப் பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கருவிச்சொற்கள் (Keywords): இலக்கியச் சான்றுகள், செப்பேடுகள், தானம், பல்லவர்கள் வரலாறு.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

பல்லவர்களின் பள்ளன்கோயில் ஹாஸக்கோட்மை செப்பேடுகளில் குறிப்பிடப்பட்டள்ள நிலதானங்கள் மட்டும் பிராமணர் அல்லாதவர்களுக்கும் மற்ற அனைத்தும் பிராமணர்களுக்கும் வழங்கப்பட்டவை. பல முக்கிய சரித்திரச் செய்திகள் சாசனங்களில் சொல்லப்பட்டுள்ளன. பல்லவர் காலத்தில் விளங்கிய நில அளவைகள் குழி, வேலி என்பன. பல்லவ மன்னர்கள் வழங்கிய தானங்களுக்கு வரலாற்றாதாரமாக, ஆவணமாக இருப்பன செப்பேடுகளாகும். இதில் காணலாகும் பல்வேறு தானங்களை எடுத்துரைக்கும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.

பல்லவர்களின் வரலாறு

தமிழக வரலாற்றில் மூவேந்தர்களுக்குப் பின் மிக அதிக காலம் ஆண்ட புகழ்பெற்ற நான்காவது அரச வம்சம் பல்லவ அரச வம்சம் ஆகும். கி.பி.3முதல் கி.பி.9ஆம் நூற்றாண்டுவரை காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த பல்லவர்களுடைய வரலாற்றை அறியப் போதுமான இலக்கியச் சான்றுகள் இல்லாத நிலையில் பல்லவர்களின் வம்சாவளி, ஆட்சி முறை, அரசியலமைப்பு, வரிவிதிப்பு முறைகள் பற்றிய செய்திகளைக் கல்வெட்டுகள், செப்பேடுகள் மட்டுமே பல்லவர் வரலாற்றை விரிவாக எடுத்துரைக்கின்றன.

தானம்-இலக்கியச் சான்றுகள்

தானம் என்ற சொல் திருக்குறளில் இரண்டு இடத்திலும், சிலம்பில் ஓர் இடத்திலும் *கேளாமல் தருவது* என்ற பொருளில் ஆளப்பட்டிருக்கிறது.

தானம் தவம் இரண்டும் தங்காவியனுலகம்
வானம் வழங்காது எனின் (குறள்.19)
வான்சிறப்பில் இடம்பெற்றுள்ள ஒன்பதாவது குறள் வானம் வழங்காது எனின் தானம், தவம் ஆகிய இரண்டும் இந்த உலகில் தங்காது என்கிறது,

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை (குறள்.295) என்ற குறள் மனத்தொடு உண்மை பேசினால் அது தவம் செய்பவர்களைக் காட்டிலும் தானம் செய்பவர்களைக் காட்டிலும் தலையாயது என்கிறது.

கண்ணகி தாதை, கடவுள் கோலத்து
ஆள் நலம் பெருந்தவத்து ஆசீவகர்முன்
புண்ணியதானம் புரிந்து அறங்
கொள்ளவும் . . . (வஞ்சிக்காண்டம், நீர்ப்படை காதை, 96-100)
கண்ணகியின் முடிவு அறிந்து அவள் தந்தை மாநாய்கன் கடவுள் கோலத்தில் நலம் கூடிய பெருந்தவம் நிறைந்த அசீவரகம் முன்பு, புண்ணியம் தரும் தானங்கள் செய்து துறவறம் பூண்ட செய்தி இங்குக் குறிப்பிடப்படுகிறது.

தானம் கொடுப்பான் தகைஆண்மை முன்இனிதே
மானம் படவரின் வாழாமை முன்இனிதே (பா.27) என்ற இனியவை நாற்பது பாடலடிகளில் தானம் கொடுப்

பவனின் ஆண்மை மிக இனிது. மானம் இழந்து வாழாமை இனிது என்று தானத்தின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. எனவே, மழை இருந்தால் உலகில் வளம் ஏற்படும். அது இருந்தால் தானம் என்பது உலகில் தங்கும் என்று தானத்தின் சிறப்பு இலக்கியங்களில் சுட்டப்பட்டுள்ளன.

செப்பேடு

பழங்காலத்தில் மன்னர்கள் கோயில் தானங்கள், வம்சாவளி, போர்க் குறிப்புகள் போன்ற நிகழ்வுகளைப் பதிந்து வைக்கப் பயன்படுத்திய உலோகத்தகடு செப்பேடு ஆகும். ஓலைச்சுவடிகள்இயற்கையாக அழிவது போலச் செப்பேடுகள் அழிவது இல்லை, இவை இக்காலத்தில் பழங்காலத்தைப் பற்றி அறியும் தொல்லியல் சான்றுகளாக இருந்துவருகின்றன.அவ்வகையில் பல்லவர்களின் பல்வேறுபட்ட தானங்களைப் பற்றிச் செப்பேடுகள்வழி இனிக் காண்போம்.

மூன்றாம் விஜயஸ்கந்தவர்மனின் ஓங்கோடு செப்பேடு (கி.பி. 5ஆம் நூற்றாண்டு)

சாத்வீக தானம் என்பதை இச்செப்பேடு விளக்குகிறது. கண்டூர் மாவட்டத்தில் பாபட்லர் தாலுக்காவிலுள்ள சந்திராஷரு என்னுமிடத்தில் கிராம முன்சீப் குடும்பத்தாரிடம் இரண்டு செப்பேடுகள் நீண்டகாலமாக இருந்தனவாம். இவை இந்தக் குடும்பத்திற்கு எப்படி வந்தன என்ற விவரம் தெரியவில்லை. 1955 ஆம் ஆண்டிலிருந்து இந்த இரண்டு செப்பேடுகளும் சென்னை அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டுள்ளன.

பல்லவப் பேரரசன் விஜயஸ்கந்தன் மன்தாம்பராதபம் என்ற இடத்தில் முகாமில் இருந்தபோது தானம் வழங்கப்பட்டது. இந்த இடம் இப்போது எங்குள்ளதெனத் தெரியவில்லை. ஸ்கந்தவர்மனின் 33ஆவது ஆட்சி ஆண்டின் ஒரு குளிர் காலத்தில் செப்பேடு வழங்கப் பட்டது. காசியப்ப கோத்திரத்தைச் சேர்ந்த வேதம் அறிந்த பிராமணன் கோசலசர்மனுக்கு ஓங்கோடு எனும் கிராமத்தைத் தானமாக அளித்துள்ளான்.

இது சாத்வீக தானமாக அளிக்கப்பட்டது. சாத்வீக தானம் என்பது நீர் தெளிக்காமல் வழங்கப்படுவது என்றும் இந்த தானம் வழங்கியதற்காக அரசன் புகழ், புண்ணியம் போன்ற பிரதிபலன்களை எதிர்பார்க்கவில்லை என்பது இதன் பொருள்.

சாருதேவியின் குணபதேயம் செப்பேடு

கி.பி.350களில் ஓர் அரசகுலப்பெண் பிராமணன் அல்லாத ஒரு விவசாயிக்கு வழங்கிய நிலதானம் பற்றிச் சொல்கிறது இச்செப்பேடு. குணபதேயம் ஆந்திர மாநிலம், குண்டூர் மாவட்டம், கொண்டக்கூர் தாலுக்காவில் உள்ளது. இச்சாசனத்தை வழங்கிய சாருதேவி, பல்லவ மன்னர் யுவமகாராஜன் ஸ்ரீ விஜய புத்தவர்மன் மனைவி ஆவாள். மூன்று ஏடுகள் கொண்ட இச்செப்பேட்டில் மொத்தம் 16 வரிகள் உள. பிராகிருத மொழியிலும் சமஸ்கிருதத்திலும் எழுதப்பட்டுள்ளன.

அரசனின் மனைவியும் அங்குரன் என்று முடியும் பெயரைக் கொண்ட அரசனின் தாயுமான சாருதேவி …ராஜதடாகத்தின் அருகிலுள்ள குடிநீர்க் கிணற்றின் வலதுபுறம் ஆதுகன் என்பவன் பயிரிட்டுவந்த நிலத்தின் நாலு தழலூரம் தற்போதைய விஜயவாடா தாலுக்காவில் கிருஷ்ணா நதியின் வடகரையிலுள்ள தாமலுரு என்ற இடத்தில் கட்டப்பட்டிருக்கும் நாராயணனுடைய கோயிலுக்குத் தனது ஆயுட்காலம் கூடுவதற்காக அளித்ததை இச்செப்பேடு கூறுகிறது.

அரசகுலப் பெண்ணொருத்தியால் வழங்கப்பட்டது என்பதோடு இச்செப்பேட்டிற்கு மற்றொரு முக்கியத்துவமும் உள்ளது. நிலதானம் என்றாலே பிராமணர்களுக்கும் கோயில்களுக்குமே என்றிருந்த காலத்தில் சாருதேவி ஒரு சாதாரண விவசாயிக்கு நிலதானம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் நரசிம்மவர்மனின் ரேயூருச் செப்பேடு (கி.பி.702-703)

சந்திரகிரகணம் ஏற்பட்ட ஆண்டில் பரிகார நிவர்த்தியாக வழங்கப்பட்ட நிலதானம் பற்றிச் சொல்கிறது ஐந்து இதழ்கள் உள்ள இச்செப்பேடு. இது எங்கிருந்து கிடைத்தது எனத் தெரியவில்லை. ஆனால் ஆந்திராவில் காளகஸ்தி அரசர் வீட்டிலிருந்து கண்டெடுக்கப்பட்டுப் பின்னர் வெளியுலகிற்குத் தெரிய வந்தது. இப்போது திருப்பதி வெங்கடேஸ்வரா ஓரியண்டல் இன்ஸ்ட்டியூட்டில் உள்ளது. சமஸ்கிருதத்தில், தெலுங்கு, கன்னடப் பேச்சு வழக்கில் இச்செப்பேடு எழுதப்பட்டுள்ளது. மொத்தம் 25 வரிகள் உள்ளன.

பல்லவ அரசனான இரண்டாம் நரசிம்மவர்மன் தன் ஆட்சியின் 12ஆம் ஆண்டில் (கி.பி.702-706) இச்செப்பேட்டை வழங்கியுள்ளான். தானம் வழங்கிய நாள் வைசாக மாகத்தின் பௌர்ணமி சந்திர கிரகணம் ஏற்பட்ட நாள். இதுவரை நமக்கு நரசிம்மவர்மனின் கல்வெட்டுச்சாசனங்கள் மட்டுமே கிடைத்திருந்தன. செப்பேட்டுச் சாசனமாக இது மட்டுமே கிடைத்துள்ளது.

யுவமகாராஜன் விஷ்ணுகோபனின் நெடுங்காராயச் செப்பேடு (கி.பி.5 ஆம் நூற்றாண்டு)

அரசப் பதவியிழந்து அடைக்கலம் புகுந்த சிற்றரசனுக்குப் பல்லவ அரசன் வழங்கிய நிலதானம் பற்றிச் சொல்கிறது. முழுவதும் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட இச்செப்பேடு ஐந்து ஏடுகளைக் கொண்டது. யுவமகாராஜன் விஷ்ணுகோபனின் பன்னிரெண்டாவது ஆட்சி ஆண்டில் இச்செப்பேடு எழுதப்பட்டது.

நெடுங்கராய என்னும் கிராமம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு நதிப்போஜர் தொத்திஸ்வாமிக்கு மூன்றில் இரண்டு பங்கு தரப்பட்டது. மீதியுள்ள மூன்றில் ஒரு பங்கில் கண்ணஸ்வாமிக்கு இரண்டு பங்கு, நந்திசாமிக்கு ஒரு பங்கு தரப்பட்டது. தானம் பெற்ற அனைவரும் பல்லவ அரசனிடம் ‘சரண்’ அடைந்தவர்கள். மேலும் தானம் பெற்றவர்களின் பெயரோடு *தொடர்ச்சி: பக். 102*

ISSN 2320-4842

விளிம்புநிலை மாந்தர்களின் பழமொழியும் சொலவடையும்

ச. தென்றல் ஜான்சி
முனைவர் பட்ட ஆய்வாளர் (Ref.No.:BDU2010632778564, dt: 09.10.2023)
நெறியாளர்: **முனைவர் வெ. அமுதா**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை உயராய்வு மையம்
குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த), தஞ்சாவூர் 613 007
(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச்சுருக்கம்

தமிழில் நாவல் இலக்கியம் செழித்து வளர்ந்துள்ளது, நாவல் திறனாய்வும் வளர்ச்சி அடைந்துள்ளது, சமகால வாழ்வின் விளைச்சலாக, வாழ்க்கை அக்கறையாக, நம்பிக்கைத் திறவுகோலாக நாவல் இலக்கியம் திகழ்வதைத் திறனாய்வுகள் வெளிப் படுத்துகின்றன. மனிதமும், மனித உரிமையும், வாழ்வியலின் அடிச்சுவடாக அமையும். கலாச்சாரமும் பண்பாடும் அனை வரையும் ஒன்று சேர்க்கும் சமுதாயமாக இப்பூமியானது நகரும், நகர்த்த வேண்டும். உரைக்கப்படும் கருத்துக்கள் உய ராத நிலைமையினையும் சமுதாயத்தில் நடக்கும், நடந்துகொண்டிருக்கும் கதைக் களமாகக் கொண்டு மக்களின் வாழ் வியல் போராட்டங்களையும், வார்த்தைகளின் வலிமையோடு வலுவூட்டி வடிவமைத்துக் கற்போர்க்குக் காட்சியாகக் கண்முன் நிகழ்த்திக் காட்டும் பாங்கு ஆசிரியரின் அறிவுத் திறம் என்பர். அது நிகழாவிடில், சில சமூகங்கள் அவல நிலைக்கு ஆட்பட்டு இந்நாகரிக ஒழுங்குக்குத் தாக்குப் பிடிக்காது அழிந்து விடும். இந்த எச்சரிக்கையுணர்வு கலந்த மானுடம் சார்ந்து எழுதப்பட்டுள்ள நாவல் <u>மலைப்பாம்பு மனிதர்கள்</u>. இந்நாவலில் நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளை யாடிய ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் நிலம் முழுவதும் கோயில், மடம். பெரும் பண்ணைகளிடம் இருந்தன. உழைப்பு மட்டும் விளிம்புநிலை மக்களிடம் இருந்தது; அவர்கள் உணவுக்காகப் பட்ட சிரமங்கள்; அவர்கள் உழைத்த நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டது முதலிய இச்செயல்பாடுகளில் அவர்கள் எதிர்கொண்ட சூழல்கள், ஒருசில நிகழ்வு கள் பற்றி இவ்ஆய்வுக்கட்டுரையில் பேசப்பட்டிருக்கின்றது.

கருவிச்சொற்கள் (Keywords): விளிம்புநிலை மக்கள் (சேரி மக்கள்), பண்ணையார், குடியானவர், பழமொழி, உவமை, சொலவம்.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

பொதுவாக, இலக்கியம் படைக்கப் படைப்பாளியைத் தூண்டுவன அவன் வாழும் சமுதாயமும் சுற்றுப்புறச் சூழ லும்தான். அவற்றோடு மனிதனுக்கு ஏற்படும் உராய்வுகளும் ஆகும். நாவல் இலக்கியம் பொதுவாக மையக் கருத்துக்களால் வெகு முக்கியத்துவம் வாய்ந்தது. பாத்திரப் படைப்புக்கள் மற்றும் நாவல்களின் கதைச் சூழல் கள் படிப்போர் கவனத்தை ஈர்த்து வருகின்றன. நடந்தேறிய பல வரலாற்று உண்மை நிகழ்வுகளின் விளைவு களையும் பிரதிபலிக்கும் திறனுடையதாக நாவல் இலக்கியம் இலக்கியவுலகில் தனி இடம் பெற்றுவருகிறது. ***நாவல் என்பது கதை அல்ல; அது ஒரு சமூகத்தின் ஆவணக் காப்பகம்; நாவல் எழுத்தாளர் என்பவர் கதை சொல்லி அல்ல; ஒரு சமூக விஞ்ஞானி (பஞ்சாங்கம், ப.135)*** என நாவல் இலக்கியத்தின் இடத்தைப் பஞ்சாங்கம் நிறுவு கிறார். *மலைப்பாம்பு மனிதர்கள்* புதின முன்னுரையில் அதன் ஆசிரியர் ச. சுபாஷ் சந்திரபோஸ், ***படிப்ப வர்கள் இதில் வரும் நிகழ்ச்சிகள் கற்பனை என்று கருதிவிடக் கூடாது. இவற்றை அறியாதவர்களுக்கு அப்படி ஒரு எண்ணத்தை உருவாக்கி விடும்! மொழி என்னுடையது; நிகழ்ச்சிகள் நடந்தவை. இன்னும்கூட பயங்கரமான நிகழ்ச்சி கள் நடைபெற்று இருக்கலாம். நான் அறிந்தவற்றை ஓரளவு தொகுத்துப் புதினங்களாகவும் சிறுகதைகளாகவும் வெளிப் படுத்த முயற்சி செய்து இருக்கின்றேன் (ப.7)*** என்கிறார். இதிலிருந்து, இப்புதினம் ஒரு சமூக ஆவணம் எனத் தெளியலாம்.

ச.சுபாஷ் சந்திரபோஸ் வரலாறு, வட்டார மரபு ஆளுமை கொண்ட படைப்பாளர்; இயல்பிலேயே முற்போக் குச் சமூகநோக்குடையவர்; தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர்; 36 நூல்களின் ஆசிரியர். இவர், எளிய யதார்த்தப் பார்வையில் தம் படைப்புகளில் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட விளிம்புநிலை மாந்தர்களின் (சேரி மக்கள்) வாழ்வில் எதிர்கொண்ட நிகழ்வுகளைப் பதிவுசெய்துள்ளார். இதில் தஞ்சை மாவட்டம், ஒரத்த நாடு வட்டாரம், ஒக்கநாடு கீழையூர் கிராமத்தில் வாழ்ந்தவர்களின் நிலை இங்கு ஆராயப்படுகின்றது.

கதைக்களம்

கதைக்களம் என்பது ஒரு கதையில் நடக்கும் நிகழ்வுகளின் வரிசை. இது கதையின் எலும்புக்கூடு. இதில் தொடக்கம், நடுப்பகுதி, முடிவு ஆகியவை அடங்கும். ***சமூகத்தின் பொதுவான போக்குகள், வாழ்க்கை முறைகள் போன்றவற்றிலிருந்து பெரும்பாலோரால் புறக்கணிக்கப்பட்டிருக்கும் நிலை (ப.1279)*** என விளிம்புநிலை என்னும்

சொல்லிற்குக் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி விளக்கமளிக்கிறது. இதற்குத் தக அமைந்ததுதான் *மலைப்பாம்பு மனிதர்கள்.* இந்திய விடுதலைக்கு முன் பிருந்து கதைக்களம் தொடங்குகிறது. ***கம்யூனிஸ்டுக் கட்சி நாட்டுல பரவிக்கிட்டு இருக்கறதும் நாடு சொதந்திரம் அடஞ்சதும்தான் இந்த மாத்ததுக்குக் காரணம் (ப.28)*** என்கிறார் ஆசிரியர். இந்நாவல் மொத்தம் 29 பகுதிகளில், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் ஒரத்த நாடு வட்டத்தின் ஒக்கநாடு கீழையூர் கிராமத்திலும் ஏனைய சுற்றுப்புறக் கிராமங்களிலும் வாழ்ந்த பண்ணையார்கள், குடியானவர்கள், அடித்தட்டு மக்கள் எனப்படும் விளிம்புநிலை மாந்தர்கள் (சேரி மக்கள்) இவர்களுக்கிடையே நடந்த நிகழ்வுகளைச் செவ்வனே இந் நாவலில் படைத்துள்ளார் ஆசிரியர்.

பழமொழிகளும் உவமைகளும்

இந்நாவலில் முதுமொழி, சொலவம், உவமை முதலியன பொருத்தமாக ஆங்காங்கே ஆளப்பட்டுள. பழமொழிகள் அளவில் சிறியனவாயினும் பொருளை விரித்துரைப்பதில் சிறுகதைக்கு இணையானவை எனலாம். ***பழமொழி தெரிந்த அறிவாளி துன்பங்களைச் சமாதானப் படுத்திக்கொள்கிறார் (ப.341)*** என்கிறார் சு. லட்சுமிநாராயணன். ***அனுபவம் நிறைந்த மனிதர்களின் முதிர்ந்த அறிவுகளேபழமொழிகளாகும். இவை அனுபவத்தில் தோன்றிடினும் தன் ஆற்றலால் காலத்தை வென்று நிற்கும் கருத்துப் பேழைகளாக அமைந்திருக்கின்றன. இப்பழமொழிகளனைத்தும் தனிமனிதனால் உருவாக்கப்பட்டுச் சமுதாயத்தால் பயன்படுத்தப்படும் பான்மைக்குரியன (அ. விவேகானந்தன், ப.14).*** தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தார், ***பழமொழிகள் பழந்தமிழ்ச் செய்யுள்களிலும், பிற்காலப் புலவர் உரைநடைநூல்களிலும், பேச்சு வழக்கிலும் ஆயிரக் கணக்கான பழமொழிகள் வழங்குகின்றன*** என்றும், ***பொருள்நயம் சிறந்து விளங்க உரைநடை எழுத விரும்புவார்க்கும், கேட்டார்ப் பிணிக்கும் வகையில் பேச விழைவார்க்கும் இப்பழமொழிகள் பெருந்துணை புரியும் (ப.2).*** உவமை அகரவரிசை (1939) நூல் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளனர். ***புத்திசாலித்தனத்திலிருந்து பழமொழி வருகிறது; பழமொழியிலிருந்து புத்திசாலித்தனம் வருகிறது (சு.லட்சுமி நாராயணன், உலகப் பழமொழிகள் (ப.349)*** என்கிறது இரஷ்யப் பழமொழி இக்கூற்றிக்களால் பழமொழிகளின் சிறப்பை அறியலாம்.

சொலவம் - விளக்கம்

சொலவம் என்பதற்குச் *சொலவடை, பழமொழி* (ப.140) எனப் பொருள் தருகிறது *வட்டார வழக்குச் சொல்லகராதி.* மேலும், இதற்குப் ***படித்தவர்கள் உண்டு பண்ணியது பழமொழி; பாமரர் உண்டு பண்ணியது சொலவம்*** (மேலது., ப.140). முதுமொழிக்காஞ்சி, ***சொற்செல் லாவழிச் சொலவுநல் கூர்ந்தன்று*** (நூ.87, ப.40) எனத் தன் சொல் மதிக்கப்படாவிடத்து ஒன்றைச் சொல்லுதல் வறுமையுறும் எனச் சொலவம் பற்றிக் கூறுகிறது. *மலைப்பாம்பு மனிதர்கள்* நாவலில் கல்வி அறிவு பெறாத விளிம்புநிலை மாந்தர்கள் (சேரி மக்கள்) பேச்சு மொழியில் சொலவம் இடம்பெற்றுள்ளது. ***தங்களைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்றே கருதாமல், தங்கள் தாழ்வுகளையும் குற்றங்களையும்கூட இந்தப் பாமர மக்கள் எவ்வளவு நேர்மையாகப் பேசியுள்ளார்கள் என்று நினைக்கும்போது, நம் இதயத்திலேஇனம் புரியாததோர் இன்பம் எழுந்து படர்ந்து பரவுகிறது (ப.16)*** என்று சாலை இளந்திரையன் குறிப்பிடுகின்றார்.

விளிம்புநிலை மக்கள்

தமிழ் நாட்டில் பொருளியல் பற்றுக்கோடற்ற வறிய மக்களும், பாட்டாளிகளும், அரசியல் கட்டமைப்பிற்குள்ளும் அதிகாரக் கட்டமைப்பிற்குள்ளும் இடம் பெறாத ஓரஞ்சாரமாக வாழும் விளிம்புநிலை மக்களும்புரட்சிக் கவிஞரின் கவிதைகளில் அவரது அக்கறைக்குரியவர்களாக இருந்திருக்கின்றார்கள். இந்நிலையினைப் *பாவேந்தரும் விளிம்புநிலை மக்களும்* எனும் நூலுக்கு வழங்கிய கருத்துரையில் ஆ. தனஞ்செயன், ***பொதுவாக நாட்டின் ஏனைய மக்களைப்போல, அனைத்து உரிமைகளையும் அனுபவிக் காத கனிசமான மக்கள் கூட்டம் நாட்டில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கிறது. தகவல் தொடர்பு, வசிப்பிடம், உணவு, உடை, கல்வி, பொருளியல், வேலைவாய்ப்பு...போன்றவற்றில் மற்றவர்களுக்கு இணையாக வாயப்புகளைப் பெறாமல் புறக்கணிக்கப்பட்ட மக்கள் பெருந்திரளாக நாட்டில் உள்ளனர். இம்மக்களையே விளிம்புநிலை மக்கள் என்று குறிப்பிடுகின்றனர்(ப.15)*** என்கிறார். இவரின் கூற்று மலைப் பாம்பு மனிதர்கள் நாவலில் காணப்படும் விளிம்பு நிலை மக்கள் நிலையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

பண்ணையாரும் விருந்து உணவும் (பகுதி-16)

உணவு உயிர்களுக்கு அத்தியாவசியமானது; உடம்பில் திசுக்கள் வளர்ச்சி பெறவும் ஆட்கொள்ளும் நோய்க்கிருமிகளுக்கு எதிர்வினையாற்றவும் நல்ல திட்பமான உணவுவகைகள் மனிதர்கள் உட்கொள்ள வேண்டும். இதனைத் திருவள்ளுவர், ***பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர், விருந்தோம்பி/ வேள்வி தலைப்படா தார்(குறள்.88)*** என்ற குறளில் ***தன்னிடத்துள்ள பொருளைக் கொண்டு விருந்தோம்பி அதன் பயனை அடையாதவர்கள், தமது கைப்பொருளை வருந்திப் பாதுகாத்தும், அதனை இழந்து ஆதரவற்றவராகி வருந்துவர்*** என வலியுறுத்திகின்றார்.இதுபண்டைய தமிழரின் விருந்தோம்பும் பண்பு. இந்தப் பண்புதான், ***களத்துப் பாதைப் பக்கத்தில் யாரும் அதிகமாக உட்கார மாட்டார்கள். முதலாளி எப்போது எங்கிருந்து வருவார் என்று யாருக்குமே தெரியாது. அந்த நேரத்தில்தான் . . . இலையைப் போட்டுச் சோற்றை அள்ளி வைத்தாள். ஆசையாகக் கறி முனுக்குகளை 'நிரடி நிரடி' எலும்பு இல்லாமல் எடுத்துப் போட்டாள், அவன் 'போதும் போதும்' என்று மறுத்தான். அவள் கேட்காமல் போட்டுக்கொண்டே இருந்தாள். சோற்றைப் பிசைந்து முதல் உருண்டை வாயில் வைக்கப் போனான்.***

என்ன, எல போட்ட சாப்பாடு நடக்குதா? வெளக்க மாத்துக்குப் பட்டுக் குஞ்சமா? (ப.140)

வாய் பேசிக்கொண்டே இருந்தது; கால் எதார்த்தமாக மண்ணை எற்றி விட்டு நடந்தது.

சோத்துல மண்ணு விழுந்திட்டுதா?

சொல்லிக் கொண்டே நடந்தார்.

இந்த நிகழ்வு, ***விளக்கு மாற்றுக்குப் பட்டுக் குஞ்சமா?*** (*தமிழ் நாட்டுப் பழமொழி*, எண்.955, ப.32) என்ற தமிழ் முதுமொழியைச் சேரி மக்கள் பேச்சு மொழியில் சுட்டுவதுடன் அவர்களின் இன்னல்களையும் ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார். சேரி மக்கள் பண்ணையார்களிடம் பட்ட துயர நிலையின் படப்பிடிப்பு இது. சேரி மக்கள் எந்தச் சூழ்நிலையிலும் நல்ல உணவு உண்ணக் கூடாது என்ற வஞ்சக எண்ணம் பண்ணையார்களிடம் மேலோங்கி நின்றதை உணர்த்துகிறது.

பண்ணையாரும் அரசு அதிகாரியும் (பகுதி-18)

இன்றைக்குப் பொதுவாக அரசு அதிகாரிகள் எங்கு எதற்கு வந்தாலும் அப்பகுதி மக்கள் அல்லது பெரிய தனக்காரர் என்போர் அவர்களை வரவேற்கும் போக்கினை; சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்னரே நடை பெற்றதாகவும், அதில் எழும் பிரச்சினை ஒன்று இக் கதையில் பண்ணையார் பரமசிவத்தின் அப்பா மகாலிங்கம் செய்த ஒரு கொடுங்காரியத்தை, ஆசிரியர், ***இப்போது இருக்கிற கார்வாரி கண்ணுசாமியின் அப்பா ஒரு வேலைக்காக நகரத்திற்குப் போய்விட்டார். அந்த நேரத்தில் ஆறு பார்க்க வந்த அதிகாரி பண்ணைக்குள் வந்துவிட்டார். பண்ணையார் மகாலிங்கம் எழுந்து போய் வரவேற்று நாற்காலியில்உட்கார வைத்து இளநீர் வெட்டிக் கொடுத்து உபசரித்தார் (ப.154)*** என்ற நடப்பியலாகக் கூறுகிறார். தொடர்ந்து, ***அதிகாரியை வாசல் வரை வழியனுப்பி வைத்துவிட்டு வந்து பண்ணையாரிடம் கார்வாரி செய்தியைச் சொல்கின்றார். . . அதிகாரி உட்கார்ந்து இருந்த நாற்காலியை உதைத்துத் தள்ளும் பண்ணையார், கையைச் சுவரில் குத்துகிறார். நடந்தது நடந்துவிட்டது. அவரால் என்ன செய்வது என்று தெரியவில்லை. (ப.154)*** பொன்னன் வழக்கம்போல் சாணி அள்ளிக் கொட்டிவிட்டுக் கஞ்சி குடித்தான். இதற்கிடையே பொன்னனின் தாயார் வழி மிகவும் எளிமையாகச் ***சரி, பசுமாட்டு மூத்திரத்தை வாங்கித் தெளிச்சு விடு; ஐயர அழச்சாந்து புண்ணியதானம் பண்ணிக்கலாம்*** என்கிறார் பண்ணையார் (ப.154). அதாவது தீட்டுக் கழிக்கச் சொல்லுகிறார். இதனைப்,

பொன்னா, கொஞ்சம் கோமேயம் புடிச்சுக் கொடு

இப்ப எதுக்கு ஆயா?

இப்ப ஆறு பாக்க வந்துட்டுப்போன அதிகாரி சிலுவ மதத்தச் சேந்த பறய வீட்டு ஆளாம்!

ஆளு நல்ல செவப்பா இருந்தாரே

அதுலதான் ஐயா ஏமாந்து போயிட்டாவோ; பறயனுல செவப்பயும் பாப்பானுல கருப்பயும் நம்பக் கூடாதுங்குற சொலவச் சொல்லு சரியாத்தானே இருக்கு (ப.153) என்பதிலிருந்து அன்றைய காலகட்டத்தில் இவ்வாறான சொலவடைத் தொடர்கள் சேரி மக்கள் பேச்சு மொழியில் காணப்பட்டன. பணத்திமிரில் ஏகபோக எவ்வளவுதான் சேரி மக்கள்மீது அதிகாரம் செலுத்தினாலும் பண்ணயைார்கள் இதுபோன்ற ஒருசில நிகழ்வுகளில் ஏமாந்துவிடுகின்றனர் என்று யதார்த்த உண்மையை அவர்கள் மொழியிலேயே வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். கார்வாரி - செயலாளன் என்று பொருள் தருகிறது தமிழ்-தமிழ் அகர முதலி (ப. 314). இங்குப் பண்ணையார் மகாலிங்கத்தின் செயலாளன் கண்ணுச்சாமி ஆவார்.

பண்ணையார் இனப்பாசம் (பகுதி 1)

இந்நாவலில் வரும் பொன்னனுக்கு இப்போது நாற்பத்தைந்து வயது. முப்பத்தைந்து வருசங்களாக இந்தப் பண்ணையில்தான் வேலை பார்க்கிறான். இவன் பண்ணைக்கு மாடு மேய்க்கவும் சாணி அள்ளவும் வந்தபோது பரமசிவம் அப்பா மகாலிங்கம், பண்ணையாராக இருந்தார். இவர் பண்ணையில் வைக்கோல் வாங்க வந்தவர்கள் இவர் இனத்தைச் சேர்ந்த பக்கத்துக் கிராமத்தினர். நல்ல வெயில் நேரம். பசி வயிற்றைக் கிள்ளியது; சுணை உடம்பை அரித்தது. அவசரமாகக் கிளம்பியதில் கடடுச்சோறு கொண்டுவர முடியவில்லை. கஞ்சி காய்ச்சப் பாத்திரம், அரிசி கொண்டு வந்தார்கள். ***வெண்ணெய்க் குண்டானில் அரிசியும் தண்ணீருமாகச் சேர்த்து வைத்துச் சவுக்குச் செத்தையால் எரித்தார்கள். சற்று நேரத்தில் தளபுளவென்று சோறு கொதித்தது(ப.14).*** அந்நேரத்தில் பண்ணை வேலையை முடித்துப் பொன்னன் வந்தான். அவனிடம் ***என்னப்பா ஓங்க பண்ணையாருக்கு வேலிக் கணக்குல நெலம் இருக்கு; ஆளப் பார்த்தா கரிச்சான்மாதிரிஇருக்காரு; ஒரு பண்ணையாரு மாரியே தெரியலயே! (ப.14)*** என்று கேட்டனர். இதற்குப் பொன்னன் மெல்லச் சிரித்தான். இதற்குப் பொன்னன் கூறுவதாகக் ***கூட்டுக்குப் போட்டுப் பாக்கணும். இல்லாட்டி குடி இருந்து பாக்கணும் (ப.14)*** என்ற சொலவச் சொல் பொன்னனுக்கு நினைவிற்கு வந்தது எனப் பண்ணையார் பரமசிவத்தின் சொத்துக்கு மதிப்புக் கொடுத்தான் என்றெழுதுகின்றார் ஆசிரியர்.

அதுசமயம் பண்ணையார் பரமசிவம் அடுப்புப் பற்ற வைத்த இடத்திற்கு வந்தார். சிரிப்பும் விளையாட்டுமாக இருந்தவர்கள் எழுந்து நின்றார்கள். சோறு பொங்கியதைக் கண்டு பண்ணையார்,

> ***என்னாது***
> ***கஞ்சி காச்சுறோமுங்க***
> ***அது என்னாது***
> ***ஓங்க பங்களா?***

இந்த எடத்துல பொங்க முட்டி வைக்குறதுன்னா ஓங்களுக்கு எவ்வளவு திமிரு இருக்கணும்-

வாய் பேசிக் கொண்டிருக்கும்போது கால் எட்டி உதைத்தது. வெண்ணைய்க் குண்டான் உருண்டுபோய்ச் சவுக்கு மரம் ஒன்றில் மோதிக் கிடந்தது. மல்லிகை மொட்டை அள்ளிப்போட்டதைப்போலச் சோறு வாலாக் கொட்டி இருந்தது. தண்ணீர்ப் பாம்பாக வந்தவர் நல்ல பாம்பாகச் சீறிப் பங்களாவை நோக்கி நடந்தார். ***பதுலுக்கு எதுவும் பேசவேணாம்*** என்று காதில்

விழும்படி மெதுவாகப் பொன்னன் சொன்னான். வைக்கோல் வாங்க வந்தவர்கள் முதலாளி இனத்தைச் சேர்ந்தவர்களாம். இந்தக் குடியானவர்களுக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையை நினைத்துப் பொன்னன் துடிக்கிறான். இங்குச் சேரியைச் சேர்ந்த பொன்னனுக்கு இருக்கும் இரக்கக்குணம் மேல் சாதிக் காரர்களுக்கு இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறார் ஆசிரியர். அதே நேரத்தில் பண்ணையார் தம் இனத்துக்காரர்களுக்குக் ***கோவம் இருக்கற எடத்துலதான் கொணம் இருக்கும் (ப.16)*** என்பதை நிரூபிக்கும் வகையில் அவர்களுக்குப் பண்ணையார் தம் பங்களாவில் விருந்து உபசரித்து இனப்பாசத்தை வெளிப்படுத்துவதை ***ஓங்க பண்ணையார் சும்மா சொல்லப் புடாது; மூக்கு முட்டச் சோறும் கறிக் கொழும்பும் போட்டுட்டு அவரு கேவரு கூழு குடிக்கிறாரு பாவம்*** என்ற கூறுகின்றனார். இது ***கோவம் இருக்கற எடத்துலதான் கொணம் இருக்கும்*** என்ற சொலவடையை நிரூபணம் ஆக்குகிறது.

முடிவுரை

கதை நிகழ்ந்த காலம் சுதந்திரத்திற்கு முன் தொடங்கி நடைபெற்றுள்ளது. அப்பட்டமாகவும் ஆணித்தரமாகவும் சேரி மக்கள் பட்ட இன்னல்களை நேரிடையாகக்கண்முன் காட்சிப்படுத்துவதாக அவர்கள் துன்ப நிலையைப் பதிவுசெய்துள்ள பான்மை பாராட்டத் தக்கது. அந்த நிகழ்வுகள் எல்லாம் வாசகனின் உள்ளத்தில் பதிந்து சேரி மக்கள் வாழ்வு நிலையினைப் பழமொழிகளும் சொலவடைகளும் எடுத்துக் காட்டுகின்றன. இன்றைக்கு இந்த நிலையில் அரசு அதிகாரம் பெற முடியாது; சூழ்நிலைகள் நகர்ந்துகொண்டே முன்னேறி வருகின்றன எனக் கூறலாம். ஆன்றோர் சான்றோர் கூறிய விளக்கங்கள் *மலைப்பாம்பு மனிதர்கள்* நாவலின் பாத்திரங்கள் பேசும் பேச்சு மொழியை உறுதிசெய்கிறது.

துணைநூற் பட்டியல்

இளந்திரையன், சாலை., *சமுதாய நோக்கில் பழமொழிகள்.* சென்னை: பாரி நிலையம், 1975.

கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ.). *முதுமொழிக் காஞ்சி மூலமும் உரையும்.* சென்னை: சாரதா பதிப்பகம், 6 ஆம் பதிப்பு, 2020/09.

சுப்பிரமணியம் பிள்ளை, கா., *திருக்குறள் - மூலமும் உரையும்.* சென்னை: பூம்புகார் பதிப்பகம், 2012.

சுபாஷ் சந்திரபோஸ், ச., *மலைப்பாம்பு மனிதர்கள்.* தஞ்சாவூர்: இயல் வெளியிடு, முதற் பதிப்பு, 2012.

தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், *4.தமிழ்நாட்டுப் பழமொழி அகரவரிசைச் சுருக்கம், தமிழ்ப் பாதுகாப்பு நூற்றிரட்டு (எட்டு நூல்கள் அடங்கியது)* சென்னை: தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், மறுபதிப்பு, 1967: 1-32.

தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், *5.உவமை அகரவரிசை* (1939), ப.2. *தமிழ்ப் பாதுகாப்பு நூற்றிரட்டு (எட்டு நூல்கள் அடங்கியது).* சென்னை: தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், மறுபதிப்பு, 1967:1-27.

தனஞ்செயன், ஆ., "கருத்துரை: தமிழார்வலர்களுக்கு ஒரு நல்ல வாசிப்பு அனுபவத்தை . . ." *பாவேந்தரும் விளிம்புநிலை மக்களும்.* ஆசிரியர்: மணிகோ. பன்னீர் செல்வம். சென்னை: பாவை பப்ளிகேஷன்ஸ், 2008:12-24.

நடராசன், தி.சு., "மகத்துவம் தேடி." *நாவல்களின் மகத்துவம்.* ஆசிரியர்: தி.சு.நடராசன், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2022:7-11.

பஞ்சாங்கம், க, (க.ஆ.), "தமிழ் நாவல் இலக்கியப் போக்குகள்." (ப.135) *நாவல் இலக்கியப் போக்குகள் (கருத்தரங்கக் கட்டுரைகள்).* தொகுப்பாசிரியர் இரா.காமராசு. நியூ டெல்லி: சாகித்திய அகாதெமி, 2016:135-148.

ராமகிருஷ்ணன், எஸ். (ப.ஆ.), *க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்).* சென்னை: க்ரியா, விரிவாக்கித் திருத்திய புதிய பதிப்பு, 2018.

லட்சுமி நாராயணன், சு., *உலகப் பழமொழிகள்.* சென்னை: கங்கை புத்தக நிலையம், 1994.

விவேகானந்தன், அ., "சமுதாய நோக்கில் எள்ளல் பழமொழிகள்." பதிப்பிக்கப்படாத முனைவர் பட்ட ஆய்வேடு, திருச்சிராப்பள்ளி: பாரதிதாசன் பல்கலைக்கழகம், 2006.

98ஆம் பக்கத் தொடர்ச்சி

'சுவாமி' என்ற பெயரும் சேர்ந்து வருவதால் இவர்கள் அரசர்களாக இருந்து பின் ஏதோ காரணத்திற்காக தங்கள் நாட்டை விட்டு வந்து பல்லவர்களின் ஆட்சிக்குட்பட்ட துறதிப்பி என்ற இடத்தில் அடைக்கலம் கேட்டு வாழ்பவர்கள் என்று கருதவேண்டியுள்ளது.

முடிவுரை

செப்பேடுகள் நிலக்கொடையையும், தானங்களையும், கோயில் திருப்பணிகளையும் குறிப்பிடுவதாக இருந்தாலும் போர்களைப் பற்றிய விவரங்களும் அவற்றில் காணப்படுகின்றன. சைவ, வைணவ பக்தி இலக்கியங்கள் தழைத்ததும் பல்லவர்காலம்தான். அவ்வகையில் அதிகச் செப்பேடுகள் வெளியிட்ட பெருமைக் குரியவர்களும் பல்லவர்கள்தாம். அவர்கள் விட்டுச் சென்ற செப்பேடுகள்வழி அறியப்படும் பல்வேறு தானங்கள் இக்கட்டுரையில் விளக்கப்பட்டன.

துணைநூற் பட்டியல்

இராசமாணிக்கனார், மா. *பல்லவ வரலாறு.* சென்னை: பாரதி பதிப்பகம், சனவரி 2022.

தமிழக அரசின் தொல்லியல் துறை வலைதளத்தில் செப்பேடுகள்.

ISSN 2320-4842

இளம்பூரணரின் தொல்காப்பிய எழுத்ததிகார இலக்கண மேற்கோள்கள்

முனைவர் சு. சொர்ணரேகா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை–உயராய்வு மையம்,
தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி, தஞ்சாவூர் 613 002
(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் நூல்களில் பலவற்றாலும் சிறப்புடையது தொல்காப்பியம். பல நூல்கள் அழிந்த நிலையில் இந்நூல் இன்றுவரை வாழ்ந்துகொண்டிருப்பதிலிருந்து இது போற்றப்பட்டுவந்தது புலனாகிறது. காலப்போக்கில் தொல்காப்பியத்துக்கு உரை கூறும் போக்குத் தோன்றியது. அவ்வுரையை முழுமையாக எழுதிப் பெருமை சேர்த்துக்கொண்டவர் இளம்பூரணர். அவர் தம் உரையில் கருத்துக்களை உறுதிப்படுத்தவும் ஒப்பிட்டுக் காட்டவும் இலக்கண மேற்கோள்களை எடுத்தாளு கிறார். அவற்றின் பொருத்தத்தை இக்கட்டுரை ஆராய்கிறது.

கருவிச்சொற்கள் (Keywords): இலக்கண மேற்கோள்கள், எழுத்ததிகாரம், திரிபு முடிபுகள், தொல்காப்பியம்.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

இலக்கண மேற்கோள்கள்

ஓர் இலக்கண நூல் கூறும் கருத்துப் பிற இலக்கண நூல் கூறும் கருத்தொடு ஒத்தும் மாறுபட்டும் வரும். ஒப்புடையவற்றை ஒன்றாக்கிக் காண அவற்றின் உண்மைத் தன்மையை உய்த்துணரலாம். ஓர் இலக்கண நூல் கூறுவதற்கு மாறாகக் கூறும் கருத்து மொழியில் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தை எளிதில் தோற்றுவிக்கும். உரையாசிரியர்கள் நூலாசிரியரின் கருத்துக்குத் துணைசேர்க்கவும் சிறப்பை எடுத்துரைக்கவும் தம் புலமையை வெளிப்படுத்தவும் பிற நூல் மேற்கோள்களை எடுத்துக்காட்டுகின்றனர் (மு.வை.அரவிந்தன், ப.62). இவை அனைத்தும் உரையாசிரியரின் அறிவுத் திறத்தின் பரவலை வெளிப்படுத்துவதோடு அந்நூல் உரைகளின் மேன் மையைப் புலப்படுத்துவதாகவும் அமைகின்றன.

கூறியதற்கு மேல் கூறுதல்

இலக்கண ஆசிரியன், தன் காலக் கருத்துக்களை மட்டும் கூறுபவன். அது அவனுக்கு இழுக்காகாது. பிற் காலத்தில் மொழியில் ஏற்படும் மாற்றத்தை முன்னரே கண்டு முழுமையாக எவராலும் எழுதுதல் இயலாத ஒன்றாகும். வண்ணச் சினைச்சொல் என்பது சொல்வகைகளுள் இச்சொல்லை அடை, சினை, முதல் எனும் வரிசைப்படி எழுதிக்காட்டவேண்டும் என்பது தொல்காப்பியரின் கருத்து.

அடைசினை முதல்என முறைமூன்றும் மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல் (நூ.26) என்பது தொல்காப்பிய நூற்பா. இந்நூற்பாவிற்கு இளம் பூரணர் அடை, சினை, முதல் எனப்பட்ட மூன்றும் முறைமயங்காது வரும் எனக்கூறி அதுவே வண்ணச் சினைச்சொல் எனக் குறிப்பிடுகிறார். அதற்கேற்பப் பெருந்தலைச்சாத்தன், செங்கால் நாரை என்னும் எடுத் துக்காட்டுகளையும் தருகிறார். மேலும் முறை என்றதனான் இருகுணம் அடுக்கி முதலொடு வருதலும் இரு குணம் அடுக்கிச் சினையொடு வருதலும் கொள்க என விளக்கி,
முதலொடு குணமிரண்டும் அடுக்குதல் வழக்கியல்
சினையொடு அடுக்கல் செய்யுள் ஆறு (இளம்பூரணர், தொல். சொல்., ப.16) எனப் பரிமாணச் சூத்திரம் ஒன்றை எடுத்துக்காட்டுகிறார். இது மொழியில் ஏற்பட்ட இலக்கண மாற்றத்தைக் காட்டுகிறது. அடை, சினை, முதல் என்ற முறை மாற்றப்பட்டு இருகுணம் அடுக்கி வருதலுக்கு ***இளம்பெருங் கூத்தன்*** என்பது மேற்கோள் ஆகிறது. இவற்றுள் இளம், பெரும் என்பன அடை, ***சிறுபைந் தூவி*** என்பதில் சிறு, பசு என்பன அடைகள்; தூவி என்பது சினை. இவ்வாறாக இலக்கணங்களில் காலத்திற்கேற்ற மாறுபாடுகள் பதியப்பட்டுள்ளன. மொழி யில் ஏற்பட்ட இம்மாற்றங்களை இளம்பூரணர் இலக்கண மேற்கோளால் தம் உரையில் ஒப்புமைப்படுத்திக் காட்டுகிறார்.

திரிபு முடிபுகள்

பெயர்களைச் சார்ந்து வேற்றுமை உருபுகள் வரும் என்பது தொல்காப்பியர் கருத்து.

உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயரென்று

ISSN 2320-4842

ஆயிரண் டென்ப புணர்நிலைச் சுட்டே (தொல். எழுத்து., நூ.117, 116)
வேற்றுமை வழிய பெயர்ப்புணர் நிலையே (தொல். எழுத்து., நூ.45) என்பன தொல்காப்பிய எழுத்ததி கார நூற்பாக்கள். பெயர்க்குப் பின்னாக வரும் வேற் றுமை உருபுகள் திரியாமல் இராமனை, இராமனால், இராமனுக்கு என்பனபோல வரும் என்பது தொல் காப்பியம். இச்செய்தியைக்

கூறிய முறைகள் ஈறுநிலை திரியாது
ஈறுபெயர்க்கு ஆகும் இயற்கைய என்ப (நூ.69)

எனும் நூற்பா எடுத்துரைக்கிறது. ஈறுநிலை திரியாது என்பதற்கு மாறாக ஈறுகள் திரிந்தும் வரும் என்பது தொல்காப்பியர் கருத்து. இதனை இளம்பூரணர் ஒப் புமைபற்றி விளக்கம் எழுதுவதற்காக,

குஐ ஆன்என வரூஉம் இறுதி
அவ்வொடு சிவணும் (நூ.108) என்னும் நூற்பாவைக் காட்டுகிறார். இந்நூற்பாவை நிலைதிரியாது என்பதற்கு மாறாக நிலைதிரியும் என்பதற்குக் காட்டி ***நிலைதிரி யாது என்றது இவைஇடைச்சொல்லாதலால், தம்மீறு திரிதல் என்னும் இலக்கணமுடைய சொல்லோ எனின் அவை இல என்பதற்குக் கூறினான் என்பது*** என விளக்கமும் அளிக் கிறார்.

முற்றும்மை கொடுக்கும் இடங்கள்

இத்துணை என்ற எண்ணிக்கை கொடுத்துக் கூறும் சொல் சினைச் சொல்லாகவோ முதற்சொல்லாகவோ அமையலாம். அச்சொற்கள் வினைகொண்டு முடியும் போதும் உலகத்தில் இல்லாத பொருள்களைச் சொல் லும்போதும் உம்மை கொடுத்துக் கூறவேண்டும் என்பது கருத்து. திணைகள் இரண்டு; பால்கள் ஐந்து; இடம் மூன்று என்பது தொல்காப்பியர் கருத்து. இவை இத்துணை என வரையறுக்கப்பட்டவை. இவற்றைத் தொல்காப்பியர்,

இருதிணை மருங்கிய ஐம்பால் அறிய எனக் கூறு கின்றார். இலக்கண விதிப்படி இருதிணை மருங்கில் ஐம்பாலும் அறிய என்று உம்மை கொடுத்துக் கூறாத நிலையை இளம்பூரணர் ஆராய்கிறார். செய்யுட்கண் உம்மையின்றி வருவதற்கு உடம்பொடு புணர்த்தான் என்றலும் ஒன்ற என்று கூறி ஆசிரியர் கூற்றைத் தவறற்றது எனக்காட்டுகிறார்.

ஒருமை, பன்மை ஆராய்ச்சி

உம்மைத்தொகை அறுவகைப் பொருள்களை அடிப் படையாகக் கொண்டு பிறக்கும் என்கிறார் தொல்காப் பியர். அவற்றை இருபெயர் பலபெயர் (நூ.411) என்பன முதலாகக் காட்டுகிறார். ஒன்றுக்குமேற்பட்ட எல்லாம் பல என்பது தமிழ்நெறி. இதனை ஆண், பெண் பலர் என உயர்திணைப் பால்களாலும் ஒன் றறி சொல், பலவறி என்னும் அஃறிணைப் பகுப்பி னாலும் அறியலாம். இவற்றை மனங்கொண்ட இளம் பூரணர் தொல்காப்பியர் கூறிய இருபெயர், பலபெயர் என்பவற்றைக்கொண்டு மயங்கக் கூடாதெனக் காட்டு கிறார். ***பலபெயர் என அமையாதே இருபெயர் என வேண்டியது என்னை இரண்டையும் பல என்பவால் எனின் அற்றற்று. இரண்டனையும் பன்மையென்று வேண் டான் இவ்வாசிரியன் என்பது ஆயின்மேல், ஒன்றறி சொல்லே பலவறிசொல் (நூ.2) என்புழி இரண்டையும் பலவென வேண்டினான் என்பழி இரண்டையும் பல வென்று வேண்டினான் எனின் அது விகாரம் என்னை, இரண்டும் இரண்டிறந்த பலவும் வந்தன போயின என ஒரு பன்மைச்சொல்லே ஏற்குமாகலின் ஆண்டு இரண் டினைப் பலவற்றுள் அடக்கிக் கூறினார்*** என ஒப்பிட்டுக் காட்டுகிறார். மேலும்,

ஓரெழுத்து ஒருமொழி ஈரெழுத்து ஒருமொழி
இரண்டிறந்து இசைக்கும் தொடர்மொழி (தொல். எழுத்து., நூ.45) என எழுத்ததிகாரத்திலும் கூறுவதால் ஒன்று, இரண்டு, பல என்னும் சொல் வழக்கு உண்மையை இளம்பூரணர் எடுத்துரைக்கவில்லை.

இலக்கணச் சொல்லால் கூறுதல்

தகுதியின் காரணமாகவும் வழக்கின் காரணமாகவும் ஒரு பொருளுக்குரிய சொல்லால் கூறுவதை விடுத்து அவற்றை இலக்கணத்திற்கு ஆகாத சொல்லாகிய பக்கச் சொல்லாலும் கூறலாம் என்பது தொல்காப்பி யர் காட்டும் வழுவமைதி. இதனைக் கிளவியாக்கம்,

தகுதியும் வழக்கம் தழீயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை இன்றே (நூ.17) என்னும் நூற்பாவழி விளக்குகிறது. இதன்படி சுடுகாட்டை நன் காடு என்றும் செத்தாரைத் துஞ்சினார் என்றும் மயங்கக் கூறுதல் ஏற்றுக்கொள்ளப்படும். சொற்கள் அனைத்தும் இலக்கணத்தொடு பொருந்தி வருவதே சிறப்பாகும். இதனை வலியுறுத்தும் வகையில்,

மெய்ந்நிலை மயக்கின் ஆகுநவும் என்னும் தொடருக்கு மேற்காட்டிய கிளவியாக்க நூற்பாவினைக் காட்டிச் சுடுகாட்டை நன்காடு எனக் கூறாமல் சுடுகாடு என்றல்,

செத்தாரைத் துஞ்சினார் என்னாது செத்தார் என்றல் அமையும் என விளக்கம் தருகிறார் (இளம்பூரணர், ***தொல். சொல்., ப.204).***

ஒருபொருள் இருசொல்

ஒருபொருள் மேல் வரும் இருசொற்களை நீக்காமல் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது எச்சவியல் கருத்து (நூ.453).இதற்கு விளக்கம் அளிக்கும் இளம்பூரணர்,

இயற்பெயர் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும் (நூ. 8)
சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கு (நூ.41)
ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி (நூ.42) எனும் கிளவியாக்க நூற்பாக்களை எடுத்துக்காட்டுகிறார்.

இயற்பெயரை முன்னும் சுட்டுப் பெயரைப் பின்னும் கூறுதல்; சிறப்புப் பெயரை முன்னும் இயற்பெயரைப் பின்னும் கூறுதல்; ஒருபொருளுக்குப் பலபெயர் வந்தால் பொருள் ஒன்ற என்பது தோன்ற இறுதியில் வினை கொடுத்தல் ஆகியவை மேற்கூறிய நூற்பாக் களுக்குரிய பொருள்கள். இவற்றை ஒருபொருள் மேல் இருபெயர் வழுவும் பலபெயர் வழுவும் கூறிப்

போந்தான். ஆனால் ஒருபொருள்மேல் வரும் இரு சொற்களை நீக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என் பதைவேற்றுமையாக அறிதல் வேண்டும் எனக் குறிப் பிடுகிறார் (இளம்பூரணர், தொல். சொல். ப.210).

வினையியல் கருத்துக்கள்

வினைமுற்றுக்கள் தெரிநிலை, குறிப்பு எனவும் தன்மை, முன்னிலை, படர்க்கை எனவும் பகுக்கப்படும். தன்மைப் பன்மை என்பது தன்னொடு முன்நின்றான், படர்க் கையான், அவ்விருவர் ஆகிய மூவரையும் அடக்கும் என்பது இளம்பூரணர் கருத்து. இதனை விளக்க, ***அவற்றுள்பன்மை உரைக்கும் தன்மைக் கிளவி*** என்னும் வினையியல் நூற்பாவைக்(12) காட்டி உறுதிப்படுத்து கிறார்.

வேற்றுமை கொள்ளாமல் காலத்தை ஏற்கும் தன்மை தெரிநிலை வினைமுற்றிற்கு அன்றிப் பெயரெச்சம், வினையெச்சங்களுக்கும் பொருந்துவதாகும். இதனைத் தொல்காப்பியர்,

எவ்வயின் வினையும் அவ்வியல் நிலையும் (நூ.428) என்னும் நூற்பாவழி விளக்குகிறார்.

இந்நூற்பாவிற்கு விளக்கம் தரும் இளம்பூரணர் முற்றுச் சொல்லே அன்றிப் பெயரெச்சமும் வினையெச்சமும் மூன்று காலமும் மூன்று இடமும் உரியவாய் வினை யும் வினைக்குறிப்பும் பற்றி வரும் என்பான். எவ் வயின் வினையும் அவ்வியல் நிலையும் என்றான் எனக் குறிப்பிடுகிறார். இதற்குச் சான்றாக,

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையும் காலை காலமொடு தோன்றும் (நூ.198) என முக்காலத்திற்கும்,
எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய (நூ.225) என மூவிடங்களுக்கும் உரிமை கூறப்பட்டதாகக் காட்டுகிறார். வினையெச்சம் வினை அல்லது வினைக்குறிப்பைக் கொண்டு முடியும். ஆயினும் குறிப்பு வினைச்சொல் ஆக்கச்சொல்லோடு வரும் என்பது தொல்காப்பியர் கருத்து. இக்கருத்து,

முதல்நிலை மூன்றும் வினைமுதற் முடிபின (நூ.230)
ஏனை எச்சம் வினைமுத லானும்
ஆன்வந் தியையும் வினைநிலை யானும் (நூ.232) எனும் நூற்பாக்களில் அடங்கும். அதனை விடுத்து இச்சூத் திரம் தேவையா எனும் ஆராய்ச்சிக்கு விடை நல்குவ தாக வினையியல் சூத்திரங்களை எடுத்தாளுகிறார்.

வினைமுதல், பெயர்முதல் எனப் பிரிக்காமல் பொது வகையால் கூறியதால் இந்நூற்பா வேண்டும் என்பது இளம்பூரணர் கருத்து. இந்நூற்பாவின் வினை முதலா னும் முடியும் என்புழிப் பெயர் வினை முதலானும் முடியும் என்பது பட்டது என்னும் கருத்தைப் பி.சா. சுப்பிரமணிய சாஸ்தியார் ஏற்றுக்கொள்ளவில்லை (பி.சா.சுப்ரமணிய சாஸ்திரியார், தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு, ப.137).

வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குரிய (நூ.457) என்பது தொல்காப்பியச் சூத்திரம். எச்ச வாய்பாடு பிறிதொரு எச்ச வாய்பாட்டால் முடியும் என்பது இதன் பொருள். ஞாயிறு பட்டு வந்தான் என்பது ஞாயிறு பட வந்தான் என மாறும்.

இவற்றுள் பட என்பது செயவென் எச்சம். பட்டு என்பது செய்தென் எச்சம். திரிந்ததைத் திரியாததாக அதாவது செய்தென் எச்சத்தைச் செயவென் எச்ச மாகக் கொள்ளாமல் பொருள் உணரவேண்டும் என் பதை விளக்க, ***முதல்நிலை மூன்றும் வினைமுதல் முடிபின (நூ.230)*** எனத் தொல்காப்பிய நூற்பாவை இளம்பூரணர் விளக்கத்திற்காக எடுத்தாளுகிறார்.

உரியியல் கருத்துக்கள்

உரிச்சொல்லின் பொதுவிலக்கணத்தைத் தொல்காப்பி யர் உரியியலின் முதல் நூற்பாவில் விளக்குகிறார். உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பிறக்கும். ஒரு சொல் பல பொருளை உரிமை பெற்று வரும். பல சொல் ஒரு பொருளுக்கு உரிமை பெற்று வரும் என்பன உரிச்சொல் பற்றிய தொல்காப்பியரின் கருத்துகள். இவற்றுள் இசை, குறிப்பு, பண்பு என்பவற்றிற்கு முறையே, ***துவைத்தலும் சிலைத்தலும் (தொல். உரி. நூ.61); கறுப்பும் சிவப்பும் (தொல்.உரி.நூ.75); நிறத்துரு உணர்த்தற்கு முரிய (தொல்.உரி.நூ.76)*** என மூன்று நூற்பாக்களை இளம்பூரணர் எடுத்துக்காட்டுகிறார். ஒரு சொல் பல பொருட்கும் பலசொல் ஒருபொருட் கும் முறையே, ***கடியென் கிளவி (தொல்.உரி.நூ.86), உறுதவ நனி (தொல்.உரி.நூ.3)*** எனும் நூற்பாக்களைக் காட்டுகிறார்.

பொருட்குப்பொருள் தெரியின் அதுவரம் பின்றே என்ப தற்குப் பொருளுக்குப் பொருள் கூறினால் அது வரம் பின்றிச் செல்லும் என்பது விளக்கமாகும். அவை, ***உறுதவ நனி (தொல்.உரி.நூ.3)*** என்னும் தொடக்கத் தன என எடுத்துரைக்கின்றார். உணர்வார்க்கே சொல் லின் பொருளை உணர்த்த முடியும். அத்தன்மை அற்றவருக்கு உணர்த்த முடியாது என்பதைத் தொல் காப்பியர், ***உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே (தொல்.உரி.நூ.85)*** என்னும் நூற்பாவை அமைத்துள் ளார். இதற்கு விளக்கும் தரும் இளம்பூரணர் ***என்னை, பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள என்பதனால் உணராத மடவோரை மற்றொரு வாய்பாட்டால் உணர்த் துக. அல்லாக்கால் மேல் நோக்கிச் சில மலர்களோடு தூவிக் காட்ட உணருமேல் அஃதே உணர்ச்சி வாயிலாக அறிக என உணராதவருக்கு உணர்த்தும் வழியைக் கூறு கிறார்*** என்கிறார்.

எழுத்ததிகார மேற்கோள்கள்

இடைச்சொற்களைத் தொல்காப்பியர் ஏழாகப் பகுக்கி றார். அவற்றுள் முதலில் இடம்பெறுவது, ***புணரியல் நிலையிடைக் பொருள்நிலைக் குதநவும் (நூ.245)*** என் பது. இதற்குரியவையாகக் காட்டுவன சாரியைகளாகும். ***சாரியை எனக் குறிப்பிடாமல்,***

தொடர்ச்சி: பக்.118

ISSN 2320-4842

'மனம் சுடும் தோட்டங்களில்' பெண்ணியச் சிந்தனைகள்

இரா. கலாவதி
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்) (Ref.No:005041/Ph.D.K8/Tamil/P.T./April 2019/Confirm., dt:05.03.2022), தமிழ்த்துறை, மாமன்னர் கல்லூரி (தன்னாட்சி) புதுக்கோட்டை (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

நெறியாளர்: **முனைவர் சு. மாதவன்**
உதவிப் பேராசிரியர் – தமிழ்த்துறைத் தலைவர், இராஜேஸ்வரி வேதாச்சலம் அரசு கலைக்கல்லூரி செங்கல்பட்டு

இணை நெறியாளர்: **முனைவர் ஆ. செந்தாமரைக்கண்ணி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, மாமன்னர் கல்லூரி (தன்னாட்சி), புதுக்கோட்டை (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச்சுருக்கம்

இக்கால இலக்கியங்கள் அனைத்துமே சமூகத்தைச் சீரமைக்கும் நோக்கத்தோடே படைக்கப்படுகின்றன. இவ்வகையில் கவிஞர் மு.கீதாவின் கவிதைகளும் சமூகச் சிந்தனைகளையும் பெண்ணியச் சிந்தனைகளையும், சமூகத்தில் பெண்கள் நேர்கொள்ளும் சவால்களையும் நெருக்கங்களையும் கோபத்தோடு எடுத்துரைப்பதோடு தீர்வுகளையும் முன்வைப் பனவாக அமைந்துள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கருவிச்சொற்கள் (Keywords): காந்தி கனவு, புதுமைப்பெண், பெண்ணியம், பெண்ணின் பெருமை, மகளிர் தினம்.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

தாய்வழிச் சமூக அமைப்பு இருந்த தொடக்கக் காலத்தில் பெண்ணே குடும்பத்திலும் சமூகத்திலும் உயர்வான வளாக மதிக்கப்பட்டாள். காலமாற்றத்தில் ஆணாதிக்கம் தந்தைவழிச் சமூகத்தைக் கட்டியெழுப்பிய பின்னர் ஆண் முதன்மையானவன் என்றும், பெண் இரண்டாம் நிலையைச் சார்ந்தவள் என்றும் கருத்து நிலைபெறத் தொடங்கியது. மேலைநாட்டுத் தாக்கத்தால் இந்தியாவிலும் பெண்ணியச் சிந்தனை பேசப்படலாயிற்று. தமிழில் பாரதி, பாரதிதாசன், வேதநாயகம்பிள்ளை, பெரியார் போன்றோர் ஆண்பாலினராயினும் பெண் விடுதலைக் காக ஓங்கிக் குரல் எழுப்பினர். கவிதைத் துறையில் கனிமொழி, வெண்ணிலா, இளம்பிறை, சல்மா, மாலதி மைத்ரி, குட்டிரேவதி, பிருந்தா, சுகிர்தராணி, லீனா மணிமேகலை, பெருந்தேவி போன்றோர் பெண்ணிய உள் ளடக்கத்துடன் கவிதைகளை எழுதிவருகின்றனர். இவர்களுள் மு.கீதாவும் ஒருவர். ஆண்பாலினம் சார்ந்த முற் போக்குக் கவிஞர்களிடமிருந்தும் பெண்ணுரிமையை நிலைநாட்டும் கருத்தியல்கள் உருப்பெறத் தொடங்கின. மு.கீதாவின் *மனம் சுடும் தோட்டாக்கள்* கவிதைத் தொகுப்பில் முக்கிய உள்ளடக்கமான பெண்ணியம் குறித்து இந்தக் கட்டுரை ஆராய்கிறது.

பெண்ணியம்

பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்துகொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம் உலகளவில் அரசியலிலும் பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் ஆன்மீகத்தீலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்கிறார் சார்லச் பன்ச். ***பெண்ணியம் என்பது பெண்கள் மீதான வரலாறு, சமய, பொருளாதார, பண்பாட்டு அடிப்படையிலான ஒடுக்குமுறையின் அகநிலை உண்மைகளை ஆராய்ந்து அவற்றின் பல்வேறு பரிணா மங்கள், அவற்றுக்கான தீர்வுகள் ஆகியவற்றை ஆராய்வதாகும்*** என்கிறார் இரா. பிரேமா. ***பெண்ணியம் என்பது பெண்கள் பாலினப் பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள் ளும் இயக்கமே*** என்கிறார் புட்சர்.

'மனம் சுடும் தோட்டாக்கள்' கவிதை நூலின் உள்ளடக்கம்

கீதாவின் கவிதைகள் சமூக அவலங்களைக் கண்டு எரிமலையாய்க் குமுறும், இயற்கை அழிவில் பரிதவிக் கும், அன்பில் பனியாய் உருகும், நட்பில் நலமே விழையும். மொத்தத்தில் அன்பான ஒரு மனிதநேயத்தின் தோட்டாக்கள். அவை யாரைத் துளைக்க வேண்டுமோ அங்கு துளைக்கும் என்கிறார் கவிஞர் மு.கீதா.

நகரங்கள் கிராமங்கள்
ஒரே நிலைதான்
சந்ததிக்கும் மாறவில்லை
மாதவம் செய்தவர்கள் நாங்கள் (ப.7) எனும் அடிகள் சந்ததி கடந்தாலும் மாறாமல், அடிப்படையான தேவை யொன்றுசந்ததிகள் தாண்டியும் கிடைக்காமலிருக்கும் சமூகத்தின் அவலத்தைக் காறி உமிழ்கிறது.

பறக்கத் துடிக்கின்றவர்களுக்கு
சிறகுப்பந்து எட்டாக்கனியல்ல
விட்டுவிடுங்கள்
அவர்கள் சாதனையாளர்கள்
எங்கோ நடக்கிறது
எவருக்கோ
என சும்மாயிருக்க முடியவில்லை (ப.8) என்ற அடிகள் மூலம் கவிஞரின் குணத்தை அறிந்து கொள்ளமுடி கின்றது. சமூக நலத்திற்கான பணிகளைப் பேச்சிலும் எழுத்திலும் மட்டும் அல்ல; செயலிலும் காட்டத் துடிக்கும் பெண் கவிஞராகத் திகழ்கிறார் மு.கீதா.

சொல்லவியலா வலியாய் என்ற கவிதையில்,

உடலைத் துவைத் துணியாய்
உயிரோடு பிழிந்து உடல் நடுங்க
போதும் உன்னுடனான வாழ்வு
போய் வா! (ப.11) என்ற கவிதை பல பெண்களின் குரலாய் ஒலிக்கிறது. பிள்ளையில்லாப் பெண்ணின் மனக்குறையை,

எட்டு வருடங்களுக்குப் பின்
எட்டாக் கனியாகப் பிறந்தவனை
கொஞ்சியவளே
குலம் தழைக்க வந்த ராஜா
மலடிப் பட்டம் போக்கிய துரையென
கொண்டாடியவள் (ப.12) என்ற கவிதையின் மூலம் பிள்ளை இல்லாமல் ஏங்கித் தவம் இருந்து பெற்ற பிள்ளைக்காக ஏங்கும் தாயின் மனக்குறையைக் கவிஞர் விளக்கியுள்ளார்.

பாலியல் பிரச்சனை

சிறு குழந்தைகளைக் கற்பழிக்கும் ஆண்களுக்குச் சவுக்கடி கொடுக்கும் வகையில் இக்கவிதை அமைந் துள்ளது. ஒவ்வொரு ஆண் இனமும் பெண்களைத் தன் தாய், மகள், சகோதரியாய்ப் பார்க்கும் நிலை உருவாகட்டும். தாயை இழந்த பெண் பிள்ளைகள் தகப்பனால் சீரழிக்கப்படும் அவலம் சமூகத்தில் நிலவு வதை*என்ன செய்யப்போகின்றீர்* என்ற கவிதையில்,

பிழைப்பு தேடி வந்தோம்
வாழ்விப்பீர்களென
பிறந்த எட்டுமாத சிசு என்னை
புணர்ந்த கொடூரனை
புதைத்திட மாட்டீரோ!
குழந்தையையும் சீரழிக்கவா
நானும் உங்களின் மகள்தான்
அப்பாக்களே ...
உங்கள் இனமென்று விட்டுவிடுவீர்களோ (ப.18) என்று பெண் இல்லாமல் சமூகமும் இல்லை; சந்ததியும் இல்லை என்பதை உணர்த்துகிறார் கவிஞர்.

கௌரவக் கொலை

பெண்களின் படுகொலை, கௌரவக் கொலைகள் இப்போது சமூகத்தை உலுக்குகின்றன. பிறத்தல் எளி தல்ல; ஆனால்ஓர்உயிரைப் பறிக்க யாருக்கும் உரிமை யில்லை என்பதை *ஸ்வாதி என்ற வாலிபப்பிள்ளை யின் மரணம்* என்ற கவிதையில்,

மனக்குகையில் பயப்பறவைகளின்
சிறகசைப்புகள் நிர்பயாக்களையம்
வினோதாக்களையும் நினைவுறுத்தி
முற்றுப் பெறாதன ஸ்வாதியும்
தொடர்கதையாகுமென சத்தமிடுகின்றன
ஒளிந்து கொள்ள தோனுகிறது
ஓழியாத வன்முறையால்
எங்கோ நடக்கிறது எவருக்கோ என
சும்மாயிருக்க முடியவில்லை
பிறத்தலைவிட இறத்தல் எளிதாயுள்ளது
கைக்கூலிகளால்
வாழ்வு அச்சங்களால்
நகர்த்தப்படுகின்றது (ப.20) என்ற கவிதையின் மூலம் சமூகச் சீரழிவு, கைக்கூலிகள் பணத்திற்காகவும் செயல்படுதல், பெண்கள் சுதந்திரம் பறிக்கப்படுதல், கௌரவக் கொலைகள் வாடிக்கையாகிப் போன நிலையை விளக்குகிறார்.

திருமணத்திற்கு முன்னுரிமை

அன்று பெண்களுக்குச் சுதந்திரம் இல்லை. பெண் பருவம் அடைந்தால் உலக்கை தடுப்பாகப் போடப் பட்டது. சுதந்திரம் இல்லை. வீட்டுக்குள்ளே பெண் களைப் பூட்டிவைத்தனர். உலகம், ரேடியோவோடு முடிந்தது என்பதை,

2016ல்
உலக்கைகள் முறிந்தன
உடைகள் மாறின
ஓடவும் ஆடவும் உறங்கவுமாய்
எல்லைகள் விரிந்தன
உலகம் ஒரு விரலில்
கல்விக்கே முதலிடம்
அச்சம் இன்றி வாழும் காலம்
எப்போதும் இல்லை ... (ப.12) என்ற கவிதையின் மூலம் சுதந்திரம் கிடைத்த பின்பு உலக்கை தடுப்பு முறிந்தது, உடைகள் மாற்றம், நாகரீகம் பிறந்தது, பெண் சுதந்திரமாக வெளியே போக வாய்ப்பு கிடைத் தது, எல்லைகள் விரிந்து பெண்கள் ஓடவும் ஆட வும் கல்விக்கே முதலிடம் தருவதைக் கவிஞர் கூறு கின்றார்.

காந்தி கனவு

உயிரற்ற சாமி சிலைகளைக்கூட ஆண்கள் சூழ்ந்து புடைசூழத் தூக்கிக்கொண்டு போகக் கூடிய அவலம் சமூகத்தில் நிலவுவதைச்

தொடர்ச்சி: பக். 118

ISSN 2320-4842

பழமொழி நானூறு வலியுறுத்தும் இல்லறக் கூறுகள்

இரா. ஹேமலதா
முனைவர் பட்ட ஆய்வாளர் (Ref.No: 47437/Ph.D.K8/Tamil/Full Time/January 2013/Dt: 15.02.2024)
நெறியாளர்: **முனைவர் ம. இளையராஜா**
இணைப் பேராசிரியர் – துறைத்தலைவர், தமிழாய்வுத் துறை, அரசுக் கலைக் கல்லூரி
அரியலூர் 621 713 (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச்சுருக்கம்

அறநூல்கள் யாவும் இல்லறம் பற்றிய நெறிமுறைகளை எடுத்துக்கூறுகின்றன. இல்லறம், துறவறம் என்ற இரண்டையும் வெவ்வேறு முறையில் இவை வெளிப்படுத்துகின்றன. இவை இரண்டும் தமிழ் அறநூல்களின் இலக்கியக் கொள்கை எனலாம். அறநூல்களில் சில அதிகாரம் என்றும் தலைப்பிட்டு அதனுள் இல்லறத்திற்கும் துறவறத்திற்கும் பாடல் களைப் பதிவுசெய்துள. இதில் திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். 1948இல் கழக வெளியீடாக வந்த பழமொழி நானூறு பொருளடிப்படையில் நான்கு பகுப்புகளில் 34 பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. சென்னை, சாரதா பதிப்பகம், மார்ச்சு 2009இல் வெளியிட்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும் (பக்.1041-1276) எனும் நூலில் இல்வாழ்க்கை எனும் பகுதியிலமைந்த 9 பாடல்கள் மட்டும் இக்கட்டு ரையில் ஆராய மூலமாகக் கொள்ளப்பெற்றுள்ளன.

கருவிச்சொற்கள் (Keywords): இல்லறக்கூறுகள், குறிப்பறிதல், நிறைகாத்தல், புதல்வரை வளர்த்தல், பெண்மை.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

ஆணும் பெண்ணும் மணமுடித்துக் குடும்பம் நடத்துதல் *இல்வாழ்க்கை* ஆகும். மனைவி *வாழ்க்கைத்துணை* எனப்படுகிறாள். இல்வாழ்க்கை நடத்துவதை *இல்லறம்* எனக் குறிக்கின்றனர். இல்லறமே சிறந்தது என்பது பலரின் கருத்தாகும். அதாவது துறவறத்தினும் இல்லறம் மேம்பட்டது என்பது இதன் பொருள். இல்வாழ்க்கை என்பதன் பண்பை விளக்கும் பரிமேலழகர், ***அஃதாவது இல்லாளோடு கூடி வாழ்தலினிது சிறப்பு, இல்நிலை அறம் செய்தற்குரிய இருவகை நிலையுள் முதல் ஆதலின் இஃது அறன் வலியுறுத்தலின் பின்வைக்கப்பட்டது (குறள். ப.23)*** என்கிறார்.

இல்வாழ்க்கையில் மனைவியின் சிறப்பே கணவனுடைய சிறப்பாகவும் புகழுடையதாகவும் பேசப்படுகிறது. பிசிராந்தையார் என்ற புலவர் தாம் நரையில்லாமல் இருப்பதற்குரிய காரணம் கேட்டபோது ***மாண்ட என் மனைவியொடு மக்கள் நிரம்பினர்*** எனக் கூறுகின்றார்.

***யாண்டுபல வகை நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே (புறம்.191).***

மேற்சுட்டிய தொடர் இடம்பெற்ற செய்யுள் இது. இதன்கண் பலர் கூறப்பட்டிருப்பினும் மனைவியையும் இணைத்துக் கூறுவது எண்ணத்தக்கது. ***மாண்டவென் மனைவியொடு...*** என்பதற்கு ஔவை சு. துரைசாமிப் பிள்ளை ***மனைக்கிழத்திக்கு நற்குண நற்செய்கைகளை உடையவளாதல் அவளுக்கு மாண்பு. மக்கள்பால் நிரம்புதற் கமைந்தது அறிவாதலால் அறிவு நிரம்பினார் என்றும், மனை வாழ்வாலும், மிகப் பெற்று வளர்த்தலாலும் மனைவிக் கும் இயற்கையறிவு மிகுந்து நிரம்புதலின் மனையொடு எனச் சிறப்பித்துக் கூறுகிறார் (ப.444).***

பழமொழி நானூற்றில் அமையும் இல்லறம் பற்றிய செய்திகளைப் பின்வருமாறு பகுக்கலாம்: 1. நற்குணங்கள், 2. பிறர்மனை நயவாமையும் நிறைக்காத்தலும், 3. புதல்வரை வளர்த்தல், 4. பெண்மைக் குணம், 5. மனையாள் விருப்பம்.

பழமொழி நானூற்றில் இல்லறம் பற்றிக் குறிப்பாக மனையாள் குறித்து ஒன்பது பாடல்களும், கணவன்மார் பற்றி ஒரு பாடலும் கூறப்பட்டுள்ளன. பிறர் மனை நயவாமையில் ஒரு பாடல் பொதுவாக ஆண்கள் பற்றி இடம்பெறினும் (337) அது இங்குக் கணவன்மாரைக் குறித்தது எனக் கொள்ளலாம். ஆண்களுக்குரிய பொது

ஒழுக்கமாக இது கூறப்பட்டுள்ளது.

1. நற்குணங்கள்

இல்லறப் பெண்கள் பெற்றிருக்க வேண்டிய நற்குணம் பற்றிப் பழமொழி நானூறு ஒரு பாடலில் (331) விளக்குகிறது. திருக்குறள் போன்ற நீதி இலக்கியங் கள் எடுத்துக்கூறும் பண்புகளுக்கு ஒப்ப இந்நூலிலும் சில பண்புகள் சுட்டப்படுகின்றன.

சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பிற்றம்
இல்லாறே வந்த விரும்தோம்பிச் - செல்வத்
திடரின்றி ஏமாந்திருந் தாரே நாளும்
கடலுள் துலாம்பண்ணி னார் என்பது பழமொழி நானூறு.

கணவன் சொல்லாமலே அவன் உள்ளத்து உணர் வைப் புரிந்துகொண்டு செயற்படும் மனைவியர் சிறந் தவர் ஆவர். அத்தகு பெண்கள் வந்த விருந்தினர் களை வரவேற்றுப் பேணுதற்குரிய செல்வமெல்லாம் பெற்றவர் ஆவர். இவர்களுக்குச் செல்வக் குறை யிராது. கடலில் ஏற்றம் இட்டு இரைப்போர்க்கு நீர் குறையாதவர்களை ஒத்தவர்கள் இவர்கள் என்று இப் பாடல் குறிப்பிடுகிறது. இங்குப் பெண்களின் நற்குண மாவது கணவனின் குறிப்பறிந்து நடந்துகொள்ளும் பண்பாகும்.

மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (குறள்.51) என்ற குறளுக்கு, ***மனையறத்திற்கு வேண்டிய நற்குண நற்செயல் களைப் பெற்றிருத்தல்*** எனப் பொருள் கூறும் பரிமேல ழகர், மனையாளின் நற்குணங்களைப் பின்வருமாறு விளக்குகிறார்.

நற்குணங்களாவன: துறந்தார்ப் பேணலும் விருந்து அயர்த லும் வறியார் மாட்டு அருளுடையமையு முதலாயின. நற் செயல்களாவன. வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும், அட்டில் தொழில் வன்மை யும், ஒப்புரவு செய்தலும் முதலாயின. வருவாய்க்குத் தக்க வாழ்க்கையாவது: முதலை அறிந்து அதற்கு இயைய - இதனால் இவ்விரண்டு நன்மையும் சிறந்தன என்பது கூறப்பட்டது (குறள்.52, ப.28) என்கிறார் அவர். இதுபோன்ற நற்குணங்கள் பல இருப்பினும் கணவ னின் *குறிப்பறிந்து நடத்தலை* மட்டும் பழமொழிநானூறு கூறுகின்றது.

2. பிறன்மனை நயவாமையும் நிறைகாத்தலும்

பிறன்மனை நயவாமையும் நிறைகாத்தலும் ஆண்க ளுக்கும் பெண்களுக்கும் கூறிய அறப்பண்புகள். பிறன் மனை நயவாமை ஆண்களுக்குரியது. பிறனுடைய மனைவியை விரும்பாமை என்பது இதன் பொருள். இஃது ஒரு பாவச் செயலாகவே கருதப்பெறும். தலை யாய அறநூலாகக் கருதப்பெறும் திருக்குறள்,

பிறர்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு (148) என்கிறது. ***அஃதாவது காம மயக்கத்தால் பிறனுடைய இல்லாளை விரும்பாமை. இஃது ஒழுக்கம் உடையார்மாட்டே நிகழ்வ தாதலின், ஒழுக்கம் உடைமையின் பின் வைக்கப்பட்டது*** என்கிறார் பரிமேலழகர். பிறர்மனையில் *தமியராய்ப் புகாமை* என்னும் தலைப்பில் அமைந்த பழமொழி நானூறு வெண்பா, பிறன்மனை நயவாமையை வலி யுறுத்துகிறது.

தூய்மை மனத்தவர் தோழர் மனையகத்தும்
தாமே தமியர் புகல்வேண்டா - தீமையான்
ஊர்மினின் இல்லை கரியோ ஒலித்துடன்
நீர்மிகின் இல்லைச் சிறை. (336)
என்பது பாடல். உற்ற நண்பர்கள் இல்லமாயினும் தூய மனத்தவர் தனியே தங்குதல் கூடாது என்பது வலி யுறுத்தப்பட்டுள்ளது. இப்பாடலில் அமைந்த பழமொழி யாகிய ***நீர்மிகின் இல்லைச் சிறை*** எனும் முன்றுறைய ரையனார் கூறியதற்குக் காலத்தால் மிகவும் முற்பட்ட புறநானூற்றில் ***நீர்மிகிற் சிறையும் இல்லை (புறம்.51:1)*** என்றும்,

காப்புடை யுள்ளங் கனற்று பவரே
செருப்பிடைப் பட்ட பால் (121:3-4) என்ற பழமொழி நானூறு ***பாடலுக்குச் செருப்பிடைச் சிறுபரல் அன்னன் (புறம்.257:1)*** என்பதாலும் பழமொழிகளின் தொன் மை புலப்படுகின்றது.

பெண்கள் தம் கற்பைக் காத்து ஒழுகுதல் வேண்டும் என்பது நிறைகாத்தலாம். நிறை-கற்பு. இது ஒழுக்கம் சார்ந்தது, இவ்வொழுக்கமே பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய நற்குணங்களில் தலைசிறந்தது என்பதை எல்லோரும் அறிவர். அறநூல்கள் இதனையும் வற் புறுத்துகின்றன. ***மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை*** (51) என்பது திருக்குறள். சிறை-மதில், வாயில்கள் முதலாயின.

நிறையான் மிகுகல்லா நேரிழை யாரைச்
சிறையான் அகப்படுத்தல் ஆகா - அறையோ!
வருந்த வலிதினின் யாப்பினும், நாய்வால்
திருந்துதல் என்றுமோ இல். (337) என்பது பழமொழி. இல்லறப் பெண்கள் சிறை முதலிய காவல்களால் தம் கற்பினைக் காத்தல் முடியாது. தாமே உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும் என்பது கருத்து.

3. புதல்வரை வளர்த்தல்

பெற்ற மக்களை வளர்த்தலில் தந்தையினும் தாய்க் குப் பெரும் பொறுப்பு உள்ளது. தாயின்றிக் குழந் தையை வளர்த்தல் கடினமாகும். ***ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே (புறம்.312:1)*** என்று தன் கடமை யைத் தாயே கூறுவதாகப் புறநானூறு கூறுகின்றது.

அஃதாவது, இருபிறப்பாளர் மூவராலும் இயல்பாக இறுக் கப்படூஉம் கடன் மூன்றனுள் முனிவர் கடன் கேள்வியா னும் தேவர் கடன் வேள்வியானும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லது இறுக்கப்படாமை யின் அக்கடன் இறுத்தற் பொருட்டு நன்மக்களைப் பெறு தல் (அதி.7, ப.31) என்கிறார் பரிமேல ழகர்.

சீதை கணவனைப் பிரிந்து தனித்திருக்கும்போது, தன் கணவன் இராமனின் செய்கை முதலியவற்றை எண் ணிப் புலம்புவது இக்கருத்துடன் ஒப்பு நோக்கத்தக்கது.

அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்தும்
விருந்து கண்டபோது என்னுறு மோ (சுந்தரகாண்டம், 5083:1-2) என எண்ணுகிறாள். இவ்வாறு பழமொழி நானூறு பன்மைப்பொருளில் குறிப்பறிதலைக் குறிப் பிடுகின்றது.

எந்நெறியானும் இறைவன்தன் மக்களைச்
செந்நெறிமேல் நிற்பச் செயல் வேண்டும் - அந்நெறி
மான் சேர்ந்த நோக்கினாய்! ஆங்கவணங்காகும்
தான்செய்த பாவை தனக்கு (332)
தந்தை பிள்ளைகளை நன்னெறியில் செலுத்த வேண் டும். அதுவே தாய்க்கும் உரியதாகும்.

தான் பெற்ற பிள்ளைகள் அனைத்திற்கும் அன்புடன் பரிவு காட்டி வளர்க்கும் தாய்க்குச் சில பிள்ளைகள் மீது மிகுந்த பொறுப்புணர்ச்சி உண்டாவது இயற்கை. இதனை,

ஒக்கும் வகையான் உடன்பொரும் சூதின்கண்
பக்கத் தொருவன் ஒருவன்பாற் பட்டிருக்கும்
மிக்க சிறப்பினராயினும் தாயர்க்கு
மக்களுள் பக்கமோ வேறு (பழ.333) என்கின்றது.

தலைவியின் ஊடல் தணிவிக்கப் பாணனைத் தூதாகத் தலைவன் தலைவியிடத்து அனுப்புவான். அச்சூழலில் பாணன் கூறுவதையும் தலைவியின் விடையையும் விளக்குமாறு 333ஆம் பாடல் அமைகிறது. இல்லற நிகழ்ச்சிகளில் ஒன்றாகப் பாடப்பட்டுள்ளது. தொடித் தோள் மடவாராகிய மனைவியர் தன் கணவன் பிரிந்து பரத்தையரை நாடியிருந்தபோது பாணன் தூதாக வந் ததைத் தலைவி மறுத்து மறுமொழி கூறுகிறாள். இதனை விளக்குவதாக,

தொடித்தோள் மடவார் மருமந்தன் ஆகம்
மடுத்தவர் மார்பில் மகிழ்நன் மடுப்ப
நெறியல்ல சொல்லனீ பாண அறிதுயில்
ஆர்க்கும் எழுப்பல் அரிது (333) என்ற பாடல் அமைந்துள்ளது. இதுபோன்றே மனைவியரின் மற்ற பல குணங்கள் பழமொழி நானூற்றில் பாடப்பட்டுள.

4. பெண்மைக் குணம்

பெண்களுக்குரிய பொதுப்பண்பாக அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்கையும் தொல்காப்பியம் கூறுகிறது.

அச்சமும் மடமும் நாணும் பயிர்ப்பும்
மிச்சமும் பெண்பாற் குரிய (தொல்.அகத்.5) என்பது அது. இதில் நாணம் என்ற பண்பு பெண்களுக்கு, குறிப்பாக இல்லறப் பெண்களுக்கு மிகவும் தேவை எனத் தொல்காப்பியம் வலியுறுத்துகிறது.

நாணின்றி ஆகாது பெண்மை நயமிகு
ஊணின்றி ஆகாது உயிர் வாழ்க்கை - பேணுங்கால்
கைத்தின்றி ஆகா கருமங்கள் காரிகையாய்
வித்தின்றிச் சம்பிரத மில் (பழ.328) என்ற பாடலுக்குப் பொழிப்புரையாக, ***பெண்ணே! ஆராயுங்கால் பெண்மைக் குணம் நாணின்றி உளதாகாது. உயிர் வாழ்க்கை சுவை மிக்க உணவின்றி உளதாகாது. காரியங்கள் கைப்பொரு ளின்றி உளவாகா. வித்தின்றி விளைவு இல்லை (ஆசிரியர் குழு, பா.328)*** எனக் கூறப்படுகிறது (ப.125). ஆகப் பெண்களுக்கு அடிப்படையில் தேவையான குணம் நாணம் என்பது இதனால் பெறப்படும். ***சால்பு பண்பு முதலிய குணங்களால் நமக்கு ஒவ்வாத கருமங்களில் நாணுதல் உடையராந் தன்மை (பரி., அதி.102, ப.404)*** என்கிறார் பரிமேலழகர். ***நாணுடைமை மாந்தர் சிறப்பு*** என்றும் திருக்குறள் குறிப்பிடுகின்றது (குறள்.1011). ***மனம், மொழி என்பவற்றின் அடக்கத்தால் வருவன பெண் களுக்குரிய நாணம் என்பது ஒரு கருத்து (பரி., குறள். 1011, ப.404).***

பெண்களுக்கு நாணம் மிக முக்கியமானது. இங்குப் *பெண்மை* என்று பொதுப்படக் கூறியுள்ளது இல்லறப் பெண்களையே குறித்தது.

5. மனையாள் விருப்பம்

கணவனால் பிரிவின்றிப் பாதுகாக்கப்படும் மனைவி யர் தம் பற்றுதலைக் குறையாமல் மேலும் மேலும் விரும்பிப் பழக எண்ணுவர். அவர்கள் கொண்டுள்ள ஆசைஅளவில் அடங்காது போகும். அது அளவின் றிச் செல்லுமானால் இன்னல்கள் வந்து சேரும். பாம் பின் இருப்பிடத்தைத் தோண்டும்போது ஓரளவு தாண்ட வேண்டும். விஞ்சினால் பாம்பே வெளிவந்து துயர் தரும் என்கிறார். அன்பு ஓர் எல்லை அமையக் கணவனைப் போற்றுதல் இல்லறத்திற்கு நன்றாம். *கண்ணம்மா என் குழந்தை* என்ற பாடலில் அன்பு ணர்வு எல்லையின்றிப் போவதைப் பாரதியார்,

ஓடிவருகையிலே - கண்ணம்மா
உள்ளங் குளிருதடி
ஆடித் திரிதல் கண்டால் - உன்னைப் போய்
ஆவி தழுவுதடி
உச்சிதனை முகந்தால் - கருவம்
ஓங்கி வளருதடி
மெச்சி யுனையூரார் - புகழ்ந்தால்
மேனி சிலிர்க்கு தடி.
கன்னத்தில் முத்தமிட்டாள் - உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி
உன் கண்ணில் நீர்வழிந்தால் - என்நெஞ்சில்
உதிரங் கொட்டுதடி
உன்னைத் தழுவிடிலோ - கண்ணம்மா
உன்மத்த மாகுதடி (கண்ணம்மா என்குழந்தை, பா.3-5) எனப் பாடுகிறார். இதுபோன்ற கருத்தையே பழமொழிநானூறு கூறுகிறது. திருக்குறளில் இல்லறத் துப் பெண்கள்,

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் (குறள்.56) என்று மற்றவர் கூறும் அளவிற்கு அடக்க உணர்ச்சி பெற வேண்டும் என வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

முடிவுரை

இல்லறப் பெண்களுக்குச் சிறப்புத் தரும் நற்குணம் வலியுறுத்தப்படுகிறது. எல்லாப் பண்புகளும் இதனுள் அடங்கும். இதில் சிறந்த பண்பாக *நாணம்* எடுத்துக்

கூறப்படுகின்றது. பெண்களின் நற்குண நற்செய்கைகளை விளக்கச் சிலப்பதிகாரம் மிகுதியாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. கணவனின் குறிப்பறிந்து செயலாற்றும் இல்லறப் பெண் போற்றப்படுகிறாள். புதல்வரை வளர்த்தலில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள பொறுப்பு விளக்கப்படுகிறது. தாயருக்குள்ள தனிச்சிறப்புக் கூறப்பட்டுள்ளது. தந்தையின் கடமை தம் பிள்ளையை அறிவிற் சிறந்தவனாய் வளர்த்திட வேண்டும். அவ்வாறு வளர்த்தால், அப்பிள்ளை தந்தைக்குத் தெய்வமாகத் திகழ்வான். உற்ற நண்பர்கள் இல்லத்தில் தூய்மை மனத்தவர் தங்குதல் வேண்டா என வலியுறுத்தப்பட்டுள்ளது. தலைவனின் பரத்தையர் ஒழுக்கம் மறுத்துப் பேசப்படுகிறது. இல்லறப் பெண்கள்தம் கற்பினைக் காவல்களால் காத்தல் இயலாதது. எனவே அவர்களே உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

114ஆம் பக்கத் தொடர்ச்சி

சுட்டுகிறார்.

நட்ட நடு இரவு
பன்னிரண்டு மணி
உடல் நிறைய நகைகளுடன்
ஒற்றைப் பெண் ஊர்வலமாய்
ஆண்கள் புடைசூழ
இந்தியாவா இது ஓ! ...

மாரியம்மன் (ப.31) என்ற கவிதையில் உயிரற்ற சிலையாக இருப்பதால்தான் மாரியம்மனே ஊர்வலம் போகமுடிகிறது. உயிருள்ள பெண்ணாக மாரியம்மனே வந்தாலும் ஆண்களிடமிருந்து தப்பமுடியாத நிலை நீடிக்கிறது என்று ஆதங்கப்படுகிறார் கவிஞர் மு.கீதா.

பாரதி கண்ட புதுமைப்பெண்கள்

எதையும் துணிவாய்ச் செய்யப் பெண்ணினத்தை இகழ்ந்தவர்களின் வாயடைத்துச் சரித்திரம் படைக்கச் சங்கென முழங்கிப் புன்னகையோடு உலகைச் சந்திக்கப் புறப்பட்டார்கள் இன்றைய புதுமைப்பெண்கள். இதனை,

நிலம் பார்க்க நடந்தவளே
விண்ணில் நடைபயின்றாள்
இமயம் தன் காலடியிலென
இனிதே அறைகூவினாள்
கட்டி வைத்த மடமைகளை
காட்டுத்தீயாய் கருகிடச் செய்தாள்

தன்னோடு தன் குடும்பத்தையும்
தரணி புகழச் செய்திடுவாள் (ப.89) என்ற கவிதை மூலம் கண்மூடித்தனமாக அடிமையாக வாழாது சிந்தித்து உறுதியோடு செயல்படுகிறவர்களாய்ப் பெண்கள் வாழ முற்படவேண்டும் எனும் கருத்தைக் கவிஞர் முன்வைக்கிறார்.

முடிவுரை

இக்கட்டுரையில் ஆணாதிக்கச் சமூகம், பெண்சிசுக் கொலை, பாலியல் துன்புறுத்தல், ஆணாதிக்கப் படுகொலைகள், பெண்ணியம் பற்றிய கருத்துகள் ஆராயப்பட்டுள்ளன. இவற்றின்மூலம் கவிஞர் மு. கீதாவின் கவிதைகள் அவரவர் மனங்களைச் சுடும் தோட்டாக்களாய் மிளிர்கின்றன என்பது தெளிவாகிறது.

துணைநூற் பட்டியல்

அபர்ணாமகந்தா. *மார்க்சியமும் பெண்நிலை வாதமும்.* சென்னை: பொன்னி நிறுவனம், இரண்டாம் பதிப்பு, 1990.

இராசா முதலியார், கி. *பெண்ணும் பெண்மையும்.* சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., முதற்பதிப்பு, 2008.

கீதா, மு. *மனம் சுடும் தோட்டாக்கள்.* தேவதா தமிழ், 2017.

குருநாதன், இராம. *பெண்ணியம்.* சென்னை: கலைஞன் பதிப்பகம், முதற்பதிப்பு, 2001.

பிரேமா, இரா. *பெண்ணியம் அணுகுமுறைகள்.* சென்னை: தமிழ்ப் புத்தகாலயம், 2000

ஜெயக்குமார், சி. (ப.ஆ.). *திருக்குறள் மூலமும் உரையும் (பரிமேலழகர் உரை).* சென்னை: அருணா பப்ளிகேஷன்ஸ்,

துணைநூற் பட்டியல்

இளம்பூரணர் (உ.ஆ.). தொல்காப்பியம் முழுமையும். சென்னை: சாரதா பதிப்பகம், 2005.

கோபால கிருஷ்ணமாச்சாரியார், வை.மு. (உ.ஆ.). *கம்ப ராமாயணம்-சுந்தரகாண்டம்.* சென்னை: உமா பதிப்பகம், 2006.

கௌமாரீஸ்வரி,எஸ்., *பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும்: 15. பழமொழி நானூறு,* பக்.1041-1276, சென்னை: சாரதா பதிப்பகம், 2009.

துரைசாமிப்பிள்ளை,ஔவை சு. (உ.ஆ.). *புறநானூறு மூலமும் உரையும்.* சென்னை: சாரதா பதிப்பகம், 2 ஆம் பதிப்பு, 2017.

பாரதியார், “கண்ணம்மா என் காதலி.” பாரதியார் பாடல்கள். சென்னை: தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, திருத்திய மூன்றாம் பதிப்பு, 2001.

ஜெயக்குமார், சி. (ப.ஆ.). *திருக்குறள் மூலமும் உரையும் (பரிமேலழகர் உரை.).* சென்னை: அருணா பதிப்பகம், 2015.

My mind to me a kingdom is;
Such present joys therein I find,
That it excels all other bliss
That earth affords or grows by kind:

- Sir Edward Dyer

Life is an opportunity, benefit from it.
Life is beauty, admire it.
Life is a dream, realize it.
Life is a challenge, meet it.

- Mother Teresa

ISSN 2320-4842

ஞானநெறிக்கு வழிகாட்டும் திருப்புகழ்

நா. மாமலைவாசன்
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்) (Ref.No.17076/Ph.D.K8/Tamil/P.T./Extn.1&2/ Re.Regn./July 2015/Dt: 20.07.2023

நெறியாளர்: **முனைவர் ச. இரமேஷ்**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம் 612 002 (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச் சுருக்கம்

திருப்புகழில் வாழ்வியல் நெறிகள் எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் முனைவர்பட்ட ஆய்வின் ஒரு பகுதியாக இங்குத் திருப்புகழ் பாடல்கள்வழி அறியலாகும் ஞானம் தொடர்பான செய்திகளை விளக்குவதாக ஞானநெறிக்கு வழிகாட்டும் திருப்புகழ் எனும் இக்கட்டுரை அமைகின்றது.

கருவிச்சொற்கள் (Keywords): இறைவழிபாடு, ஞானநெறி, பிறப்பறுத்தல், புத்தி.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

ஞானம் என்பதற்குத் *தெளிந்த அறிவு* என்று பொருள். இச்சொல் பல்வேறு துறைகளிலும் பல்வேறு நிலைகளிலும் பயன்படுத்தப்பட்டுவருகிறது. *ஞானம்* என்பது தேடக் கிடைப்பது; தேடலில் கிடைத்து இன்புறத் தக்கது; தன்னைப் பெற்றவர்க்குப் பெரும் பேறு தருவது எனலாம். *ஞானம்* எனும் பதத்திற்கு ***அறிவு, இராசு குணத்தொன்று. கல்வி; தெளிவு; சாத்துவிக குணத்தொன்று; நல்லொழுக்கம்; பரஞானம்; தத்துவநூல்*** எனக் கழகத் தமிழ் அகராதி (ப.505) பொருள் தருகிறது.

அறிவில் சிறந்தவரை *ஞானியர்* என்றழைப்பது தமிழர் வழக்கம். துன்பத்தைக் கடந்து வாழ்வினை நடத்திட ஞானம் தேவை. ஆனால் அந்த ஞானம் எப்போது பிறக்கிறது என்பது மிகப்பெரிய கேள்வியாகிறது.

நூலிடையில் கீழமுந்தி
ஆலிலையின் மேல்விழுந்து
ஆயகலை கொண்டதொரு காலம் - இன்று
நோய்வழியில் வந்ததடி ஞானம் (ரவீந்திரன், பா.78, ப.133) என்ற கண்ணதாசனின் கவிதையடிகர்கள் நோயின் மூலம் ஞானம் வந்ததாக உரைக்கிறது.

ஞானம் பெறும் வழி தேடிப் பலரும் அலைகின்றனர். போலியான ஞான வழிகளில் சிக்கிய பின்னரே பலரும் தெளிகின்றனர். இங்குத் திருப்புகழ் கூறும் ஞானநெறிகள் பற்றி அறியலாம்.

ஞானம் என்பது என்ன?

எந்த ஒரு பொருள் அல்லது செயல் தொடர்பான தெளிவான அறிவின்மையும் தெளிவின்மையுமே மக்களைத் தவறான பாதைக்கும் தவறான வாழ்விற்கும் இட்டுச் செல்கின்றது. ஞானம் என்பது அறிவு. ஒரு பொருள் அல்லது செயல் தொடர்பான தெளிவான அறிவே ஞானமாகும்.

இன்று மக்களிடையே கற்றலால் மட்டுமே அறிவைப் பெருக்க முடியும் என்ற தவறான மனப்போக்கு உள்ளது. ஆனால், கற்றல் என்பது பல்வேறு வழிகளிலும் நிகழ்கிறது. ஆன்மீக நூல்களும், பக்தி இலக்கியங்களும் ஞானம் பெறும் வழிகளாக நமது ஐம்புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி இவற்றைக் கூறி, அதனை ஞானேந்திரியங்கள் என்றும் ஞானேந்திரியங்கள் வழியே அறிவு ஆகிய ஞானம் வளர்வதாகவும் கூறுகின்றன.

ஞான இந் திரியங்கள் நன்றா உரைக்கக்கேள்
ஊனமிகு பூதம் உற்றுஇடமா - ஈனம்ஆம்
சத்தஆதியை அறியும் தானம்செவி தோல் கண்
அத்தாலு மூக்கு என்று அறி (வைத்தியநாதன், பா.11, ப.19)

திருப்புகழும் ஞானமும்

திருப்புகழின் ஆசிரியரான அருணகிரிநாதர் தனது அறிவின்மையால் தவறான நெறியைக் கைக்கொண்டு துன்புறுகிறார். இந்நிலையில் தனது உயிரை மாய்த்துக்கொள்ள நினைக்கிறார். இத்தகைய வாழ்வின் விளிம்பில்

ஞான பண்டிதன் எனப்படும் முருகன்வழி ஞானம் அறிகிறார். அவர் பெற்ற ஞானம் பற்றியும் தனக்கு மேலும் தேவையான ஞானம் பற்றியும் பல பாடல் களில் பதிவுசெய்துள்ளார்.

புத்தியை வெல்லும் ஞானம்

ஞானம் குறித்த அருணகிரிநாதரின் பார்வை புதுமை யாக உள்ளது. நமது சிற்றறிவினைக் கடந்து அதனை வெல்லுவதை ஞானம் என்கிறார் அவர்.

மனமெனும் பொருள் வானுறை கால்கனல்
புனலுடன் புவி கூடியது ஓருடல்
வடிவு கொண்டு அதிலே பதிமூணெழு வகையாலே
வருசுகந் துயர் ஆசையிலே உழல்
மதியை வென்று பராபர ஞானநல்
வழி பெறும்படி நாயடியேனை நினருள் சேராய் (திருப். 876)

மனம் என்பதுடன் வானம், காற்று, தீ உள்ளிட்ட ஐம் பூதங்களை உள்ளடக்கிய தேகத்தையும் அதிலுள்ள சிவத்தத்துவம் நீங்கலான மூலப்பொருள்கள், அசுத்த தத்துவம், சுந்தர தத்துவம் உள்ளிட்ட 91 வகையான தத்துவக் கூட்டங்களைக் கடந்து வாழ்வில் அன்றாடம் எதிர்கொள்ளும் இன்பம், துன்பம், ஆசை இவற்றால் உழன்றிடாது அவற்றுக்குக் காரணமான புத்தியை வென்று மெய்யான பேரறிவான ஞானம் அடைய அருள் தாராய் என முருகனை இறைஞ்சுவதாகப் பாடல் அமைந்துள்ளது.

இங்கு மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றான திருவுந் தியாரின் கருத்து ஒப்புநோக்கத்தக்கது.

சொல்லும் பொருள்களும் சொல்லா தனவும் அங்கு
அல்லனாய் ஆனான் என்று உந்தீப்பற
அம்பிகை பாகன் என்று உத்தீப்பற (திருவுந்தியார், 21, ப.21)

நமது அறிவினால் அடையாளம் கண்டு கொள்ளப் படும் சொல்லாகவும் பொருளாகவும் இருப்பவன் மட்டுமே கடவுளன்று. அதனையும் கடந்து சொல்லற் கரியனாகவும் பொருளுக்குள் அடங்காதவனாகவும் இருப்பவன் இறைவன். அவனை அறிவதே ஞானம் என்கிறது.

ஆகவே, இறைவனை அறிவதே ஞானம் என்ற திரு வுந்தியாரின் கருத்தினை முன்மொழிவதாகத் திருப் புகழ் பாடல் அமைகிறது.

இறைவழிபாட்டின் மூலம் ஞானம்

ஞானேந்திரியங்கள் வழியே நாம் ஞானத்தைப் பெற லாம். எனினும் அவை கருவி மட்டுமே. ஞானமா கிய மூலம் எங்குள்ளது எனத் தேடக் கிடைக்கும். அந்த வகையில் அருணகிரிநாதர் இறைவழிபாட்டின் மூலம் ஞானத்தைத் தேடலாம் என உரைக்கிறார்.

தாரணிக் கதி பாவியால் வெரு
சூதும் எத்திய மூடனாய் மன
நாதனைக் களவாணியாய் உறும் மதிமோக
தாபமிக்குள், வீணனாய்... (திருப்புகழ், பா.655) எனத் தொடங்கும் பாடலில் பூமியின் மீதும், இகபர சுகங் கள்மீதும் பற்றுக் கொண்டு பாவியாகவும், சூது எனும் வஞ்சனை நிறைந்த எண்ணங்கள் உள்ளவனாகவும், மூடனாகவும் அறிவற்றுக் காம மோகம் கொண்டும் அலைந்ததை எண்ணி வருந்திய அருணகிரிநாதர்,

பூரணச் சிவஞான காவியம்
ஓது தற்புணர் வனாநேயர்கள்
பூசு மெய்த்திரு நீறிடா இருவினை யேனைப்
பூசி மெய்ப்பதமான செவடி
காண வைத்தருள் ஞானமாகிய
போதகத் தினையேயும் ஆறருள் புரிவாயே (திருப். 655) என்று தனக்கு ஞானம் கிடைத்தற் பொருட்டு சிவஞான நூல்களைக் கற்றிடவும் நிலையாமையாகிய தத்துவ ஞானத்தை உரைக்கும் திருநீற்றைப் பூசிட வும், அதன் மூலம் இருவினைகளை நீக்கியருளவும், உனது திருவடிகளைக் கண்டு இன்புற்று ஞானம் அடையவும் வழி தருக என வேண்டுகிறார். இங்குக் கற்றலின் வழியாகவும், செய்கையின் வழியாகவும், இறைவழிபாட்டின் மூலமாகவும் ஞானம் அடைய முடியும் என்ற நம்பிக்கையினை அருணகிரிநாதர் விதைக்கிறார். அப்படி ஞானம் பெற்ற பின்னர் கூட தொடர்ந்து வழிபாடு செய்து இறையருளால் முக்தி நெறியை அடைந்திட அருளவும் வேண்டுகிறார்.

வேட்பூன் ஆகங் கெட்ட எனை உனதுமெய்
வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட
.... அருளாயே (திருப்புகழ், பா.763)

மகளிரின் மேல் மோகங்கொண்டு உடலின் பொலிவு நலம் இழந்த எனக்கு உனது மெய்யான சொற்களின் வழி ஞானத்தைத் தந்திடு என வேண்டுவதுடன், தொடர்ந்து வழிபடவும் அருள்வாய் என வரம் கேட் கிறார். இங்கு நாம் சிவபுராணத்தினைச் சிந்திக்கலாம்.

அவனருளாலே அவன் தாழ் வணங்கி (திருவாசகம், 16, ப.3).

இறைவனின் திருவட்கருணை மட்டுமே அவனைத் தொடர்ந்து வணங்கி உதவும் என்ற மாணிக்கவாசகர் கருத்துடன் ஒன்றுபடுகிறார் அருணகிரிநாதர்.

சன்மார்க்கம், சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்கள் தாம் பலவும் உணர்ந்து
நன்மார்க்க ஞானத்தை நாடி, ஞான
நேயமொடு நாதிருவு நாடா வண்ணம்,
பன்மார்க்கப் பொருள் பலவும் கீழாக மேலாம்
பதி பசு பாசம் தெரிந்துப் பரசிவனைக் காட்டு,
பின்மார்க்கச் சிவன் உடனாம் பெற்றி ஞானப்
பெருமை உடையோர் சிவனைப் பெறுபவர் காணே (274, ப.366)

சிவஞானசித்தியார் - சுபக்கம் கூறிடும் கருத்தான, இறைவனைக் காண்பது, நூல்களை ஓதுவது, அவனை உள்ளன்புடன் தொடர்ந்து வழிபடுவது இவையே ஞானம் பெறவும், இறைவனை அடையவும் ஏற்ற

வழிகள் என உரைக்கிறது.

பிறப்பறுக்கும் ஞானம்

ஞானேந்திரியங்கள்வழி நாம் பெறும் ஞானத்தின் ஊடாக நமக்குக் கிடைப்பது என்ன என்ற கேள்வி நம் எல்லோருடைய மனத்திலும் எழும். ஞானத்தின் விளைவாக நமக்குக் கிடைப்பது முக்தி. ஞானம் என் பது தெளிந்த அறிவு, தெளிந்த அறிவின் வழியே நாம் துன்பமில்லாத பெருவாழ்வினை வாழ்வோம். நம்மால் பிறருக்கும் பிறரால் நமக்கும் துன்பமில்லை எனும்போது இம்மை வினைகள் நீங்கி மறுபிறப்பு இல்லாமல் போகிறது. இதனையே அருணகிரிநாதர்,

மங்கைமார் அநுபோக தீவினைப் பவங்கள்
மங்கி ஏகிடுமாறு ஞான வித்தை தந்து
வண்டு உலாவிய நீபமாலை சற்றி இலங்க வருவாயே
(திருப். 899) எனப் பாடுகிறார். சிற்றின்பத்தில் திளைத்து, அதன்பொருட்டு மேற்கொண்ட பல்வேறு தீய வினைகளும் பாவங்களும் நீங்கிடவும், மறுமை யில்லா வாழ்வு வழங்கிடவும் ஞானம் எனும் வித்து உதவுகிறது. அதனைத் தந்திட வருக என முருகனை அழைக்கிறார் அருணையார்.

ஞானத்தால் வீடு என்றே நான்மறைகள் புராணம்
நல்ல ஆகமம் சொல்ல, அல்லவாம் என்றும்
ஊனத்தார் என் கடவர்? அஞ்ஞானத்தால்
உறுவதுதான் பந்தம், உயர் மெய்ஞ்ஞானத்தால்
ஞானத்தால் அதுபோவது, அலர்கதிர்முன் இருள்போல்
அஞ்ஞானம் விடப் பந்தம் அறும் முத்தி ஆகும்,
ஈனத்தார் ஞானங்கள் எல்லா ஞானம்,
இறைவன் அடி ஞானமே ஞானம் என்பர் (279, ப.373)

மேற்காணும்சிவஞான சித்தியார் கூறிடும் கருத்தான, ஞானத்தால் முத்தி கிடைத்திடும்; அஞ்ஞானத்தால் பந்தம் தொடரும்; பிறப்பறுத்து, வினைகளைக் களை வது ஞானம் என்றும், அதனை நல்குவது இறைவன் திருவடி ஒன்றே எனும் கருத்தும் அருணகிரிநாதரின் கருத்திற்கு வலுசேர்ப்பதாக அமைகின்றது.

ஞானம் இன்மையால் வரும் கேடு

இறைவனை அடைந்து, இறையருளோடு இரண்டறக் கலப்பதே இம்மானுடப்பிறவிப் படைப்பின் நோக்கம். அதனை நல்குவது ஞானம் மட்டுமே. அதைப் பெறு வதே வாழ்நாட் பயனாகும். இருந்தும் அதனைத் தேடாது மானுடரும் இப்புவியில் வாழ்கின்றனர்.

நல்லறிவான ஞானம் இன்மையால் வரும் கேடுகளை யும் அருணகிரிநாதர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

விந்து பேதித்த வடிவங்களாய் எத்திசையும்
இன்சரா சர்க்குலமும் வந்துலாவி
விண்டுபோய் விட்டவுடல் சிந்தைதான் உற்றறியும்
மிஞ்ச நீ விட்டவடி வங்களாலே.
வந்து நாயிற் கடையன் எந்து ஞானப்பதவி
வந்துதா........................(திருப். 901)

சுக்கிலம் எனப்படும் வித்தின் வழியாக மானுடன் பல்வேறு வடிவங்களில் பல்வேறு பிறவிகளில் பிறந்து துன்புறுவதோடு, மனத் தடுமாற்றம் அடைந்து பாவ வினைகள் மேற்கொள்கிறான். இவற்றுக்குக் காரணம் ஞானமின்மையே என்கிறார் அருணகிரியார்,

விரகமது வான மதனகலை ஓது
வெறியெனன நாளும் உலகோர்
விதரணம தான வகை நகைகள் கூறி
விடுவதன் முன் நான் அருள்தாராய் (திருப். 690)
எனச் சிற்றின்பத்தில் திளைக்கு மனிதன், காம வெறி யன், மிருகம் என ஊசியினைப் போல துளைந்துத் தைத்திடும் வார்த்தைகளால் ஞானமற்றவர் வேதனை யுறுவர் என்கிறார். மேலும், சலனமற்ற ஞானம் இலா தவர்கள் பொறுமையின்மை, ஒழுக்கக்கேடு, தருக்கம், ஆடம்பரம் இவற்றால் களைப்படைவர். வெற்றுப் பேச்சு, ஆசைவார்த்தைகளினைப் பேசியும், கேட்டும் துன்புறுவர். சரியை, கிரியை, யோகம் எனும் வழி பாட்டு நெறிகளின் அடுத்தடுத்த நிலையை எய்தாது சுழலில் சிக்கித்தவிப்பர் எனவும் உரைக்கிறார்.

முடிவுரை

இம்மை வினைகள் நீங்கி, மறுமையில்லா வாழ்வு வாழவும், அன்றாட வாழ்வில் துன்பமின்றி இன்புற்று இருக்கவும்,பேரின்ப வீட்டின் திறவுகோலான இறைவ னின் திருப்பாதத்தை அடைந்து உய்யவும் ஞானம் தேவை என்பதையும், அதனைப் பெறும் வழிகளை யும் ஞானமின்மையால் வரும் தீமையையும் அருண கிரிநாதர் அருளிய திருப்புகழ் நன்கு உணர்த்துகிறது.

துணைநூற் பட்டியல்

அறிவொளி, அ. (உ.ஆ.). *மெய்கண்டசாத்திரம் திருவுந்தி யார் - திருவியலூர் உய்யவந்த தேவநாயனார்.* சென்னை: வர்த்தமானன் பதிப்பகம், மறுபதிப்பு, 2009.

கழகப் புலவர் குழுவினர். *கழகத் தமிழ் அகராதி.* திருநெல் வேலி: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 101 ஆம் பதிப்பு, 2017.

செங்கல்வராய பிள்ளை (உ.ஆ.). *திருப்புகழ், அருண கிரிநாதர்.* சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், மறுபதிப்பு, 1999.

புலியூர் கேசிகன் (உ.ஆ.). *திருவாசகம் - சிவபுராணம் — மாணிக்கவாசகர்.* சென்னை: மங்கை வெளியீடு, மறுபதிப்பு, 2014.

ரவீந்திரன், சி.ஆர். (தொ.ஆ.). *கவிஞர் கண்ணதாசன் கவிதைகள்.* சென்னை: சாகித்ய அகாடமி வெளியீடு, மறு பதிப்பு, 2019.

வைத்தியநாதன், கு. (உ.ஆ.). *உண்மை விளக்கம் - திரு வதிகை மனவாசகம் கடந்தார்.* திருவாடுதுறை: திருவாடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முக பயிற்சி மையம், மறுபதிப்பு, 2012.

வைத்தியநாதன், கு. (உ.ஆ.). *சிவஞான சித்தியார் சுபக்கம் - அருள்நந்தி தேவ நாயனார்.* திருவாடுதுறை: திருவாடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முக பயிற்சி மையம், மறுபதிப்பு 2012.

ISSN 2320-4842

அகநானூற்றில் குறிஞ்சி நில வழிபாட்டு மரபுகள்

சு. கிருஷ்ண நந்தினி
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்) (Ref.No.05762/Ph.D.K8/Tamil/P.T./April 2018/ Confirm./dt: 13.07.2021

நெறியாளர்: **முனைவர் த. கார்த்திகேயன்**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை, அரசுக் கலைக் கல்லூரி
அரியலூர் 621 713 (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வுச் சுருக்கம்

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த சங்க கால மக்கள் தொடக்கத்தில் இயற்கையை வழிபட்டுள்ளனர். ஏறத்தாழ 500-600 ஆண்டுக் காலத் தமிழ்நாட்டு வரலாறு சங்க இலக்கியப் பனுவல்களில் பல்வேறு சமூக வளர் நிலைகளைக் கொண் டிலங்குகிறது. மரம், மலை, நெருப்புப் போன்றவற்றை வணங்கத் தொடங்கியவர்கள் பின்னர்க் கடவுள் வழிபாட்டின் பக்க மும் திரும்பியுள்ளனர். வேம்பு, பனை, ஆல், வேங்கை, ஓமை என மரம் சார் கடவுளர்கள் பற்றிப் பதிவுசெய்துள்ள சங்க இலக்கியங்களின் கடவுள் மரபு பின்பு திணைக்கு ஒரு கடவுளாக மாறியுள்ளது. முருகனை வழிபட்ட குறிஞ்சி நில மக்கள் குரவைக் கூத்தாடிப் படையல்கள் இட்டு வழிபாடு செய்துள்ளனர். குறிஞ்சித் திணை மக்கள் தம் வாழ்வில் முருகனைப் பல்வேறு நிலைகளிலும் வழிபட்டுக் கொண்டாடியுள்ளனர். முருகனும் பல நிலைகளில் குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கை யோடு நெருங்கிய தொடர்புடையவனாக இருந்துள்ளான்.

கருவிச்சொற்கள் (Keywords): அஃறிணை வழிபாடு, குறிசொல்லல், வழிபாடு, வெறியாட்டு.

***Note:** **This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn.**, 2009.*

முன்னுரை

மனிதர்களின் சமூக வாழ்வியல் கூறுகளிலிருந்தே இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. படைப்பாக்கத்திற்காகப் பெறப்பட்ட அக்கூறுகள் இலக்கியங்களில் பதிந்து அந்தக் காலகட்ட வரலாறுகளை அடுத்த காலகட்டத்திற்குத் தருகின்றன. அவற்றைச் சரியாக ஆராயும்போது அந்த இலக்கியக் காலகட்டச் சமூகச் சூழலைப் புரிந்துகொள்ள முடியும். ஐந்திணைப் பகுப்போடுகூடிய சங்க இலக்கியங்களிலிருந்து அக்கால வரலாற்றுக்கான தரவுகளைத் தேட வேண்டியுள்ளது. அவ்வகையில் மலையும் மலை சார்ந்த பகுதியுமான குறிஞ்சி நில மக்களின் வழிபாட்டுக் கூறுகள் பற்றிய செய்திகளையும் சங்கப் பனுவல்களிலிருந்து பெற முடியும். முருகனைக் கடவுளாகக் கொண்ட அந்நிலப் பகுதியில் இயற்கை வழிபாட்டோடுகூடிய முருக வழிபாடு பற்றிய பதிவுகள் அகநானூற்றுப் பாடல் களில் கிடைக்கின்றன. விரிவஞ்சி அவற்றுள் எட்டுப் பாடல்களை மட்டும் தெரிவுசெய்து இக்கட்டுரைக்குக் களம் அமைக்கப்பட்டுள்ளது.

வழிபாடு

வழிபாட்டுக்கு அச்சமே அடிப்படையென்றாலும் அவ்வச்சம் என்பது வாழ்க்கை நலம் குறித்ததாகவே அமையக் காண் கிறோம். இயற்கைச் சீற்றங்களைக் கண்டு அஞ்சிய மனிதன் அச்சத்திலிருந்து காத்துக்கொள்ள, அச்சத்திற்குக் காரண மான இயற்கையைச் சாந்தப்படுத்த அதனை வழிபடத் தொடங்கினான். இத்தகைய வழிபாட்டால் இயற்கை சாந்தியடைந் ததாக நம்பிய மனிதன் தொடர்ந்து அந்த இயற்கையை வழிபட்டால் வாழ்க்கை நலங்கள் பலவற்றைப் பெறலாம் எனும் நம்பிக்கை கொண்டான். இந்த நம்பிக்கை அவனது வாழ்க்கையில் பல கட்டங்களைச் செயலாற்றத் தொடங்கியது (சக்திவேல், ப.52) இந்த அடிப்படையில் காணும்போது குறிஞ்சி நில மக்களின் வழிபாட்டு மரபுகள் குறிப் பிடத்தக்கன. ***உழைப்பு என்னும் உணர்வு பூர்வமான செயலின் மூலமே இயற்கையிடமிருந்து பலனைப் பெறப் புராதன மனிதனால் முடிந்தது. முதலில் உழைப்புக் கருவிகளின் துணையுடனும் இயற்கையுடன் நிகழ்த்திய பரஸ்பர பாதிப்புச் செயல் முறையே மனித குலத்தை முன்னேறச்செய்தது. மிக வளமான மண், நீர்வளம், தாவரம், பழமரம், பறவை, விலங்கு, மீன் ஆகிய இயற்கையின் படைப்புகள் மனித குலத்தின் வளர்ச்சியில் மிக முக்கிய பங்கு வகித்துள்ளன (ப.30)*** எனப் புராதான மக்களின் வழிபாடு பற்றிக் குறிப்பிடுகிறார் ஆ. சிவசுப்பிரமணியன்.

சமூக வளர்ச்சியின் தொடக்கக் கட்டத்தில் இவ்வியற்கைப் பொருள்களின் பலனைப் பெறவும் இடி, மின்னல், புயல், வெள்ளம், காட்டுத் தீ, வறட்சி, பூகம்பம் போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளவும் தேவையான தொழில்நுட்ப வளர்ச்சியுறாத அச்சூழ்நிலையில் இயற்கைப் பொருள்களின் மீது உறைவதாக நம்பிய ஆவிகளின் துணையுடன் இயற்கையிடமிருந்து பலனைப் பெறப் புராதன மனிதனால் முடிந்தது. முதலில் உழைப்புக்குக் கருவிகள் துணையுடனும் இயற்கையுடனும் நிகழ்த்திய பரஸ்பர பாதிப்புச் செயல் முறையே மனித குலத்தை முன்னேறச் செய்தது.

இம்முயற்சியின் தொடர்ச்சியாக ஒரு கற்பனைபோல் செய்தலாகவோ பாவனைச் செயலாகவோ நிகழ்த்துவ தன் மூலம் யதார்த்த வாழ்வில் அக்கற்பனையினை உண்மை நிகழ்ச்சியாக மாற்ற முடியுமெனப் புராதன மனிதன் நம்பினான். இந்நம்பிக்கையின் வெளிப்பா டாக மந்திரம் அமைந்தது என்கிறார்.

மந்திரச் சடங்கு பற்றித் தமிழ்ப் பண்பாட்டாய்வாளர் தொ.பரமசிவன், ***கூட்டு உழைப்பினால் உணவைத் தேட மனிதன் முற்பட்டபோது ஆற்றல் மிகுந்த இயற்கையைத் தனக்கு இணங்கவைக்க முற்பட்டான். பழங்குடி மக்களின் பாட்டும் ஆட்டமும் அவர்களுடைய உணவுத் தேவை யோடு தொடர்புடையவை. வேட்டை மிருகங்கள் கிடைப் பதற்காகவும் உணவுக்குரிய பயிர்கள் நிறைய விளை வதற்காகவும்…இயற்கையை அவர்கள் வேண்டினர். பயிர் கள் விளைவது போன்றும் மழை பெய்வது போன்றும் ஆடிக் காட்டினர். இவ்வாறு போலச்செய்து காட்டுவதன் மூலம் இயற்கையை இணங்கமுடியும் என்று நம்பினர். இவ்வகையான ஆட்டமும் பாட்டமும் மந்திரச் சடங்கு களோடு தொடர்புடையன. மந்திரமே உலக நாகரிகத்தில் தொடக்கக் காலத்தில் கலைகளுக்கும் விஞ்ஞானத்திற்கும் மூலமாக இருந்தது என்பதனைச் சமூகவியல் அறிஞர்கள் பிரேசர், ஜார்ஜ் தாம்சன் போன்றோர் விரிவாக விளக் கிக் காட்டியுள்ளனர் (பக்.135-136)*** என்றெழுதுகின்றார்.

இந்த மந்திரம் சார் வழிபாட்டு மரபையே குறிஞ்சி நில மக்களான கானவர் வாழ்க்கை நடைமுறைகள் காட்டு கின்றன. இத்தகு மந்திரச் செயல்பாடுகளோடு வேறு சில வழிபாட்டு நடைமுறைகளையும் கானவர் வாழ்க் கையில் காண முடிகிறது. கானவர் எனும் சொல்லுக்குக் ***குறிஞ்சி நில மாக்கள்; முல்லைநில மாக்கள்; வேடர்; கானம்பாடும் ஒரு வகுப்பினர்; பாலைநிலத் தலைவர்*** எனக் *கழகத் தமிழ் அகராதி* பொருள் தருகின்றது (ப.334). இது இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

மர வழிபாடு

மரங்களில் தெய்வங்கள் உறைவதாகக்கருதி அவற்றை வழிபடும் வழக்கம் மனித சமூகத்தில் பன்னெடுங்கால மாக இருந்துவருகிறது. இதனை உலகில் தொல்குடி பலவற்றிடமும் காணமுடிகின்றது. தமிழர்களிடம் இவ் வழக்கம் இருந்துள்ளதை அகநானூற்றுப் பாடல்கள் வாயிலாக அறியலாம்.

அவர் செல்லும் வழியில் நாமும் சென்றால் என்ன, எனத்தோழியை வினவும்தலைவி வாள், வில் கொண்டு போரிட்டு எதிர்ப்போரை வென்று மழவர் ஆனிரை கவர்ந்துவருவர் தெய்வம் உறையும் வேப்ப மரத்தடி யில் கொழுப்புமிக்க பசுவைக் கொன்று அதன் குருதி தெளித்துப் பலியிடுவர். வெற்றியை உயரிய பாறை மீது அமர்ந்து பலியிட்ட புலாலைப் புழுக்கி விருந் துண்டு கொண்டாடுவர். விருந்தில் தெய்வத்துக்கு இரத்தக்காவு கொடுக்கப்பட்ட முசு மாட்டின் இறைச்சி இருக்கும் எனக் கூறப்படுகிறது.

வயவாள் எறிந்து வில்லின் நீக்கி
பயம் நிரை தழீஇய கடுங்கண் மழவர்,
அம்பு சேண்படுத்து வன்புலத்து உய்த்தெனத்,
தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்
கொழுப்புஆ, எறிந்து குருதி தூஉய்ப்
புலவுப் புழுக்குஉண்ட வான்கண் அகல்அறை (அகம். 309:1-6) எனும் தொடர்களில் அமைந்த *தெய்வம் சேர்ந்த பராரை வேம்பு* என்பது, *வேப்பமரம் போன் றவற்றைத் தெய்வம் உறையுமிடம் எனக் கொண்டு, கொழுப்புடைய பசுவினைப் பலி கொடுத்து வழிபட் டனர்* (தமிழண்ணல் & மீனவன், ப.35) என்பது புலப்படுகிறது. மற்றொரு அகநானூற்றுப் பாடலில் தலைவனை வரைய வற்புறுத்தும் தோழி,

துஞ்சாக் கண்ணள் அலமரும்; நீயே,
கடவுள் மரத்த முள் மிடை குடம்பைச்
சேவலொடு புணராச் சிறு கரும் பேடை
இன்னாது உயங்கும் கங்குலும்,
நும் ஊர் உள்ளுவை; நோகோ, யானே (அகம்.270:11-15) என்கிறாள். நீயோ, கடவுள் இருக்கும் முள்மரத்தில் கட்டியிருக்கும் கூட்டில் கருநிறப் பெண்பறவை தன் சேவல் தன்னைப் புணராததால் துன்புறும் நள்ளிரவி லும் உன் ஊருக்குச் செல்வதையே நினைத்துக்கொண் டுள்ளாய். எனக்கு வருத்தமாக உள்ளது. திருமணம் செய்துகொண்டு இவளுடனேயே இருக்கவேண்டாமா என்கிறாள்.

சூர் முதல் இருந்த ஓமை அம்புறவின் (அகம்.297:11) எனும் சான்றுகள் மரத்தில் தெய்வம், கடவுள், சூர் எனும் ஆற்றல் உறைவதாகக் கருதி வழிபட்டமையை உணர்த்தும். இவ்வழிபாட்டு மரபு குறிஞ்சி நில மக்க ளிடம் இருந்துள்ளது. இதில் ***மரங்களில் அச்சம் தரும் பழமை வாய்ந்த கடவுள் உறைந்திருக்கும். அது கொடுமை யுடையாரைக் கொல்லும் என மக்கள் கருதியதை வெளிப் படுத்துகின்றன. எனவே அத்தெய்வத்தைக் குறிப்பாகக் குறிஞ்சித் திணை மக்கள் வழிபட்டனர் என்பது புலனா கின்றது. பண்டைத் தமிழர்கள் மரஞ்செடி கொடிகளிலும் மலர் மண்டிக்கிடங்கும் களங்களிலும் புதர்களிலும் கூடத் தெய்வம் உறைதலைக் கண்டனர். அடிமரத்திலே தெய்வம் உறைவதாக நம்பினர். மரங்களின் மராஅ, பனை, வேம்பு, ஆல், வேங்கை, ஓமை, கள்ளி முதலியற்றில் தெய்வங்கள் சேர்ந்துள்ளமையைச் சங்கப் பாடல்களால் அறியலாம் (சக்திவேல், ப.58)*** எனக் கூறப்படுகிறது.

தெய்வமேறிக் குறி சொல்லுதல்

கட்டுப்பார்த்தல் - கழங்கு பார்த்தல் என்பது குறிஞ்சி நிலமக்கள் வாழ்வில் முக்கிய இடம்பெறுகின்றது. இச் செயல் வருவதறிதல், எதிர்காலத்தை அறிதல் எனும் காரணங்களுக்காகப் பின்பற்றப்பட்டது. இன்றும் இது நடைமுறையில் உள்ளது.

குறிபார்க்கும் வழக்கம் சங்ககாலத்தில் மிகவும் பரவி யிருந்ததென அறிகிறோம். அகப்பொருள் இலக்கியத்தில் இவ்வழக்கினை அதிகம் காணலாம். தலைவியினுடைய காம நோயை அறியமாட்டாத தாய், அவள் அடைந்த வேறுபாட்டின் காரணத்தை ஆராயும் பொருட்டுக் கட்டுவிச் சியை அழைத்துக் கட்டுப் பார்ப்பது வழக்கம். கட்டுவிச்சி முறத்தில் நெல்லைப் போட்டு அதனை எண்ணி அதனாற் போந்த சில நிபந்தனைகளை அறிந்து இவள் முருகனால்

அணங்கப்பட்டாள் எனக் கூறுவர். கட்டுவிச்சியர் தெய்வ மேறிக் குறிசொல்லுதலும் உண்டு. இவர்களைப் பிற்காலத் தவர் குறத்தியரென என அழைப்பர். சங்கு மணியினா லாகிய கோவையைப்போன்றமென்மையாகிய நல்ல நீண்ட கூந்தலையுடைய அகவன் மகள் எனக் குறுந்தொகை குறிப்பிடும் இதனால், கட்டுவிச்சியர் நறை மூதாட்டியர் என்பது பெறப்படும் (வித்தியானந்தன், ப.134).

தலைவியின் நெற்றியில் பாசலை படர்ந்தது கண்ட தாய் முதுமை மிக்க கட்டுவிச்சியை அழைத்து வீட்டில் நெல்பரப்பி அக்கட்டுக்கு எதிரே தலைவியை அமரச் செய்து குறிகேட்பதைச் சங்க இலக்கியங்கள் குறிப் பிடுகின்றன. இதேபோன்று தலைவியின் கைவளை நெகிழ்ந்ததைக் கண்ட தாய் முதிய கட்டுவிச்சியை அணுகிக் குறிகேட்பதையும் கட்டுவிச்சி, தலைவியை அணங்கியவன் முருகன் எனக் கூறியதையும் அகநா னூற்றுப் பாடல் சுட்டுகிறது

வெறியாட்டு, முருகாற்றுப்படுத்தல் என்பன சங்ககால வீட்டுவிழாக்கள். புலவர் வெறியாட்டு விழாவை இப் பாடலில் சிறப்பித்துப் பாடிய காரணத்தால் *வெறி பாடிய காமக்கண்ணியார்* என்னும் அடைமொழிச் சிறப்புடன் அழைக்கப்படுகிறார்.

வேலன் என்னைப் பொம்மலாட்டப் பாவைபோல ஆட்டிவைத்தான் எனக் கூறும் தலைவி, அன்னை நடத்தும் வெறியாட்டால் என் துன்பம் தணியாது. நான் முருகேறி ஆடுவது அவருக்குத் தெரியவரின் நான் என்உயிரையேவிட்டுவிடுவேன்என்கிறாள். இதனை,

செறிந்து இலங்கு எல் வளை நெகிழ்ந்தமை நோக்கி,
கையறு நெஞ்சினள் வினவலின், முதுவாய்ப்
பொய் வல் பெண்டிர் பிரப்புளர்பு பிரீஇ,
"முருகன் ஆர் அணங்கு" என்றலின், அது செத்து,
ஓவத்து அன்ன வினைபுனை நல் இல்,
"பாவை அன்ன பலர் ஆய் மாண் கவின்
பண்டையின் சிறக்க, என் மகட்கு" எனப் பரைஇக்,
கூடு கொள் இன் இயம் கறங்க, களன் இழைத்து,
ஆடு அணி அயர்ந்த அகன் பெரும் பந்தர்,
வெண் போழ் கடம்பொடு சூடி, இன் சீர்
ஐது அமை பாணி இரீஇ, கைபெயரா,
செல்வன் பெரும் பெயர் ஏத்தி, வேலன்
வெறி அயர் வியன் களம் பொற்ப, வல்லோன் (அகம் 98:7-19)எனும் பாடல் தெரிவிக்கிறது. நீண்ட கோலை (வார்கோல்) வளைத்துக் கட்டிச் செய்த, என் தோளிலே செறிவாகக் கிடந்த வளையல் நெகிழ்ந்து நழுவுவதை தாய் பார்த்துவிட்டாள். என்ன செய்வதென்று தெரியா மல், குறிசொல்லும் முதுவாய்ப் பெண்டிரைக் கேட் டாள். அவர்கள் தன் கையில் வைத்திருக்கும் பிரம் பால் என்னைத் தட்டிப் பார்த்து, *முருகன் பிடித்து ஆட்டுகிறான்* என்றனர். அதனை அவள் நம்பி வெறியாட்டு நடத்துகிறாள். மேளதாளம் முழங்க வெறி யாடும் களம் அமைத்தாள். ஆட்டம் பாட்டத்துடன் விழா நடத்தி அகன்ற பெரிய பந்தல் போட்டாள். வேலன் வெண்நிறப் கடம்பு மலரைச் சூடிக்கொண்டு வந்தான். இனிய சீரிசையால் பாட்டுப் பாடிக்கொண்டும் கையை ஆட்டிக்கொண்டும், *முருகா* என்று செல்வ னின்பெரும்பெயரைச் சொல்லி வாழ்த்திக்கொண்டும், வெறியாட்டு மேடை சிறக்கும்படி வந்தான். பொம்ம லாட்டத்தில் வல்லவன் நடத்திக்காட்டும் பொம்மை போல என்னை ஆட்டிவைக்க வந்தான் என்கிறாள். இப்பாடல் கட்டுவிச்சி நெல் பரப்பி அதனை எண்ணி நிமித்தங்ளைக் கூறல் கட்டு எனும் கட்டுப்பார்த்தல் வழக்கில் இருந்ததைச் சுட்டுகிறது.

வெறியாடும்பொழுது கழற்காயை மெய்யிலணிந்து படிமக் கலத்தைத் தூக்கிக்கொண்டு முருக்கணங்கின் குறையென வேலன் கூறுவான். கழங்கு பார்த்தல், நெற்குறி பார்த்தல் போன்றது. அது வெறிக் களத்தில் பரப்பியிட்டுப் பார்க் கும்பொழுது மூன்றும் இரண்டும் ஒன்றும் படும். இவ்வாறு படின் முருகணங்கினால் ஆயிற்று எனக் கொள்வர் (வித்தியானந்தன், ப.79).

இவ்வாறு கட்டுப்பார்த்தல், கழங்கு பார்த்தல் என்பன குறிஞ்சி நில மக்களின் பண்பாட்டில் இருந்துள்ளன. இவற்றைத் தொடர்ந்து முக்கியமான ஒரு சடங்காக வெறியாட்டு இடம்பெறுவதோடு தமிழ் அகப்பொருள் மரபிலும் குறிப்பிடத்தக்க இடம்பெறுவதைக் காண முடிகின்றது.

வெறியாட்டு

கட்டு, கழங்கு பார்த்தல் என்பதன் தொடர்ச்சியாய் இடம்பெறும் ஒரு வழிபாட்டுச் சடங்கு வெறியாட்டு ஆகும். தலைவியின் உடல் மெலிவிற்கான காரணம் அறியும் பொருட்டு இது நிகழ்த்தப்படுகிறது. வேலன் எனும் முருகப் பூசாரியே இச்சடங்கை நிகழ்த்துபவன் (சக்திவேல், ப.90). வெறியாட்டு நடு இரவில் நிகழ்ந் தது என்பதை ***முருகாற்றுப்படுத்த உருகெழு நடுநாள்*** (அகம்.22:11) எனும் அடி காட்டுகின்றது. மேலும் வேலவன் அழகிய செந்நிறத் தினையை நீரொடு கலந்து தூவி வழிபடுவான் (அகம்.272:14), குருதி யொடு கலந்து தூவி வழிபடுவான் (அகம்.22:10) எனும் செய்திகளையும் அறிய முடிகின்றது. நடுநாள் -நள்ளிரவு எனச் சங்க இலக்கியப் பொருட்களஞ்சி யம் (ப.17) குறிப்பிடுகிறது.

இவ்வழிபாட்டின்போது வேலன் கடம்ப மலரினைச் சூடி முருகனை அழைப்பான் (அகம்.138:11) என்றும் வேறு சில மலர்களையும் இச்சடங்கில் வேலன் பயன் படுத்துவான் (அகம். 114:3) என்றும் அகநானூற்றுப் பாடல்கள்வழி அறியலாம். இத்தகைய கூத்தாடுகள் நிகழ்கையில் முருகன் வழிபடுகிற ஒருவரில் வெளிப் பட்டுத் தான் கூற வேண்டியவற்றை கூறுவான் (வித்தியானந்தன், ப.81).

தமிழ் அகத்திணை மரபில் மட்டுமன்றிச் சமூக வாழ் விலிலும் மிகுந்த கவனம் பெறுகின்ற வெறியாட்டு முருக வழிபாட்டு முறைகளில் ஒன்றாக இருந்துள்ள தையே மேற்குறித்த செய்திகள் காட்டுகின்றன. வாழ்க் கையில் ஏற்படும் இயல்பான நிகழ்வுகளுக்கான கார ணங்களைச் சரியாக அறிய இயலாத நிலையில் அந் நிகழ்வுகளைச் சரிசெய்துகொள்வதற்கான முயற்சிகள்

வழிபாடு செய்தல், சடங்காற்றுதல் என நம்பிக்கை சார்ந்தனவாய், தெய்வங்களோடு தொடர்புடையன வாய் இருந்துள்ளதையும் இவை மனித சமூகத்தின் தொடக்கக் கால வாழ்க்கை இயல்புகளாய் இருந்துள் ளதையும் காட்டுகின்றன.

வெறியாட்டு எனும் வழிபாட்டுக்குரிய தெய்வம் அச்சடங்கு நிகழ்த்தப் பெறும் முறை பலியிடுதல், பலி பொருட்கள் என்பன யாவும் குறிஞ்சித் திணை பின்னணியைக் கொண்டுள்ளதைப் பார்க்கும்போது இவ்வழிபாட்டுச் சடங்கு தொன்மையானதென அறிய முடிகின்றது. அதே நேரத்தில் இச்சடங்கு குறிஞ்சி நில மக்களின் வாழ்வியலை வெளிக்காட்டுகின்றது.

முடிவுரை

சங்க இலக்கியப் பனுவல்கள் பல்வேறு சமூக வளர் நிலைகளை காட்டுகின்றன. வேம்பு, பனை, ஆல், வேங்கை, ஓமை என மரம் சார்ந்த கடவுளர்கள் பற்றிப் பதிவுசெய்துள்ள சங்க இலக்கியங்களின் கடவுள் மரபு பின்னாட்களில் திணைக்கு ஒரு கடவுளாக மாறி யுள்ளது. முருகனை வழிபட்ட குறிஞ்சி நில மக்கள் குரவைக்கூத்து, வெறியாட்டு உள்ளிட்ட பல செயல் பாடுகளோடு படையலிட்டு வழிபட்டுள்ளனர். குறிஞ் சித் திணை மக்கள் தம் வாழ்வில் முருகனைப் பல் வேறு நிலைகளிலும் வழிபட்டுக் கொண்டாடியுள்ளனர்.

துணைநூற் பட்டியல்

சக்திவேல், பே. *பண்டைத் தமிழர் தெய்வங்களும் வழிபாடுகளும்*. சென்னை: விச்சி பதிப்பகம், 2022.

சிவசுப்பிரமணியன், ஆ. *மந்திரமும் சடங்கும்*. நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம், 2016.

செயபால், இரா. (உ.ஆ.). *அகநானூறு*. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்., 2004.

வித்தியானந்தன், சு. *தமிழர் சால்பு*. சென்னை: பாரி நிலையம், 2021.

கழகப் புலவர் குழுவினர். *கழகத் தமிழ் அகராதி*. சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 101 ஆம் பதிப்பு, 2017.

பரமசிவன், தொ. *பண்பாட்டு அசைவுகள்*. நாகர்கோவில்: காலச்சுவடு, 19 ஆம் பதிப்பு, 2020: 135-136.

தமிழண்ணல், நா. மீனவன். *அகநானூறு மூன்றாம் பகுதி நித்திலக் கோவை (மக்கள் பதிப்பு)*. கோவிலூர்: கோவிலூர் மடாலயம், 2004.

105ஆம் பக்கத் தொடர்ச்சி

இன்னே வற்றே (எழுத்து. புணரியல், நூ.17) என்னும் தொடக்கத்தன என்று இளம்பூரணர் காட்டுகிறார்.

எண்ணிடைச் சொற்கள் பிரிந்து சென்றும் ஒன்றும் என்பதைத் தொல்காப்பியர் இடையியலுள்,

என்றும் எனவும் ஒடுவும் தோன்றி
ஒன்றுவழி உடைய எண்ணினுள் பிரிந்தே (நூ.294)

என்னும் நூற்பாவழி எடுத்துரைக்கிறார். இதற்கு இளம்பூரணர்,

உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயரென்று
ஆயிரண்டு என்ப (தொல். எழுத்து. புணரியல், நூ.15)

என்னும் நூற்பாவை மேற்கோளாகக் காட்டுகிறார். முதலடியில் இடம்பெற்ற என்று என்பதனை, உயர் திணைப் பெயரே என்பதோடும் கூட்டிக்கொள்ள வேண்டும் என்பதை முன்னும் கூட்டி உரைக்க என உரை எழுதுகிறார். மேலும், ***கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை (தொல். எழுத்து.நூ.7)*** என்புழி என என்பதனை முன்னும் கூட்டி உரைக்க என்று விளக் கம் அளிக்கிறார். இவற்றிலிருந்து,

உயர்திணைப் பெயரென்று அஃறிணைப் பெயரென்று
கண்ணிமை என நொடி என எனப் பிரித்துப் படிக்க வேண்டும் என்பது இளம்பூரணர் கருத்தென அறிய லாம்.

கு, ஐ, ஆன் என்னும் வேற்றுமை உருபுகள் செய்யு ளில் அகரச் சாரியை பெறும், அஃறிணையில் குவ் வும் ஐயும் அகர ஈறாதலைப் பொருந்துவதில்லை என்பன தொல்காப்பிய விதிகள் (தொல்.சொல். நூ. 104,105) உயர்திணையில் கு, அ என மாறுதற்கு, கடிநிலை இன்றே ஆசிரியர்க்கு எனக் கூறப்பட வேண்டிய ஆசிரியர்க்கு என ஆயிற்று (தொல். எழுத்து. புள்ளிமயங்கியல், நூ.94) எனக் குறிப்பிடு கிறார்.

முடிவுரை

இளம்பூரணர் தொல்காப்பியரின் கருத்தை உறுதிப் படுத்த இலக்கண மேற்கோள்களை மிகுதியாக எடுத் தாளுகிறார். இலக்கண மேற்கோள்களின் யாப்பருங் கல விருத்தி உரையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு நூற்பாவைத் தவிர எஞ்சிய அனைத்தும் தொல்காப் பிய நூற்பாக்களாகவே அமைந்துள்ளன.

துணைநூற் பட்டியல்

அரவிந்தன், மு.வை. *உரையாசிரியர்கள்*. சென்னை: மணிவாசகர் பதிப்பகம், மூன்றாம் பதிப்பு, 1995.

அருணாசலம், மு. *இளம்பூரணர்*. சொர்ணாம்பாள் நினைவுச் சொற்பொழிவு. சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, 1981.

கதிரைவேற்பிள்ளை, நா. *தமிழ் மொழி அகராதி*. புது தில்லி: ஆசியக் கல்வி நிறுவனம், ஆறாம் பதிப்பு, 1990.

சுந்தரமூர்த்தி, கு. (ப.ஆ.). *தொல். எழுத்து. இளம்பூரணம்*. அண்ணாமலைநகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1996.

சுந்தரமூர்த்தி, கு. (ப.ஆ.). *தொல். சொல். இளம்பூரணர் உரை*. சென்னை: சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1963.

சுப்ரமணிய சாஸ்திரியார், பி.சா. *தொல்காப்பியச் சொல்லதி காரக் குறிப்பு*. பி.எஸ்.ஸ்வாமிநாதன், 1930.

தாமோதரன், அ. (ப.ஆ.). *நன்னூல் மூலமும் விருத்தியுரையும்*. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், முதற்பதிப்பு, 1999.

பரந்தாமனார், அ.கி. *நல்ல தமிழ் எழுத வேண்டுமா?*. சென்னை: பாரி நிலையம், 2002.

வேங்கடராமன், கா.கோ. *தமிழ் இலக்கிய வரலாறு*. வேலூர்: கனிமொழி பதிப்பகம், 2003.

ISSN 2320-4842

சித்தர்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

ஜே. கௌரி ஆனந்த்
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்) (Ref.No.06965/Ph.D.K6/Tamil/Part Time/April 2015/ Confirm/Dt: 13.12.2019
நெறியாளர்: **முனைவர் சு. இரவிச்சந்திரன்**
முதல்வர், சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் தமிழ் உயராய்வு மையம்
அரசர் கல்லூரி, திருவையாறு 613 204 (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

ஆய்வு நோக்கம்

இக்கட்டுரை சித்தர்கள் சுட்டும் வாழ்வியல் நெறிகளைச் சுட்டுகிறது. மனித சமூகத்தில் அச்சத்தின் காரணமாகவே கடவுள் நம்பிக்கையும் அதன் ஊடாகச் சடங்குகளும் சமயங்களும் பிறந்தன என்பர் மானிடவியலாளர். சாதி, மத வேறுபாட்டாலும், சமய நம்பிக்கையாலும் இந்தச் சமூகம் அழிந்துவிடுமோ என்பதே சித்தர்தம் அச்சமாகும். இறை வழிபாடு மனிதனின் இன்னல்களைக் களைவதற்கு உரிய ஒன்றே; அதன் வாயிலாக வேற்றுமை காணக்கூடாது; அறிவு கொண்டு எதனையும் ஆராயவேண்டும் என்பன சித்தர்களது கருத்து. அதனை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கருவிச்சொற்கள் (Keywords): ஆண், பெண் நிலைகள், ஞான வாழ்க்கை, கல்வியின் மேன்மை, சமூக வாழ்க்கை.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

முன்னுரை

இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி ஆதலின் மக்கள் எத்தகைய கால நிலையில் எத்தகைய சூழ்நிலையில் எவ் வகை வாழ்வியல் முறைகளில் வாழ்ந்தனர் என்பதை இலக்கியங்கள் கொண்டு அறியலாம். இலக்கியம் மக்கள் வாழ்வியலைப் பிரதிபலிப்பதோடு தத்துவக் கருத்துக்களை மக்களிடம் பரப்பும் ஊடகமாகவும் திகழ்கிறது. சமயம் சார்ந்த சிந்தனைகளும் மக்கள் வாழ்வியலில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. உலகாயதம், வேதம், ஆசிவகம், சமணம், பவுத்தம், வைசேஷிகம், சாங்கியம், நியாயம் ஆகிய சமயங்கள் குறிப்பிடத்தக்கவை. இவ் வரிசையில் தமிழகத்தில் சித்தர் தத்துவம் சைவ, வைணவங்களிடையே ஏற்பட்ட முரண்பட்ட நிலையில் தோன் றித் தனித்த இடம்பெற்றுள்ளது. சைவ, வைணவங்களின் தத்துவச் சிந்தனைகள் தமக்கான இலக்கியங்களை உருவாக்கிக்கொண்டன. அவ்வாறே சித்தர் தத்துவச் சிந்தனைகளுக்கும் இலக்கியப் படைப்புக்கள் தோன்றி யுள்ளன. தமிழ்நாட்டில் வாழ்ந்த சில சித்தர்கள் தம் காலத்தில் நிலவிவந்த சமூகக் கட்டமைப்பினை மாற்ற உரிய கருத்துக்களையும் பதிவுசெய்துள்ளனர். சித்தர் பாடல்களில் பெரும்பான்மை தத்துவப்பொருளில் அமைந் திருப்பினும் தமிழ்ச் சமூக வாழ்வியல் இயல்புகள் ஆங்காங்கே பதிவாகியுள்ளன. அவற்றை விளக்கமுறை, பகுப்புமுறை ஆய்வுவழி இக்கட்டுரை புலப்படுத்த முனைகிறது.

ஞான வாழ்க்கை

இறைநெறியோடு வாழ்தல் சிறப்பானது. அந்த வாழ்வுக்கு உடலும் உள்ளமும் ஒன்றிணைந்து வணங்குதல் அடிப்படையாகும். ஆண்டவனுக்கு உகந்த உயராலயம் மனித மனமே ஆகும். மனித மனதையே தனக்கு ஆலயமாகக் கட்டி அனுப்பி உள்ளான் இறைவன். நெஞ்சில் அவனை நிலைநிறுத்தி இன்பம் காண்போர் எத்தனை பேர்? இறைவனை வெளியே தேடாதீர், தேடித்தேடி அங்குமிங்கும் அலையாதீர் என்பதை வலி யுறுத்தும் பல பாடல்களைச் சித்தர்கள் அருளியுள்ளனர். ஆண்டவன் அகத்தும் புறத்தும் உள்ளான்.

உள்ளத் தொருவனை உள்ளூறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே (திருமந். 417) என்று உள்ளத்திலுள்ள இறைவனை மனம் ஒன்றி வழிபட வேண்டும் என்பதை இப்பாடல் வலியுறுத்துகின்றது.

எல்லா உண்மைகளும் எல்லோருக்கும் புரிந்திருப்பது கடினம். அத்தகையதே வாழ்வின் உண்மைகளும், நாம் வாழ்ந்தாலும் வாழ்க்கைக்குள் இருந்தாலும் வாழ்வின் உண்மைகள் நமக்குப் புலப்படுவதில்லை. பொருளல்லன வற்றைப் பொருளாக அறிந்து மயங்கும் அறியாமை எல்லாவற்றிலும் நிரம்ப இருக்கவே செய்கின்றது. எனவே தெளிவு, தெளிவான சிந்தனை, தெளிவான வாழ்க்கை இவற்றை நாம் அடைவது கடினமாகவே உள்ளது. விஞ்ஞானம், அறிவியல் என்பவை எல்லாம் அறிவின் வளர்ச்சியையே குறிக்கும். அறிவு விரியும்

போது அது விஞ்ஞானம் ஆகின்றது. விரிந்த ஞானம் என்பது முழுக்க முழுக்க வாழ்வியலைப் பற்றியதே ஆகும். இன்புறு வாழ்க்கை என்பதைத் திருமூலர் இறைவனைப் பற்றி வாழ்வதே ஆகும் என்பார். அதையும்கூட அதாவது ஆண்டவனை அறிந்தே - அறிவால் அறிந்தே இன்புற வேண்டும் என்பதை,

இன்புறு வீர்அறிந் தேயெம் இறைவனை
அன்புறுவீர் தவஞ் செய்யுமெய்ஞ் ஞானத்துப்
பண்புறு வீர்பிற வித்தொழி லேநின்று
துன்புறு பாசத் துழைத்தொழிந் தீரன்றே (திருமந். 2073)

என்கிறார். மானுட வாழ்வின் அடிப்படை ஆழ்ந்த பேரன்பாகும். வாழ்வே அன்பை உருவாக்கும். அந்த அன்பே இறை. அன்பே அனைத்தும் என்ற கொள்கையில் திருமூலர் அன்பையும் இறைமையையும் இவ்வாறு இணைத்துக்காட்டுகிறார்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார். (திருமந். 257)

அன்பு நலத்தில்தான் இறைமை உள்ளது என்பதை தெரிந்து தெளிய வேண்டும் என்பது தான் அவரின் முடிவு. மெய்யறிவு தெளிவைத் தேடுவது மட்டுமல்ல தெளிவை அடைவதுமாகும். அறிவு என்ற ஒன்றே அனைத்தையும் உணர வைத்து உறவாக்குகின்றது. இறைவன்கூட அன்பு செய்வாரையே அறிகின்றான் என்று ஞானவாழ்வியலை எடுத்துரைக்கின்றார்.

கல்வியின் மேன்மை

அறிவை எய்த வாயிலாக உள்ளது கல்வி ஆகும். ஆதலால் திருமூலர் பேரறிவு நாட்டத்திற்காகவே கல்வியின் இன்றியமையாமையை வலியுறுத்துகிறார். அறிவு விரிகிற தன்மைத்து; அது மனிதனைக் குருட்டு நிலையிலிருந்து மீட்க வல்லதுமாகும். எனவேதான் அறிவின் ஆற்றலை, தேவையை அவர் அறிவுறுத்துகிறார். கல்வியோ சிந்தனைப் பேரறிவோ இலாதார் மாட்டு இறைவன் அணுகுவதில்லை என்பதைத் தெளிவாகத் திருமூலர் குறிப்பிடுகிறார்.

அறியாத வற்றை அறிவான் அறிவான்
அறிவான் அறியாதான் தன்னறி வாகான் (திருமந்.2184)

தீமைகளிலிருந்து மாந்தனைக் காக்க வல்லது பேரறிவாகிய பகுத்தறிவே; பகுத்தாய்வு செய்யும்போது அறிவில் தெளிவும், ஒளியும் வாய்க்கும். இந்த அறிவின் பெருமையைச் சொல்லத் தேவையில்லை. ஏனெனில் அறிவு இல்லார்க்கு இதை உணர்த்துதல் கடினம். செறிந்த அறிவு வாய்த்தார்க்கு இது தேவையும் படுவதில்லை. அதே சமயத்தில் கற்றும் உலகியல் அறிவு இல்லாதவர்கள் பலராம் என்பதையும் திருமூலர் உணர்த்தத் தவறவில்லை,

அறிவிக்க வேண்டாம் அறிவற் றயர் வோர்க்கும்
அறிவிக்க வேண்டாம் அறிவிற் செறிவோர்க்கும்
அறிவுற்றியாமை யெய்திநிற் போர்க்கே
அறிவிக்கத் தம்மறி வாரறி வோரே (திருமந். 2288)

இதுவே அறிவு வேட்கையின் தொடக்கமாகும். இவ்வுலகில் அறிந்துகொள்ள வேண்டியவை நிரம்ப உள. அறிய வேண்டியதை நாம் அறிந்துகொள்ளாமல் இருந்தால் அறியாமையே நம்மிடம் மிகும். வள்ளுவரும், ***அறிதோறும் அறியாமை கண்டற்றால் (குறள்.1110)*** என்கிறார். அதாவது அறிதோறும் அறியாமையையே காண்கிறோம் என்பது அவர் கருத்தாகும். அறியாமையில் முழுமையான விடுதலை பெறுவதே அறிவுற்ற வாழ்க்கைக்கு விளக்கமாகின்றது. தன்னை அறிவதே முதன்மை (ஆய்வு) அறிவு! தன்னை அறிந்துகொளாது பலவற்றையும் ஆராயும் அறிவு வீணான அறிவு. வேண்டாத அறிவு. மாறுபட்ட அறிவு என்பதைத் திருமூலர் மிகவும் அழுத்தமாகவே குறிப்பிடுகிறார்.

அறிவை உயர்த்தவும் அறிவை வழிபாடு செய்யவும் எண்ணும் திருமூலர் இறுதியில் அறிவே தெய்வம் என்ற அளவிற்கு அறிவை உயர்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆண்டவனை அழைத்து வருவதற்கும், தங்க வைப்பதற்கும் இமைப்பொழுதும் அவனை இழக்காதிருக்கவும் ஏற்ற இடம் மனம் என்கிறார் திருமூலர்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே(திருமந். 1972)

என ஆண்டவனுக்குகந்த உயராலயம் மனித மனமே ஆகும். நெஞ்சில் அவனை நிலைநிறுத்தி இன்பம் காண்போர் எத்தனை பேர்? இறைவனை வெளியே தேடாதீர், தேடித்தேடி அங்குமிங்கும் அலையாதீர் என வலியுறுத்த அவர் பல பாடல்களை அருளியுள்ளார்.

சமூக வாழ்க்கை

மனிதன் தன் சக மனிதனோடு இயைந்து வாழ்தலே மனிதப் பண்பாகும். ஒவ்வொரு சமூகமும் தனக்கான சமூகச் செயற்பாடுகளைத் தன் நிலவியல், புறச்சூழலுக்கேற்ப அமைத்துக்கொள்கின்றன. சங்கப்பாடல்களில் கள் குடிப்பது ஏற்கப்பட்ட சமூகச் செயற்பாடு. அதன் பின் தோன்றிய அற இலக்கியம் கள் குடித்தலைத் தவறு எனப் போதிக்கிறது. சித்தர் இலக்கியத்தில் குறிப்பாகக் கடுவெளிச்சித்தர் பாடலில் வெறிகாட்டி மயங்கிய கள் குடியாதே, கஞ்சாப் புகைபிடியாதே (கடு. 29)எனப் பாடப்பட்டுளது. தமிழ்ச் சமூகத்தில் போலித் துறவிகள் இருந்துள்ளதைப் பாடல்கள் சுட்டுகின்றன. காயகல்பம் உண்பதாகவும் பிறர் மதிக்கவேண்டும் என மாயவித்தை செய்து எங்கும் மடிப்பு மோசம் செய்பவர், நேரமாகக் கஞ்சா அடித்து நேர் அபினைத் தின்று நாய்போல் நாட்டில் அலைவார்கள் (சிவ.514) எனச் சிவவாக்கியர் போலித்துறவிகள் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

ஆண் பெண் நிலைகள்

பெண்களைப் போகப்பொருளாகக் கருதுவோராகவும் உடலியல் தேவையின்பொருட்டு இயங்குவோராகவும் இருந்துவந்துள்ளதைக்

தொடர்ச்சி: பக்.04

தன்னந்தனியாக நடக்கிறேன்

மக்கள் கூட்டத்தில் நான் தன்னந்தனியாக நடக்கிறேன்.
எனக்குள்ளேயே பேசி, பொய்யிலிருந்து மெய்யைப் பிரித்தெடுத்து,
எனக்குள் நானே தொலைந்துபோனேன்.
வசீகரிக்கும் நிலப்பரப்புகள் என்னைத் தூண்டுகின்றன,
ஆனால் நான் எனக்குள்ளேயே இருக்கிறேன்.
ஆர்ப்பரிக்கும் ஆறுகள் என்னைக் கவர்ந்திழுக்கின்றன,
பசுமையான மரங்கள் என்னைத் தொடர்கின்றன,
ஆனால் நான் சில வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

ஓர் உயரமான மரத்தின்மீதுள்ள பறவைகள்
சுதந்திரம் பற்றிப் பேசுகின்றன.
வழக்கமாய் அவை எவ்வளவு சுதந்திரமானவை!
அவற்றின் குரல்கள் ஒரே மாதிரியானவை
ஆனால் மெல்லிசை போய்விட்டது.
குனிந்த தலைகளோடு விலங்குகள் மேய்ந்தபடி உள்ளன.

மேய்ப்பவர்கள் அசுரர்கள்.
அவற்றின் மெலிந்த உடல்களில்
சாட்டைகள் நிலையான வடுவை விட்டுச் செல்கின்றன.
ஆழமற்ற நீர்நிலைகளில், மீன்கள் பெருமூச்சு விடுகின்றன.
அவற்றின் தோழர்கள் சிறைகளில் உள்ளனர்.
அவர்களிடமிருந்து எந்தச் செய்தியும் வரவில்லை.

மக்கள் கூட்டத்தில் நான் தன்னந்தனியாக நடக்கிறேன்.
சூரியனின் வெதுவெதுப்பான கதிர்கள் என் தாயாரால்
தெளிக்கப்பட்ட புனித நீரை ஆவியாக்குகின்றன.
மென்மையான தென்றல் என் இதயத்தின் வெப்பத்தைக் குறைக்கிறது.
ஆனால் ஆன்மாவின் காயங்கள் மிகவும் ஆழமானவை.

இங்குப் பேசுவதற்கு யாரும் இல்லை.
எனவே மக்கள் கூட்டத்தில் நான் தன்னந்தனியாக நடக்கிறேன்.

– சையது முஸ்தபா அகமது

உருதுக் கவிதைகள்
தமிழில்: வ. ஜெயதேவன்

என் இருப்பின் தோட்டம்

என் இருப்பின் தோட்டத்திலிருந்து பருவங்கள் விலகிவிட்டன.
நான் அமைதியின்மையைக் கவனித்தேன். அது பற்றிக் கேட்காதே.
உன் கைகள் முடக்கப்பட்டுள்ளன.
பார்வை மலரை உன் கண் இமைகளால் பறி.
நம்மில் யாரிடம் இந்த மலர்கள் இல்லை.
தோட்டம் யாருடையது? அது பற்றிக் கேட்காதே.
இரவு இருண்டுகிடக்கிறது. சிந்தனை விளக்கை உயர்த்திப் பிடி.
அந்த வண்டியில் யார் யாரைக் கவனித்துக்கொள்கிறார்கள்? அது பற்றிக் கேட்காதே.
உன் அந்தரங்க நண்பர்களும் தமது இரகசியங்களை அறியாதவர்கள்.
உன்னை அடைய எத்தனை தடைகளை நான் தாண்டியிருப்பேன்! அது பற்றிக் கேட்காதே.

- நசீர் காஸ்மி

Regd. R. dist. No. 717/2007   RNI No. 17520/2007

பஞ்சாபிக் கவிதைகள்

பாய் வீர் சிங்
(5.12.1872-10.6.1957)

எல்லாமே நான்தான்!

என் கல்லறையைச் சுற்றிலும்
இயற்கை அழகான தோட்டத்தைப்
படைத்தது
எத்தனையோ பேர்
உள்ளே வந்தனர் ஆனால்
எல்லோருமே
என் கல்லறை தாண்டி
நடந்துபோனார்கள்
ஓ! என் மக்களே!
இது உயிரற்ற சடலம் அல்ல
நான்தான் இது
தெரியவில்லையா?
பூக்கள், கனிகள், இலைகள்,
இனிய பட்டாணிகள்
எல்லாம் இங்கு இருக்கின்றன
எல்லாமே நான்தான்!

(அங்கு அடக்கமான ரோசனரா பேகம் கூற்றாக அமைந்த கவிதை)

மரம்

நிலத்தின்
சுயநலச் சொந்தக்காரர்களே
எங்களோடு
ஏன் சண்டை போடுகிறீர்கள்?
நாங்கள் வெளியேபோய்
வளர்வதில்லையே!
நாங்கள்
உயரமாக நேராக வளர்கிறோம்.
எங்கள் அரங்கமும் அகலமும்
எங்களுக்கான
நிலப்பரப்புக்குள்தான்.
நாங்கள்
எடுத்துக்கொள்வதெல்லாம்
ஓர் உள்ளங்கை அளவுதான்.
அப்படியிருந்தும்
எங்களோடு
உட்பகை உங்களுக்கு.

இன்று

உறிஞ்சிக் குடியுங்கள்
உறிஞ்சுங்கள் இப்போது;
உறிஞ்சிக்கொண்டே இருங்கள்
கோப்பையிலிருந்து
ஆதிநாள் அமுதை

உதடுகளை விலக்கி விடாதீர்கள்
எல்லா நேரமும் உறிஞ்சி
உயர் பேரின்பத்தை அடையுங்கள்

அது ஒருபோதும் தீர்ந்து
விடாது
நாளைய நாள் பற்றி யாருக்குத்
தெரியும்?
விரைவில் நாம்
எலும்புகளாகலாம், சாம்பலாகலாம்.

கட்டுண்ட சுதந்தரம்

விந்தையான
வேட்டைக்காரன் ஒருவனை
நாங்கள் காண நேர்ந்தது
அவன் பிடித்துவந்த பறவையைக் கூண்டில் இட்டான்
ஆனால் கதவைமூடிப் பூட்டவில்லை
அதன் சாளரத்தையும்
மூடவில்லை
நாங்கள் கூண்டை மூடினால்
அதை மறுபடியும் அவன்
அகலமாகத் திறந்துவிடுகிறான்
அடிமைத்தனத்தை
சுதந்தரத்தோடு உருக்கி ஒட்டவைத்துப்
பொய்யான வண்ணங்களைப்
படைத்துவிடுகிறான்

ஈரோடு தமிழன்பன்